356

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

[redacted] மார்ச் 26, 1999 தொகுதி
எண் 2

(2)

D
V211,31'N99
N99. 67.2
221182

வெளியீடு 11-02-2000 Issued 11-02-2000

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 26, 1999 - தொகுதி 67 - எண் 2

Friday, 26th March, 1999—Volume 67 - No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Fort St. George,

Chennai - 600 009

[விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

## 26-3-1999

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| *1. வினாக்கள்-விடைகள்—* | |
| உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 5 முதல் 8 வரை) | 123-258 |
| ***2. 1999-2000—ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள், பேரவையில் வைத்தல்—*** | |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 258-261 |
| ***3. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 1998-99, அளித்தல்—*** | |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 262-267 |
| *4. அறிவிப்பு—* | |
| இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 1998-99, மானியக் கோரிக்கைகள்மீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல். | 268 |
| *5. சிறப்புக் கவன ஈர்ப்பு—* | |
| பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக உறுப்பினர் திரு. தாமரைக்கனிக்கு அளிக்கப்பட்ட 15 நாட்கள் சிறைத் தண்டனையை நிறுத்தி வைத்து, ஜாமீனில் அவரை விடுதலை செய்ய உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு— | 268-307 |
| திரு. இரா. ஆவுடையப்பன் | 269-270 |
| திரு. ஆர். சொக்கர் | 270-274, 287 |
| திரு. கே. சுப்பராயன் | 275-279 |

பக்கங்கள்

*5. சிறப்புக் கவன ஈர்ப்பு—*

| | |
|---|---|
| பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக உறுப்பினர் தாமரைக்கனிக்கு அளிக்கப்பட்ட 15 நாட்கள் சிறைத் தண்டனையை நிறுத்தி வைத்து, ஜாமீனில் அவரை விடுதலை செய்ய உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு—தொடர்ச்சி. | |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 279-283 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 283-289 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 289-291 |
| *திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 291-294 |
| திரு. சி. ஞானசேகரன் | 294-299 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 299-300 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 301-304 |

*6. வரவு-செலவுத் திட்டம், 1999-2000, பொது விவாதம்—தொடர்ச்சி* 308-374

| | |
|---|---|
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 308-314, 322, 323 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 310, 325 |
| மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி | 315-330 |
| திரு. ஜி.கே. மணி | 330-337 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 337, 367 |
| திரு. பி.என். சுப்பிரமணி | 337-340 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 341-344, 345-355 |





பக்கங்கள்

*6. வரவு-செலவுத் திட்டம், 1999-2000, பொது விவாதம்—தொடர்ச்சி*

| | |
|---|---|
| திரு. சி. ஞானசேகரன் | 345 |
| *மாண்புமிகு திரு. இ. பெரியசாமி | 381 |
| *திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 355-363 |
| திரு. பி. வெங்கடசாமி | 364-365, 367-368 |
| மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் | 365-366 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 366 |
| *திரு. லா. சந்தானம் | 369-374 |

*7. அரசினர் தீர்மானம்—*

| | |
|---|---|
| விதி 32-ஐத் தளர்த்தல் | 368-369 |

*8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—* 375


221182

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**பங்குனி 12, வெகுதான்ய, திருவள்ளுவர் ஆண்டு-2030**

**1999 மார்ச் 26, வெள்ளிக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"குன்றன்னார் குன்ற மதிப்பின் குடியொடு*
*நின்றன்னார் மாய்வர் நிலத்து"*

மலை போன்றவர்களின் பெருமையைக் குலைப்பதற்கு நினைப்பவர்கள், நிலைத்த பெரும் செல்வமுடையவர்களாக இருப்பினும் அடியோடு அழிந்துபோய் விடுவார்கள்.

## 1. வினாக்கள்-விடைகள்

**உடுக்குறியிடாத வினாக்கள்**
**ஐந்தாம் பட்டியல்**

1—

**காவல் நிலையம் அமைத்தல்**

வினா 16803—**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, விளாங்குடி கைக்காட்டியில் காவல் நிலையம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தொகுதிக்குட்பட்ட விளாங்குடி கைக்காட்டியில் புதிதாகக் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

---

@ உடுக்குறியிடாத வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.

[1999 மார்ச் 26

**2—**

### சாலை விதிகளை மீறியவர்கள் விவரம்

வினா 18265—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டத்தில் 1996-97, 1997-98 ஆம் ஆண்டுகளில் சாலை விதிகளை மீறியவர்கள் எத்தனை பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்.**

| | 1996-97 | 1997-98 |
|---|---|---|
| ஈரோடு மாவட்டத்தில் சாலை விதிகளை மீறியவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் | 2535 | 1464 |

**3—**

### பதிவு மூப்பின் அடிப்படையில் பணி நியமனங்கள்

வினா 21657—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பதிவு மூப்பின் அடிப்படையில் இடைநிலை ஆசிரியர் நியமனம் நடைபெறுவதுபோல் பட்டதாரி ஆசிரியர்கள் பணி நியமனத்திலும் அம்முறை கடைபிடிக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் தவிர மற்ற எல்லா நிலைகளிலும் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமே தேர்வு நடத்தலாம் என்பது இவ்வரசின் கொள்கையாகும். எனவே, பட்டதாரி ஆசிரியர்கள் பணி நியமனத்தில் இம்முறையைக் கடைபிடிக்க இயலாது.



1999 மார்ச் 26]

**4—**

### மின் அழுத்தக் குறைவை சீர்படுத்துதல்

வினா 15130—**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் மென்னன்-தி-நாகாச்சி, சேமனூர் மற்றும் பல பகுதிகள் மின் அழுத்தம் குறைவால் மின் விளக்குகள் எரியாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி தொகுதியிலுள்ள மென்னன்-தி-நாகாச்சி பகுதியில் அமைந்துள்ள ஒரு முனை மின் மாற்றியை (Single Phase Transformer) 22 கி.வோல்ட்/400 வோல்ட்ஸ் 63 கி.வோல்ட் ஆம்பியர் (63KVA) மும்முனை மின் மாற்றியாக மாற்றுவதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவ்வேலை விரைவில் முடிக்கப்பட்டு, மும்முனை மின் மாற்று செயலுக்குக் கொண்டு வரப்படும். அதன் பின்னர் மென்னன்-தி-நாகாச்சி பகுதியில் சீரான மின்சாரம் வழங்கப்படும். சேமனூர் மற்றும் பல பகுதிகளில், குறைந்த மின் அழுத்த மின் கம்பித் தொடர்களில் பராமரிப்பு வேலை எடுக்கப்பட்டு, அந்த மின் கம்பித் தொடர்கள் சீராக்கப்பட்டுள்ளன. தற்பொழுது சேமனூர் பகுதியில் மின் அழுத்தத்தின் நிலை சீராக உள்ளது.

**5—**

### புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துதல்

வினா 16715—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் இந்த நிதி ஆண்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி சட்டமன்ற தொகுதி, எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களை கொண்டதாகும். எடப்பாடியில் 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள், கொங்கணாபுரத்தில் 2 மற்றும் மகுடஞ்சாவடியில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மக்கள் தொகைக்கு ஏற்ப செயல்படுவதால் எடப்பாடி தொகுதியில் கூடுதலாக ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

6—

**புதிய மின் மாற்றி அமைத்தல்**

வினா *19495*—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், மூங்கில்பாடி ஊராட்சியிலுள்ள சுடுகாட்டிற்கு சேனைக்கவுண்டனூருக்கு சக்தி வாய்ந்த புதிய மின் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மூங்கில்பாடி ஊராட்சியிலுள்ள சுடுகாட்டிற்கு மூங்கில்பாடி 100 கே.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றி எண். 2-லிருந்து மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேற்படி மின் மாற்றியின் திறன் தற்பொழுது இணைக்கப்பட்டுள்ள பளுவைவிட அதிகமாக இருப்பதால் சேனைக்கவுண்டனூருக்கு சக்தி வாய்ந்த புதிய மின் மாற்றி அமைக்க எவ்வித முன்மொழிவும் இல்லை.





7—

**கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

வினா *21291*—**திரு. ஆ.செ. மணிக்கண்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூர் தொகுதி, சேந்தநாடு மையத்தில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநாவலூர் தொகுதி, சேந்தநாடு கிராம மக்கள் தொகை 4371 ஆகும். சேந்தநாடு கிராமம் திருநாவலூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்படுவதாலும், தற்போது தமிழ்நாட்டின் மொத்த கிராமிய மற்றும் மலைப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தொகைக்கேற்ப தேவையான ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதாலும் கூடுதலாக சேந்தநாடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

8—

**மின் கட்டண அளவை மாற்றுதல்**

வினா *21311*—**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் பதிவு பெற்ற தொழிற்சங்க அலுவலகங்களுக்கு வர்த்தக நிறுவனங்களுக்கு விதிக்கப்படும் மின் கட்டண அளவை வீட்டு உபயோக மின் கட்டண அளவிற்கு மாற்றிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1999 மார்ச் 26

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**9—**

**ஆரம்ப சுகாதார நிலையம் முழுநேரம் செயல்பட வைத்தல்**

வினா 22000—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், தொப்பூர், இண்டூர், பாளையம்புதூர் ஆகிய இடங்களில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரம் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்தில் பாளையம்புதூர், இண்டூர், லாலிகம், பண்டஹள்ளி, தொப்பூர் ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. தொப்பூர், இண்டூர் ஆகிய இவ்விரு ஆரம்ப சுகாதார நிலையங்களும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களாக இருப்பதால், 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை. பாளையம்புதூர் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம் உட்பட இரண்டாம் கட்டத்தில் 174 முதன்மை ஆரம்ப சுகாதார நிலையம், சமுதாய நல சுகாதார நிலையங்கள் 24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.



1999 மார்ச் 26]

**10—**

**தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

வினா 20124—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் புறம்போக்கு நிலங்களை நத்தம் புறம்போக்காக மாற்றி அங்குள்ள வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்பவர், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதிக்குள் உள்ள அனைத்து கிராமங்களிலும் வீட்டுமனை ஒப்படை கோருமிடம் கிராம நத்தமாக இருப்பின் நேரடியாக வட்டாட்சியரால் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுகிறது. இதர வகை புறம்போக்கு எனில், நேர்வுகளின் தன்மையைப் பொறுத்து பட்டா வழங்க ஏதுவாக அதன் வகைப்பாட்டினை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**11—**

**தொடக்கப்பள்ளிக் கட்டடம் புதுப்பித்தல்**

வினா 17847—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கசுவிரெட்டிப்பட்டி தொடக்கப் பள்ளிக் கட்டடத்தை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

[1999 மார்ச் 26

(ஆ) நடப்பு நிதி ஆண்டு இறுதிக்குள் பராமரிப்புப் பணியை செய்து முடிக்க தாரமங்கலம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**12—**

**பேரூராட்சிகள் விவரம்**

வினா 20889—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் பேரூராட்சிகளில் ஆண்டு வருமானம் ரூ. 10 இலட்சத்திற்குள்ள பேரூராட்சிகள் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் பேரூராட்சிகளில் ஆண்டு வருமானம் ரூ. 10 இலட்சத்திற்குள்ளது பேளூர் பேரூராட்சி ஒன்று மட்டுமே.

**13—**

**சில்லரை அரிசி வியாபாரிகளிடம் வரிவசூல் செய்தல்**

வினா 8177—**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசின் ஏகபோக நெல் கொள்முதல் கொள்கையினால் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் சந்தைக்குழு நெல்லுக்கான சேவை செய்யாததோடு சில்லரை அரிசி வியாபாரிகளிடம் அரிசிக்கு வரிவசூல் செய்வதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் அரசின் ஏகபோக நெல் கொள்முதல் கொள்கை அமுலில் உள்ளபோது



1999 மார்ச் 26]

நெல், அரிசி சில்லரை வணிகர்கள் அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்து அரிசியாக மாற்றம் செய்து மேற்காணும் மாவட்டங்களில் விற்பனை செய்திட அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு சில்லரை நெல், அரிசி வியாபாரிகள், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யும் நெல்லுக்கு மாதந்தோறும் கணக்கு கொடுத்து, 1987-ஆம் ஆண்டின் தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் விற்பனை (ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் பிரிவு 24(1)-ன்படி மார்க்கெட் கட்டணம் செலுத்தி வருகின்றனர். சில்லரை வணிகர்களிடமிருந்து அரிசிக்காக எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.

**14—**

**செந்துறையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைத்தல்**

வினா 15888—**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழவில்லை.

**15—**

**பருத்தி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைத்தல்**

வினா 16959—**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மார்ச் 26

(அ) நாட்றாம்பள்ளியில் பருத்தி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) நாட்றாம்பள்ளியிலிருந்து 16 கி.மீ. தொலைவில் திருப்பத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் உள்ளது. நாட்றாம்பள்ளியில் உற்பத்தியாகும் பருத்தி வரத்து ஓர் ஆண்டில் டிசம்பர் மற்றும் ஜனவரி ஆகிய 2 மாதங்களில் மட்டும் தான். எனவே, நாட்றாம்பள்ளியில் பருத்திக்கு ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் திறக்கப்பட்டால் நன்கு செயல்பட வாய்ப்பில்லை. ஆகவே, நாட்றாம்பள்ளியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்கத் தேவையில்லை என அரசு கருதுகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**16—**

**பழச்சாறு எடுக்கும் தொழிலகங்கள் விவரம்**

வினா 16987—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பழங்களிலிருந்து பழச்சாறு எடுக்கும் தொழிலகங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றின் மூலமாகக் கிடைக்கும் அன்னியச் செலாவணி எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சுமார் 95 தொழிலகங்கள்.



1999 மார்ச் 26]

(ஆ) அகில இந்திய அளவில் பழச்சாறு எடுக்கும் தொழிலகங்கள் மூலம் கிடைக்கும் அன்னியச் செலாவணி விவரம்:

| | | |
|---|---|---|
| 1994-95 | - | ரூ. 8071 இலட்சம் (34,460 மெட்ரிக் டன்) |
| 1995-96 | - | ரூ. 8461 இலட்சம் (36,023 மெட்ரிக் டன்) |

(தமிழ்நாட்டிற்குரிய புள்ளி விவரங்கள் தனியே இல்லை)

**17—**

**ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஏற்படுத்துதல்**

வினா 20450—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் கொங்கணாபுரத்தில் ஏற்கெனவே 6-8-1979 முதல் கொங்கணாபுரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் இயங்கி வருகின்றது. மகுடஞ்சாவடியிலிருந்து கொங்கணாபுரம் சுமார் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. இதற்கு நல்ல சாலை வழி அமைப்பும் உள்ளது. ஓர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கும் மற்றொரு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கும் 16 கி.மீ. சுற்றளவு அமையப்பெற வேண்டும் என்ற நிலை உள்ளது. மகுடஞ்சாவடி அருகில் அமைந்துள்ள கொங்கணாபுரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் நல்ல முறையில் செயல்பட்டு வருவதால், மகுடஞ்சாவடி பகுதி விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் 10 கி.மீ. தொலைவில் உள்ள கொங்கணாபுரம் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திலேயே விளைபொருட்களை விற்கவும், வாங்கவும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, மகுடஞ்சாவடியில் ஓர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஏற்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

[1999 மார்ச் 26

18—

### ஏரியின் கரைகளைக் கட்டுதல்

*வினா 21249*—**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பெரிய ஏரியின் கரைகளைக் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி, பெரிய ஏரியின் கரைகள் முழுவதும் பலப்படுத்தும் பணி அரசு மண்வாரி இயந்திரம் மூலம் ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் ஜூலை 1998 இல் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

19—

### சுற்றுலா சிறப்புப் பேருந்து இயக்குதல்

*வினா 20401*—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக சேலத்தில் இருந்து அனைத்துச் சுற்றுலா மையங்களுக்கும் சென்றுவர சுற்றுலா சிறப்புப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் மாநகரிலிருந்து அரசு புறநகர்/விரைவுப் போக்குவரத்துக் கழகங்களால் திருச்சி, கோவை, பழனி, மதுரை, கும்பகோணம், திருவாரூர், தஞ்சாவூர், திருச்செந்தூர், இராமேசுவரம், கன்னியாகுமரி, மலை மாதேஸ்வரா முதலான சுற்றுலா மற்றும் திருக்கோயில் நகரங்களுக்கு பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதால் தனியே சுற்றுலாப் பேருந்து இயக்கும் அவசியம் எழவில்லை.



1999 மார்ச் 26]

20—

### போக்குவரத்து அலுவலகத்திற்குப் புதிய கட்டடம்

*வினா 21058*—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்குத் தேவையான இடத்தை கையகப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

(ஆ) நிலம் தேர்வு செய்து புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க முடிவு எடுத்த பின்னர், நிலம் தேர்வு செய்து புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு பரிசீலிக்கப்படும்.

21—

### அற்புதபுரத்தில் பேருந்து நிறுத்தம் ஏற்படுத்துதல்

*வினா 21929*—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூரிலிருந்து புதுக்கோட்டை வரை செல்லும் மெயின் சாலையில் உள்ள அற்புதபுரத்தில் பேருந்து நிறுத்தம் ஒன்று ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர்-புதுக்கோட்டை சாலையில் உள்ள அற்புதபுரத்தில் பேருந்து நிறுத்தம் உள்ளது. இங்கு நகரப் பேருந்துகள் மற்றும் தஞ்சாவூர்-புதுக்கோட்டை செல்லும் புறநகர் பேருந்துகள் நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் சென்று வருகின்றன.

[1999 மார்ச் 26

**22—**

**ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில் கட்டட சீரமைப்புப் பணிகள்**

வினா 1024—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, புவனகிரி ஒன்றியம், அகர ஆலம்பாடியில் உள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில் கட்டட சீரமைப்புப் பணிகள் (Renovation Work) பாதியிலேயே உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், அகரம் ஆலம்பாடி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயில் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மதிற்சுவர் மட்டும் விரிசலடைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய கிராமப்புற திருக்கோயில்கள் திருப்பணி நிதியுதவி திட்டத்தின்கீழ் நிதியுதவி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**23—**

**பேச்சியம்மன் திருக்கோயிலுக்கு அரசு நிதி உதவி**

வினா 5578—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, டி. பரங்கிப்பேட்டை ஒன்றியம், கோவிலாம்பூண்டியில் உள்ள அருள்மிகு பேச்சியம்மன் திருக்கோயிலுக்கு அரசு நிதி உதவி வழங்கப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 மார்ச் 26]

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், கோவிலாம்பூண்டி கிராமம், அருள்மிகு பேச்சியம்மன் திருக்கோயில் திருப்பணிக்கு 1996-97 ஆம் ஆண்டுக்கான கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணி நிதியுதவி திட்டத்தின் கீழ் ரூ. 25,000/- நிதியுதவி கடலூர் உதவி ஆணையர் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

**24—**

**வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம்**

வினா 20458—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், வல்லம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோக மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டத்திலுள்ள வல்லம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு சங்கத்திற்குச் சொந்தமான அடிமனை ஏதும் இல்லை. வங்கியிலிருந்து அடிமனை வாங்குவது தொடர்பாக அனுமதி கோரி முன்மொழிவு எதுவும் பெறப்படவில்லை. இருப்பினும், மேற்படி வங்கியிலிருந்து அடிமனை வாங்குவது தொடர்பாக உரிய முன்மொழிவு பெற்று நடவடிக்கை எடுக்க மண்டல இணைப் பதிவாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

[1999 மார்ச் 26

25—

**புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்குதல்**

வினா 20564—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்கு உட்பட்ட பெண்ணாகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து சத்தியநாதபுரம் ஊராட்சி மோட்டுப்பட்டியில் புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேசிய வங்கியின் நிபந்தனைப்படி புதிதாகத் தொடங்கப்படவுள்ள வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தன்னிறைவு பெற்ற வங்கியாக இயங்க வேண்டுமாயின் குறைந்த அளவு 2000 ஹெக்டேர் (4942 ஏக்கர்) பயிரிடக் கூடிய நிலப்பரப்பும், ரூ. 10/-இலட்சம் அளவுக்கு குறுகிய காலக் கடன் வழங்கிடக் கூடிய தகுதியும் பெற்றிருக்க வேண்டும். இவ்வங்கியின் விவகார எல்லையில் உள்ள 4 வருவாய்க் கிராமங்களில் பயிரிடக் கூடிய நிலப்பரப்பு 13.060 ஏக்கர் ஆகும். இதில் சத்தியநாதபுரம் ஊராட்சியில் மட்டும் பயிரிடக்கூடிய மொத்த நிலப்பரப்பு 1425 ஏக்கர் ஆகும். மேலும் சத்தியநாதபுரம் வருவாய் கிராம உறுப்பினர்களில் 193 நபர்கள் மட்டுமே வங்கியில் கடன் பெற்றுள்ளனர். பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சத்தியநாதபுரம் ஊராட்சியில் மட்டும் இரண்டு நியாயவிலைக் கடைகள் பெண்ணாகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தி வருகிறது. பெண்ணாகரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி 1997-98 ஆம் ஆண்டில் சத்தியநாதபுரம் விவகார எல்லையில் ரூ. 3.10 இலட்சம் மட்டுமே குறுகிய காலக் கடனாக வழங்கியுள்ளது. மேலும், பெண்ணாகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கடந்த மூன்று ஆண்டுகளாக நட்டத்தில் இயங்கி வருகிறது. எனவே, மிகக் குறைவாக பயிரிடக்கூடிய 1,425 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட சத்தியநாதபுரம் ஊராட்சிக்கென



1999 மார்ச் 26]

ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை மோட்டுப்பட்டி கிராமத்தில் ஆரம்பித்தால், அவ்வங்கி தன்னிறைவு பெற்ற வங்கியாக இயங்காது. மேற்கூறிய சூழ்நிலைகளில், தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைப் பிரித்து சத்தியநாதபுரம் ஊராட்சிக்கென மோட்டுப்பட்டி கிராமத்தில் தனியே ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

26—

**பகுதி நேர நியாயவிலைக் கடைகளாக மாற்றுதல்**

வினா 20572—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், ஜக்கம்பட்டியிலிருந்து டீக்கடைக்கும், வண்ணாத்திப்பட்டியிலிருந்து சாலைக்குள்ளாத்திரம் பட்டிக்கும், திண்ணப்பெல்லூரிலிருந்து காமராசர்பேட்டை ஆகிய ஊர்களில் நியாயவிலைக் கடைகளைப் பிரித்து பகுதி நேர நியாயவிலைக் கடைகளாக மாற்ற அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

**(1) ஜக்கம்பட்டி நியாயவிலைக் கடையிலிருந்து டீக்கடை என்ற இடத்தில் ஒரு புதிய பகுதி நேரக் கடை அமைப்பது குறித்து:**

ஜக்கம்பட்டி (கோடிபுள்ளி) நியாயவிலைக் கடையைப் பிரித்து பொச்சாம்பட்டி என்ற கிராமத்தில் ஏற்கெனவே 240 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேரக் கடை பிரிக்கப்பட்டு தற்போது இயங்கி வருகிறது. தற்போது ஜக்கம்பட்டி நியாயவிலைக் கடையில் 316 குடும்ப அட்டைகளே உள்ளன. எனவே, இதனை 'டீக்கடை' என்ற இடத்தில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடையமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[1999 மார்ச் 26

(2) **வண்ணாத்திபட்டி நியாயவிலைக் கடையைப் பிரித்து சாலைக் குள்ளாத்திரம்பட்டியில் ஒரு புதிய பகுதி நேரக் கடை அமைப்பது தொடர்பாக:**

வண்ணாத்திபட்டி நியாயவிலைக் கடையைப் பிரித்து நள்ளம்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே 332 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேர கடை அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. வண்ணாத்திபட்டி நியாயவிலைக் கடையில் தற்போது 382 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. எனவே, இதனை மீண்டும் பிரித்து ஒரு பகுதி நேர நியாயவிலைக் கடையமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(3) **தின்னபெல்லூர் நியாயவிலைக் கடையைப் பிரித்து காமராசர்பேட்டையில் ஒரு பகுதி நேரக் கடை அமைக்கக் கோருதல் குறித்து:**

தின்னபெல்லூர் நியாயவிலைக் கடையில் தற்போது 641 குடும்ப அட்டைகள் உள்ளன. இந்நியாயவிலைக் கடையை மூங்கில் மடுவு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தி வருகிறது. பகுதிநேர கடையமைக்கக் கோரியுள்ள காமராசர்பேட்டை பகுதியில் 166 குடும்ப அட்டைகளே இணைக்கப்பட்டுள்ளன. அரசு ஆணையின்படி பகுதிநேர கடையுடன் குறைந்தது 200 குடும்ப அட்டைகளேனும் இணைக்கப்பட வேண்டும். இந்நேர்வில் அரசின் நிபந்தனை பூர்த்தியாகாததால், காமராசர்பேட்டையில் புதிய பகுதிநேர கடை அமைக்க சாத்தியமில்லை.

27—

## பகுதி நேர நியாயவிலைக் கடையை ஏற்படுத்துதல்

வினா 20608—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், வெள்ளரிவெள்ளி பஞ்சாயத்திலுள்ள குஞ்சம்பாளையம் என்ற ஊரில் பகுதிநேர நியாயவிலைக் கடையை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**



1999 மார்ச் 26]

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், வெள்ளரிவெள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கல்லாபாளையம் என்ற நியாயவிலைக் கடையை நடத்தி வருகிறது. இந்நியாயவிலைக் கடையில் 511 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் பகுதிநேர கடை வேண்டும் குஞ்சம்பாளையத்தின் 318 அட்டைகளும் அடங்கும். தாய்க்கடையான கல்லாபாளையம் நியாயவிலைக் கடைக்கும் குஞ்சம்பாளையத்திற்கும் இடையே உள்ள தூரம் 1.5 கிலோ மீட்டர் என்பதால் அங்கு பகுதி நேர நியாயவிலைக் கடை தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

28—

## நியாயவிலைக் கடை திறத்தல்

வினா 20713—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி ஊராட்சி எட்டிக்கொட்டைமேடு என்ற இடத்தில் நியாயவிலைக் கடை திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது கே. பள்ளிப்பட்டி என்ற நியாயவிலைக் கடையை 869 குடும்ப அட்டைகளுடன் நடத்திவருகின்றது. எட்டிக்குட்டைமேடு குடும்ப அட்டைகள் இக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. தாய்க்கடையான கே. பள்ளிப்பட்டிக்கும் எட்டிக்குட்டைமேட்டிற்கும் 1 கிலோ மீட்டர் தூரமே உள்ளது. மேலும், எட்டிக்குட்டைமேட்டில் 58 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதால் அங்கு புதிய முழு நேர நியாயவிலைக் கடையோ அல்லது பகுதி நேர நியாயவிலைக் கடையோ தொடங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[1999 மார்ச் 26

**29—**

### நியாயவிலைக் கடை அமைத்தல்

வினா 20730—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோணங்கியூர் மாரியம்மன் கோவில், சமுத்திரம் கிராமம், தொப்பவளவு, மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்டர்குல மாணிக்கம் ஊராட்சி, ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

**(1) கொங்கணாபுரம் ஒன்றியம், கோணங்கியூர் மாரியம்மன் கோவில்:**

தச்சுப்பள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது கே. பள்ளிப்பட்டியில் கே. பள்ளிப்பட்டி என்ற நியாயவிலைக் கடையை 869 குடும்ப அட்டைகளுடன் நடத்தி வருகிறது. இந்நியாயவிலைக் கடையில் கோணங்கியூர் என்ற கிராமம் 60 குடும்ப அட்டைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. கோணங்கியூர் என்ற கிராமத்திற்கும் நியாய விலைக் கடை அமைந்துள்ள கே. பள்ளிப்பட்டிக்கும் இடையே ஒரு கிலோ மீட்டர் தூரமே உள்ளது. எனவே, அரசாணை எண் 63, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை நாள் 11-3-1997 மற்றும் அரசுக் கடிதம் எம். 18112/எப்.1/97-1, நாள் 18-5-1997-ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் பூர்த்தியாகாத காரணத்தினால் கோணங்கியூர் மாரியம்மன் கோவிலில் புதிய நியாயவிலைக் கடையோ அல்லது பகுதி நேர நியாயவிலைக் கடையோ அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**(2) சமுத்திரம் கிராமம் தொப்பவளவு:**

கொங்கணாபுரம் ஒன்றியத்தில் சமுத்திரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் மூலக்கடை என்ற நியாயவிலைக் கடையில் 504 குடும்ப அட்டைகள் உள்ளன. இந்நியாயவிலைக் கடையில் தொப்பவளவு கிராமத்தைச் சேர்ந்த 50 குடும்ப அட்டைகளும் மற்றும்



1999 மார்ச் 26]

தொப்பக்காட்டுவளவு கிராமத்தைச் சேர்ந்த 54 குடும்ப அட்டைகளும் ஆக மொத்தம் 104 குடும்ப அட்டைகளே உள்ளன. தொப்பவளவு கிராமத்திற்கும், தாய்க்கடையான மூலக்கடை நியாய விலைக் கடைக்கும் இடையே 1.25 கிலோ மீட்டர் தூரமே உள்ளது. அரசாணை எண். 63, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 11-3-1997 மற்றும் அரசுக் கடிதம் எண். 18112/எப்.1/97-1, நாள் 18-5-1997-ல் தெரிவித்துள்ள நிபந்தனைகள் பூர்த்தியாகாத காரணத்தினால், தொப்பவளவு கிராமத்தில் புதிய நியாய விலைக் கடையோ அல்லது பகுதி நேர நியாய விலைக் கடையோ துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**(3) மகுடஞ்சாவடி ஒன்றியம், கண்டர்குல மாணிக்கம் ஊராட்சி, ஆண்டிப்பட்டி:**

நடுவனேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கண்டர்குல மாணிக்கம் என்ற நியாயவிலைக் கடையினை 842 குடும்ப அட்டைகளுடன் நடத்தி வருகிறது. ஆண்டிப்பட்டி பகுதியானது கண்டர்குல மாணிக்கம் நியாயவிலைக் கடையுடன் இணைந்தது ஆகும். ஆண்டிப்பட்டி மற்றும் பனங்காடு பகுதியில் மொத்தம் 80 குடும்ப அட்டைகளே உள்ளன. தாய் கடையான கண்டர்குல மாணிக்கத்திற்கும், ஆண்டிப்பட்டிக்கும் இடையே 2 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. எனினும், அரசாணை எண். 63, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 11-3-1997 மற்றும் அரசுக் கடிதம் எண். 18112/எப்.1/97-1, நாள் 18-5-1997-ல் நிர்ணயிக்கப்பட்ட இதர நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் ஆண்டிப்பட்டி கிராமத்தில் புதிய நியாயவிலைக் கடையோ அல்லது பகுதி நேர கடையோ தொடங்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**30—**

### நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

வினா 20974—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், 1998-99 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள குணராமநல்லூர் ஊராட்சி, மேலமெஞ்ஞானபுரம்

[1999 மார்ச் 26

கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், குணராமநல்லூர் ஊராட்சி மேலமெஞ்ஞானபுரம் கிராமத்தில் 1998-99 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 1.28 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக் கடை கட்டடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழவில்லை.

**31—**

**சிந்தாமணி கூட்டுறவு பனியன் கம்பெனி**

வினா 21217—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூரில் உள்ள சிந்தாமணி கூட்டுறவு பனியன் கம்பெனியின் சொத்து மதிப்பு எவ்வளவு?

(ஆ) தற்போது உற்பத்தி நடைபெறாமல் நிறுத்தப்பட்டுள்ளது ஏன்?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**



1999 மார்ச் 26]

(அ) கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் மொத்த விற்பனைப் பண்டகசாலைக்கு சொந்தமான திருப்பூர் சிந்தாமணி பனியன் ஆலையின் சொத்து மதிப்பு ரூ. 48.00 இலட்சம். இதன் விவரம் பின்வருமாறு:

| | நிலத்தின் பரப்பளவு ஏக்கர் | அரசு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | சொத்தின் மதிப்பு |
|---|---|---|---|
| திருப்பூர் பனியன் ஆலை இடம் | 0.75 | 0.40 | 30.00 |
| கட்டடம் (மற்றும் மெஷினரி மதிப்பு) | .. | .. | 18.00 |
| மொத்தம் | | | 48.00 |

(ஆ) சிந்தாமணி பனியன் ஆலையில் உற்பத்தி நடைபெற்று வருகிறது. திருப்பூரில் உள்ள பனியன் ஆலையில் கீழ்க்கண்டவாறு பனியன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது:

| மாதம் | உற்பத்தி |
|---|---|
| ஆகஸ்ட் 1998 | 151 டஜன் பனியன் |
| செப்டம்பர் 1998 | 1260 டஜன் பனியன் |
| அக்டோபர் 1998 | 245½ டஜன் பனியன் |

பனியன் உற்பத்தியை அதிகரிக்கவும் விற்பனையை மேம்படுத்தவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**32—**

**பொதுத் தொழிலாளர் நல வாரியம் அமைத்தல்**

வினா 16270—**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் டீ கடைகளில், ஓட்டல்களில் பலவகை கடைகளில் வேலை, சம்பளம், எதிர்காலம் ஆகியவை உத்தரவாதமின்றி இருக்கின்ற தொழிலாளர்களுக்கு பொதுத் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்படுமா?

[1999 மார்ச் 26

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைசசர்:**

அரசாணை எண் 96, நாள் 21-8-1998இன் மூலம் அமைப்பு ரீதியற்ற 43 தொழில்களை தமிழ்நாடு உடலுழைப்போர் சட்ட அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது. அதில் உணவு நிறுவனங்கள் தொழில் மற்றும் சமையல் தொழில் அடங்கும். மேலும் உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் உட்பட அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கென பொதுவாக ஒரு நல வாரியம் அரசால் விரைவில் அமைக்கப்படவுள்ளது. அதற்கென ஒரு சிறப்பு அலுவலர் அனுமதிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார். இதில் டீ கடைகள், ஓட்டல்கள் மற்றும் பலவகை கடைகளில் பணிபுரியும் தொழிலாளர்களும் அடங்குவர்.

33—

**நீதிமன்றங்களுக்கான கூட்டுக் கட்டடங்கள்**

வினா 15796—**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் சார்நிலை நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்கான கூட்டுக் கட்டடங்கள் விரைவில் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

அரியலூரில் அமைந்துள்ள சார்பு நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் அரசு கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன. எனவே, அங்கு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

34—

**பார்வையற்றோர் கைத்தறிக் கூடம்**

வினா 21568—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரிலுள்ள பார்வையற்றோருக்கான கைத்தறிக்கூடத்தில் பணியாற்றும் பார்வையற்றவர்கள் எத்தனை பேர்?



1999 மார்ச் 26]

(ஆ) அதை மேலும் விஸ்தரிப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரை நகரில் கைத்தறித் துறையின் கட்டுப்பாட்டில், பார்வையற்றோருக்கான கைத்தறிக் கூடம் ஏதுமில்லை. இருப்பினும் அங்கு தமிழ்நாடு பார்வையற்றோருக்கு புனர் வாழ்வு மையம் ஒன்று உள்ளது. அதில் முப்பத்திரண்டு பார்வையற்றவர்கள் தறி நெய்து வருகிறார்கள். அது புனரமைப்பு தறி நிலையமே தவிர, தொழிற்கூடமல்ல. இந்தப் புனரமைப்பு மையம் விஸ்தரிப்பு செய்வதற்கான செயற்குறிப்பு தற்போது ஏதும் இல்லை.

35—

**பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் முன்னேற்றத்திற்கு சலுகை**

வினா 20534—**திரு ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-ஆம் நிதியாண்டில் பள்ளிபடிப்பு, உதவித்தொகை திட்டத்தின்கீழ் பத்தாம் வகுப்பு படிக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் முன்னேற்றத்திற்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

அரசு/அரசு மானியம் பெறும் பள்ளிகளில் 10-ம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.25,000-க்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு அனைத்துப் பாடப்புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சேர்ந்த அனைத்து வருவாய் பிரிவினரும் அவர்கள் கல்வி நிலையத்திற்குச் செலுத்த வேண்டிய படிப்புக் கட்டணம், சிறப்புக்

[1999 மார்ச் 26

கட்டணம் மற்றும் அரசு தேர்வுத் துறைக்கு பொதுத் தேர்வுக்கு கட்டவேண்டிய தேர்வுக் கட்டணம் ஆகியவை நேரடியாக அத்துறை மூலம் முறையே பள்ளிகளுக்கும்/அரசுத் தேர்வு இயக்குநருக்கும் ஈடு செய்யப்படுகின்றன. மேலும் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு செலுத்த வேண்டிய படிப்புக் கட்டணத் தொகை மாதம் ரூ.25 வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படுகின்றது. பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இச்சலுகைகள் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.25,000-க்கு மிகாமல் இருந்தால் அளிக்கப்படுகின்றது.

**36—**

### மிக பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி

வினா 20675—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் மிகமிக பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு புதிதாக விடுதி கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் எடப்பாடியில் மிக பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி செயல்பட்டு வருகிறது. அங்கு மேற்கொண்டும் மாணவர் விடுதி புதிதாக துவங்க வேண்டிய அவசியமில்லை. மேலும் அவ்விடுதிக்கு சொந்தமாக கட்டடம் கட்டும் செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**37—**

### பத்திரப் பதிவு செய்தல்

வினா 20133—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மார்ச் 26]

(அ) ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் பாகப்பிரிவினை செய்து கொள்ள மிகக் குறைந்த மதிப்பீட்டில் பத்திரப் பதிவு செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) குடும்ப உறுப்பினர்களுக்கு இடையேயான பாகப் பிரிவினை ஆவணங்கள் பதிவுக்கு விதிக்கப்படக்கூடிய முத்திரைத் தீர்வை விகிதத்தை 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைத்து ஏற்கனவே அரசாணை (நிலை) எண் 354, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 13-8-1997 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழவில்லை.

**38—**

### சத்துணவு சமையல் கூடம் கட்டுதல்

வினா 20965—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு தாலுகா, ஒரத்தநாடு ஒன்றியம், வடக்கு நத்தம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சத்துணவு சமையல் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

ஆம். மேற்படி மையத்திற்கு கட்டடம் கட்ட ஊராட்சி ஒன்றியத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**39—**

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா 17944—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மார்ச் 26

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், ஊ. மாரமங்கலம் பாலிகடையில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், ஊ. மாரமங்கலம் கிராமத்தில் கால்நடை மருந்தகமோ அல்லது கால்நடைக் கிளை நிலையமோ எதுவும் இல்லை. ஊ. மாரமங்கலம் கிராமத்திற்கு அருகில் 5 கி.மீ. தூரத்தில் ஓமலூர் கால்நடை மருந்தகமும், 10 கி.மீ. தொலைவில் சிக்கம்பட்டி கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகிறது. மேற்படி கால்நடை நிலையங்களின் மூலம் அப்பகுதி கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஊ. மாரமங்கலம் கிராமத்தில் கால்நடை மருந்தகமே இல்லாத நிலையில் மேற்படி கிராமத்தில் முதன்முறையாக கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறு ஏதும் இல்லை.

**40—**

**கால்நடை மருந்தகம் தொடங்குதல்.**

வினா 20625—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் கன்னந்தேரி ஊராட்சியில் பகுதி நேர கால்நடை மருந்தகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. ஆனால் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், கண்டர்குல மாணிக்கம்



1999 மார்ச் 26]

ஊராட்சியில் உள்ள கன்னந்தேரி கிராமத்தில் தற்போது பார்வை கிளை நிலையம் தொடங்கப்பட்டு 23-1-1998 முதல் செயல்பட்டு வருகிறது.

**41—**

**அழகப்பாளையம் புதூரில் கால்நடை மருந்தகம்**

வினா 20626—**திரு. ஐ. கணேசன்:** கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், அழகப்பாளையம் புதூரில் பகுதிநேர கால்நடை மருந்தகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) : எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், அழகப்பாளையம் புதூரில் பகுதி நேர கால்நடை மருந்தகம் தொடங்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**42—**

**கால்நடைக் கிளை மருத்துவமனை அமைத்தல்**

வினா 20838—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, கோணாகாப்பாடி ஊராட்சியிலுள்ள கே.ஆர். தோப்பூரில் கால்நடைக் கிளை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

[1999 மார்ச் 26

(அ) இல்லை. ஆனால் சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, வளத்தானூர் ஊராட்சியிலுள்ள கே.ஆர். தோப்பூரில் ஏற்கெனவே கால்நடை கிளை நிலையம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**43—**

**கால்நடை மருத்துவமனை கட்டுதல்**

வினா 21030—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், புதுப்பட்டினம் ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**44—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

வினா 21412—**திரு மா. இராமச்சந்திரன் :** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பஞ்சநதிக்கோட்டை ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

பஞ்சநதிக்கோட்டை ஊராட்சியில் கால்நடை மருந்தகமே இல்லாத நிலையில் அக்கிராமத்தில் முதன்முதலாக கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.



1999 மார்ச் 26]

**45—**

**கால்நடை மருத்துவமனை கட்டுதல்**

வினா 21413—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், சிவவிடுதி ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**46—**

**கால்நடை மருத்துவமனை தொடங்குதல்.**

வினா 21420—**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தொகுதி, எ. வெள்ளோடு கிராமத்தில் கால் நடை மருத்துவமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) எ.வெள்ளோடு கிராமத்தில் கால்நடை மருந்தகமே இல்லாத நிலையில் அங்கு முதன்முதலாக கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

**47—**

**கால்நடை மருந்தகம் அமைத்தல்**

வினா 21493—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மார்ச் 26

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், 1998-99 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் மாதிரி கிராமமாக தேர்வு செய்யப்பட்டுள்ள குணராமநல்லூர் ஊராட்சி, புல்லுக்காட்டு வலசை கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**48—**

**கால்நடை மருந்தகம் அமைத்தல்**

வினா 21590—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், இடையர் தவணை கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இடையர் தவணை கிராமத்திற்கு அருகிலுள்ள சுரண்டை, வீரகேரளம்புதூர், பாவூர்சத்திரம் ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை கிளை நிலையம் அமைந்துள்ளதாலும், கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்தில் போதிய கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடைக் கிளை நிலையங்கள் உள்ளதாலும், இக்கிராமத்தில் புதியதாக கால்நடை கிளைநிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



1999 மார்ச் 26]

**49—**

**பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் வழங்குதல்**

வினா 19117—**திரு. ஜி.கே மணி:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் வசிக்கும் குருமன்ஸ், குறிச்சான் போன்ற பழங்குடியினர்களுக்கு சாதிச் சான்றிதழ் வழங்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் வசிக்கும் குருமன்ஸ் மற்றும் குறிச்சான் போன்ற பழங்குடியினர்கள் சாதிச் சான்று வேண்டி மனு செய்து கொண்டால் முழுமையான விசாரணைகளுக்குப் பின்னர் உண்மையிலேயே அவர்கள் சம்பந்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் என நிரூபிக்கும்போது அவர்களுக்கு உரிய சாதிச் சான்றுகள் வழங்கப்படும்.

**50—**

**ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டுதல்**

வினா 20369—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடைய்ளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், மேல்நல்லாத்தூரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

மேல்நல்லாத்தூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் இன மக்களுக்கு வீட்டு மனை வசதி செய்ய நிலம் கையகப்படுத்தி வீட்டுமனைகள் வழங்கியதுபோக பொது உபயோகத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள விஸ்தீரணம் 0.08.0 ஹெக்டேர் புல எண் 76/10-ல் மேல்நல்லாத்தூர் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி கட்ட நிலம் தயாராக உள்ளது. எனினும், தற்போது விடுதி கட்ட இயலாது. வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

[1999 மார்ச் 26

## ஆறாம் பட்டியல் @

1—

### ஐயப்பன் சுவாமி ஊர்வலத்தில் யானைகள் பயன்படுத்தத் தடை

*வினா 14260*—**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் ராம் நகரில் ஐயப்பன் சுவாமி ஊர்வலத்தில் யானைகளைப் பயன்படுத்துவதற்குச் சட்ட ரீதியாகத் தடை உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கோயம்புத்தூர் ராம் நகரில் அய்யப்பன் சுவாமி ஊர்வலத்தில் யானைகளைப் பயன்படுத்துவதற்குச் சட்ட ரீதியாக தடை எதுவுமில்லை. ஆனால், மக்கள் பாதுகாப்பு மற்றும் நலனைக் கருதியும் போக்குவரத்து வசதியைக் கருதியும் சில விதிமுறைகளுடன் யானைகளைப் பயன்படுத்த காவல் துறை அனுமதியளித்து வருகிறது.

2—

### காவல் துறையினருக்குப் பயிற்சி அளித்தல்

*வினா 18095*—**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீண்டாமை ஒழிப்புத் துறையில் பணிபுரியும் காவல் துறையினருக்கு பயிற்சி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

இதுபற்றிய செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. எனினும் காவல் துறையினருக்கு காவல் பயிற்சிப் பள்ளியிலும், காவல் பயிற்சி கல்லூரியிலும் அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சியின்போதே தீண்டாமை ஒழிப்பு தொடர்பான பாடத்திட்டத்தில் 1955-ம் ஆண்டு குடியியல் உரிமைப்பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1959-ம் ஆண்டு பட்டியல் சாதியினர்/பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் குறித்தும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. தவிர தீண்டாமை ஒழிப்பு குடியியல் உரிமைகள் பாதுகாப்பு அலுவலகம், கூடுதல் அலுவலர்களைக் கொண்டு

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.



1999 மார்ச் 26]

காவல் துறையினருக்கு சிறப்புப் பயிற்சி அளிப்பது குறித்து பரிசீலிக்கப்படுகிறது.

3—

### தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்துதல்

*வினா 14091*—**திரு. ச. இராஜரெட்டி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, மஞ்சுகிரி தெலுங்கு தொடக்கப் பள்ளி சாமிபோகனவள்ளி தெலுங்கு தொடக்கப் பள்ளி, மாடகல் பஞ்சாயத்து நிம்மே நட்டி, பெட்டாமுகலாளம், பஞ்சாயத்து காலிகட்டில் தமிழ் தொடக்கப் பள்ளியையும் பின்னமங்கலம் கிராமத்திலுள்ள தொடக்கப் பள்ளிகளையும் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

மஞ்சுகிரியில் பள்ளிக் கல்வித் துறை, அரசாணை எண் 226, நாள் 11-6-1998-ன்படி தெலுங்கு தொடக்கப் பள்ளி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. சாமிபோகன பள்ளி சிம்மேனட்டி ஆகிய கிராமங்களில் புதிய பள்ளிகள் தொடங்க போதிய சாத்தியக்கூறுகள் இல்லை என தளி உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் தெரிவித்துள்ளார்.

2. 1999-2000 ஆம் கல்வி ஆண்டில் பெட்டாமுகலாளம் பஞ்சாயத்து, காலிகட் என்னும் ஊரில் புதிய ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை தொடங்குவது மற்றும் பின்னமங்கலம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்துவது ஆகியவை குறித்து தேவை மற்றும் தகுதியின் அடிப்படையில் அடுத்தக் கல்வியாண்டில் பரிசீலிக்கப்படும்.

4—

### ஆரம்பப் பள்ளி தொடங்குதல்

*வினா 14763*—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி பாரக்கல்லூரில் ஆரம்பப் பள்ளி தொடங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[1999 மார்ச் 26

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் ஆண்டின் அரசாணை நிலை எண் 226, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11-6-1998-ன்படி சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியம், பாராக்கல்லூரில் புதிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது.

5—

**விளையாட்டு அரங்கம் கட்டுதல்**

வினா 16944—**திரு. டி. அமரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், அரியலூரில் விளையாட்டு அரங்கம் கட்ட அரசு ஆணையிடுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் அனைத்து வசதிகளுடன் கூடிய விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட வேண்டும். பெரம்பலூர் மாவட்டத் தலைநகரான பெரம்பலூரில் விளையாட்டரங்கம் கட்டப் போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால், அரியலூரில் விளையாட்டரங்கம் கட்டத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) அரியலூரில் விளையாட்டரங்கம் கட்டுவதற்கான இடம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் தேர்வு செய்யப்பட்டு விளையாட்டுத் துறைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், மைய அரசின் அடிப்படை விளையாட்டு வசதிகளை மேம்படுத்த மானியம் வழங்கும் திட்டத்தில் திருத்தியமைக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் விளையாட்டரங்கக் குழு அமைத்து, கருத்துரு தயார் செய்து மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். மைய அரசு வழங்கும் மானியம் மற்றும் பொதுமக்கள் வழங்கும் நன்கொடைகள் மூலம் நிதி ஆதாரம் திரட்டப்பட்டு விளையாட்டரங்கம் கட்டும் பணி தொடங்கி முடிக்கப்படும்.



1999 மார்ச் 26]

6—

**அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்குதல்**

வினா 17840—**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம் நாட்றாம்பள்ளியில் ஒரு அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

7—

**தொடக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்**

வினா 18945—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக்கோட்டை ஊராட்சி, மறியல் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், மறியல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த வாய்ப்பு இருப்பின் 1999-2000 ஆம் கல்வி ஆண்டில் அனுமதிப்பது குறித்து தேவை மற்றும் தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும்.

8—

**தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்**

வினா 19188—**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழையூர் ஒன்றியம், பிரதாபராமபுரம் ஊராட்சி செந்தூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

[1999 மார்ச் 26

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை நிலை எண் 225, பள்ளிக் கல்வித் துறை, நாள் 11-6-1998-ன்படி நாகப்பட்டினம் மாவட்டம், கீழையூர் ஒன்றியம், பிரதாபராமபுரம் ஊராட்சி செருதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டுள்ளது.

**9—**

**மாவட்ட தலைநகர்களில் விளையாட்டு வளாக விவரம்**

வினா 21806—**திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை மாவட்டங்களில் தலைநகரில் விளையாட்டு வளாகம் அமைக்கப்பட்டுள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) தமிழகத்தில் 18 மாவட்டங்களின் தலைநகரில் விளையாட்டு அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) அதன் விவரங்கள் கீழே வருமாறு:

| வ.எண் | மாவட்டம் | திறந்தவெளி விளையாட்ட ரங்கம் | நீச்சல் குளம் | உள் விளையாட்ட ரங்கம் | விளையாட்டு தள வசதிகள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | சென்னை | ஆம் | ஆம் | ஆம் | 8 வரிசைகள் கொண்ட செயற்கை இழை ஓடு தளம் 3 கையுந்து பந்து தளம் (அவற்றில் ஒன்று மின்னொளி வசதி கொண்டது) 120 மீ. பயிற்சி தளம், இவற்றில் குண்டெறிதல், ஈட்டி எறிதல், உயரம் தாண்டுதல் நீளம் தாண்டுதல் டிரிபில் ஜம்ப் போன்ற விளையாட்டுகளை நடத்திடலாம் |
| 2 | கோயம்புத்தூர் | ஆம் | இல்லை | இல்லை | 8 வரிசைகள் கொண்ட 400 மீ. ஓடுதளம் கால்பந்து மற்றும் வளை கோல்பந்து தளங்கள் |
| 3 | கடலூர் | ஆம் | இல்லை | இல்லை | 7 வரிசைகள் கொண்ட 400 மீ. ஓடுதளம் கால்பந்து வளைகோல் பந்து மற்றும் கூடை பந்தாட்டத்தளங்கள் (இவற்றில் கிரிக்கெட்டும் பயிலலாம்) |
| 4 | தர்மபுரி | ஆம் | ஆம் | ஆம் | 6 வரிசைகள் கொண்ட 400 மீ. ஓடுதளம் கால் பந்து மற்றும் சிறகுப்பந்து தளங்கள் |
| 5 | ஈரோடு | ஆம் | இல்லை | ஆம் | 8 வரிசைகள் கொண்ட 400 மீ. ஓடு தளம் கால் பந்து மற்றும் 3 கையுந்துப் பந்து விளையாட்டுத் தளங்கள் (இவற்றில்ஒன்று மின்னொளி வசதி கொண்டது) மின்னொளி வசதியுடன் கொண்ட கூடைப்பந்தாட்ட தளம் கோ-கோ, சிறகுப் பந்து, மற்றும் பூப்பந்து தளங்கள் |
| 6 | காஞ்சிபுரம் | ஆம் | இல்லை | இல்லை | 8 வரிசைகள் கொண்ட 400 மீ. ஓடுதளம், பூப்பந்து கோ-கோ மற்றும் சிறகுப்பந்து தளங்கள் |
| 7 | கன்னியாகுமரி | ஆம் | இல்லை | இல்லை | 8 வரிசைகள் கொண்ட 400 மீ. ஓடுதளம் கால்பந்து மற்றும் 2 கையுந்துபந்து விளையாட்டுத் தளங்கள் (அவற்றில் ஒன்று மின்னொளி வசதி கொண்டது) |



1999 மார்ச் 26]

| வ.எண் | மாவட்டம் | திறந்தவெளி விளையாட்ட ரங்கம் | நீச்சல் குளம் | உள் விளையாட்ட ரங்கம் | விளையாட்டு தள வசதிகள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 8 | மதுரை | ஆம் | இல்லை | ஆம் | 8 வரிசைகள் கொண்ட 400 மீ. ஓடுதளம், கால்பந்துதளம் (இவற்றில் கிரிக்கெட்டும் பயிலலாம்) வளைகோல்பந்து தளம், 2 கையுந்துப்பந்து தளம், 2 கூடைப்பந்தாட்ட தளம் கோ-கோ, கபடி மற்றும் பூப்பந்து தளங்கள். |
| 9 | இராமநாதபுரம் | ஆம் | இல்லை | ஆம் | 8 வரிசைகள் கொண்ட 400 மீ. ஓடுதளம், கால்பந்து தளம் (இவற்றில் கிரிக்கெட்டும் பயிலலாம்), வளைகோல் பந்துதளம் 2, கையுந்துப் பந்து தளம் 2, கூடைப்பந்து தளம், கோ-கோ, கபடி மற்றும் பூப்பந்து தளங்கள். |
| 10 | சேலம் | ஆம் | இல்லை | ஆம் | 8 வரிசைகள் கொண்ட 400 மீ. ஓடுதளம், கால்பந்து தளம் (இவற்றில் கிரிக்கெட்டும் பயிலலாம்) 2 கையுந்துப் பந்து தளம் கூடைப்பந்து தளம் கோ-கோ கபடி மற்றும் பூப்பந்து தளங்கள். |
| 11 | தஞ்சாவூர் | ஆம் | ஆம் | இல்லை | 8 வரிசைகள் கொண்ட 400 மீ. ஓடுதளம், கால்பந்து தளம் (இவற்றில் கிரிக்கெட்டும் பயிலலாம்), வளைகோல் பந்துகளம், கையுந்துப் பந்து 2, கூடைப்பந்து தளம், கோ-கோ, கபடி மற்றும் பூப்பந்து தளங்கள் கொண்டது. |





| வ.எண் | மாவட்டம் | திறந்தவெளி விளையாட்ட ரங்கம் | நீச்சல் குளம் | உள் விளையாட்ட ரங்கம் | விளையாட்டு தள வசதிகள் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 12 | நீலகிரி | ஆம் | இல்லை | ஆம் | 6 வரிசைகள் கொண்ட 400 மீ. ஓடுதளம், கால்பந்து தளம். |
| 13 | திருநெல்வேலி | ஆம் | இல்லை | இல்லை | 8 வரிசைகள் கொண்ட 400 மீ. ஓடுதளம், கால்பந்து தளம் 2, கையுந்துப் பந்து தளம் 2, கூடைப்பந்து தளம், கோ-கோ, கபாடி மற்றும் பூப்பந்து தளங்கள். |
| 14 | திருச்சி | ஆம் | இல்லை | இல்லை | 8 வரிசைகள் கொண்ட 400 மீ. ஓடுதளம், கால்பந்து வளைகோல்பந்து 2, கூடைப்பந்து, கோ-கோ, கபாடி மற்றும் பூப்பந்து தளங்கள். |
| 15 | தூத்துக்குடி | ஆம் | இல்லை | இல்லை | 8 வரிசைகள் கொண்ட 400 மீ. ஓடுதளம், கால்பந்து வளைகோல்பந்து 2, கூடைப்பந்து, கோ-கோ, கபாடி மற்றும் பூப்பந்து தளங்கள். |
| 16 | வேலூர் | ஆம் | இல்லை | இல்லை | வளைகோல் பந்து மற்றும் கால்பந்தாட்டத் தளங்கள். |
| 17 | விருதுநகர் | ஆம் | இல்லை | இல்லை | கால்பந்து மைதானம், கூடைப்பந்து ஆடுதளம், கைப்பந்து ஆடுதளம். |
| 18 | புதுக்கோட்டை | ஆம் | இல்லை | இல்லை | — |

10—

## மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்ட தொகையை விடுவித்தல்

வினா 11265—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1999 மார்ச் 26

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு 1996-ஆம் ஆண்டு மருத்துவமனைக்குத் தேவையான சாதனங்கள்/கருவிகள் வாங்க தமிழக அரசால் ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் இரண்டு கோடி இன்னும் மருத்துவமனைக்குக் கிடைக்கவில்லை. உடனடியாக விடுவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1996-97ம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் (Comprehensive Plan) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மற்றும் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு ரூ. 187.34 இலட்சம் மற்றும் அரசு இராஜா மிராசுதார் மருத்துவமனைக்கு ரூ. 14.70 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 202.04 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மற்றும் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு ரூ. 1,26,86,755-க்கு 104 கருவிகள் வாங்குவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. தஞ்சாவூர் அரசு இராஜா மிராசுதார் மருத்துவமனைக்கு ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் ரூ. 46,57,117-க்கு 26 உபகரணங்கள் வாங்குவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைககு வெளிநாட்டு இந்திய நிதியின் மூலமாக ரூ. 77,64,882-க்கு 10 உபகரணங்கள் வாங்கவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலான கருவிகள் இந்நாட்டிலும், வெளிநாட்டிலிருந்தும் வாங்கி மேற்கூறிய மருத்துவமனைகளில் நிறுவப்பட்டுள்ளன.

**11—**

## மருத்துவமனையில் வெளிநோயாளிகளுக்குக் கட்டடம்

வினா 16635—**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகளுக்கென அனைத்து வசதிகளுடன் ஒரு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?



1999 மார்ச் 26]

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் :**

ஓமலூர் தொகுதி, ஓமலூர் அரசு மருத்துவமனையில் வெளி நோயாளிகளுக்கென கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

புறநோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் அரசின் நிதி ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு அடுத்துவரும் பகுதி-2 திட்டங்களின் போது இது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

**12—**

## இணைப்புச் சாலை அமைத்தல்

வினா 2224—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், வசப்பத்தூர்-நடராஜபுரம் இடையே இணைப்புச் சாலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தற்போது திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**13—**

## இணைப்புச் சாலையை சீர்செய்தல்

வினா 4140—**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மார்ச் 26

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியம், மஞ்சக்குழி தைக்கால்- பு. முட்லூர் தைக்கால் இணைப்புச் சாலையைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் நிதியாண்டில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் 20% திட்டத்தின்கீழ் ரூ. 1.27 லட்சம் மதிப்பீட்டில் வேலை எடுத்துக் கொள்ளப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது.

**14—**

**தரைப்பாலம் அமைக்கும் திட்டம்**

வினா 6255—**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், பெரியகொழப்பலூரிலிருந்து வினாயகபுரம் செல்லும் வழியில் செய்யாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரியகொழப்பலூரிலிருந்து வினாயகபுரம் செல்லும் சாலையில் நீர்வழிப் பாதை மட்டும் 200 மீட்டர் நீளம் இருப்பதாலும், இப்பாலம் கட்டுவதற்கு ரூ. 300 இலட்சம் தேவைப்படுவதாலும் இப்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1999 மார்ச் 26]

**15—**

**பாலம் அமைத்தல்**

வினா 6955—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி பஞ்சாயத்து, செட்டிமாங்குறிச்சி அம்மன் கோவிலிலிருந்து கோட்டமேடு செல்லும் சாலையில் பாலம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செட்டிமாங்குறிச்சி ஊராட்சி, அம்மன் கோவிலிலிருந்து கோட்டமேடு செல்லும் சாலை, வண்டிப்பாதையாக உள்ளது. இதன் நீளம் 1.00 கி.மீ. இதில் குறுக்கிடும் ஓடையின் நீளம் 7.00 மீட்டர். இதில் நல்ல மழைக்காலங்களில் கூட இரண்டடி உயரத்திற்கு ஒருமணி நேரத்திற்குத் தான் தண்ணீர் செல்லும். இந்த 1.00 கி.மீ. நீளத்தில் 0.60 கி.மீ.-க்கு தான் வண்டிப்பாதை. மீதி நீளத்திற்கு ஒற்றையடிப் பாதையாக உள்ளது. மேற்படி சாலை மற்றும் ஓடையின் குறுக்கே பாலம் அமைக்க செலவினம் ரூ. 11,00,000 (ரூபாய் பதினொரு இலட்சம்) ஆகும். மேலும் இரண்டு பக்கமும் அணுகுசாலை அமைக்காமல் பாலம் அமைப்பது பயனுள்ளதாக இராது. இந்நிலையில் இத்துறை மூலம் பாலம் அமைத்துத்தர வழிவகை இல்லை.

**16—**

**மயான வழி செய்தல்**

வினா 11751—**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறை வட்டம், காஞ்சிக்கோவில் கிராமம், காந்திநகர் ஆதி திராவிடர்களுக்கு மயான வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

[1999 மார்ச் 26

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**17—**

**ஊராட்சி ஒன்றிய ஈப்புகளைப் பயன்படுத்த நடைமுறை**

வினா 13251—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஈப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதில் ஏதாவது நடைமுறை உருவாக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் இரண்டு ஈப்புகள் வழங்கப்பட்டு அதில் ஒன்றை ஊராட்சி ஒன்றிய ஆணையர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் உபயோகிக்கலாம் எனவும், மற்றொரு ஈப்பைக் கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர் உபயோகிக்கலாம் எனவும், மேற்படி வாகனங்களுக்கான எரிபொருள் குறியீடு கீழ்க்கண்டவாறு நிர்ணயித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(1) ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்; ஒரு மாதத்திற்கு 75 லிட்டர்

(2) ஊராட்சி ஒன்றிய ஆணையர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் இதர அலுவலர்கள்; ஒரு மாதத்திற்கு 75 லிட்டர்

(3) கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்; ஒருமாதத்திற்கு 150 லிட்டர்

**18—**

**சாலை அமைத்தல்**

வினா 13933—**திரு ச. இராஜரெட்டி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மார்ச் 26]

தளி தொகுதி, தளி ஒன்றியம், மாடக்கல் பஞ்சாயத்து சூளகுண்டையிலிருந்து உளிபண்டா வழியாக தக்கட்டி பஞ்சாயத்து அர்த்தக்கல் கிராமத்திற்கு, மாடகல் பஞ்சாயத்து கரடிக்கல் வழியாக அஞ்செட்டி கிராமத்திற்கு சாலை அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**19—**

**மயானப் பாதை அமைத்தல்**

வினா 14052—**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, கல்லேரி ஊராட்சி சமுக்கடையாம்பட்டு, மேல்கரிப்பூர், காடகமான், காம்பட்டு ஆகிய கிராமங்களுக்கு மயானப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மயானப் பாதை அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

**20—**

**நடைபாதை அமைத்தல்**

வினா 14400—**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, கவியரசு கண்ணதாசன் நகரில் முக்கிய பிரதான சாலைகளை அகலப்படுத்தி (பிளாட்பாரம்) நடைபாதை அமைக்க அரசிடம் செயற்குறிப்புப் பரிசீலனையில் உள்ளதா?

[1999 மார்ச் 26

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கண்ணதாசன் நகர் 1-வது, 3-வது, 6-வது, 7-வது, 8-வது, 9-வது மற்றும் 10-வது ஆகிய 6 பிரதான சாலைகளுக்கும் 2 குறுக்குத் தெருக்களுக்கும் தார்ச் சாலை சென்ற நிதியாண்டில் (1997-98) போடப்பட்டன. சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியம் ஒன்று முதல் ஒன்பது பிளாக்குகளில் சென்னை 3-வது திட்டத்தில் குடிநீர்க் குழாய்கள் போட சாலை வெட்டு அனுமதி கோரியுள்ளது. சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் வாரியத்தால் குழாய்கள் பதிக்கும் பணி முடிவுற்ற பின் சாலைப் பணிகள் 1999-2000 நிதியாண்டில் திட்டமிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த நகரில் உள்ள பிரதான சாலைகள் அனைத்தும் 30 அடி அகலம் உள்ள சாலைகளாகும். சென்னை மாநகராட்சியில் பொதுவாக 40 அடி அகலத்துக்கு மேல் உள்ள சாலைகளில் மட்டும் நடைபாதை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. எனவே கண்ணதாசன் நகரில் உள்ள பிரதான சாலைகளின் அகலம் 40 அடிக்குக் குறைவாக உள்ளதால் நடைபாதை அமைக்க இயலாது.

**21—**

### ஒருங்கிணைந்த புதிய பேருந்து நிலையம் அமைத்தல்

வினா 14546—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சியில், இரண்டு இடங்களில் பேருந்து நிறுத்தம் இயங்குவதால் மக்களுக்கு இடையூறாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், ஒரே இடத்தில் பேருந்து நிறுத்தம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



1999 மார்ச் 26]

(ஆ) வேலூர் நகரில் அனைத்துப் பேருந்துகளும் ஒரே இடத்தில் வந்து போகும் வகையில் ஒருங்கிணைந்த புதிய பேருந்து நிலையம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**22—**

### கூடுதல் வகுப்பறை கட்டுதல்

வினா 19059—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, சிக்கம்பட்டி ஊராட்சி, பெரிய காடம்பட்டியில் கூடுதல் வகுப்பறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், சிக்கம்பட்டி ஊராட்சி, பெரியகாடம்பட்டியில் புதியதாக கூடுதல் பள்ளிக் கட்டடப் பணி அடுத்த நிதியாண்டில் (1999-2000) முன்னுரிமை கொடுத்து எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**23—**

### மானிய விலையில் பூச்சிக்கொல்லி மருந்து வழங்குதல்

வினா 21334—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாசிப் பயரில் விழும் தண்டு 'ஈ', 'கோளாறு' சிட்டு வண்டு, இலைத்தத்துப் பூச்சி, இலைப்பேன் மற்றும் காய்ப்புழு போன்ற பூச்சிகளை அழிக்க உரிய மருந்தை மானிய விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அரசு எடுத்த கொள்கை முடிவின்படி 1994-ம் ஆண்டு முதல் பூச்சிமருந்து விற்பனை வேளாண் துறையில் மேற்கொள்ளப்படுவதில்லை.

[1999 மார்ச் 26

வேளாண் இடு பொருட்கள் விநியோகம், மைய அரசுத் திட்டங்களில் அளிக்கப்படும் மானிய சலுகைகளுக்குத் தேவையான அளவே விநியோகம் செய்யப்படுகிறது. மானிய விலையில் பூச்சி மருந்து விநியோகம் செய்ய இயலாது. மேலும் இரசாயன பூச்சி மருந்து உபயோகிப்பதைத் தவிர்க்கவும் மைய அரசு திட்டமான தேசிய பயறு வகைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் பூச்சிமருந்துகள் விநியோக இனத்திற்காக மானியம் தற்பொழுது மைய அரசால் அனுமதிக்கப்படாததாலும் பாசிப் பயிரில் விழும் தண்டு ஈ, சிட்டு வண்டு, இலைத்தத்துப்பூச்சி, இலைப்பேன் மற்றும் காய்ப்புழு போன்ற பூச்சிகளை அழிக்க மானிய விலையில் பூச்சி மருந்துகள் விநியோகம் செய்ய அரசு திட்டங்களில் வழிவகை இல்லை. இருப்பினும் இத்தகு பூச்சிகளைக் கட்டுப்படுத்த தாவரப் பூச்சிக் கொல்லிகளை உபயோகிக்கத் தேவையான தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு களப் பணியாளர்கள் மூலமாகப் பரிந்துரைக்கப்படுகிறது.

**24—**

### அணைக்கட்டு சீரமைத்தல்

வினா *4058*—**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் தாலுக்கா, கீழ்பாலாற்றுப்படுகை, ஆயில்சேரி கிராமத்தில் கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட அணை சரிவர பராமரிப்பு செய்யப்படாததால் அணைக்கட்டு உடைந்து அப்பகுதி மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வணையைச் சீராகப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1991-ம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தின் காரணமாக ஆயில்சேரி கிராமத்தின் அருகே கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஆயில்சேரி அணைக்கட்டின் தலை மதகு மற்றும் குறுக்குச் சுவர் உடைந்து சேதமடைந்தது. ஆற்றின் வலதுபுறம் உள்ள சுவர்கள் மற்றும் வெள்ளத்தடுப்புக் கூரை கரைந்து உடைந்துள்ளது. இதனால் ஆற்றில் நீர்வரும் காலங்களில் ஊருக்குள் வெள்ளம் வந்து விடுகிறது ஊருக்குள் வெள்ளம் செல்ல ஏதுவாக இருந்த வலதுபுறக் கரையை மட்டும் மணல் மூட்டைகள் மற்றும் மண்ணிட்டு சரி செய்து ஊருக்குள் எளிதில் நீர்புகாவண்ணம் தடுக்கவே தற்காலிகப் பணி ரூ. 9638 செலவிட்டு முடிக்கப்பட்டது.



1999 மார்ச் 26]

**25—**

### ஓடையைக் கால்வாயாகச் சீரமைத்தல்

வினா *5751*—**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம், மட்டப்பூர், தேவிகாபுரம், ஆத்தரை, எதப்பட்டு, கப்ளாம்பாடி, சோட்டப்பூண்டி ஆகிய ஊர்களின் வழியாகச் செல்லும் ஓடைக் கால்வாயைச் சீரமைத்து கலசப்பாக்கம் ஆற்று நீரை மேல்மலையனூர் ஏரிக்குக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

செய்யாறு ஆற்றிலிருந்து கலசப்பாக்கம், தேவிகாபுரம், ஆத்தரை, எதப்பட்டு, கப்ளாம்பாடி, சோட்டப்பூண்டி, ஆகிய ஊர்களின் வழியாக மேல்மலையனூர் ஏரிக்கு முன்னால் வரத்துக் கால்வாய் ஓடைகள் ஏதும் கிடையாது.

மேலும் மேல்மலையனூர் ஏரி செய்யாறு ஆற்றிலிருந்து வெகுதூரத்திலும், மேட்டுப் பகுதியிலும் குன்று பகுதிகளுக்கும், ரிசர்வ் பாரஸ்டு பகுதிகளுக்கும் இடையில் அமைந்துள்ளமையால் செய்யாறு ஆற்றில் இருந்து மேல்மலையனூர் ஏரிக்கு மேலே குறிப்பிட்டுள்ள கிராமங்களின் வழியாகக் கால்வாய் அமைக்கச் சாத்தியக் கூறு ஏதும் இல்லை.

**26—**

### பச்சூர் — ஒசூர் இரயில் பாதை அமைத்தல்

வினா *13585*—**திரு. பி. வெங்கடசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(a) Is there any proposal to lay the railway line from Pachur to Hosur (via) Bargur, Krishnagiri, Choolagiri to connect Hosur from Madras and Bangalore?

(b) If so, the details thereof?

[1999 மார்ச் 26

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்தும், பெங்களூரிலிருந்தும், ஒசூரை இணைப்பதற்காக, பர்கூர், கிருஷ்ணகிரி, சூளகிரி வழியாக பச்சூர்-ஓசூர் இரயில் பாதை அமைப்பதற்காக இரயில்வே அமைச்சகத்திலிருந்து எவ்வித திட்ட அறிக்கையும் பெறப்படவில்லை என்றும், எனினும் ஜோலார்பேட்டையிலிருந்து கிருஷ்ணகிரி வழியாக ஒசூருக்கு ஒரு புதிய அகல இரயில் பாதை திட்டத்திற்கென முன்னிலை பொறியியல் மற்றும் போக்குவரத்து கணக்கெடுப்பு நடத்த இரயில்வே வாரியத்தின் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், கணக்கெடுப்பின்படி திட்டமிடப்பட்ட இரயில் பாதை பர்கூர், கிருஷ்ணகிரி வழியாகச் செல்லும் என்றும் தென்னக இரயில்வே தலைமைப் பொறியாளர் (கட்டுமானம்) தெரிவித்துள்ளார்.

**27—**

### இரண்டு பேருந்து வழித்தடங்கள் ஏற்படுத்துதல்

வினா 21602—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரைக்கும் இரண்டு பேருந்து வழித்தடங்கள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்த ஆண்டும் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரைக்கும் இரண்டு பேருந்து வழித்தடங்கள் இயக்க சாத்தியமில்லை. தகுதிக்கு ஏற்ப சட்டமன்ற உறுப்பினரின் பரிந்துரை மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**28—**

### புதிய பேருந்தாக மாற்றுதல்

வினா 21642—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மார்ச் 26]

தஞ்சாவூரிலிருந்து வல்லம்புதூருக்கு இயக்கப்பட்டு வரும் அரசு போக்குவரத்து தடம் எண் 47-ஐ புதிய பேருந்தாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர்-வல்லம்புதூர் தடத்தில் (தடம் எண் 47) தற்போது டி.என்.32/எண் 0326 என்ற நல்ல நிலையில் உள்ள பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

**29—**

### ஆற்றுப் பாலம் சீர்செய்தல்

வினா 17253—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆங்கிலேய அரசின் காலத்தில் கட்டப்பட்ட கொமாரப்பாளையம் ஆற்றுப்பாலம் மிகவும் பழுதடைந்துள்ளதைச் சீர்செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள பாலமானது, கொமாரபாளையம் பவானி சாலையில் கிமீ.3/2-4இல் உள்ள பாலமாகும். இப்பாலம் கி.பி. 1849-ல் செங்கல்லால் கட்டப்பட்ட குறுகிய ஆர்ச் பாலமாகும். இப்பாலத்தின் ஓடுதளம் 5.50 மீட்டர் உள்ளதாலும், பழைய பாலமாக உள்ளதாலும் வலுவிழந்து இருக்குமெனக் கருதி, கனரக வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. மேலும் இப்பாலத்திற்கு மேற்புறமும் (upstream side) சுமார் 700 மீட்டர் தள்ளி கொமாரபாளையம்—எடப்பாடி சாலை (மாவட்ட சாலை) மற்றும் தொப்பூர் - மேட்டூர் பவானி சாலை (மாநில சாலை) ஆகியவற்றை இணைத்து பவானி புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் ஹட்கோ (HUDCO) திட்டத்தின் கீழ் ரூ. 14.24 கோடி மதிப்பீட்டில் புதிய பாலம் ஒன்று கட்டப்பட உள்ளதால் இப்பாலத்தைப் பழுது பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

[1999 மார்ச் 26

30—

### பாலம் புதுப்பித்தல்

*வினா 19781*—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி - சேலம் செல்லும் எடப்பாடியிலுள்ள பாலம் மிகவும் பழுதுபட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்படும் பாலமானது எடப்பாடி - மகுடஞ்சாவடி எனும் மாவட்ட நெடுஞ்சாலையில் கி.மீ.0/4-ல் உள்ள பாலமாகும். இப்பாலமானது மிகவும் பழுதடைந்துள்ளதால் அதனைச் சரிசெய்யும் பொருட்டு ரூ. 194.30 இலட்சம் மதிப்பீட்டில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் செயலாக்க அரசால் 30-11-1998 அன்று நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

31—

### மொழிப் போர் தியாகிகளுக்கு உதவித்தொகை

*வினா 15916*—**திரு. இ.ஏ.பி. சிவாஜி (மற்றும்) திரு. சி.ஞானசேகரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி வட எல்லைப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறைசென்ற மொழிப் போர் தியாகிகளுக்கு உதவித்தொகை வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**



1999 மார்ச் 26]

(அ) திருத்தணியைத் தாய் தமிழகத்தோடு இணைப்பதற்காக நடைபெற்ற போராட்டங்களில் சிறைசென்ற தியாகிகளுக்கு, மொழிக்காவலர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் ஓய்வூதியம் வழங்கப்பெற்று வருகிறது.

(ஆ) மொழிக்காவலர்களுக்கு 15-8-97 முதல் திங்கள் தோறும் ரூ. 3000-மும் மருத்துவப்படி ரூ. 15-ம் மற்றும் அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

32—

### ஏழை நடுத்தர மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்

*வினா 18105*—**திரு. ச.க. வெங்கடேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

“கோவில் நிலங்களில் தரை வாடகைக்கு குடியிருந்து வரும் ஏழை, நடுத்தர மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலத்திற்கு வாடகை நிர்ணயம் செய்யும்போது அரசாணை (நிலை) எண் 56, வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, நாள் 19-2-98-ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இதில் தெரிவித்துள்ளபடி குடியிருப்பு நோக்கம் எனில் மேற்படி காலியிடத்தின் சந்தை மதிப்பீட்டில் 0.25 சதவிகிதமும் வணிக நோக்கம் எனில் சந்தை மதிப்பீட்டில் 0.50 சதவிகிதமும் மாத வாடகையாக நிர்ணயிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் எனில் மேல் குறிப்பிட்டுள்ள தொகையில் பாதியை வாடகையாக நிர்ணயிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. குடியிருப்புக்காகவோ வணிக நோக்கத்திற்காகவோ திருக்கோவில் காலியிடங்களில் வாடகைக்கு இருக்கும் வாடகைதாரர்கள் பாக்கியில்லாமல் வாடகையைச் செலுத்திவரும் பட்சத்திலும், துறையின் சட்டவிதிகளுக்கு உட்பட்டு இருந்துவரும் பட்சத்திலும் வாடகைதாரர்கள் திருக்கோயில் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதில்லை. திருக்கோயில்களின் நலன்களுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்படாத பட்சத்தில் திருக்கோயில் காலியிடங்களில் குடியிருந்து வரும் வாடகைதாரர்களுக்கு உரிமை பாதிப்பு ஏதும் ஏற்படாது.

[1999 மார்ச் 26

33—

**அருள்மிகு ஈஸ்வரன் கோயில் நிலம்**

வினா 20045—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், இராமிரெட்டிப்பட்டி ஊராட்சியிலுள்ள அருள்மிகு ஈஸ்வரன் கோயிலுக்கு நிலம் எவ்வளவு உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிலத்தைப் பொது ஏலத்தில் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ), சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி தாரமங்கலம் ஒன்றியம், இராமிரெட்டிப்பட்டி ஊராட்சியிலுள்ள அருள்மிகு ஈஸ்வரன் கோயில் ஆளுகையின் கீழுள்ள பட்டியலில் சேராத திருக்கோயில். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான 27.50 ஏக்கர் புன்செய் நிலத்தினைப் பரம்பரை அறங்காவலரான திரு. டி.எ. சுப்பிரமணிய அய்யர் துறையின் அனுமதி பெறாமல் சொந்த சாகுபடி செய்து வருகிறார். எதிர்வரும் பசலிகளில் இந்நிலத்தினைப் பொது ஏலத்தில் விட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

34—

**கோயில் வருவாயைப் பெருக்குதல்**

வினா 20046—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், பாப்பம்பட்டி ஊராட்சியிலுள்ள அருள்மிகு பாப்பம்பாடி கந்தசாமி கோயில் பஜனை மடத்திற்கு புல எண் 425/1-ல் உள்ள 1.19 ஏக்கர் நிலம் தனியார் வசம் உள்ளது அரசிற்குத் தெரியுமா?



1999 மார்ச் 26]

(ஆ) ஆம் எனில், பொது ஏலத்தில் கொண்டு வந்து கோயிலுக்கு வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் சட்டமன்ற தொகுதி, பாப்பம்பட்டி அருள்மிகு கந்தசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான புல எண் 425/1 ல் உள்ள 1.19 ஏக்கர் புன்செய் நிலம் மேற்படி திருக்கோயில் அறங்காவலர் திரு. இரா. மாரிமுத்து செட்டியார் என்பவரால் தனிப்பட்ட முறையில் திரு. குபேரன் என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

(ஆ) இதனை வருங்காலத்தில் பொது ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கப்படும்.

35—

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்குதல்**

வினா 12951—**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதியில் ஆனந்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆனந்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கப்படவுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மேட்டுத்தாங்கல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலிருந்து பிரிக்கப்பட்டு செயல்படும். ஆனந்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியை ஆரம்பிக்க கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

[1999 மார்ச் 26

36—

### புதிய கூட்டுறவு வங்கிக் கட்டடம் கட்டுதல்

வினா 20510—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, செலவடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா. நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, செலவடை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குக் கட்டடம் கட்டிக் கொள்ள சொந்தமாக அடிமனை இல்லை. இருப்பினும் மேற்படி வங்கி அடிமனை வாங்கி அதில் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக் கூறுகள் உள்ளனவா என்பதைப் பரிசீலித்து சாத்தியக் கூறுகள் இருந்தால் சொந்தக் கட்டடம் கட்டிக் கொள்ள அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

37—

### இழப்பீட்டு நிதியுதவி அளித்தல்

வினா 20684—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், அனைத்து தொடக்க வேளாண்மை வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்கள் தற்காலிக பணி நீக்கத்தில் இருக்கும்போது இறந்துவிட்டால் அவர்களுக்கு ஒரு இலட்சம் நிதியுதவி அளிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் நடைபெறுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**



1999 மார்ச் 26]

(அ) மற்றும் (ஆ) அரசு ஊழியர்களுக்கு குடும்பக் காப்பு நிதியாக ரூ. 1,00,000 வழங்கப்படுவதுபோல் கூட்டுறவு நிறுவனங்களில் பணிபுரியும் முறையான பணியாளர்களுக்கு இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தில் குரூப் காப்பீட்டுத் திட்டத்தின்படி இழப்பு நிதியாக 1-5-97 முதல் 1,00,000 வழங்க அனுமதிக்கப்பட்டு உள்ளது. இதற்கான பிரீமியமாக பணியாளர்களின் பங்காக ரூ. 325-ம் அவர்களது ஊதியத்தில் பிடித்தம் செய்து வசூலிக்கவும், வங்கிகளின் பங்காக ரூ. 325-ம் செலுத்த அரசு அறிவுறுத்தி உள்ளது. இத்திட்டத்தின்கீழ் பிரீமியமாகச் செலுத்தும் அனைத்துப் பணியாளர்களுக்கும் இழப்பீட்டு நிதி வழங்கப்படும். இது தற்காலிகப் பணி நீக்கத்தில் இருந்து இறந்த பணியாளர்களுக்கும் பொருந்தும்.

38—

### தனியார் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கு மருத்துவமனை அமைத்தல்

வினா 19723—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இயங்கும் அனைத்து தனியார் தொழிற்சாலைகளிலும் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி செய்ய மருத்துவர்/மருத்துவமனை இல்லாமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்:**

**அவசர கால மருத்துவக் கூடம் (Ambulance Depot.)**

தொழிற்சாலைகள் சட்டம் 1948-ன் பிரிவு 45(4) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள், 1950-ன் விதி 64(1)-ன்படி 500 தொழிலாளர்களுக்குமேல் பணிபுரியும் தொழிற்சாலைகளில், சகல வசதிகளுடன் கூடிய அவசர கால மருத்துவக்கூடம் ஒன்று பராமரிக்கப்பட வேண்டும்.

(அ) தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 45(4)-ன்படி அவசரகால மருத்துவக்கூடம் அமைத்து, பராமரிக்கப்பட வேண்டிய மொத்தம் 327 தொழிற்சாலைகளில் 279 தொழிற்சாலைகளில் அவசரகால

[1999 மார்ச் 26

மருத்துவக்கூடம் அமைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 48 தொழிற்சாலைகளில் மருத்துவக்கூடம் அமைக்க ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், நடப்பு ஆண்டில் அமைத்து பராமரிக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஆ) ஏற்கெனவே 5 தொழிற்சாலைகளின்மீது நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அனைத்து தொழிற்சாலைகளிலும் மருத்துவக்கூடம், நடப்பு நிதியாண்டில் அமைத்து, பராமரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**39—**

**தொழிற்சங்க உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டங்களுக்கு இடஒதுக்கீடு**

வினா 22692—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகருக்குள் தொழிற்சங்கங்களின் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் போன்ற நடவடிக்கைகளுக்கு குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சென்னை நகருக்குள் தொழிற்சங்கங்களின் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் போன்ற நடவடிக்கைகளுக்கு குறிப்பிட்ட இடங்கள் ஏதும் ஒதுக்கப்படவில்லை.

**40—**

**முதல் வகுப்பு கைதிகளுக்கு வசதிகள்**

வினா 22277—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மத்திய சிறைச்சாலையில் அரசியல் காரணங்களுக்காக முன்னெச்சரிக்கையாகக் கைது செய்யப்படுபவர்களில் முதல் வகுப்பு பெற்றவர்களுக்கு விதிப்படி கொடுக்கப்படவேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா?



1999 மார்ச் 26]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சிறை நடைமுறை நூல் தொகுதி-2 விதி எண் 870-ன்படி அரசியல் காரணங்களுக்காக, முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் முதல் வகுப்பு அல்லது சிறப்பு வகுப்பு வழங்கப்படும் சிறைவாசிகளுக்கு அரசு விதிகளின்படி வழங்கப்பட வேண்டிய அனைத்து வசதிகளும் விதிகளுக்குட்பட்டு சேலம் மத்திய சிறை உள்ளிட்ட அனைத்து சிறைகளிலும் வழங்கப்படுகிறது.

**41—**

**பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி**

வினா 20340அ—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பாச்சூர் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் தங்கிப் பயில பாச்சூரில் ஒரு மாணவர் விடுதி ஆரம்பிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பாச்சூர் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக விடுதி துவக்குவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**42—**

**இலவச வீட்டு மனைப் பட்டா வழங்குதல்**

வினா 20869—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமிசெட்டிப் பட்டி கிராமத்தில் வசிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சாமிசெட்டிப்பட்டி கிராமத்தில் வசிக்கும் மிகப்பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க புல எண் 134, 138 மற்றும் 139-ல் 1.94.5 ஹெக்டேர் நிலம் தேர்ந்தெடுத்து பிரிவு 4(1)-ன் கீழான அறிவிக்கை பிரசுரம் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. தற்போது நேரடி பேச்சுவார்த்தை மூலம் நில மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற நில எடுப்பு நடவடிக்கை முடிவுற்றதும் 31-3-1999-க்குள் பட்டா வழங்கப்படும்.

**43—**

**இலவச வீட்டு மனைப் பட்டா**

வினா 22016—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், சின்னபங்குநத்தம் கிராமத்தில் வசிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் சின்னபங்குநத்தம் கிராமத்தில் வசிக்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வீடற்ற ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை. எனினும் மேற்படி கிராமத்திலுள்ள வீடற்ற ஏழை பயனாளிகள் விவரம் கண்டறிந்து, நிலம் தேர்வு செய்து, நில எடுப்பு நடவடிக்கை தொடர்ந்து, தகுதியான நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**44—**

**பாம்புத் தோல் மதிப்பு**

வினா 21534—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1997, 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய பாம்புத் தோலை திருட்டுத்தனமாக வெளிநாடுகளுக்கு அனுப்பியதில் பிடிப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(ஆ) எவ்வளவு பாம்புத் தோல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது?

(இ) அதன் மதிப்பு என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 1997-ல் மூன்று நபர்களும், 1998-ல் ஜூன் மாதம் முடிய ஒரு நபரும் பாம்புத் தோலை திருட்டுத்தனமாக வெளிநாடுகளுக்கு அனுப்பியதில் பிடிபட்டுள்ளனர்.

(ஆ) 1997-ஆம் ஆண்டு 3397 பாம்புத் தோல்களும் 1998 ஜூன் முடிய 1746 பாம்புத் தோல்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

(இ) பாம்புத் தோல்களின் வணிகம் தடை செய்யப்பட்டுள்ளதால் அவற்றின் மதிப்பை நிர்ணயம் செய்ய இயலாது.

**45—**

**வாய் பேசாதோர், காது கேளாதோர் பள்ளி நிறுவுதல்**

வினா 19827—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் வாய் பேசாத, காது கேளாதவர்களுக்காக பள்ளி ஒன்று நிறுவ அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

[1999 மார்ச் 26

சேலம் மாவட்டத்தில் 20-6-1975-ல் ஏற்கெனவே சித்தார் தளவாய்ப்பட்டி போஸ்டில் அரசு காது கேளாதோர் பள்ளி தொடங்கப்பட்டு பின்னர் அரசாணை நிலை எண் 103, நாள் 03-06-1998-ன்படி 9-ம் வகுப்பு தொடங்கப்பட்டுள்ளது. தற்போது முன்பருவப் பள்ளி முதல் 9-ம் வகுப்பு வரை இப்பள்ளியில் மொத்தம் 131 மாணவர்கள் பயிலுகிறார்கள். எனவே புதிதாக பள்ளி தொடங்கிட அரசிடம் கருத்துரு ஏதுமில்லை.

**46—**

**வரதட்சணைக் கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்கள் விவரம்**

வினா 20636—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98-ம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் வரதட்சணைக் கொடுமையால் எத்தனை பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 1997-98-ம் ஆண்டில் வரதட்சணைக் கொடுமையால் 7 பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சேலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 1997-ம் ஆண்டு வரதட்சணைக் கொடுமையென ஏழு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் ஒரு வழக்கில் பொருட்களைப் பெற்றுக்கொண்டு வழக்கினை வாபஸ் பெற்றுக் கொண்டார்கள். மற்றொரு வழக்கில் 6 மாதம் சிறைத் தண்டனை நீதிமன்றத்தால் தீர்ப்பு அளிக்கப்பட்டுவிட்டது. மீதம் உள்ள 5 வழக்குகளும் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. பாதிக்கப்பட்ட மகளிர் எவரும் தற்கொலை செய்துகொள்ளவில்லை மற்றும் கணவருடன் சமரசம் செய்துகொள்ளவில்லை.

**47—**

**ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்குதல்**

வினா 16048—**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) மேற்கு தாம்பரம், கடப்பேரியில் உள்ள ஆதிதிராவிடர் நலத் துறை ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1998-99-ம் கல்வி ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் மேற்கு தாம்பரம், கடப்பேரியில் உள்ள ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளி நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது.

**48—**

**சமத்துவபுரம் அமைத்தல்**

வினா 20926—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் சமத்துவபுர திட்டத்தின் கீழ் சமத்துவபுரம் இந்த நிதியாண்டில் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் சமத்துவபுரம் அமைக்க நடப்பு நிதியாண்டில் உத்தேசம் ஏதுமில்லை.

**49—**

**கணினி மற்றும் பிளாஸ்டிக் தொழில்நுட்பப் பயிற்சி அளித்தல்**

வினா 21026—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மார்ச் 26

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்திற்காக சேலத்தில் கணினிப் பயிற்சி மற்றும் பிளாஸ்டிக் தொழில் நுட்பப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**50—**

**ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குக் கட்டடம்**

வினா 21147—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மாணவர்கள் விடுதி தனியார் கட்டடத்தில் இயங்குகிறதா?

(ஆ) அதை அரசு கட்டடத்தில் இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் இயங்கும் 24 மாணவர் விடுதிகளில் கீழ்க்குறிப்பிட்ட 16 மாணவர் விடுதிகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன:

| வ.எண். | இருப்பிடம் | தொகுதி | வட்டம் | ஒன்றியம் |
|---|---|---|---|---|
| 1. | பேளூர் | ஏற்காடு | சேலம் | வாழப்பாடி |
| 2. | தும்பல் | ஏற்காடு | ஆத்தூர் | பெத்தநாயக்கன் பாளையம் |
| 3. | சமுத்திரம் | சங்ககிரி | சங்ககிரி | சங்ககிரி |
| 4. | தம்மம்பட்டி | தலைவாசல் | கெங்கவல்லி | கெங்கவல்லி |
| 5. | கெங்கவல்லி | தலைவாசல் | கெங்கவல்லி | கெங்கவல்லி |
| 6. | கூடமலை | தலைவாசல் | கெங்கவல்லி | கெங்கவல்லி |
| 7. | சாத்தம்பாடி | தலைவாசல் | ஆத்தூர் | தலைவாசல் |
| 8. | ஆரகிளூர் | தலைவாசல் | ஆத்தூர் | தலைவாசல் |
| 9. | ஓமலூர் | ஓமலூர் | ஓமலூர் | ஓமலூர் |
| 10. | மேச்சேரி | ஓமலூர் | ஓமலூர் | மேச்சேரி |
| 11. | நடுப்பட்டி | ஓமலூர் | ஓமலூர் | கடையாம் பட்டி |
| 12. | கருப்பூர் | ஓமலூர் | ஓமலூர் | ஓமலூர் |
| 13. | தொளசம்பட்டி | ஓமலூர் | ஓமலூர் | தாரமங்கலம் |
| 14. | ஆட்டையாம் பட்டி | வீரபாண்டி | சேலம் | வீரபாண்டி |
| 15. | வாழப்பாடி | பனமரத்துப் பட்டி | சேலம் | வாழப்பாடி |
| 16. | வடசென்னி மலை | ஆத்தூர் | ஆத்தூர் | ஆத்தூர் |





(கல்லூரி மாணவர் விடுதி)

வாடகைக் கட்டடங்களில் இயங்கும் இவ்விடுதிகளுக்கு அரசின் நிதி நிலைமைக்கேற்ப கட்டடம் கட்ட பரிசீலிக்கப்படும்.

**ஏழாம் பட்டியல் @**

**1—**

**திருட்டு மற்றும் திருட்டுகளுக்கான தண்டனை விவரம்**

வினா 13789—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997 ஆம் ஆண்டு நடைபெற்ற திருட்டுக்கள் எத்தனை?

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.

[1999 மார்ச் 26

(ஆ) அவற்றில் எத்தனை குற்ற நடவடிக்கைகளில் குற்றவாளிகள் கண்டறியப்பட்டு வழக்குத் தொடுத்தனர்?

(இ) அவற்றில் தண்டனை கிடைத்தவை எத்தனை?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 20,208

(ஆ) 15,936

(இ) 11,702

**2—**

**சாலை விதிகளை மீறியவர்கள் விவரம்**

வினா 18264—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டத்தில் 1996-97, 1997-98 ஆம் ஆண்டுகளில் சாலை விதிகளை மீறியவர்கள் எத்தனை பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தர்மபுரி மாவட்டத்தில் 1996-97 மற்றும் 1997-98 ஆம் ஆண்டுகளில் சாலை விதிகளை மீறியவர்களின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்ட விவரம் கீழ்வருமாறு :—

**1996-97** - 1850 வழக்குகள்
(1-4-1996 - 31-3-1997)

**1997-98** - 4663 வழக்குகள்
(1-4-1997 - 31-3-1998)

**3—**

**சாலை விதிகளை மீறியவர்கள் விவரம்**

வினா 18297—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மார்ச் 26]

நாமக்கல் மாவட்டத்தில் 1996-97 - 1997-98 ஆம் ஆண்டுகளில் சாலை விதிகளை மீறியவர்கள் எத்தனை பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

நாமக்கல் மாவட்டத்தில் 1996-97 - 1997-98 ஆம் ஆண்டுகளில் சாலை விதிகளை மீறியவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள விவரம் கீழ்வருமாறு:

1996-97 - 2586 வழக்குகள்

1997-98 - 2710 வழக்குகள்

**4—**

**கள்ளச் சாராயத்தை ஒழித்தல்**

வினா 22626—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் ஆயத் தீர்வை வருமானத்தைப் பெருக்க கள்ளச் சாராயத்தை முழுமையாக ஒழிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் கள்ளச் சாராயத்தை முழுமையாக ஒழிக்கும் நோக்கத்துடன் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு 1-7-1998 ஆம் நாள் முதல் மீண்டும் ஏற்படுத்தப்பட்டு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. மாவட்ட காவல் துறை மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, தீவிர கள்ளச் சாராய வேட்டையில் ஈடுபட்டு கடந்த ஆறு மாத காலத்தில் (1-7-1998 முதல் 31-12-1998 வரை) கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் மற்றும் விற்போர் மீது 1,94,859 வழக்குகளை பதிவு செய்து, மொத்தம் 1,61,00,000 லிட்டர் சாராய ஊறல்/சாராயம் கைப்பற்றி அழித்துள்ளது. எரிசாராயம் மற்றும் போலி மதுபான பாட்டில்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. 46,975 பெண்கள் உட்பட 1,85,174 கள்ளச் சாராய வியாபாரிகள் கைது

[1999 மார்ச் 26

செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 511 பேர் தடுப்புக் காவல் சட்டத்தின் (Tamil Nadu Act 14/1982) கீழ் கைது செய்யப்பட்டு காவலில் அடைக்கப்பட்டுள்ளனர். கள்ளச் சாராயத்தை முழுமையாக ஒழிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளின் விளைவாக மதுபான விற்பனை முன்பு இருந்ததைவிட தற்போது அதிகரித்துள்ளது. அதனால் அரசின் ஆயத் தீர்வை வருவாயும் பெருகியுள்ளது. மேலும் காவல் துறை மற்றும் நீதிமன்றங்கள் மூலமாக மதுவிலக்குக் குற்றங்களுக்கான அபராதத் தொகையாக ரூ.5,15,95,270 அரசுக்குக் கிடைத்துள்ளது.

**5—**

**நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்குதல்**

வினா 20735—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊராட்சி ஒன்றியம், முத்தம்பட்டி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நடப்பாண்டில் மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண்269, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20-7-1998-ல் தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊராட்சி ஒன்றியம், வி.முத்தம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி 1998-99 ஆம் கல்வி ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு 5-8-1998 முதல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

**6—**

**பம்ப்செட் மோட்டார்கள் சீரமைத்தல்**

வினா 14503—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்தில் முல்லை, வெள்ளக்குட்டை கிராமங்களில் குறைந்த மின் அழுத்தம் காரணமாக பம்ப்செட் மோட்டார்கள் பழுதடைவதை அரசு அறியுமா?



1999 மார்ச் 26]

(ஆ) அதைச் சரிசெய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

(அ) மார்ச் மாதம் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மின் உற்பத்தி நிலையங்களிலும் உற்பத்தி குறைவாக இருந்ததால் தமிழ்நாடு முழுவதும் உள்ள மின் வாரிய கட்டமைப்பிலும் (கிரிட்) மின் அழுத்தம் குறைவாக இருந்தது.

(ஆ) வெள்ளக்குட்டை பகுதியில் மின் மாற்றியை மாற்றியும், முல்லை பகுதியில் மின் கம்பிகளை மாற்றியும் குறைந்த மின் அழுத்தம் சரிசெய்யப்பட்டு விட்டது. மேலும் மேட்டூரில் புதியதாக ஒரு 33/11 கி.வோ. துணை மின்நிலையம் அமைக்க பணிகள் தொடங்கி நடைபெற்றுக் கொண்டுள்ளது. நடப்பு 1998-99 ஆம் ஆண்டிலேயே துணை மின் நிலையம் செயல்படத் தொடங்கி விடும். அதன்பின் குறைந்த மின் அழுத்தம் ஏற்பட வாய்ப்புகள் இல்லை.

**7—**

**செவிலியர் பணியிடத்தை நிரப்புதல்**

வினா 18741—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனையில் 2 செவிலியர் பணியிடத்தை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் அரசு மருத்துவமனையில் தற்போது நான்கு செவிலியர்கள் பணியாற்றி வருகின்றனர். இம்மருத்துவமனையில் செவிலியர் பணியிடங்கள் ஏதும் தற்போது காலியாக இல்லை.

[1999 *மார்ச்* 26

**8—**

### மின்னழுத்தம் குறைவான பகுதிக்கு நடவடிக்கை

*வினா 19455*—**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டத்திற்குட்பட்ட கரைச்சுத்தப்புதூர், சங்கராபுரம், கேசவனேரி ஆகிய இடங்களில் மின்னழுத்தம் குறைவாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): ***1. கரைச்சுத்தப்புதூர்:*** கரைச்சுத்தப்புதூருக்கு தற்போது 250 கே.வி.ஏ. திறன்கொண்ட (கரைச்சுத்தப் புதூர் எண்.எஸ். I)-ன் மாற்றி மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கரைச்சுத்தப்புதூர் கிராமம் கோட்டை கருங்குளம் காரிகோயில் 11 கே.வி. மின் பாதையில் கடைசியாக உள்ளது. இக்கிராமத்தில் தற்போது இருக்கும் மின்னழுத்தத்தை மேலும் அதிகரிப்பதற்காக புதிதாக மின்மாற்றி அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனைத்து வேலைகளும் 1998-99 ஆம் ஆண்டு இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும். மேற்குறிப்பிட்ட பணி முடிவடைந்தவுடன் அங்குள்ள மின் அழுத்தம் மேலும் மேம்பாடு அடையும்.

***2. சங்கராபுரம்:*** இராதாபுரம் வட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் சங்கராபுரம் என்ற கிராமம் ஏதும் இல்லை. சிங்காரத்தோப்பு என்று ஒரு கிராமம் கள்ளிகுளம் என்ற ஊருக்கு அருகாமையில் உள்ளது. இந்தக் கிராமத்தில் மின்னழுத்தக் குறைபாடு ஏதும் இல்லை.

***3. கேசவனேரி:*** கேசவனேரி ஏறக்குறைய 110 வீடுகளுக்குக் குறைவாக உள்ள குக்கிராமமாகும். இங்குள்ள மின்னழுத்தக் குறைவு தொடர்பாக வந்த புகாரினைத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு அங்கிருந்த ஒரு முனை மின்பாதை மும்முனை மின்பாதையாக அமைக்கப்பட்டு மேம்பாட்டுப் பணிகள் செய்த பிறகு தற்போது



1999 *மார்ச்* 26]

மின்னழுத்தம் மேம்பாடு அடைந்துள்ளது. மேலும் மின்னழுத்தம் அதிகரிக்கும்பொருட்டு கேசவனேரிக்குப் புதிதாக ஒரு மின் மாற்றி அமைக்கவும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு, 1998-99 ஆம் ஆண்டு இறுதிக்குள் இப்பணி பூர்த்தி செய்யப்படும். அந்தப் பணியினை முடித்தவுடன் கேசவனேரி குக்கிராமத்தில் மின்னழுத்தம் வெகுவாக மேம்பாடு அடையும், இது தவிர வள்ளியூரில் மின்சார வாரியத்தில் அனுமதி வழங்கப்பட்ட 110/11 கே.வி. உபமின் நிலையமும் கேசவனேரி அருகிலேயே நிறுவப்பட உள்ளது. உபமின் நிலையம் அமைக்கப்பட்டவுடன் கேசவனேரி மற்றும் வள்ளியூர் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலெல்லாம் மின்னழுத்தம் மேலும் சீரடையும். இதற்கான வேலைகள் 1999-2000-ல் தொடங்கப்படும்.

**9—**

### நில ஆக்கிரமிப்பை அகற்றுதல்

*வினா 7778*—**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியில் கப்பியறை பேரூராட்சிக்குட்பட்ட பாம்பூரி வாய்க்கால் பாலம் கிழக்குப் பகுதியில், அரசாங்க நிலத்தின் மீதுள்ள ஆக்கிரமிப்பை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

கேள்வியில் குறிப்பிட்டுள்ள நிலம் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானது ஆகும். 18-6-1998-ல் நில அளவைப் பணி மேற்கொண்டு எல்லை நிர்ணயிக்கப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, நிலம் நெடுஞ்சாலைத் துறை வசம் ஒப்படைக்கப்பட்டது.

**10—**

### தீ விபத்தால் ஏற்பட்ட சேத விவரம்

*வினா 20196*—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு தீ விபத்தால் சேதம் அடைந்த வீடுகள் எத்தனை? அதற்கு அரசு அளித்த நிவாரணம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் தீ விபத்தால் முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசை வீடுகளின் எண்ணிக்கை 18,167 ஆகும். பகுதியாகப் பாதிக்கப்பட்ட குடிசை வீடுகளின் எண்ணிக்கை 1680 ஆகும்.

2. முழுமையாக பாதிக்கப்பட்ட குடிசை வீடு ஒன்றுக்கு ரூ. 1000 வீதம் ரூ. 1,81,67,000-மும் மற்றும் பகுதியாக பாதிக்கப்பட்ட குடிசை வீடு ஒன்றுக்கு ரூ. 500 வீதம் ரூ. 8,40,000-மும் ஆக மொத்தம் ரூ. 1,90,07,000 நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**11—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

வினா 6686—**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி ஒன்றியம், வே.முத்தம்பட்டி, எம்.ஒட்டப்பட்டி, திண்ணப்பட்டி, குண்டல்பட்டி, முக்கல் நாய்க்கம்பட்டி, நடுப்பட்டி, தாசனம்பட்டி, வி.கொல்லப்பட்டி, மணிபுரம், மணலூர் கொப்பகரை, மூலக்காடு, மாலடிப்பட்டி ஆகிய ஊர்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

13 குடியிருப்புகளில் 7 குடியிருப்புகளுக்கு 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டு ஒப்புதல் பெற்ற குறிக்கோளின்படியான குடிநீர் திட்டங்களின் மூலம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு விட்டன. 1 குடியிருப்புக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 குடியிருப்புகளில் 3 குடியிருப்புகளுக்கு நடப்பு ஆண்டிலேயே நீராதாரம் உருவாக்கப்பட்டு,



மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 2 குடியிருப்புகளுக்கு புளோரைடு குடிநீர் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டில் வழங்கப்படும்.

**12—**

**பேருந்து நிலையம் அமைத்தல்**

வினா 13574—**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூரில் பேருந்து நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**13—**

**கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குதல்**

வினா 13954—**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானாபுரத்தைச் சார்ந்த 30 கிராமங்களுக்கு தென்பெண்ணை ஆற்றிலிருந்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வானாபுரத்தைச் சார்ந்த 30 கிராமங்களுக்கு தென்பெண்ணையாற்றிலிருந்து குடிநீர் வழங்க நடப்பு நிதியாண்டில்

(1998-99)-ல் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. வரும் நிதியாண்டில் (1999-2000)-ல் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

**14—**

**சமுதாய நலக் கூடம் சீரமைத்தல்**

வினா 14299—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், அரியபுரம் ஊராட்சிப் பகுதியில் சமுதாய நலக் கூடத்தில் மேல்தளம் போடாமலும், குளியலறை, கழிப்பிடம் மற்றும் சமையலறை வேலைகள் முடிக்கப்படாமலும் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அனைத்துப் பணிகளையும் முழுமையாக முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போது ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து கட்டடப் பணிகள் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**15—**

**கம்போஸ்ட் யார்டை இடம் மாற்றுதல்**

வினா 14440—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் நகராட்சி, குப்பைகளை கொட்டும் இடத்தை சதுப்பேரி கம்போஸ்ட் யார்டில் வைத்துள்ளதை சதுப்பேரி மக்கள் ஆட்சேபித்தால் கம்போஸ்ட் யார்டை வேறு ஒதுக்குப்புறமான இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?





விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சியில் கம்போஸ்ட் யார்ட், நகரத்தினை விட்டு சுமார் 3 கி.மீ. தொலைவில், சதுப்பேரி கிராமத்தில் அமைந்துள்ளது. இது நகராட்சிக்குச் சொந்தமான நிலமாகும். இங்கு நகராட்சியில் சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கி உரமாக மாற்றும் பணி செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் கம்போஸ்ட் யார்டை வேறு இடத்திற்கு மாற்றுவது சாத்தியமில்லை.

**16—**

**ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்**

வினா 16054—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, சின்ன அரங்கநூர் மற்றும் செவலானூர் ஆரம்பப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 1999-2000 ஆம் ஆண்டில் திட்டப் பணிகளுக்கான ஆண்டு திட்டத்தில் (ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டம், வேலை உறுதியளிப்புத் திட்டம் போன்ற திட்டங்களில்) சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பணியினை முன்னுரிமை கொடுத்து எடுத்துக்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

[1999 மார்ச் 26

**17—**

### விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா *16346*—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, சேப்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

போதிய இட வசதியின்மையால் இப்பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைக்கும் வாய்ப்பு இல்லை.

**18—**

### தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி

வினா *19101*—**திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட பங்குநத்தம் கொட்டாய் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



1999 மார்ச் 26]

(ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பங்குநத்தம் கொட்டாய் ஆரம்பப்பள்ளியில் தற்போது ஒரு பள்ளிக்கட்டடம் உள்ளது. இதில் *163* பிள்ளைகள் படித்து வருகிறார்கள். எனவே கூடுதலாக ஒரு பள்ளிக்கட்டடம் அவசியம் தேவைப்படுகிறது. இதற்கான இடத்தினை கிராமப் பொதுமக்கள் விலைக்கு பெற்று ஆணையாளர் பெயருக்கு கொடுத்துள்ளனர். மேற்படி கூடுதல் பள்ளிக்கட்டடம் வரும் நிதியாண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் எடுத்து கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

**19—**

### குடிநீர் திட்டம் தொடங்குதல்

வினா *22135*—**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அத்திக்கடவு குடிநீர், (அவிநாசி குடிநீர் திட்டம்) இந்த நிதி ஆண்டில் நிதி ஒதுக்கி நிறைவேற்றப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கோவை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் ஏழு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த பகுதிகளுக்கு பவானி ஆற்று வெள்ள நீரை அத்திக்கடவு பகுதியிலிருந்து திசை திருப்பி குளம் குட்டைகளில் நிரப்பி நிலத்தடி நீரை வளப்படுத்தும் குடிநீர்த் திட்டத்தின் சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்வதற்காக 4 கன்சல்டன்சிகள் கொண்ட குறுகிய பட்டியல் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தேர்வு செய்யப்படும் கன்சல்டன்சிகளிடமிருந்து அறிக்கை பெற்று, உத்தேச மதிப்பீடு தயார் செய்து அதற்கு உரிய ஒப்புதல் பெற்ற பின்னரே திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான

நடவடிக்கை மேற்கொள்ள முடியும். இத்திட்டத்தை அடுத்த நிதியாண்டில் (1999-2000) எடுத்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**20—**

### விவசாயக் கிடங்கு கட்டுதல்

வினா 18589—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஒன்றியத்திலுள்ள பெரியயேரிப்பட்டியில் ஒரு விவசாயக் கிடங்கு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அரசு கடித எண் 27176/பிஜி.1/96-1, நிதித் துறை நாள் 10-6-1998-ன்படி புதிய செலவினங்கள் மேற்கொள்ள இயலாது என்பதால் ஜூன் 1999-க்குப் பிறகே இப்பகுதியில் புதிய வேளாண்மை விரிவாக்க மையம் கட்டுவது குறித்து அவசியம் ஏற்படின் பரிசீலிக்கப்படும்.

**21—**

### முந்திரியின் விலைக் குறைவைத் தடுத்தல்

வினா 19337—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழை விவசாயிகளின் வறுமையைப் பயன்படுத்தி அவர்தம் பணப்பயிரான முந்திரி விளைச்சலை மிகவும் மலிவான விலைக்கு சில தனியார் வாங்குவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**



(அ) மற்றும் (ஆ) முந்திரி விளைச்சல் அதிகமாக உள்ள பகுதிகளில் முந்திரி விலை வீழ்ச்சியடையும்போது கீழே குறிப்பிட்டவாறு அருகிலுள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூட ஊரகக் கிடங்குகளில் இருப்பு வைத்து பொருளின் மொத்தப் பரப்பில் 75% பொருளீட்டுக் கடன் பெற்று வருகின்றனர். முந்திரி வரத்து அதிகம் வரும் மூன்று விற்பனைக் குழுக்களின் 1997-98-ல் வழங்கப்பட்ட பொருளீட்டுக் கடன் விவரம் வருமாறு:-

| விற்பனைக்குழு | ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் | இருப்பு வைத்த அளவு (மெடன்) | மதிப்பு லட்சத்தில் | பொருளீட்டுக் கடன் வழங்கியது (லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| கடலூர் | பண்ருட்டி | 70 | 21.14 | 15.86 |
| தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 2 | 0.65 | 0.48 |
| கன்னியாகுமரி | குலசேகரம் | 43 | 8.03 | 6.02 |
| திருச்சி | ஆண்டிமடம் | 15 | 3.00 | 1.02 |

சந்தையில் நல்ல விலை கிடைக்கும்போது ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலிருந்து எடுத்துச்சென்று நல்ல விலைக்கு விற்று லாபமடைகின்றனர்.

**விவசாயிகளின் சாகுபடி செலவு விவரம்:**

| | | |
|---|---|---|
| 1. (அ) ஏக்கர் ஒன்றுக்கு சாகுபடி செலவு விவரம் | .. | ரூ. 5,000 |
| (ஆ) ஹெக்டேர் ஒன்றுக்கு சாகுபடி செலவு | .. | ரூ. 12,500 |
| 2. ஒரு மூட்டை (80 கிலோ) காய வைத்தால் கிடைக்கும் நிகர அளவு | .. | 70 கிலோ |
| 3. 3 கிலோ காய்ந்த கொட்டை உடைத்து, உரித்து, தரம் பிரித்து பருப்பு தயார் செய்ய மொத்த செலவு | .. | ரூ. 10 |
| 4. 3 கிலோ கொட்டை உடைத்தால் கிடைக்கும் பருப்பு அளவு | .. | 850 கிராம் முதல் 1 கிலோ வரை |

[1999 மார்ச் 26

**1997-98 ஆம் ஆண்டு விலை விவரம்:**

5. வரத்துக் குறைவாக உள்ள காலங்களில் நிலவும் விலை விவரம் (80 கிலோ பருப்பு) .. ரூ. 3,800 முதல் ரூ. 4,200 வரை

6. வரத்து அதிகமாக உள்ள காலங்களில் நிலவும் விலை விவரம் (80 கிலோ பருப்பு) .. ரூ. 2200 முதல் ரூ. 2,500 வரை

7. விவசாயிகளிடமிருந்து வியாபாரி கொள்முதல் செய்யும் விலை விவரம் (ரகம் வாரியாக)

    1. 320 நெம்பர் 1 கிலோ ரூ. 216 முதல் 217 (முழு பருப்பு)
    2. 240 நெம்பர் 1 கிலோ ரூ. 240 முதல் 243 (முழு பருப்பு)
    3. எஸ்.டபிள்யூ 1 கிலோ ரூ. 190 முதல் 195 (முழு பருப்பு)
    4. எஸ்.எஸ் டபிள்யூ 1 கிலோ ரூ. 165 முதல் 167 (முழு பருப்பு)

8. வியாபாரி ஏற்றுமதி மற்றும் நுகர்வோருக்கு விற்பனை செய்யும் விலை விவரம் :

    1. 320 நெம்பர் 1 கிலோ ரூ. 250 (முழு பருப்பு)
    2. 240 நெம்பர் 1 கிலோ ரூ. 260 (முழு பருப்பு)
    3. பத்தை 1 கிலோ ரூ. 240 (அரை பத்தை)
    4. உடைத்த துண்டுகள் 1 கிலோ ரூ. 180 (உடைத்தது)

மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் அதிக வரத்து காணப்படுகிறது.

அரசு வனத் துறையைச் சேர்ந்த முந்திரித் தோட்டங்களை அரசும், தனியாருக்குச் சொந்தமான தோட்டங்களைத் தனியாரும் குத்தகை அடிப்படையில் பலனை அனுபவிக்க ஏலம் விடுகின்றனர். ஏலம் போகாத தோட்டங்களில் மட்டுமே மகசூல் நேரிடையாக எடுக்கப்படுகின்றது.



1999 மார்ச் 26]

முந்திரி வரத்து அதிகமாக உள்ள காலங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலுள்ள கிடங்குகளில் இருப்பு வைத்து, வரத்துக் குறைவான காலங்களில் வியாபாரிகளுக்கு விற்று பயன்பெறுகின்றனர்.

எனவே, வறுமையின் காரணமாக முந்திரியை விவசாயிகள் குறைந்த விலைக்கு விற்பதில்லை.

**22—**

**விவசாயப் பணிக்கான செலவு விவரம்**

வினா 22065—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1998-99 ஆம் ஆண்டு விவசாயப் பொறியியல் துறை மூலம் எந்தெந்த வகையில் விவசாயப் பணிக்காக செலவு செய்யப்பட்டுள்ளது? மொத்தம் எவ்வளவு ரூபாய்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 1998-99 ஆம் ஆண்டு விவசாயப் பொறியியல் துறை நாட்டில் நிலநீர்வள ஆதாரங்களைப் பெருக்குவதற்கு கீழ்க்கண்ட திட்டங்கள் மூலம் விவசாய மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்தி வருகிறது.

**1. மாநிலத் திட்டங்கள்:**

1. மலை மற்றும் சமவெளிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு
2. பழங்குடியினர் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு
3. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்
4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**2. மைய அரசுத் திட்டங்கள்:**

1. குந்தா மற்றும் கீழ்பவானி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம்

[1999 மார்ச் 26

2. பழங்கள், பூக்கள் மற்றும் தென்னை ஆகிய பயிர்களுக்குச் சொட்டு நீர்ப்பாசனத் திட்டம்.

**3. மைய அரசு, மாநில அரசு இணைந்த திட்டங்கள்:**

1. காவிரி, கீழ்பவானி, பரம்பிக்குளம், ஆழியாறு, அமராவதி நீர்த்தேக்கம், கோதையார், சித்தார் பட்டணங்கால் பாசனப் பகுதிகளில் பாசனப் பகுதி மேன்மைத் திட்டம்.

**4. வெளிநாட்டு நிதி உதவி பெறும் மாநிலத் திட்டங்கள்:**

1. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பாழ்பட்டுத் தரங்குன்றிய பகுதிகளில் டானிடா நிதியுதவியுடன் செயல் படுத்தப்படும் விரிவான நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.
2. விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பாழ்பட்டுத் தரங்குன்றிய பகுதிகளில் டானிடா நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மேற்படித் திட்டங்களைச் செயல்படுத்த 30-11-1998 முடிய ரூ.5,083.26 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. திட்டவாரியாக செலவிடப்பட்ட விவரங்களும், திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களும் கீழே அளிக்கப்பட்டுள்ளன :

**1. மாநிலத் திட்டங்கள்:**

| | | |
|---|---|---|
| 1. மலை மற்றும் சமவெளிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு | ரூபாய் 1057.36 இலட்சம் | தமிழ்நாட்டின் சென்னை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்களின் சமவெளிப் பகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் மலைப் பகுதிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. |
| 2. பழங்குடியினர் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு | ரூபாய் 52.71 இலட்சம் | வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் திருச்சி மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. |



1999 மார்ச் 26]

**1. மாநிலத் திட்டங்கள்**—தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| 3. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் | ரூபாய் 230.00 இலட்சம் | கோயம்புத்தூர், ஈரோடு திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. |
| 4. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | ரூபாய் 159.33 இலட்சம் | நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்-படுகிறது. |

**2 மைய அரசுத் திட்டங்கள்:**

| | | |
|---|---|---|
| 1. குந்தா மற்றும் கீழ்பவானி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் | ரூபாய் 433.64 இலட்சம் | நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. |
| 2. பழங்கள், பூக்கள் மற்றும் தென்னை ஆகிய பயிர்களுக்கு சொட்டுநீர்ப் பாசனத் திட்டம் | ரூபாய் 254.93 இலட்சம் | தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. |

**3. மைய மாநில அரசு இணைந்த திட்டங்கள்:**

| | | |
|---|---|---|
| காவிரி, கீழ்பவானி, பரம்பிக்குளம் ஆழியாறு, அமராவதி, நீர்த்தேக்கத் திட்டம், கோதையார், சித்தார் பட்டணங்கால் பாசனப் பகுதிகளில் பாசனப் பகுதி மேன்மைத் திட்டம். | ரூபாய் 2470.00 இலட்சம் | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ஈரோடு கோயம்புத்தூர், கரூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. |

**4. வெளிநாட்டு உதவிபெறும் மாநிலத் திட்டங்கள்:**

| | | |
|---|---|---|
| 1. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பாழ்பட்டுத் தரங்குன்றிய பகுதிகளில் டானிடா நிதிஉதவியுடன் செயல்படுத்தப்படும்விரிவான நீர்வழிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். | ரூபாய் 279.36 இலட்சம் | திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் இத் திட்டம் செயல் படுத்தப்படுகிறது. |

[1999 மார்ச் 26

### 4. வெளிநாட்டு உதவிபெறும் மாநிலத் திட்டங்கள்—தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| 2. விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பாழ்பட்டுத் தரங்குன்றிய பகுதிகளில் டானியா நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். | ரூபாய் 145.93 இலட்சம் | விருதுநகர், சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. |

மேற்படித் திட்டங்களுக்கு அரசினால் அளிக்கும் மானிய விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது:

### 1. மாநிலத் திட்டங்கள்:

| | |
|---|---|
| 1. மலை மற்றும் சமவெளிப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம் | சமவெளிப் பகுதிகளில் பணிச் செலவினத்தில் 25 விழுக்காடும், மலைப் பகுதிகளில் பணிச் செலவினத்தில் 40 விழுக்காடு மானியமாகவும் வழங்கப்படுகிறது. |
| 2. பழங்குடியினர் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு | 100 விழுக்காடு .மானியம் வழங்கப்படுகிறது. |
| 3. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம். | பணிச் செலவினத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. |
| 4. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | பணிச் செலவினத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. |

மேற்படி இனங்களில் பணிச் செலவினம் மானியம் போக நிலுவைத் தொகை பயன்பெறும் விவசாயிகளிடமிருந்து பணி முடிக்கப்பட்ட இரண்டாண்டுகளுக்குப் பிறகு உரிய வட்டியுடன் பத்து ஆண்டு சம தவணைகளில் மீள வசூலிக்கப்படுகிறது.

### 2. மைய அரசுத் திட்டம்:

| | |
|---|---|
| 1. குந்தா கீழ்பவானி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புத் திட்டம். | பணிச் செலவினத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. நிலுவைத் தொகை பணி முடிக்கப்பட்ட இரண்டாண்டுகளுக்குப் பிறகு உரிய வட்டியுடன் பத்து ஆண்டு சம தவணைகளில் பயன்பெறும் விவசாயிகளிடம் மீள வசூலிக்கப்படுகிறது. |



1999 மார்ச் 26]

### 2. மைய அரசுத் திட்டம்—தொடர்ச்சி

| | |
|---|---|
| 2. சொட்டு நீர்ப்பாசனத் திட்டம் | சிறு, மிகச் சிறு, ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் மகளிர் விவசாயிகளுக்கு பணிச் செலவினத்தில் 90% அல்லது எக்டேருக்கு ரூ. 25,000 இவற்றில் எது குறைவானதோ அத்தொகையும் இதர விவசாயிகளுக்கு பணிச் செலவினத்தில் 70 விழுக்காடு அல்லது எக்டேருக்கு ரூ. 25,000 இவற்றில் எது குறைவானதோ அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. நிலுவைப் பணிச் செலவினத் தொகை விவசாயிகளால் ஏற்கப்படுகிறது. |

### 3. மைய மாநில அரசு இணைந்த திட்டங்கள்:

| | |
|---|---|
| பாசனப் பகுதி மேன்மைத் திட்டம் | பண்ணை மேன்மைப் பணிகளுக்கு பணிச் செலவினத்தில் 50 விழுக்காடு மானியமும் சுழற்சி முறை பாசனப் பணிகளுக்கு 100 விழுக்காடு மானியமும் வழங்கப்படுகிறது. நிலுவைப் பணிச் செலவினத் தொகை பணி முடிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு உரிய வட்டியுடன் பயன்பெறும் விவசாயிகளிடமிருந்து ஐந்து ஆண்டு சம தவணைகளில் மீள வசூலிக்கப்படுகிறது. |

### 4. வெளிநாட்டு உதவி பெறும் திட்டம்:

| | |
|---|---|
| விரிவான நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | ஒரு விவசாயிக்கு மரக்கன்றுகள் மற்றும் இடு பொருள்கள் வழங்க ரூ. 1,500-ம் நிலமற்ற விவசாயத் தொழிலாளிகளுக்கு (பொருளாக) ஒருவருக்கு ரூ. 1500-க்கு மிகாமல் மானியமாக வழங்கப்படுகிறது. |

**23—**

## ஆய்வு மாளிகை பராமரித்தல்

வினா 19550—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் நகரில் பொதுப்பணித் துறை ஆய்வு மாளிகை 1 மற்றும் 2 பராமரிக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஆய்வு மாளிகை 1-க்கு சிறப்பு மராமத்து செய்ய உரிய மதிப்பீடு தயார் செய்ய செயற் பொறியாளர், பொதுப்பணித் துறை மேட்டூர் அணை கோட்டம், மேட்டூர் அணை கோரப்பட்டுள்ளார். தற்சமயம் அந்த ஆய்வு மாளிகையானது அதிரடிப்படை போலீஸ் தங்குமிடமாக உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஆய்வு மாளிகை 2-க்கு சிறப்பு மராமத்து செய்ய ரூ. 5.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**24—**

### கல்லூரி மாணவர்களுக்குக் கட்டணச் சலுகை

வினா 21637—**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிக் கல்வி பயில்வோருக்கு அரசுப் பேருந்துகளில் கட்டணச் சலுகை பெறுவதற்கு தூர வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் தூர வரம்பை நீக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாணவர்கள் வீட்டிலிருந்து கல்வி பயிலும் நிறுவனங்களுக்குச் சென்று திரும்பி வர அனுமதிக்கப்படுகிறது. தூர வரம்பு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

**25—**

### பேருந்து நிறுத்தம் ஏற்படுத்துதல்

வினா 21966—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, மாரியம்மன் கோயில் ஊராட்சிக்குட்பட்ட மாரியம்மன் கோயில் புறவழி மெயின் சாலையில் ஒரு பேருந்து நிறுத்தம் ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், மாரியம்மன் கோயில் புறவழி மெயின் சாலையின் வழியாக இயங்கும் புறநகர் பேருந்துகள் மாரியம்மன் கோயில் பேருந்து நிறுத்தத்தில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கி சென்று வருகிறது.

**26—**

### பாலம் செப்பனிடுதல்

வினா 19794—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், கம்பம் தொகுதி, காமயகவுண்டன்பட்டி செல்லும் சாலையிலுள்ள பாலத்தைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கம்பம்-காமயகவுண்டன்பட்டி சாலையானது 3.60 கி.மீ. (0/0-3/6) நீளமுள்ள இதர மாவட்டச் சாலையாகும். இச் சாலையில் கி.மீ.2/6-ல் மேற்படி பாலம் அமைந்துள்ளது. இப்பாலம் 58 மீட்டர் நீளமுடைய இரும்பு கர்டராலான ஆர்.சி.சி. தளப் பாலத்தினால் அமைக்கப்படவுள்ளது. மேற்படி பாலம் நல்ல நிலையில் போக்குவரத்திற்கு ஏற்றவாறு உள்ளது.

இப்பாலத்திலுள்ள இரும்பு கர்டர்களை அகற்றிவிட்டு பாலத்தை அகலப்படுத்தி புதிதாக இருவழிப் பாதை பாலம் அமைப்பதென்றால் ரூ. 50.00 இலட்சம் தேவைப்படும். இப்பணியினை அண்மைக் காலத்தில் செயல்படுத்திடும் சாத்தியக்கூறுகள் இல்லை.

[1999 மார்ச் 26

**27—**

**சாலையை அகலப்படுத்தி செப்பனிடுதல்**

வினா 19795—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், கம்பம் தொகுதிக்குட்பட்ட உத்தமபாளையம்-கோம்பை செல்லும் சாலை மிகவும் குறுகியதாகவுள்ளதால், அதனை அகலப்படுத்திச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உத்தமபாளையம்-கோம்பை செல்லும் சாலை என்பது உத்தமபாளையம் தேவாரம் சாலையாகும். 12.20 கி.மீ நீளமுள்ள மேற்படி சாலையில் கி.மீ. 5/8-ல்தான் கோம்பை உள்ளது.

பாளையம்-தேவாரம் சாலை கி.மீ. 0/0-0/8 மற்றும் 5/8-7/2 (2.20 கி.மீ) வரை 6.70 கி.மீ. அகலமுள்ள இருவழித் தடமாக உள்ளது. மீதமுள்ள ஒருவழித் தடப்பாதை சாலையை இருவழித் தடமாக்க ரூ. 108 இலட்சம் தேவைப்படும் என்பதால் மேற்படி சாலைப் பகுதியை இருவழித் தடமாக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**28—**

**வழிப்பாதையை மாற்றுதல்**

வினா 21265—**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடியிலிருந்து செல்லம்பட்டி குராயூர் வழியாக வாரியாபட்டி செல்லும் ஒருவழிப் பாதையை இரு வழிப்பாதையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 மார்ச் 26]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெடுஞ்சாலைத் துறை விதிகளின்படி சாலையில் போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை 10,000 பி.சி.யு (PCU) மேல் இருந்தால்தான் சாலையை இருவழிப் பாதையாக மாற்ற இயலும். ஆனால், கள்ளிக்குடியில் இருந்து செல்லம்பட்டி, குராயூர் வழியாக காரியாபட்டி செல்லும் சாலையில் போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை 1,539 பி.சி.யுக்கு (PCU) தான் உள்ளது. மேலும் குறைந்த பட்சம் 5,000 பி.சி.யுக்கு (PCU) மேல் இருந்தால்தான் 5.50 மீ. அகலம் உள்ள சாலையாக மாற்ற முடியும். எனவே, மேற்படி சாலையினை இருவழிப் பாதையாக அகலப்படுத்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**29—**

**இசை விழாவில் தமிழிசைப் பாடல் இடம்பெறுதல்**

வினா 18647—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவையாறில் நடைபெறும் தியாகராசர் இசை விழாவில் கட்டாயம் தமிழிசைப் பாடல்கள் இடம் பெறவேண்டும் என ஆணையிடும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

திருவையாறில் தியாகராசர் இசை விழா ஒரு தனியார் அமைப்பின் மூலம் நடத்தப்பெறுவதால் அதில் தமிழிசைப் பாடல்களைக் கட்டாயம் பாடவேண்டும் என வலியுறுத்தும் எண்ணம் இல்லை. அவ்விழாவில் தியாகராசர் பாடல்கள் மட்டுமே அவரது நினைவாகப் பாடப்படுகின்றன. அவர் பாடிய தமிழ்ப் பாடல்கள் ஏதுமில்லை.

[1999 மார்ச் 26

**30—**

**புதிய நியாயவிலைக் கடைக்கு கட்டடம் அமைத்தல்**

வினா 16929—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட பவளத்தானூரில் புதிய நியாயவிலைக் கடை கட்டடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட பவளத்தானூரில் லட்சுமி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் நியாயவிலைக் கடை, பவளத்தானூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**31—**

**புதிய நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்டுதல்**

வினா 20686—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், நாகோசிப்பட்டியில் புதிய நியாயவிலைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



1999 மார்ச் 26]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், நாகோசிப்பட்டியில் புதிய நியாயவிலைக் கடைக்கு 'நமக்கு நாமே' திட்டத்தின்கீழ் கட்டடம் கட்ட மொத்த மதிப்பீட்டில் 1/3 பகுதியினைச் செலுத்த இக்கடையை நடத்தி வரும் மல்லிகுந்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிடம் நிதி வசதி இல்லை என்பதால் மேற்கண்ட இடத்தில் நியாயவிலைக் கடைக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**32—**

**ஏழை விவசாயிகளுக்குக் கடன் வழங்குதல்**

வினா 20687—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, பெரியகாடம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் ஏழை விவசாயிகளுக்கு கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) பெரியகாடம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தவணை, 100 விழுக்காடு தவணை தவறியுள்ள நிலையில், இவ்வங்கி உறுப்பினர்களுக்கு கடன் வழங்க இயலவில்லை. மேலும், தவணை தவறிய கடன்தாரர்களிடம் கடனை வசூலித்து மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு செலுத்தும் அளவுக்கு கடன் வழங்கப்படும். பெரியகாடம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

[1999 மார்ச் 26

உறுப்பினர்களுக்கு இதுவரை பயிர்க்கடனாக ரூ. 12,62,450-ம் மத்திய கால கடனாக ரூ. 5,99,299-ம் ஆக மொத்தம் ரூ. 18,61,749-ஐ வழங்கியுள்ளது. உறுப்பினர்களிடமிருந்து வர வேண்டிய கடன் நாளது தேதியில் ரூ. 18,61,749 உள்ளது. ஆனால், இவ்வங்கி சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகையோ ரூ.22,36,938 நிலுவை உள்ளது. மேற்படி வித்தியாசத் தொகை ரூ.3,75,189-ல் பேலன்ஸ் தொகை வித்தியாசம் உள்ளது. இதன் காரணமாக, வங்கியின் சொந்த நிதி பாதிக்கப்பட்டுள்ளது. இதனை நேர் செய்வதற்கு இவ்வங்கி இதுவரை வசூலில் தீவிரம் காட்டாமலும் வைப்பு நிதி சேகரிப்பதில் முன்னேற்றம் காட்டாமலும் உள்ளது. இதனால் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி வழங்கும் அனைத்து வகைக் கடன்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியானது உறுப்பினர்களுக்கு பயிர்க்கடன் வழங்க ஏதுவாக ஆண்டுக்கடன் விண்ணப்பத்தினை மத்திய வங்கி தனி அலுவலரின் நடவடிக்கை எண்22 தேதி 2-5-1998-ன்படி அனுமதிக்கப்பட்டு 1997-98 மற்றும் 1998-99-ம் ஆண்டுகளுக்கு ரூ.69,15,394 அளவிற்குக் ஆண்டுக் கடனளவு (ACL) அனுமதிக்கப்பட்டுள்ளது. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தவணை தவறிய கடன்தாரர்களிடம் கடனை வசூலித்து மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு செலுத்தும் அளவுக்கு கடன் வழங்கப்படும் என்று சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கி தெரிவித்துள்ளதால், பெரியகாடம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அதன் உறுப்பினர்களிடமிருந்து தவணை தவறிய கடன்களை வசூலித்து புதுக்கடன் பெற்றுக்கொள்ள வழிவகை செய்துகொள்ள வேண்டும்.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**33—**

### தொடக்க வேளாண்மை வங்கிக் கட்டடம் செப்பனிடல்

வினா 20807—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும், கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு, பஞ்சநதிக் கோட்டையில் 1962-ல் கட்டப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடத்தை செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?



1999 மார்ச் 26]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு, பஞ்சநதிக் கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கிட்டங்கி மிகவும் பழுதடைந்து இருந்ததால் செயற் பொறியாளர் கட்டுமானக் கோட்டம் பரிசீலித்து பரிந்துரை செய்ததின்பேரில் 6-9-1996 அன்று இடிக்கப்பட்டது. எனவே, உறுப்பினர் கோரியுள்ளவாறு மேற்படி வங்கிக் கட்டடத்தை செப்பனிட்டுத்தர தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை. புதிய கிடங்கு கட்டுவதற்கு வங்கியிலிருந்து முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றால் தகுதியடிப்படையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தஞ்சாவூர் மண்டல இணைப் பதிவாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**34—**

### வீடுகள் கட்டுதல்

வினா 21125—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி, நைனாம்பட்டி பகுதியில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**35—**

### முத்தரப்பு ஒப்பந்தங்களின் வீழ்ச்சி விவரம்

வினா 22686.—**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் நலத் துறையில் முத்தரப்பு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்து வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன்கீழ் 1997-ல் 2119 ஒப்பந்தங்களும், 1998 நவம்பர் முடிய 2634 ஒப்பந்தங்களும் ஏற்பட்டுள்ளன. 1997-ம் ஆண்டைவிட 1998 நவம்பர் முடிய முத்தரப்பு ஒப்பந்தங்கள் அதிகரித்து உள்ளதேயன்றி வீழ்ச்சி அடையவில்லை.

**36—**

**மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில் திறப்பு**

வினா 19387—**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுமார் 13 வருடங்களாக மூடிக் கிடக்கும் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லை திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், மில்லைத் திறந்து 2,500 தொழிலாளர் குடும்பங்களுக்கு வாழ்வளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் டெக்ஸ்டைலஸ் மில் கடன்தாரர் ஒருவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கின் அடிப்படையில் இந்த ஆலையைக் கலைக்க உத்தரவிடப்பட்டு, சென்னை உயர் நீதிமன்ற கலைத்தல் அலுவலரின் (Official Liquidator) பொறுப்பில் உள்ளதால், அந்த வழக்கின் முடிவைப் பொறுத்தே இந்த ஆலையைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆராயப்படும்.



**37—**

**ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா**

வினா 22017—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியைச் சேர்ந்த அனைத்து ஊராட்சி கிராமங்களில் உள்ள கானாப்பட்டி கிராம, மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த கானாப்பட்டி கிராமத்திலுள்ள வீடற்ற ஏழை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை. எனினும், மேற்படி கிராமத்திலுள்ள வீடற்ற பயனாளிகள் விவரம் கண்டறிந்து, நிலம் தேர்வு செய்து, நில எடுப்பு நடவடிக்கை தொடர்ந்து, தகுதியான நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**38—**

**அரசு மாணவ/மாணவியர் விடுதி செப்பனிடுதல்**

வினா 22146—**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானி நகரில் அமைந்துள்ள அரசு மாணவர் விடுதி, அரசு மாணவியர் விடுதி பழுதடைந்துள்ளதால் அதைச் செப்பனிட அரசு முன்வருமா?

[1999 மார்ச் 26

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், பவானி நகரில் பிற்படுத்தப்பட்டோர் மாணவ/மாணவியர் விடுதி ஏதும் இயங்கவில்லை. இருப்பினும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி மட்டும் இயங்கி வருகிறது. அரசின் நிதிநிலையைப் பொறுத்து ஒவ்வொரு நிதியாண்டிலும் படிப்படியாக முன்னுரிமை அடிப்படையில் விடுதிக் கட்டடங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1998-99 பகுதி 2 திட்டத்தில் விடுதிகளைப் புதுப்பித்தல் திட்டத்தின்கீழ் ரூ. 24 இலட்சம் (பிற்படுத்தப்பட்டோர் நலம் ரூ. 16 இலட்சம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலம் ரூ. 6 இலட்சம், சீர்மரபினர் நலப் பள்ளிகள் ரூ. 2 இலட்சம்) ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1998-99-ல் பராமரிக்கப்பட்ட மொத்த விடுதிகளின் எண்ணிக்கை 15. ஈரோடு மாவட்டம் பவானி நகரில் உள்ள மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிக் கட்டடத்தைப் பழுதுபார்க்கும் திட்டம் அரசின் நிதிநிலையைப் பொறுத்து வரும் நிதியாண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

**39—**

### வன வளங்களைச் சீர்படுத்தும் செலவு விவரம்

வினா 9093—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனவளர்ப்புத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்திலுள்ள வனவளங்களை சீர்படுத்த அரசு செய்த செலவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனவளர்ப்புத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்திலுள்ள வனவளங்களைச் சீர்படுத்தவும், இலவச நாற்றுகள் வழங்கவும், பழங்குடியினருக்கு அடிப்படை வசதிகள் செய்து தரவும் ரூ. 316.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.



1999 மார்ச் 26]

**40—**

### காடு வளர்ப்புத் திட்ட விவரம்

வினா 17071—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், பச்சநாடு, குண்டமலைக்காடு மற்றும் சூரியன்மலை எனப்படும் கொரியன்காடு ஆகிய வனப் பகுதிகள் அழிந்து வருவதால், அங்கு மரக்கன்றுகள் நட்டு, காடு வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு பொங்கலூர் நா. பழனிசாமி, வனத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், பச்சநாடு, குண்டமலைக்காடு மற்றும் சூரியன்மலை எனப்படும் கொரியன்காடு ஆகிய வனப் பகுதிகளில் நிதிநிர்வாக நிலைகளின்படி அடுத்த நிதியாண்டில் திட்டப்பணியின்கீழ் மரங்கள் நடும் பணி செய்யப்படும்.

**41—**

### சுய வேலைவாய்ப்பு பயிற்சி விவரம்

வினா 19290—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டில் சுய வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் எத்தனை பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் சுய வேலைவாய்ப்பு பயிற்சித் திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டத்தில் 1998 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய 410 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**42—**

## கிராமியத் தொழில்கள் தொடங்குதல்

வினா 20149—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மிகவும் பின்தங்கிய பகுதியாக உள்ளதால் அங்கு கிராமியத் தொழில்கள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் கிராமியத் தொழில்கள் தொடங்கும் திட்டம் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**43—**

## கால்நடை வளர்ப்புத் திட்டம் நிறைவேற்றுதல்

வினா 9097—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1997-98 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் 'டென்மார்க்' நாட்டு நிதியுதவியுடன் கால்நடை வளர்ப்புத் திட்டம் நிறைவேற்றப்படுமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டிற்கான 'டென்மார்க்' நிதியுதவியுடன் நடைபெறும் கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தில் சேலம் மாவட்டம் சேர்க்கப்படவில்லை.



28-11-1997 நாளிட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை அரசு ஆணை (நிலை) எண். 263-ன் படி 'டென்மார்க்' நாட்டு நிதியுதவியுடன் செயல்படும் கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தினை (இரண்டாம் கட்டம்) புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி ஆகிய ஐந்து மாவட்டங்களில் (46 வட்டாரங்கள் உள்ளடங்கியது) 7 ஆண்டு காலத்திற்குள், 1-2-1997 முதல் செயல்படுத்த ரூ.27.50 கோடி செலவிட அனுமதி வழங்கப்பட்டது. இதன்படி 1997-98 ஆம் ஆண்டு முதல் புதுக்கோட்டை மாவட்டத்திலும், 1998-99 ஆம் ஆண்டு முதல் இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1999-2000 ஆண்டு முதல் தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்களிலும் இத்திட்டச் செயல்பாடு மேற்கொள்ளப்படும்.

**44—**

## கோழி இன வளர்ச்சிக் கழக வருவாய் விவரம்

வினா 13442—**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கோழி இன வளர்ச்சிக் கழகம் மூலம் 1996-97 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருவாய் எவ்வளவு?

(ஆ) இக்கழகம் மூலம் சத்துணவுத் திட்டத்திற்கு முட்டை வழங்கப்படுகிறதா?

(இ) இக்கழகம் மூலம் ஜப்பான் காடைகள் வளர்க்கப்படுகின்றனவா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.**

(அ) 1996-97 ஆம் ஆண்டில் வருவாய் ஈட்டப்படவில்லை. அந்த ஆண்டில் ஏற்பட்ட நஷ்டம் ரூ.32.39 இலட்சங்கள் ஆகும். (தணிக்கை செய்யப்படாதது) 1997-98 ஆம் ஆண்டில் நிகர நட்டம் ரூ.58.13 இலட்சங்கள் ஆகும். (தணிக்கை செய்யப்படாதது)

[1999 மார்ச் 26

(ஆ) இக்கழகம் மூலம் சத்துணவுத் திட்டத்திற்கு 1-6-1997 முதல் மாதம் ஒன்றுக்கு 11½ கோடி முட்டைகள் வழங்கப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டில் சத்துணவுத் திட்டத்திற்கு முட்டை வழங்கிய வகையில் ஈட்டிய வருவாய் ரூ.60.91 இலட்சமாகும்.

(இ) இக்கழகம் மூலம் ஜப்பான் காடைகள் வளர்க்கப்படவில்லை.

**45—**

**பண்ணைகள் அமைக்க அரசு கடன் வழங்குதல்**

வினா 19339—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ணைகளை அமைக்க அரசு பெரிய அளவில் கடன் வழங்க நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தமிழக அரசு பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் மூலமாக ஏழை எளிய மக்கள், வறுமை கோட்டிற்குள்ளோர் மற்றும் சிறு/குறு விவசாயிகளுக்குப் பல்வேறு கால்நடை இனங்களை அவர்களது பொருளாதார நிலையினை உயர்த்துவதற்காக சிறிய அளவில் அரசு மானியத்துடன் வழங்கி வருகிறது.

கால்நடைப் பண்ணைகளை அமைக்க அரசு கடன் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

**46—**

**ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கச் செயல்பாட்டிற்கு நிவாரணம்**

வினா 20378—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டிலுள்ள ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட நிவாரணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?



D
V21, 31/1999
1999, 67

1999 மார்ச் 26]

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் மானியத்துடன் கூடிய கடன் பெறவே மிகவும் ஆர்வத்துடன் உள்ளதால் தனியாக கடன் மட்டும் பெற ஆர்வம் காட்டுவதில்லை. ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கெனவே பெற்ற கடன் தொகைகளைத் திருப்பிச் செலுத்தாததால் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் வணிக வங்கிகள் இக்கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் உதவி அளிக்கத் தயங்குகின்றன. மேற்கண்ட காரணங்களினால் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட நிவாரணம் வழங்க குறிப்பு ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**47—**

**கால்நடை மருந்தகத்தில் உதவியாளர் நியமனம்**

வினா 20628—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள கால்நடைக் கிளை மருந்தகத்தில் பணிபுரியும் பணியாளருக்கு உதவியாளராக ஒரு பணியாளரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

221182

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ) கால்நடைக் கிளை நிலையங்களுக்கு ஒரு கால்நடைப் பராமரிப்பு உதவியாளர் பதவி 'இல்லை' என அரசு கொள்கைரீதியில் ஒரு முடிவு ஏற்கெனவே எடுத்துள்ளது. இந்நிலையில் கிளை மருந்தகத்தில் பணிபுரியும் பணியாளருக்கு உதவியாளராக ஒரு பணியாளரை நியமனம் செய்ய வாய்ப்பு இல்லை. கிளை நிலையங்களில் ஒரு கால்நடைப் பராமரிப்பு உதவியாளரை நியமிக்க எப்போதும் வாய்ப்பு இல்லை.

[1999 மார்ச் 26

48—

ஈமச்சடங்கு செய்ய உதவித்தொகை

வினா 21712—திரு. கே. ரவி அருணன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ள தாழ்த்தப்பட்ட கிறிஸ்துவ மக்களுக்கும் ஈமச்சடங்கு செய்ய உதவித்தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குடும்ப ஆண்டு வருமானம் ரூ.24,000/- வரை உள்ள பட்டியல் இனத்தவர், பட்டியல் பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய பட்டியல் இனத்தவர்களில் எவரேனும் இறந்தால் அன்னாரின் ஈமச்சடங்கிற்காக ரூ.500/- உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

49—

படைவீரர்களின் விதவைகளுக்குக் கடனுதவி

வினா 19845—திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டு காதி மற்றும் கிராமத் தொழில் தொடங்க படைவீரர்களின் விதவைகளுக்கு எவ்வளவு தொகை கடனுதவி அளித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

கதர்த் தொழிலைப் பொறுத்தமட்டில் கதர் வாரியத்தால் தனி நபர்களுக்கு எந்தவிதக் கடனுதவியும் வழங்கப்படுவதில்லை. கிராமத்



1999 மார்ச் 26]

தொழில்களைப் பொறுத்தமட்டில் 1997-98 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் படைவீரர் விதவைகளுக்கு ஒப்புக்கொள்ளப்பட்டத் திட்டத்தின்கீழ் நிதியுதவி கோரி விண்ணப்பங்கள் எதுவும் பெறப்படவில்லை. எனவே, நிதியுதவி எதுவும் வழங்கப்படவில்லை.

50—

ஒயர்க் கூடை செய்யும் மகளிருக்குக் கடன் வழங்குதல்

வினா 20154—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில் கைத்தொழிலாக ஒயர்க் கூடை (பை) செய்யும் மகளிருக்குக் கடன் வழங்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு கதர்த் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியத்தில் கைத்தொழிலாக ஒயர்க் கூடை (பை) செய்யும் மகளிருக்கு நடப்பாண்டில் கடன் வழங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

எட்டாம் பட்டியல் @

1—

காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம்

வினா 18147—திரு. வ. வேலுசாமி: மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, கீரைத்துறையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் காவல் நிலையத்தினைச் சொந்தக் கட்டடத்தில் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்.

[1999 மார்ச் 26

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை சி2 கீரைத்துறை காவல் நிலையத்திற்கு அரசுக் கட்டடம் கட்ட நிலம் காவல் துறை வசம் இல்லை. நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், இக்காவல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**2—**

**காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம்**

வினா 18148—**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் கிழக்குப் பகுதியில் தெப்பக் குளத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் பி2 காவல் நிலையத்தை அப்பகுதியின் மையப் பகுதியில் புதிய கட்டடத்தில் இயக்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) மதுரை கிழக்கு மையப் பகுதியில் பி2 காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர், புதிய கட்டடம் கட்டுவது குறித்து அரசின் நிதிநிலைக்கேற்ப வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

**3—**

**காவல் நிலையங்களுக்கு அரசுக் கட்டடம்**

வினா 19697—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் எத்தனைக் காவல் நிலையங்கள் இயங்குகின்றன?

(ஆ) இந்த நிதியாண்டில் அரசுக் கட்டடத்தில் இயங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?



1999 மார்ச் 26]

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டத்தில் கீழ்க்காணும் 12 காவல் நிலையங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன:

1. ஈரோடு தெற்கு
2. கருங்கல்பாளையம்
3. ஈரோடு வடக்கு
4. ஈரோடு தாலுகா
5. மொடக்குறிச்சி
6. பர்கூர்
7. சிறுவலூர்
8. கடத்தூர்
9. கடம்பூர்
10. காஞ்சிகோவில்
11. ஆப்பக்கூடல்
12. வெள்ளோடு

(ஆ) மேற்காணும் காவல் நிலையங்களில் ஈரோடு தெற்கு காவல் நிலையம் நீங்கலாக எஞ்சியுள்ள 11 காவல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டதும் வரும் நிதியாண்டுகளில், அரசின் நிதிநிலைக்கேற்ப புதிய கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஈரோடு தெற்கு காவல் நிலையத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு காவல் துறை தலைமை இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

**4—**

### உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் அமைத்தல்

*வினா 11438*—**திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், மேலப்பாவூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை கட்டித்தர ரூ. 4.40 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு அரசாணை நிலை எண் 278 பள்ளிக் கல்வி, நாள் 24-7-1998-ல் அரசு ஆணையிட்டுள்ளது.*

**5—**

### பெண்கள் அரசு கலைக் கல்லூரி அமைத்தல்

*வினா 19815*—**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் மாவட்டம், வேலூரில் பெண்கள் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ): நிதி நிலைமை காரணமாக அரசு கல்லூரிகள் புதிதாகத் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது.*



**6—**

### இலவசச் சீருடை வழங்கும் திட்டம்

*வினா 21372*—**திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பள்ளிச் சிறார்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் எவ்வளவு பேர் பயன் அடைகிறார்கள்.*

*(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு?*

*விடை—*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) பள்ளிச் சிறார்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் பள்ளிக் கல்வி/தொடக்கக் கல்வியில் 64,36,321 மாணவ, மாணவிகள் பயனடைகிறார்கள். மேலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையில் 18,500 மாணவ, மாணவிகளும், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலத் துறையில் 64,859 மாணவ, மாணவிகளும் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் 3,15,000 மாணவ, மாணவிகளும் பயன் பெற்று வருகின்றனர்.*

*(ஆ) இதற்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 65.44 கோடி.*

**7—**

### மருத்துவமனையில் மின் பராமரிப்பு

*வினா 12028*—**திரு. கே. ரவி அருணன்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் மின் பராமரிப்புப் பணிகளைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) : தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் மின் பராமரிப்புப் பணிகளைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தென்காசி அரசு தலைமை மருத்துவமனையில் 1997-98 நிதியாண்டில் 25 டியூப் லைட்டுகள், 4 புதிய மின் விசிறிகள், 6 சோடியம் மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. 15 கே.வி. ஜெனரேட்டர் நிறுவுதல் மற்றும் பேனல் ரூம் சரி செய்தல் போன்ற பணிகள் பொதுப்பணித் துறை மூலம் நடைபெற்று வருகின்றன.

**8—**

**புதிய மின்மாற்றி அமைத்தல்**

வினா 12903—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், மேலப்பாவூரில் மின் அழுத்தக் குறைவைப் போக்க புதிய மின்மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மேலப்பாவூர், சத்திரம் கிராமத்தில் புதிதாக ஒரு 66/11 கி.வோ உப மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு 9வது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட மின் நிலையம் நிறுவப்பட்டவுடன் மேலப்பாவூர் கிராமத்திலுள்ள குறைந்த மின்னழுத்தம் முழுவதுமாகச் சீராக்கப்படும்.



**9—**

**மின் அழுத்தத்தை மேம்படுத்துதல்**

வினா 13797—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி உப கோட்டம், சுந்தரபாண்டியபுரம் எண் 9 மின்மாற்றி மூலம் மின்சாரம் விநியோகிக்கப்படும் பகுதிகளில் குறைந்த மின் அழுத்தம் ஏற்பட்டுள்ளது அரசிற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதை அதிக சக்தி வாய்ந்த மின்மாற்றியாக மாற்றி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மின் அழுத்தத்தை மேம்படுத்த ரூ. 40,000 செலவில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**10—**

**குறைந்த மின் அழுத்தத்தைப் போக்க நடவடிக்கை**

வினா 14282—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி கோட்டம், பாவூர்சத்திரம் அருகே குருசாமிபுரம் பகுதியில் மின் அழுத்தக் குறைவால் விளக்குகள் சரிவர எரிவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1999 மார்ச் 26

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். சரி செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**11—**

**தாய் சேய் நல விடுதி அமைத்தல்**

வினா 16618—**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, அரங்கனூர், செம்பனூர் ஆகிய இடங்களில் தாய்சேய் நலவிடுதி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டித்தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

அரங்கனூர் கிராமம், செம்பனூர் துணை சுகாதார நிலையத்தில் உள்ளடங்கிய ஒரு கிராமம் ஆகும். செம்பனூர் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. எனவே, செம்பனூர் மற்றும் அரங்கனூர் கிராமங்களில் மேலும் ஒரு துணை சுகாதார நிலையம் (தாய் சேய் நல விடுதி) அமைக்க வாய்ப்பில்லை.

**12—**

**மருத்துவமனை அமைத்தல்**

வினா 18733—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1999 மார்ச் 26]

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம் தெள்ளார் ஒன்றியத்தில் சுகாதார மருத்துவமனை ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தெள்ளார் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 97,544 ஆகும். மத்திய அரசின் வரையறையின்படி இவ்வொன்றியத்தில் மக்கள் தொகைக்கு ஏற்ப 3 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் மேலாக 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால், தெள்ளார் ஒன்றியத்தில் தற்போது புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

**13—**

**மின் வசதி செய்தல்**

வினா 22641—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, கொம்பாடியூர் மற்றும் மேலக்காடு கிராமங்களுக்கு மின் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(1) கொம்பாடியூர் கிராமம்: (பெரும்பாலை ஊராட்சி) விண்ணப்பம் பெறப்பட்ட அனைத்து வீட்டு மின் இணைப்புகளும் கீழ்க்கண்ட மின் இணைப்பு எண்களில் கொடுக்கப்பட்டுள்ளன:

மி.இ.எண் 70/3-7-98-வீட்டு மின் இணைப்பு

மி.இ.எண் 71/10-7-98-தொலைக்காட்சிப் பெட்டி அறை

மி.இ.எண் 72/21-12-98-வீட்டு மின் இணைப்பு

மி.இ.எண் 73/13-1-99-வீட்டு மின் இணைப்பு

மி.இ.எண் 74/13-1-99-வீட்டு மின் இணைப்பு

மேலும் 3 தெரு விளக்குகளுக்கு விண்ணப்பம் பெறப்பட்டு மதிப்பீடு அனுமதி வழங்கப்பட்டு மின் விஸ்தரிப்புப் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கும் வேலையில் தன்னுடைய நிலத்தில் கம்பம் நடக்கூடாது என்று ஒருவர் ஆட்சேபம் தெரிவித்து உள்ளதால் மாற்று ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

(2) மேலக்காடு கிராமம் (பெரும்பாலை ஊராட்சி)

இக்கிராமத்தில் வீட்டு மின் இணைப்புக்கான விண்ணப்பமோ, தெரு விளக்குக்கான விண்ணப்பமோ இதுவரை பெறப்படவில்லை.

**14—**

**கிராமச் சாவடி அமைத்தல்**

வினா 17603— **திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் குடியிருப்பு வசதியுடன்கூடிய கிராமச்சாவடி அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்கு குடியிருப்பு வசதியுடன் கூடிய கிராமச்சாவடி அமைத்துத் தரும் திட்டம் எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**15—**

**புதிய குடிநீர்த் திட்டம் ஏற்படுத்துதல்**

வினா 12713—**திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருநெல்வேலி மாவட்டம், இலஞ்சி பேரூராட்சிக்கு புதிய குடிநீர்த் திட்டம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம். எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இலஞ்சி பேரூராட்சியில் ஏற்கெனவே குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீரின் அளவைக் கூட்டி வழங்க, வரும் நிதி ஆண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் புதிய குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

**16—**

**சி.டி.டி. பணத்தை அஞ்சல் அலுவலகத்தில் செலுத்துதல்**

வினா 14433—**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் நகராட்சி துப்புரவுப் பணியாளர்களிடமிருந்து 1996 ஜனவரி மாதம் முதல் பிடித்தம் செய்த C.T.D. பணம் அஞ்சல் அலுவலகத்தில் 1997 டிசம்பர் மாதம் வரை செலுத்தாமையால் ஊழியர்களுக்கு வட்டி நட்டம் ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில்; சம்பந்தப்பட்டவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சியின் துப்புரவுப் பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்பட்ட தொகை அஞ்சல் அலுவலகப் புத்தகங்களுடன் உரியவர்களுக்குத் திருப்பி

வழங்கப்பட்டுவிட்டது. மேலும் பிடித்தம் செய்த தொகையை உரிய நேரத்தில் அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தாததற்காக சம்பந்தப்பட்ட எழுத்தர் மீது வேலூர் நகராட்சி ஆணையரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**17—**

### கடைகள் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

*வினா 14564*—**திரு. சி. ஞானசேகரன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் நகராட்சிக்குட்பட்ட பஸ் ஸ்டாண்டு, சிட்டிங் பஜார், லாங் பஜார், மெயின் பஜார், காந்தி ரோடு, ஆபிசர்ஸ் லைன் ஆகிய இடங்களில் ஆக்கிரமிப்புக் கடைகளால் போக்குவரத்து பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆக்கிரமிப்புகளை அரசு எப்போது அகற்றும்?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சிக்குட்பட்ட பஸ் ஸ்டாண்டு, சிட்டிங் பஜார், லாங் பஜார், மெயின் பஜார், காந்திரோடு ஆகிய இடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் யாவும் உதவி மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் அகற்றப்பட்டன. அதுபோல் ஆபீசர்ஸ லைனிலுள்ள ஆக்கிரமிப்புகள் நெடுஞ்சாலைத் துறையால் அகற்றப்பட்டுவிட்டன.*

**18—**

### வைகை அணையிலிருந்து இணைப்புக் கால்வாய் மூலம் தண்ணீர் விடுதல்

*வினா 19984*—**திரு. பி. என். வல்லரசு:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) உசிலம்பட்டிக்கு குடிநீர் வரும் பேரணை கிணற்றில், வைகை அணையிலிருந்து இணைப்புக் கால்வாய் மூலம் ஆண்டு முழுவதும் தண்ணீர் விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

*விடை—*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்*

*(ஆ) அரசு ஆணை எண் 227/பொ.ப.து./ நாள் 16-3-96-ல் 450 மில்லியன் கன அடி தண்ணீர் இணைப்புக் கால்வாயிலிருந்து பேரணைக்கு மேல் பக்கமாக அமைந்த/அமைய உள்ள 8 குடிநீர்த் திட்ட தலைமைப் பணியிடங்களுக்குக் கொடுக்க ஆணை வழங்கப்பட்டது. இதனடிப்படையில், ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு இதன் தொடர்பான பணிகள செய்ய ரூ. 98 இலட்சத்திற்கான மதிப்பீடு வாரியத்தினால் வாரிய ஆணை எண் 491 நாள் 28-10-97-ல் அனுமதியளிக்கப்பட்டது. வருடம் முழுமையும் இணைப்புக் கால்வாயில் அரசு ஒதுக்கிய அளவு நீர் எடுக்க இயலாமையால், இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. எனவே, அரசு ஒதுக்கீடான 450 மி.க. அடி நீரை, வைகை அணையின் அருகிலேயே பெற்று தற்போது மதுரை குடிநீர்த் திட்டச் சுத்திகரிப்பு நிலையம் அமையப் பெற்ற பண்ணைப்பட்டியிலேயே சுத்திகரிப்பு செய்து நேரடியாக குழாய் மூலம் 8 குடிநீர்த் திட்டங்களுக்கான தலைமை நீரேற்று நிலையங்களுக்குக் கொண்டுவர முடிவு செய்யப்பட்டது. 450 மில்லியன் கன அடி நீரை வைகை அணையின் அருகிலேயே எடுத்துக்கொள்ள பொதுப்பணித் துறையின் அனுமதி வேண்டப்பட்டுள்ளது. பொதுப்பணித் துறையின் அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, திட்டம் செயலாக்கப்படும்.*

**19—**

### ஆழ்குழாய் கிணற்றுக்கு நீர்மூழ்கி மின் மோட்டார் இணைத்தல்

*வினா 22362*—**திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[1999 மார்ச் 26

(அ) திருப்பூர், தொறவலூர் ஊராட்சி, டி. ஆண்டிப்பாளையம் ஆதிதிராவிடர் காலனிக்கு, குடிநீர் விநியோகம் செய்யும் ஆழ்குழாய்க் கிணற்றுக்கு நீர்மூழ்கி மின் மோட்டார் இணைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், தொறவலூர் ஊராட்சி டி. ஆண்டிப்பாளையம் ஆதிதிராவிடர் காலனிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் ஆழ்குழாய்க் கிணற்றில் ஊராட்சிமன்றத் தீர்மானத்தின்படி ஏற்கெனவே ஒரு கம்ப்ரஸர் மோட்டார் பொருத்தப்பட்டு நல்ல முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால், நீர்மூழ்கி மோட்டார் பொருத்த அவசியம் ஏற்படவில்லை.

**20—**

**காய்கறி உற்பத்தியை அதிகரித்தல்**

வினா 15880—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை பகுதியில் காய்கறி உற்பத்தியை அதிகரிக்கவும், அவைகளைப் பாதுகாக்கக் குளிர்சாதன அறையும் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டை பகுதியில் காய்கறி உற்பத்தியை அதிகரித்திட தோட்டக்கலைத் துறை மூலம் தென்காசியை தலைமையிடமாகக் கொண்டு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் அனைத்து காய்கறி விதைகளும் 5 சத மானிய விலையில் விவசாயிகளுக்கு வருடந்தோறும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளைப் பாதுகாக்க தனியார் மற்றும் அரசுத் துறையில் குளிர்சாதனக் கிடங்குகள் தற்போது எதுவுமில்லை. மேலும் குளிர்சாதன அறை அமைக்கும் திட்டம் அரசிடம் தற்சமயம் ஏதுமில்லை.



(ஆ) எழவில்லை.

**21—**

**புஞ்சை நிலத்தில் பருத்தி, பயிர் வகைகள் விதைத்தல்**

வினா 18539—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் புஞ்சை நிலத்தில் வறட்சியைத் தாங்கி வளரக் கூடிய பருத்தி, பயிர் வகைகளை வளர்க்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மானாவாரிப் பயிராக எல்.ஆர்.ஏ. 5166, கே.10, கே.11, பையர் 1, எம்சிய 10 ஆகிய பருத்தி ரகங்கள் பயிரிடப்படுகின்றன. இவை ஓரளவு வறட்சியைத் தாங்கி நல்ல மகசூல் கொடுக்கக்கூடியது. எனினும் எல்.ஆர்.ஏ. 5166 பருத்தி, மானாவாரிப் பருவத்தில் வறட்சியைத் தாங்கி அதிக மகசூலைத் தருவதால் பருத்தி விவசாயிகள் இந்த இரகத்தினை விரும்பி பயிர் செய்கின்றனர்.

(ஆ) தமிழ்நாட்டில செப்டம்பர்-நவம்பர் மாதங்களில் மானா வாரியாக ராமநாதபுரம், தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி, தேனி, மதுரையில் ஒரு பகுதி, திண்டுக்கல், சிவகங்கை, சேலம், நாமக்கல், திருச்சியில் ஒரு பகுதி, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் பருத்தி அதிக பரப்பளவில் பயிரிடப்படுகிறது. தமிநாட்டில் பருத்தி 2.50 இலட்சம் ஹெக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் சுமார் 1.50 இலட்சம் ஹெக்டர் மானாவாரியாகவும், 1.00 லட்சம் ஹெக்டர் இறவைப்

[1999 மார்ச் 26

பயிராகவும் சாகுபடி செய்யப்படுகிறது. வேளாண்மைத் துறையின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மானாவாரி சாகுபடியில் 10 விழுக்காடும், இறவையில் 15 விழுக்காடு பகுதிக்கும் 375.00 மெ.டன் சான்றுவிதை விநியோகம் செய்யப்படுகிறது.

22—

**விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசன வசதி செய்தல்**

வினா 18547—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர், பக்கநாடு பகுதியில் தென்னை பயிரிடும் விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப்பாசன வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்திற்கு 1998-99 நிதி ஆண்டிற்கு சொட்டு நீர்ப் பாசனப் பணிக்காக ரூ.20.00 இலட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையில் 80 ஹெக்டர் நிலப்பரப்பிற்கு மேலாக சொட்டு நீர்ப்பாசனப் பணி அமைக்க இயலும். எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர், பக்கநாடு பகுதி தென்னை சாகுபடி விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசன வசதி கோரி சேலம் செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களுக்கு விண்ணப்பித்தால், வரிசைகிரமப்படி அவர்களின் முறை வரும்போது சொட்டு நீர்ப்பாசன வசதி அமைத்துத் தரப்படும்.

23—

**கால்வாய் சீரமைத்தல்**

வினா 9994—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1999 மார்ச் 26]

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை ஒன்றியம், தெற்குமேடு, சின்னக்குற்றாலம் கால்வாய் வெள்ளத்தால் மணல் மேவியதை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சின்னக்குற்றாலம் கொடைக்கல் கால்வாயில் 0 முதல் 855 மீ. வரை மணல் மேடிட்ட பகுதிகளை அகற்றி பழுதடைந்த கால்வாய்க் கரைகளில் தடுப்புச்சுவர் கட்டப்பட்டு மராமத்துப் பணிகள் 9/97-ல் முடிக்கப்பட்டு கால்வாய் சீரமைக்கப்பட்டுள்ளது.

24—

**பேருந்தை மீண்டும் இயக்குதல்**

வினா 8182—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தென்காசி தொகுதி, பாவூர்சத்திரத்திலிருந்து கடையம் சென்று கொண்டிருந்த பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடத்தில் 15-7-1997 முதல் ஒரு நகரப் பேருந்து பாவூர் சத்திரம்-கடையத்திற்கு 10 சுற்றுகள் கூடுதலாகச் செல்லும்படி இயக்கப்பட்டு வருகிறது.

25—

### மாணவியர் பள்ளி செல்ல பேருந்து

வினா 9479—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புளியறையிலிருந்து செங்கோட்டைக்கு காலை 9 மணிக்கு மாணவ மாணவியர் பள்ளி செல்ல வசதியாக பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) கோரிக்கை வழித்தடத்தில் 8.55 மணிக்கு பேருந்துத் தடம் எண் 11 இயக்கப்பட்டு வருவதால் 9.00 மணிக்கு கூடுதலாகப் பேருந்து இயக்க அவசியம் எழவில்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

26—

### அரசுப் பேருந்தை மீண்டும் இயக்குதல்

வினா 20399—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியிலிருந்து கோனேரிப்பட்டி, சிலுவம்பாளையம், மோளப்பாறை வழியாக பூலாம்பட்டி வரை செல்லும் நெ.8 என்ற அரசுப் பேருந்து நிறுத்தப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி முதல் பூலாம்பட்டி வரை இயக்கப்பட்டு வந்த தடம் எண் 8, சாலைப் பழுதின் காரணமாக காட்டூருக்கு 1 கி.மீ. முன் நெடுங்குளத்திலிருந்து பூலாம்பட்டி வரை 31-12-1993 முதல் இயக்கப்படுவதில்லை. எடப்பாடியில் இருந்து நெடுங்குளம் வரை தற்போது இயக்கப்பட்டு வருகிறது.



27—

### பேருந்து இயக்குதல்

வினா 21641—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையிலிருந்து உஞ்சியவிடுதிக்கு லெட்சுமிபுரம், சின்ன அம்மங்குடி, கல்விராயன் விடுதி, காரியாவிடுதி, ஊரணிபுரம் வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கைத் தடத்தில் காரியாவிடுதி முதல் கல்விராயன்விடுதி வரை சாலை பேருந்து இயக்கும் நிலையில் இல்லாததால் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

28—

### விளார் வழியாக பேருந்து இயக்குதல்

வினா 21752—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், விளார் ஊராட்சிக்கு நகரப் பேருந்து தடம் எண் 22 முன்பு இயங்கி வந்ததுபோல் அனைத்து நடைகளும் விளார் வழியாக மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் நகரத் தடம் எண் ஏ-22-ல் முன்பு இயக்கப்பட்டது போலவே நான்கு நடைகள் விளார் வழியாக ஒரத்தநாடு வரை இயக்கப்பட்டு வருகிறது. மேலும், தடம் எண் ஏ 54-ல் 24 நடைகளும்,

[1999 மார்ச் 26

தடம் எண் 478-எல் என்ற புதிய வழித்தடப் பேருந்து மூலம் விளார் வழியாக நான்கு நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, கூடுதல் நடைகள் இயக்க சாத்தியக்கூறு இல்லை.

**29—**

**நகரப் பேருந்துகள் கூடுதலாக இயக்குதல்**

*வினா 21931*—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரத்திலிருந்து பாபநாசம் செல்லும் பள்ளி/மாணவ மாணவியருக்கு வசதியாக கூடுதலாக இரண்டு நகரப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) அம்பாசமுத்திரத்திலிருந்து பாபநாசம் செல்லும் பள்ளி மாணவ/மாணவியருக்கு வசதியாக தற்போது 4 நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் ஒரு நகரப் பேருந்து "மகளிர் மட்டும்" என மாணவியரின் நலன் கருதி இயக்கப்பட்டு வருகிறது. மேலும், பயணிகளின் விகிதாச்சாரம் குறைவாக இருப்பதால் கூடுதலாக நகரப் பேருந்துகள் இயக்க அவசியம் ஏற்படவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**30—**

**பேருந்துகளில் இருக்கை வசதி**

*வினா 21946*—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேருந்துகளில் ஊனமுற்றோர் இருக்கை போன்று முதியோர் இருக்கை, கைக்குழந்தையோடும் வரும் மகளிர்க்கு இருக்கை என குறிப்பிட்டு இடம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி போக்குவரத்துத் துறை அமைச்சர்.**



1999 மார்ச் 26]

பெண்கள் வரிசையில் 12 இருக்கைகள் தவிர பின்புறம் உள்ள 6 இருக்கைகள் மகளிரின் பயண வசதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே கைக்குழந்தையோடு வரும் மகளிர்க்கு என தனியாக இருக்கைகள் ஒதுக்கத் தேவையில்லை. மனிதாபிமான முறையில் அவ்வாறு கைக்குழந்தையுடன் வரும் மகளிர் மட்டுமல்லாது ஆண்களும் கைக்குழந்தையுடன் வந்தால், சக பயணிகள் எழுந்திருந்து இருக்கைகள் கொடுக்கும் வழக்கம் காணப்படுகிறது. முதியோருக்காக ஆண்கள் வரிசையில், அதாவது வலப்புறம் முன்பகுதியில் இரு இருக்கைகளும், அதுபோன்று பெண்கள் வரிசையில் இடப்புறம் முன் பகுதியில் இரு இருக்கைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

**31—**

**ஆண் — பெண் இருக்கைகள்**

*வினா 21948*—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேருந்துகளில் ஆண்-பெண் என்று அமரும் இடம் குறிப்பிடாமல் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம வாய்ப்பு தந்து பேதமின்றி செய்ய அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

பொதுவாக பேருந்துகளில் பெண்கள் அமர்ந்து பயணம் செய்ய ஒரு பகுதி இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள இருக்கைகள் யாவும் பொது இருக்கைகளாகவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போது இந்தப் பொது இருக்கைகளில் ஆண்—பெண் இருபாலரும் அமர்ந்து பயணம் செய்யலாம்.

**32—**

**வட்டாரப் போக்குவரத்துக் கழகத்திற்கு அலுவலகம் கட்டுதல்**

*வினா 21961*—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்துக் கழகத்திற்கு (ஆர்.டி.ஓ) அலுவலகம் இல்லாது இருப்பதினை அரசு அறியுமா?

[1999 மார்ச் 26

(ஆ) ஆம் எனில், அதற்கென ஒரு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்ட சங்ககிரியிலுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்திற்குச் சொந்த கட்டடம் கட்ட சங்ககிரி வட்டம் ஐவேலி கிராமத்தில் புல எண் 77/1-ல் உள்ள 0-60-0 ஹெக்டேர் நிலத்தில் குட்டைபுறம்போக்கில் தற்போது புதிதாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ள புல எண் 77/7-ல் 0-40-5 ஹெக்டேர் நீர்வழிப் புறம்போக்கு நிலத்தினை இத்துறைக்கு நிலமாற்றம் செய்ய கருத்துரு பரிசீலனையில் உள்ளது. நிலத்தை கையகப்படுத்தியபின் அரசின் நிதிநிலைக்கேற்ப கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

33—

### நகரப் பேருந்து கூடுதலாக இயக்குதல்

வினா 21965—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து மாரியம்மன் கோவில் வரை ஒரு நகரப் பேருந்து கூடுதலாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர்-அம்மாபேட்டை தடத்தில் மாரியம்மன் கோவில் வழியாக கழக நகரப் பேருந்துகள் மூலம் 220 நடைகளும், தனியார் நகரப் பேருந்துகள் மூலம் 72 நடைகளும் மொத்தம் 292 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், தஞ்சாவூர் புதியப் பேருந்து நிலையத்திலிருந்து புறநகர்ப் பேருந்துகளும் இப்பிரதான சாலையில் அதிக அளவில் மாரியம்மன் கோவில் வழியாக இயக்கப்படுகின்றன. மேலும், விழாக் காலங்களில் மாரியம்மன் கோவிலுக்கு தேவைக்கேற்ப



1999 மார்ச் 26]

சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, தஞ்சாவூர் பழையப் பேருந்து நிலையத்திலிருந்து மாரியம்மன் கோவில் தடத்தில் கூடுதலாக நகரப் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

34—

### பேருந்து வசதி

வினா 22051—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி முதல் ஒட்டப்பட்டி, வேம்பனேரி வழியாக சேலம் வரை பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

குறிப்பிட்ட வழித்தடத்தில் ஒரு புறநகர் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

35—

### பேருந்து வசதி செய்தல்

வினா 22053—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஆகிய ஊர்களுக்கு மற்ற கிராமப் பகுதிகளிலிருந்து மாணவர்கள் வந்து செல்ல வசதியாக பேருந்து வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சுற்றுப்புற கிராமங்களிலிருந்து பள்ளி மாணவ, மாணவியர்கள் எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி ஆகிய ஊர்களுக்கு வந்து செல்ல வசதியாக எடப்பாடி கிளையிலிருந்து 30 நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அதுவே போதுமானதாக உள்ளது.

[1999 மார்ச் 26

36—

## பேருந்து இயக்குதல்

வினா 22054—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி முதல் சங்ககிரி, தேசிய நெடுஞ்சாலை வழியாக கோவை வரை செல்ல ஒரு அரசுப் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடியிலிருந்து கோவை செல்ல பகுதிவாரியாக போதுமான பேருந்து வசதியுள்ளது. எனவே வினாவில் கேட்டுள்ளவாறு பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

37—

## ஒகேனகல்லுக்கு அரசுப் பேருந்து விடுதல்

வினா 22055—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடியிலிருந்து ஜலகண்டபுரம், வனவாசி, தொப்பூர், தர்மபுரி, காவேரிப்பட்டணம் வழியாக ஓகேனகல்லுக்கு ஒரு அரசுப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ள தடத்தில் பகுதிவாரியாக போதுமான பேருந்து வசதியுள்ளது. மேலும் மேற்கண்ட தடம் சேலம் கோட்டம் 2-ன் எல்லையைச் சார்ந்துள்ளதால், சேலம் கோட்டம் 1-ஆல் ஒரு பேருந்து இயக்கப்பட்டால் கோட்டம் 2-ஆல் ஒரு பேருந்து இயக்கப்பட வேண்டும். இரண்டு பேருந்துகள் இயக்குமளவிற்கு பயணிகள் போக்குவரத்து இல்லை. எனவே, மேற்கண்ட வழித்தடத்தில் பேருந்து இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.



1999 மார்ச் 26]

38—

## சோழமண்டலம் கலாச்சார மையம்

வினா 17328—**திரு. அவை. அப்துல் நாசர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னைக்கு அருகிலுள்ள நுண்கலைக் கிராமமான சோழமண்டலம் கலாச்சார மையத்திற்கு அரசு எத்தகைய உதவிகளை வழங்கியுள்ளது?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

சென்னைக்கு அருகில் ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள சோழமண்டலம் கலைஞர்கள் கிராமத்தைச் சார்ந்த நுண்கலைக் கலைஞர்கள், கலைக்காட்சி, கருத்தரங்கு, கலைப்பட்டறை போன்ற நிகழ்ச்சிகள் நடத்துவது தொடர்பாக நிதியுதவி வழங்க கோரிக்கை மனுக்கள் அனுப்பும்போது, அவர்களுக்கு நிதியுதவி ஓவிய நுண்கலைக் குழு மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. சோழமண்டலம் கலைஞர்கள் கிராமம் தொடங்கி 20 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி 1987 பிப்ரவரித் திங்களின்போது, சோழமண்டலம் கலைஞர்களின் கலைப் படைப்புகள் அடங்கிய கலைக் காட்சியை பம்பாயிலுள்ள ஜஹாங்கீர் ஆர்ட் காலரியில் நடத்துவதற்காக ரூ. 16,000-மும் கலைத் திறனாய்வாளர் பேராசிரியர் ஜோசப் ஜேம்ஸ் அவர்களால் தொகுக்கப்பெற்ற "Contemporary Indian Sculpture-The Madras Metaphor" என்ற தலைப்பிட்ட நூல் வெளியிட நிதியுதவியாக ரூ.10,000-மும் சோழமண்டலம் கலைஞர்கள் கிராமத்தில் கலைக்காட்சி, கருத்தரங்கு கலைப்பட்டறை போன்ற நுண்கலை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதற்காக ரூ.14,000-மும் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளன.

39—

## திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு தமிழக அரசு நிதி

வினா 22389—**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திராவிலுள்ள திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு தமிழக அரசின் சார்பில் ரூ.50 இலட்சம் நிதி வழங்கப்பட்டதே, அதன் பணிகள் தொடங்கப்பட்டு விட்டனவா?

(ஆ) திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளதா?

விடை—

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தொடங்கப்பட்டுவிட்டது.

(ஆ) மைய அரசின் அனுமதி பெறும் நிலை இல்லை. பல்கலைக் கழக நல்கைக் குழுவின் அனுமதி மட்டுமே பெற வேண்டும்.

**40—**

**நியாயவிலைக் கடை அமைத்தல்**

வினா 9486—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, செங்கோட்டை ஒன்றியம், கற்குடி அல்லது வேம்பநல்லூரில் நியாயவிலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, செங்கோட்டை ஒன்றியம், கட்டளை குடியிருப்பு கிராமத்தில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் நடத்தப்பட்டுவரும் அமுதம் நியாயவிலைக் கடையிலிருந்து கற்குடி கிராமத்தைச் சேர்ந்த 200 குடும்ப அட்டைகளையும், கூட்டுறவுத் துறையால் நடத்தப்பட்டு வரும் கேசவபுரம்



நியாயவிலைக் கடையிலிருந்து கற்குடி கிராமத்தில் 60 குடும்ப அட்டைகளையும் தனியாகப் பிரித்து மொத்தம் 260 குடும்ப அட்டைகளுடன் கற்குடியில் புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் திறக்கப்பட்டு 7-8-1998 முதல் செயல்பட்டு வருகிறது.

**41—**

**நெல் கொள்முதல் மையம் அமைத்தல்**

வினா 15879—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சுரண்டையில் நெல் கொள்முதல் மையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஒவ்வோர் ஆண்டும், காவிரிப் பாசனப் பகுதிகளான தஞ்சை, நாகை, திருவாரூர், கடலூர், புதுக்கோட்டை, திருச்சி, பெரம்பலூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் அரசு ஆணைப்படி நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. காவிரிப் பாசனம் அல்லாத பிற மாவட்டங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பது பற்றி அந்தந்த மாவட்டங்களில் நெல் விளைச்சலைப் பொறுத்தும் அரசு கொள்கை முடிவின்படியும் முடிவு எடுக்கப்படும்.

**42—**

**கூட்டுறவுப் பயிற்சி நிலையம் ஆரம்பித்தல்**

வினா 20567—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம் பெண்ணாகரத்தில் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

**43—**

**பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்**

வினா 19874—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரத்தில் கூட்டுறவுப் பால் நிலையத்தில் புதிதாக ஒரு பால் குளிரூட்டும் நிலையத்தை அரசு அமைக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரம் பகுதியில் உற்பத்தியாகும் பாலின் அளவு குறைவாக உள்ளதால் கொங்கணாபுரத்தில் ஒரு புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**44—**

**சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்தல்**

வினா 13456—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டம், 1989-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை விரைவில் விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டம், 1989-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை விசாரிக்க ஏற்கெனவே மதுரை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர மாநிலத்தில் மற்ற மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றங்கள்/அமர்வு நீதிமன்றங்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டம், 1989-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்களாக அறிவிக்கப்பட்டு அரசால் ஏற்கெனவே அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

**45—**

**பத்திரப் பதிவு செய்தல்**

வினா 20103—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்திரப்பதிவு செய்யும்போது கிராம நிர்வாக அதிகாரியிடமிருந்து சான்று கோருவதால் ஏற்படும் முறைகேடுகளைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

பத்திரப் பதிவு செய்யும்போது கிராம நிர்வாக அதிகாரியிடமிருந்து சான்று ஏதும் பெறத் தேவையில்லை.

**46—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

வினா 19862—**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1999 மார்ச் 26

தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், குருங்குளம் கிழக்கு கிராமத்தில், ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

**47—**

### கால்நடை மருத்துவமனைக் கட்டடம் புதுப்பித்தல்

வினா 19971—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், இடைப்பாடி நகரில் அமைந்துள்ள கால்நடை மருத்துவமனை செயல்படமுடியாத அளவிற்கு பழுதடைந்து பல ஆண்டுகளாக வேறு வாடகைக் கட்டடத்தில் இயங்குவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம், நிதிநிலையைப் பொறுத்து கட்டடம் புதுப்பிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

**48—**

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

வினா 20613—**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், நெ.14 பம்மதுகுளம் ஊராட்சியைச் சேர்ந்த இலட்சுமிபுரத்தில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?



1999 மார்ச் 26]

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தற்போது அரசிடம் எவ்வித செயற்குறிப்பும் இல்லை.

**49—**

### மயானமும், மயானப் பாதையும் அமைத்தல்

வினா 6217—**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், குற்றாலம் கிராமம் காசிமேஜர்புரம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனியாக மயானமும், மயானப்பாதையும் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், காசிமேஜர்புரம் ஆதிதிராவிடர்களுக்கு குற்றாலம் கிராமத்தில் நில எடுப்பு செய்யப்பட்டு மயானம் அமைக்கப்பட்டுவிட்டது. தற்போது மேற்படி மயானத்திற்குச் செல்ல பயன்படுத்தி வரும் பாதையையே தொடர்ந்து பயன்படுத்தி வரலாம். எனவே, தனியாக பாதை அமைத்திட வேண்டியதில்லை.

**50—**

### கூடை முடைவோர்க்குச் சங்கம்

வினா 20840—**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கூடை முடைவோர்க்கு என்று சங்கம் செயல்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அச்சங்கத்திலுள்ள உறுப்பினர்களுக்கு அரசு என்னென்ன உதவி செய்து வருகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் பரநாட்டாமங்கலத்தில் கூடைமுடைவோர் கூட்டுறவுச் சங்கம் 11-5-1947 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) சங்கத்திலுள்ள உறுப்பினர்களுக்கு அரசிடமிருந்து எந்தவிதமான உதவியும் வழங்கப்படவில்லை. இச்சங்கத்தில் கடந்த 5 ஆண்டுகளில் ரூ. 58,000-க்கு உற்பத்தியும் ரூ. 64,000-க்கு விற்பனையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விளிம்புத்தொகை நிதியுதவித் திட்டத்தின் கீழ் இச்சங்கம் நிதியுதவி ஏதும் கோரவில்லை.

## 2. முன்பண மானியக் கோரிக்கைகள், 1999 -2000, பேரவையில் வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1999-2000 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்.

1999-2000 ஆம் ஆண்டு உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்.

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| (1) | (2) |
| அ. வருவாய்க் கணக்கில் செலவு— | |
| 1. நில வருவாய்த் துறை | 3,25,16 |
| 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 3,69,15 |
| 3. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 5,69,08 |
| 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்-நிருவாகம் | 24,89,23 |

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) |
|---|---|
| (1) | (2) |
| 5. முத்திரைத் தாள்கள்-நிருவாகம் | 2,54,89 |
| 6. ஆவணப் பதிவு | 10,96,10 |
| 7. மாநிலச் சட்டமன்றம் | 2,56,66 |
| 8. தேர்தல்கள் | 1,78,12 |
| 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 36,77,17 |
| 10. பால் வழங்கு செயல் திட்டங்கள் | 6,55,49 |
| 11. மாவட்ட நிருவாகம் | 1,22,47,98 |
| 12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 5,47,73 |
| 13. நீதி நிருவாகம் | 30,49,58 |
| 14. சிறைச்சாலைகள் | 14,13,50 |
| 15. காவல் துறை | 2,00,53,28 |
| 16. தீயணைப்புப் பணிகள் | 15,45,11 |
| 17. கல்வி | 10,36,00,15 |
| 18. மருத்துவம் | 1,57,42,17 |
| 19. மக்கள் நல்வாழ்வு | 1,05,32,51 |
| 20. வேளாண்மை | 1,89,61,01 |
| 21. மீனளம் | 12,15,89 |
| 22. கால்நடை வளர்ப்பு | 39,44,84 |
| 23. கூட்டுறவு | 12,78,63 |
| 24. தொழில்கள் | 4,06,13 |
| 25. கைத்தறியும் துணித் தொழிலும் | 49,22,05 |
| 26. கதர் கிராமத் தொழில்கள் | 5,23,31 |
| 27. ஊரக வளர்ச்சி | 3,06,43,26 |
| 28. தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | 24,66,31 |
| 29. சமூக நலன் | 1,39,64,40 |
| 30. பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலம் | 83,64,70 |

அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி

| கோரிக்கை (1) | (ரூபாய் ஆயிரத்தில்) (2) |
|---|---|
| 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் | 26,69,24 |
| 32. வீட்டுவசதி | 26,08,84 |
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி | 2,66,41 |
| 34. நுகர்பொருள் வழங்கல் | 2,91,88,62 |
| 35. பாசனம் | 1,26,09,61 |
| 36. பொதுப் பணிகள், கட்டடங்கள் | 28,84,45 |
| 37. சுற்றுச் சூழல் | 2,89,60 |
| 38. சாலைகளும் பாலங்களும் | 1,59,73,97 |
| 39. சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 5,13,07 |
| 40. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 17,93,63 |
| 41. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 4,70,34,01 |
| 42. பல்வகை | 1,14,57,64 |
| 43. எழுதுபொருள் அச்சுத்துறை | 13,71,93 |
| 44. காட்டுவளத் துறை | 36,89,71 |
| 45. இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் | 19,67,09 |
| 46. செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் | 4,29,35 |
| 47. ஊரகத் தொழில்கள் | 22,17,15 |
| 48. குடிநீர் வழங்கல் | 54,53,38 |
| 49. நகராட்சி நிருவாகம் | 1,25,91,04 |
| 50. சுற்றுலா | 81,89 |
| 51. தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 7,65,38 |
| மொத்தம்-அ. வருவாய்க் கணக்கில் செலவு | **42,11,49,65** |



ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—

| கோரிக்கை (1) | (ரூபாய் ஆயிரத்தில்) (2) |
|---|---|
| 52. வேளாண்மை குறித்த மூலதனச்செலவு | 2,88,65 |
| 53. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 4 |
| 54. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 1,33,79,75 |
| 55. பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 70,94,36 |
| 56. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதன செலவு | 1,80,67,12 |
| 57. சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 25,01,09 |
| 58. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 36,68,37 |
| 59. ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 31,57 |
| 60. பல்வகை மூலதனச் செலவு | 75,26,79 |
| மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | **5,25,57,74** |

இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்—

| | |
|---|---|
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 97,07,42 |
| பெருமொத்தம் | **48,34,14,81** |

## 3. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 1998-1999 அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1998-99 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின்முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூபாய் 1050 கோடியே 34 இலட்சம் நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில், ரூபாய் 941 கோடியே 27 இலட்சம், வருவாய்க் கணக்கிலும், ரூபாய் 109 கோடியே 7 இலட்சம் மூலதனம் மற்றும் கடன் கணக்குகளிலும் அடங்கும்.

2. இந்த மானியக் கோரிக்கைகளில் இடம் பெறுகின்ற சில முக்கியமான திட்டங்கள், திட்டப்பணிகள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

3. "மானியக் கோரிக்கை 15 - காவல்" என்பதன்கீழ் பயனற்றதென்று ஒதுக்கப்பட்ட வண்டிகளுக்குப் பதிலாக புதிய மோட்டார் வண்டிகள் வாங்குவதற்காக ரூபாய் 14 கோடியே 24 இலட்சம் இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. மாணவர்களுக்கு இலவச அனுமதிச் சீட்டு வழங்கும் திட்டத்தின்கீழ் அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செலவை ஈடுசெய்வதற்குக் கூடுதலாக ரூபாய் 25 கோடி தேவைப்படுகிறது. இத்தொகை, இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 17 - கல்வி" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

5. தோட்டக்கலைப் பயிர்களுக்காக சொட்டுநீர்ப் பாசனத் திட்டத்திற்கு ரூபாய் 11 கோடியே 55 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை, இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 20 - வேளாண்மை" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

6. கோ-ஆப்டெக்ஸ் மற்றும் தொடக்கக் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு தள்ளுபடி மானியம் வழங்க கூடுதலாக



ரூபாய் 17 கோடியே 31 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை, இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 25 - கைத்தறியும் துணித் தொழிலும்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

7. "நமக்கு நாமே" திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூபாய் 4 கோடி கூடுதல் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்தொகை, இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 27 - ஊரக வளர்ச்சி" என்பதன் கீழ்சேர்க்கப்பட்டுள்ளது.

8. "மானியக் கோரிக்கை 29 - சமூக நலன்" என்பதன்கீழ் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்திற்காக ரூபாய் 10 கோடி கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் நடப்பு நிதி ஆண்டில், ஓய்தியம் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 100-லிருந்து ரூபாய் 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காக, ரூபாய் 35 கோடியே 74 இலட்சம் கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இவை இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

9. மழையினால் ஏற்பட்ட இழப்பீடுகள், சாலை பழுதுபார்த்தல் போன்ற பணிகளுக்காக "மானியக் கோரிக்கை 40 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 48 கோடியே 52 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

10. ஊரகக் குடிநீர் வழங்கு திட்டங்களுக்காக ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் வழங்கிய கடன்களைத் திருப்பிச் செலுத்த தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குக் கூடுதலாக ரூபாய் 8 கோடியே 87 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை, இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 48 - குடிநீர் வழங்கல்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

11. கரும்பு வழங்கிய விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டிய கரும்பு விலை பாக்கிக்காக கூட்டுறவு கரும்பு ஆலைகளுக்கு வழி வகை முன்பணமாக அரசு ரூபாய் 76 கோடியே 41 இலட்சம் அனுமதித்துள்ளது. இந்தத் தொகை, துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை 61 - மாநில அரசு வழங்கும் கடன்களும் மூலதனங்களும்" என்பதன்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

12. அரசு வாங்கிய கடன்களுக்கு வட்டி செலுத்துவதற்காக கூடுதலாக ரூபாய் 85 கோடியே 75 இலட்சம் "கடன் செலவுகள்" என்பதன்கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 மார்ச் 26

13. அரசு அலுவலர்களுக்குக் கூடுதல் ஊதியம், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு மருந்துகள் போன்ற இனங்களுக்கு “மானியக் கோரிக்கை 11 - மாவட்ட நிருவாகம்” என்பதன்கீழ் ரூபாய் 33 கோடியே 94 இலட்சமும், “மானியக் கோரிக்கை 15 - காவல் துறை” என்பதன்கீழ் ரூபாய் 54 கோடியே 90 இலட்சமும், “மானியக் கோரிக்கை 17 - கல்வி” என்பதன்கீழ் ரூபாய் 121 கோடியே 90 இலட்சமும், “மானியக் கோரிக்கை 18 - மருத்துவம்” என்பதன்கீழ் ரூபாய் 35 கோடியே 30 இலட்சமும், “மானியக் கோரிக்கை 19 - மக்கள் நல்வாழ்வு” என்பதன் கீழ் ரூபாய் 49 கோடியே 95 இலட்சமும் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

14. இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் குறித்து நான் இங்கு மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும் மற்றும் ஏனைய இனங்கள் குறித்தும் உரிய முழு விவரங்கள் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம் பெற்றுள்ளன.

15. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வணக்கம்.

## 1998-99 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் |
|---|---|
| (1) | (2) |
| அ. வருவாய்க் கணக்கில் செலவு | |
| 2. மாநில ஆயத் தீர்வைத் துறை | 5,32,07 |
| 3. இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 2,86,17 |
| 4. பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்-நிருவாகம் | 10,90,65 |
| 5. முத்திரைத்தாள்கள்-நிருவாகம் | 3,76,52 |
| 6. ஆவணப் பதிவு | 4,11,21 |
| 7. மாநிலச் சட்டமன்றம் | 1,30,69 |



1999 மார்ச் 26] [கலைஞர் மு. கருணாநிதி]

| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் |
|---|---|
| (1) | (2) |
| அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி. | |
| 8. தேர்தல்கள் | 1 |
| 9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 6,16,96 |
| 10. பால் வழங்கு செயல் திட்டங்கள் | 34,54 |
| 11. மாவட்ட நிருவாகம் | 44,30,62 |
| 12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்துசமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம் | 1,74,10 |
| 13. நீதி நிருவாகம் | 17,03,64 |
| 14. சிறைச்சாலைகள் | 5,34,00 |
| 15. காவல் துறை | 1,32,38,40 |
| 16. தீயணைப்புப் பணிகள் | 1 |
| 17. கல்வி | 1,69,23,60 |
| 18. மருத்துவம் | 43,09,69 |
| 19. மக்கள் நல்வாழ்வு | 76,22,82 |
| 20. வேளாண்மை | 24,00,76 |
| 21. மீனளம் | 3,22,41 |
| 22. கால்நடை வளர்ப்பு | 8,19,65 |
| 23. கூட்டுறவு | 6,18,02 |
| 24. தொழில்கள் | 2 |
| 25. கைத்தறியும் துணித் தொழிலும் | 37,59,33 |
| 26. கதர்-கிராமத் தொழில்கள் | 10,29,02 |
| 27. ஊரக வளர்ச்சி | 4 |
| 28. தொழிலாளர் நலனும் தொழிற் சாலைகளும் | 2,97,92 |
| 29. சமூக நலன் | 66,78,83 |
| 30. பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் | 39,04,89 |

[கலைஞர் மு. கருணாநிதி] [1999 மார்ச் 26

| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் |
|---|---|
| (1) | (2) |
| அ. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி. | |
| 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் நலன் | 10,34,03 |
| 32. வீட்டுவசதி | 2,95,11 |
| 33. நகர்ப்பகுதி வளர்ச்சி | 1,08,62 |
| 34. நுகர்பொருள் வழங்கல் | 12 |
| 35. பாசனம் | 11,54,23 |
| 36. பொதுப் பணிகள்-கட்டடங்கள் | 12,79,35 |
| 37. சுற்றுச்சூழல் | 2 |
| 38. சாலைகளும் பாலங்களும் | 6,85,38 |
| 39. சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும் | 2,30,43 |
| 40. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 48,52,21 |
| 42. பல்வகை | 17 |
| 43. எழுதுபொருள்-அச்சுத் துறை | 11 |
| 44. காட்டுவளத் துறை | 2,24,40 |
| 46. செய்தி திரைப்படத் தொழில் நுட்பவியல் | 1,92,24 |
| 47. ஊரகத் தொழில்கள் | 2 |
| 48. குடிநீர் வழங்கல் | 13,40,75 |
| 49. நகராட்சி நிருவாகம் | 3 |
| 50. சுற்றுலா | 2,93,52 |
| 51. தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 5,48,79 |
| மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு | 8,44,86,12 |



1999 மார்ச் 26] [கலைஞர் மு. கருணாநிதி]

| கோரிக்கை | ரூபாய் ஆயிரத்தில் |
|---|---|
| (1) | (2) |
| ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | |
| 52. வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 1,32,64 |
| 53. தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 10,61,90 |
| 54. பாசனம் குறித்த மூலதனச் செலவு | 10 |
| 55. பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு | 62,61,53 |
| 56. சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 4 |
| 57. சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 63,14 |
| 58. காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு | 10 |
| 60. பல்வகை மூலதனச் செலவு | 33,07,85 |
| மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு | 1,08,27,30 |
| இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும் | |
| 61. மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் | 30 |
| பெரு மொத்தம் | 9,53,13,72 |

முற்பகல் 9-35

## 4. அறிவிப்பு

### இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 1998-99, மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1998-99* ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானிய கோரிக்கைகளின்மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவற்றை பேரவையின் 190-வது விதிக்கிணங்க 27-3-1999 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்ப்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. சிறப்புக் கவன ஈர்ப்பு

*பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பாக உறுப்பினர் திரு. தாமரைக்கனிக்கு அளிக்கப்பட்ட 15 நாட்கள் சிறைத் தண்டனையை நிறுத்தி வைத்து, ஜாமீனில் அவரை விடுதலை செய்ய உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. ம. அப்துல் லத்தீப், திரு. கே. சுப்பராயன், திரு. ஆர். சொக்கர், திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. ஜி. பழனிசாமி, திரு. இரா. ஆவுடையப்பன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பிற்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள்.

"Judgement delivered on 25-3-1999 by the High Court of Judicature, Madras on the Resolution passed by the Tamil Nadu Legislative Assembly on 24-3-1999."

இதிலே பேசுகின்ற உறுப்பினர்கள் ஏற்கெனவே நான் சொன்னதுபோல் மிகப் பொறுப்புணர்வோடு பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மிகச் சுருக்கமாகப் பேச வேண்டும். இந்தப் பிரச்சினை நம்முடைய மன்றத்தின் அன்றாட நடவடிக்கைகளைப் பாதித்துவிடக் கூடாது என்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். திரு. இரா. ஆவுடையப்பன்.



**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சட்டமன்றத்திற்கும், நீதிமன்றத்திற்கும் இடையிலே இருக்கக்கூடிய இந்தப் பிரச்சினை குறித்துப் பேசுகின்ற நிலையில், சட்டமன்ற அவைத் தலைவர் அவர்கள் அவையிலே நடக்கின்ற ஒரு நிகழ்ச்சியை—அவர் முன்னாலேயே நடக்கின்ற ஒரு நிகழ்ச்சியை பார்க்கின்ற நிலையில்—அந்த நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டவர் இந்த அவையை அவமதிக்கின்ற வகையில், அவையினுடைய உரிமையை மீறுகின்ற வகையில் நடந்து கொள்கின்ற அந்தக் காலக்கட்டத்தில், அவையின் தீர்மானத்தின்படி அவருக்கு 15 நாள் சிறைத் தண்டனை கொடுத்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. சட்டப்படி Article 194-ன்படி இந்த அவையினுடைய மரபை, அவையினுடைய உரிமையை, உறுப்பினர்களுடைய உரிமையைக் காக்கின்ற கடமை அவைத் தலைவர் அவர்களுக்கு இருக்கின்றது. அவையில் ஓர் உறுப்பினர் ஓர் அமைச்சரைத் தாக்குகின்ற அளவிற்கு சட்டத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டு தாக்குகின்ற நிகழ்ச்சிக்கு, அதுவும் அவைத் தலைவர் முன்பாகவே நடைபெறுகின்ற நிகழ்ச்சிக்கு தண்டிக்கின்ற உரிமை, அவைத் தலைவர் அவர்களுக்கு சட்டப்படியாகவே வழங்கப்பட்டிருக்கின்றது. ஜனநாயகத்தின் மூன்று தூண்களானவை Legislature, Executive and Judiciary. இந்த மூன்றும் ஒரு கட்டடத்தினுடைய—democracy என்ற அந்தக் கட்டடத்தினுடைய — மூன்று தூண்களாக இருக்கின்றன. இதில் ஏதாவது ஒரு தூண் பாதிக்கப்படுமேயானால் ஜனநாயகமே பாதிக்கப்படுகின்ற நிலை உருவாகின்றது. ஆனால் Legislature என்பதன் தனித் தன்மையை, இறையாண்மையைப் பாதிக்கின்ற வகையில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்திருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 9-40

நேற்றையதினம் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இங்கே நடைபெற்ற சம்பவம், மூன்று வகையாகப் பிரிக்கப்படலாம். ஒன்று, Contempt; இன்னொன்று Breach of Privilege; மூன்றாவது Criminal assault. இந்த மூன்றுக்கும் தனித்தனியாக தண்டனை வழங்கப்படக்கூடிய நிலையில் இருந்தபோதிலும், இங்கே Breach of Privilege, Contempt ஆகிய இரண்டிற்கும் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்கள் ஒட்டுமொத்தமாக அவையினுடைய தீர்மானத்தை ஏற்று, தண்டனை வழங்கியிருக்கிறீர்கள். ஆனால் Criminal assault என்ற குற்றத்திற்கு இன்னும் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கக்கூடிய நிலை இருந்தபோதிலும், அதற்குத் தாங்கள்

— நீங்களே வழங்கக் கூடிய நிலையில் இருந்தாலும், நீதிமன்றமும் வழங்கலாம் என்ற நிலையில் — நீதிமன்றத்திற்கு அந்தக் குற்றத்தை, அதனுடைய குற்றச்சாட்டை அனுப்பி, அங்கே அவருக்கு தண்டனை கிடைக்கின்ற வகையில் இங்கே தாங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இங்கு இருக்கக்கூடிய Breach of Privilege, Contempt ஆகிய இரண்டும் குறித்த தனித் தன்மை, தனி உரிமை, தனி அதிகாரம் கொண்ட தங்களுடைய ஆணையில் தலையிடுகின்ற நீதிமன்ற உத்தரவை இந்தச் சபையின் மூலமாகக் கண்டிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். இதுபோன்ற எத்தனையோ சம்பவங்கள் எத்தனையோ மாநிலங்களில் நடைபெற்று, அவை உச்ச நீதிமன்றம் வரை சென்று, சட்டமன்றத்தினுடைய தனித் தன்மை, சட்டமன்றத்தினுடைய சுதந்திரம் எந்த வகையிலும் பாதிக்கப்படக்கூடாது என்ற நிலையில் பல வழக்குகளில் தீர்ப்புகள் கூறப்பட்டிருக்கின்றன. அந்த நிலையில் இந்த அவையினுடைய சுதந்திரத்தைக் காக்கின்ற வகையில், உறுப்பினர்களுடைய உரிமையைக் காக்கின்ற வகையில், இந்த அவையினுடைய மரியாதையைக் காக்கின்ற வகையில், தங்களுடைய தீர்ப்பினை நிலை நாட்ட வேண்டும். இந்த அவையினுடைய தனித் தன்மையையும், இறையாண்மையையும் அவைத் தலைவராகிய தாங்கள் காப்பாற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கின்றேன், வணக்கம்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22 ஆம் தேதி மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் தன்னுடைய அருவருக்கத்தக்க செயலால் இந்தப் பேரவையைக் களங்கப்படுத்தியிருந்தாலும்கூட, அதற்குப் பிறகு நடக்கின்ற நிகழ்வுகள் ஏற்கெனவே உள்ள நாடாளுமன்ற மரபுகளை நமக்கு நினைவூட்டவும் அந்த மரபுகளை நிலை நிறுத்தவும் ஒரு வாய்ப்பாக இன்று அமைந்து இருக்கின்றது என்று கருதுகின்றேன். அரசமைப்புச் சட்டத்தை இயற்றியவர்கள், அதை ஒரு எலும்புக்கூடாகவே கூறுவார்கள்.

'Constitution is only a skeleton and the framers of the Constitution cannot envisage all the doubts or problems that might arise in the working of the





Constitution. அந்த நேரத்தில்தான் Customs and conventions which form like flesh and blood and that clothe the skeleton of the Constitution evolve'. என்று சொல்வார்கள். எலும்புக்கூடாக இருக்கக்கூடிய அரசமைப்புச் சட்டத்திற்கு, மரபுகளும் சம்பிரதாயங்களும் இரத்தமாகவும் சதையாகவும் அமைகின்றன. அந்த அரசமைப்புச் சட்டத்தை மதிக்க வேண்டும் என்று மக்களுக்கு இருக்கக்கூடிய உணர்வுதான் அதற்கு உயிரூட்டுகின்றது. அந்த அரசமைப்புச் சட்டத்தை 100 கோடி மக்களும் மதிக்கின்ற காரணத்தினால்தான் இன்று ஜனநாயகம் தழைத்தோங்குகின்றது. அந்த அடிப்படையிலேதான் முக்கிய அங்கங்களான சட்டமியற்றும் துறைக்கும் நீதித் துறைக்கும் ஏதோ ஒரு கருத்து வேறுபாடு வந்ததுபோல இன்று இருக்கக்கூடிய தோற்றத்தைக் களையவேண்டிய கடமை நம் அனைவருக்கும் இருக்கின்றது. இதில் யார் பெரியவர், யார் சிறியவர் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவரவருடைய வரைமுறைக்குள் அவரவர் பெரியவர். இந்தப் பேரவைக்கு என்று இருக்கக்கூடிய இறையாண்மையைப் பொறுத்தவரையில் இந்தப் பேரவை பெரிது. நீதித் துறைக்கு இருக்கக்கூடிய இறையாண்மையைப் பொறுத்தவரையில் நீதித் துறை பெரிது.

இது, எந்த இடத்தில் இந்த இரண்டும் பிரிகிறது என்பதைத் தெளிவாக வெளிப்படுத்த இந்த வாய்ப்பு நமக்கு ஏற்பட்டிருக்கின்றது என்றுதான் நான் கருதுகின்றேன். சட்டம் இயற்றும் துறைதான் சட்டத்தை இயற்றுகின்றது. ஆனால், அந்தச் சட்டம், அடிப்படைச் சட்டத்திற்கு மாறாக இருக்குமேயானால் It will be declared mull and void by the Court. அந்த இடத்தில் மாறுபட்ட கருத்து இல்லை. நாம் அதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் அரசமைப்புச் சட்டத்திற்குப் புறம்பானதாக இருக்கின்றது என்று நாடாளுமன்றமோ அல்லது சட்டமன்றமோ ஒரு சட்டத்தை இயற்றிய பிறகு, அதை நிராகரிக்கக்கூடிய நீதிமன்றத்தினுடைய தீர்ப்புக்கு அப்பாலும்கூட, அந்தச் சட்டமன்றமோ அல்லது நாடாளுமன்றமோ அந்தத் தீர்ப்பிலே சுட்டிக்காட்டப்பட்ட குறைகளைக் களைந்து, மீண்டும் அந்தச் சட்டத்தைக் குறையில்லாமல் நிறைவேற்றி அதை அமல்படுத்தக்கூடிய வாய்ப்புகளை எல்லாம் நாம் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கின்றோம். ஆகவே, நீதித் துறை எந்த இடத்தில் தலையிடுகின்றது என்பதைத்தான் இன்று பிரித்துப் பார்க்க வேண்டியிருக்கின்றது. இந்தப் பேரவையினுடைய இறையாண்மையைப் பொறுத்தவரையில், இங்கே இந்த அவைக்கு இருக்கக்கூடிய மரபுகளையும் உரிமைகளையும் மீறுகின்ற செயலில் யாராவது தலையிடுவார்களேயானால், அவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதற்கு இங்கே மரபுகளில் நமக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கின்றது.

(திரு. ஆர். சொக்கர்) [1999 மார்ச் 26

அந்த அடிப்படையில்தான், அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி நடந்துகொண்ட விதத்தை அனைத்துக் கட்சி உறுப்பினர்களும், அனைத்து கட்சித் தலைவர்களும், கண்டித்தோம். இது ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் பெரும்பான்மையாக இருக்கின்றது, மீதி தோழமைக் கட்சிகள் எல்லாம் பெரும்பான்மையாக இருக்கின்றன என்று அவசரத்தில் அளிக்கப்பட்டத் தீர்ப்பு அல்ல.

*முற்பகல் 9-50*

பட்ஜெட் உரையின்போது நடந்துகொண்ட விதத்திற்காக மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்களை ஒரு வார காலம், இந்த அவையிலிருந்து விலக்கி வைத்தபோது எதிர்க்கட்சிகளாக இருக்கக்கூடிய தமிழ் மாநில காங்கிரசும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும்கூட அந்தத் தண்டனை கூடுதலான தண்டனை, அதை ஒரு நாளாகக் குறைத்தால்கூட பரவாயில்லை என்று சொன்னோம். ஆனால், தாமரைக்கனி நடந்துகொண்ட விதத்திற்கு அவருடைய தோழமைக் கட்சிகளாக இருக்கக்கூடிய! பாட்டாளி மக்கள் கட்சியும், பாரதிய ஜனதாக் கட்சியும்கூட அவரைத் தண்டிக்க வேண்டும், அந்தத் தண்டனை நியாயமானதுதான் என்று சொல்லி ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த வித்தியாசத்தை நன்றாகப் பார்க்க வேண்டும். ஏனென்றால், நடைபெற்ற நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் எந்தவிதமான அரசியல் கண்ணோட்டத்துடனும் இதில் யாருமே பார்க்கவில்லை என்பதை இந்த நிகழ்வுகள் தெளிவாக எடுத்துக்காட்டும் என்று கருதுகின்றேன்.

திரு. தாமரைக்கனி செய்த செயலைப் பொறுத்தவரையில் அவர் நடந்துகொண்ட விதத்தால் இந்த அவையினுடைய இறையாண்மை பாதிக்கப்பட்டிருக்கின்றது; அவையினுடைய உரிமை மீறப்பட்டிருக்கின்றது. ஆகவேதான், நீங்கள் அளித்த தீர்ப்பிலேகூட for contempt and breach of privilege என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்றீர்கள். இன்னும் சொல்லப்போனால் சிறைத் துறைக்கு அனுப்பிய அந்த உத்தரவிலேகூட ``..... and now, therefore, I, P.T.R. Palanivel Rajan, the Speaker of Tamil Nadu Legislative Assembly direct that the said Thiru R. Thamaraikani has committed a breach of privilege and contempt of the House and therefore, he be kept in prison to undergo simple imprisonment for 15 days from the date of production in Central Prison, Chennai in supersession of my direction dated 22nd March, 1999 at Chennai. The above order is without prejudice to any other punishment



1999 மார்ச் 26] (திரு. ஆர். சொக்கர்)

under the law."என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். சட்டப்படி இந்த Criminal நடவடிக்கைக்காக வேறு எந்தத் தண்டனையையும் கொடுப்பதில் குறுக்கிடாமல் அவையினுடைய உரிமையை மீறியதற்காக சட்டமன்றத்திற்குரிய உரிமையை, கடமையை நீங்கள் நிறைவேற்றியிருக்கின்றீர்கள். ஆகவே, இதை இரண்டு பிரிவுகளாகத் தெளிவுபடுத்திப் பார்த்துவிட்டால் இதில் சட்டமன்றத்திற்கும், நீதிமன்றத்திற்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் ஏற்பட வாய்ப்பே இல்லை என்பதுதான் நம்முடைய கருத்து. நீதிமன்றத்தை நாம் முழுமையாக மதிக்கின்றோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றே சொன்னார்கள் "நீதிமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் ஒரு மோதல் ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை போல் வெளியே இருப்பதை நாம் எந்தக் காலத்திலேயும் அனுமதிக்க மாட்டோம். இந்த இரண்டு இறையாண்மையும் மோதிக் கொள்வதை நாம் கண்டிப்பாக அனுமதிக்க மாட்டோம்" என்று சொல்லியிருக்கின்றார்கள். நீங்களும் அதே கருத்தைத்தான் சொல்லியிருக்கின்றீர்கள். இங்கே நீதிமன்றத்தினுடைய இறையாண்மையை நாம் எந்த அளவிற்கு மதிக்கிறோமோ, மதித்து தாமரைக்கனியை Bail-ல் வருவதற்கு அனுமதித்திருக்கிறோமோ, அதேபோல் நம்முடைய உணர்வுகளையும், நம்முடைய இறையாண்மையையும் நீதிமன்றமும் மதிக்கும் என்று நான் நம்புகின்றேன். நம்முடைய இறையாண்மையை நாம் காப்பாற்ற வேண்டும்; நீதிமன்றத்தினுடைய இறையாண்மையை நீதிமன்றம் காப்பாற்ற வேண்டும் என்றால் அங்கே கருத்து வேறுபாடு வரும். எனவே நீதிமன்றத்தினுடைய இறையாண்மையை நாம் காப்பாற்றுவோம்; மதிப்போம்; நீதிமன்றம் சட்டமன்றத்தினுடைய இறையாண்மையைக் காப்பாற்ற வேண்டும், மதிக்க வேண்டும் என்ற அளவிலே இந்த அணுகுமுறை இருக்குமேயானால் நிச்சயமாகக் கருத்து வேறுபாட்டிற்கு எந்தவிதமான இடமும் இருக்காது என்பதுதான் நம்முடைய கருத்து.

நீதிமன்றத்திலே ஒரு கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள், "கொலை செய்தால் அங்கேயே தண்டனையைக் கொடுத்துவிடுவீர்களா" என்று. இல்லை, கண்டிப்பாக, கொலைக்குரிய தண்டனையை நாம் வழங்க முடியாது; வழங்க மாட்டோம். வழங்க முடியாது என்று சொல்வதை விட வழங்க மாட்டோம். எந்த அளவிற்கு நம்முடைய உரிமையை நாம் பயன்படுத்த வேண்டும் என்பது நமக்குத் தெரியும். அந்த அதிகாரம் இருக்கிறது என்ற காரணத்திற்காக நான் சொல்லவில்லை. ஆனால், ஒரு வேளை — இங்கே அது நடக்கக்கூடாது — அப்படி அசம்பாவிதம் நீதிபதிகள் கேட்டதுபோல் எங்கேயாவது நடக்குமேயானால், அந்த

அவையினுடைய உரிமையை மீறிய குற்றத்திற்காக சபாநாயகரும் அந்த அவையும் அவருக்குத் தண்டனை வழங்கும்; மற்றபடியான தண்டனையை நீதிமன்றம் வழங்கும். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது 15 நாட்கள் வெறுங்காவல் தண்டனை என்பது மிக மிகச் சாதாரண தண்டனை. ஒருவரைத் தாக்கி இரத்தக் காயம் ஏற்படுத்தியதற்கு I.P.C.-ன்படி குறைந்தபட்சம் 2 வருடம் தண்டனை கொடுக்க வேண்டும் என்று இருக்கும்போது, I.P.C.-ன்படிதான் தண்டனை வழங்கப்பட்டிருந்தால் 2 ஆண்டுகாலம் அல்லவா கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்? ஆகவே, இதிலிருந்து தெளிவாகத் தெரிகின்றது. குற்றவியலுக்காக அளிக்கப்பட்ட தண்டனை அல்ல இது; அவையின் உரிமை மீறலுக்காக அளிக்கப்பட்ட தண்டனை என்பதையும் கூறிக்கொள்கின்றேன்.

மேலும், நம்முடைய அவைக்கு இருக்கக்கூடிய வருத்தம் எல்லாம் அதில், திரு. தாமரைக்கனி அவர்கள் தற்காலிகமாக Bail-ல் வருவதற்காக அவர்கள் அனுமதித்திருக்கின்றார்கள். நான் ஏற்கெனவே சொன்னபடி நீதிமன்றத்தை நாம் மதிக்கின்றோம். ஆனால், இந்த அவையிலே நிறைவேற்றப்பெற்ற தீர்மானத்தையும் temporary-யாக suspend செய்திருக்கின்றோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். அது நமக்கு வருத்தத்தை அளிக்கின்றது. அதை எப்படி அவர்கள் செய்ய முடியும்? இந்த அவையிலே நிறைவேற்றப்பெற்ற, உரிமை மீறல் பிரச்சினைக்காக நிறைவேற்றப்பெற்ற ஒரு தீர்மானத்தை நீதிமன்றம் suspend செய்ய முடியாது என்பது எங்களுடைய ஆணித்தரமான கருத்து. ஆகவே, அவர்களுடைய தீர்ப்பிலும்கூட Bail-ல் அவர்கள்—குற்றம் செய்தவரை வெளியே வர அனுமதித்துவிட்டு 30 ஆம் தேதி மறுபடியும் அவர்கள் இந்த வழக்கை எடுத்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, நம்முடைய கருத்துகளெல்லாம் அவர்களுக்குச் சென்றடைந்து, நாம் எப்படி அவர்களுடைய இறையாண்மையை மதிக்கின்றோமோ அதே அளவிலே அவர்களும் நம்முடைய இறையாண்மையை மதிக்கக்கூடிய அளவிற்கு அந்தத் தீர்ப்பு அமையும் என்ற நம்பிக்கையோடு, வழங்கப்பட்ட வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது பிரச்சினையே சட்டமன்றம் தன் இயல்பான கதிப்போக்கில்





செயல்படுவதா இல்லையா என்பதுதான். அரசமைப்பு சாசனம் வழங்கிய உரிமையின் அடிப்படையில் இயங்கி வருகிற சட்டமன்றத்தின் இயக்கம் நடைமுறையில் கேள்விக்குரியதாக ஆக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்றம் இயங்குகிறபோது ஏற்படுகிற கண்ணியக் குறைவை அல்லது அவமதிப்பைத் தண்டிக்கிற உரிமை இந்த அவைக்கு உண்டு. அதன் அடிப்படையிலேதான் தாங்கள் 22 ஆம் தேதி நடந்த நிகழ்ச்சியை ஒட்டித் தீர்மானித்தீர்கள்; உத்தரவிட்டீர்கள்.

சட்டமன்ற இயக்கம் பற்றி இந்த விஷயத்திலே சென்னை உயர்நீதிமன்றம் தலையிட்டிருக்கிறது என்கிறபொழுது நான் இதுகுறித்து அதிர்ச்சி அடையவில்லை. ஏனென்றால் இன்றைய ஜனநாயக அரசமைப்பைத் தாங்கி நிற்கக்கூடிய 3 தூண்களும் அதனதன் அளவுக்கு அழுகிய நிலையை அடைந்திருக்கின்றன. எப்படிச் சட்டமன்றத் துறையிலே சில தாமரைக்கனிகள் தோன்றுகிறார்களோ அதுபோல நீதித் துறையிலேயும் சில தாமரைக்கனிகள் தோன்றக்கூடும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல நிர்வாகத் துறையிலேயும் நிலைமைகள் இருக்கக்கூடும். எப்படிச் சட்டமன்ற ஜனநாயக மரபுகளை மதிப்பிழக்கச் செய்கின்ற ஒரு நிலைமை தொடர்ந்து நீடிக்கிறதோ அதுபோல நீதித் துறையிலேயும் சிலபல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அதுபற்றிய விவரங்களுக்குள்ளே இப்பொழுது நான் போக விரும்பவில்லை.

எல்லோரும் மனிதர்கள்தான். மனிதர்கள் ஒன்றும் புனிதர்களோ, புத்தர்களோ அல்ல. அவர்கள் சொல்வதெல்லாம் வேத வாக்கு அல்ல. அவர்கள் அப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று சமூகம் எதிர்பார்க்கிறதே தவிர, சமூகத்தின் எதிர்பார்ப்புக்குத் தக்கபடி அவர்கள் நடந்து கொள்ளவில்லை என்பது அவர்களின் குற்றம்.

இப்போது சென்னை உயர்நீதிமன்றம் இப்படியொரு சிக்கலான அரசசமைப்புச் சட்ட நெருக்கடியைத் தோற்றுவிக்கிற ஒரு பிரச்சினையில் தலையிட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் நான் குறிப்பிட விரும்புவது, ஒரு விஷயத்தை நாம் கவனத்தோடு அணுக வேண்டும். சட்டமன்றமும், நம்முடைய பேரவைத் தலைவரும் கவனத்தோடு அணுக வேண்டிய விஷயம். இப்பொழுது இந்தப் பிரச்சினையை எதிர்கொண்டிருப்பது சென்னை உயர்நீதிமன்றம் பற்றிய விஷயம் அல்ல. நாம் எதிர்கொள்வது எது. எந்த ஒன்றையும் விலைபேசிவிட முடியும் என்று எதிர்பார்க்கிற ஒரு தீய சக்தியோடு நாம் மோதுகிறோம் என்பதை மறந்துவிடக் கூடாது. நான் யார் மீதும் உள்நோக்கம் கற்பிக்கவில்லை; கற்பிக்க

[திரு. கே. சுப்பராயன்] [1999 மார்ச் 26

விரும்பவும் இல்லை. யாரும் விலை போய்விடுவார்கள் என்றெல்லாம் நான் சொல்லவில்லை. ஆனால் எவரையும் விலைபேசிப் பழக்கப்பட்ட ஒரு சக்தி, தாமரைக்கனியின் பின்னணியில் இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. இந்த விஷயத்தையும் கவனத்திலே கொண்டுதான் நாம் இந்தப் பிரச்சினையைப் பரிசீலிக்க வேண்டும், கவனிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இது எங்கே கொண்டு போய் முடியும் தெரியுமா? ஓர் அவை என்று சொல்கிறபொழுது — நான் எது பெரிது என்ற வாதத்திற்குள்ளே போகவில்லை. ஆனால் — நீதிபதிகளின் நெறிமுறைகளை வகுக்கிற அதிகாரம் படைத்த அமைப்பு நாடாளுமன்ற அமைப்பு. இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால், நீதிபதிகளின் எல்லை, ஒரு முளைக்குச்சியில் கட்டுண்டவர்கள் மாதிரிதான். அவர்களுக்கு ஓர் எல்லை உண்டு. அரசமைப்பு சாசனத்தின் எல்லையை மீறி எழுதுகிற உரிமை நீதிபதிகளுக்கு இல்லை. ஆனால் அரசமைப்பு சாசனத்தையும் மாற்றியமைக்கிற உரிமை நாடாளுமன்றத்திற்கு உண்டு. நாடாளுமன்றம் என்பது ஜனநாயகக் கட்டமைப்பின் மிக மிக உயர்ந்த மதிக்கத்தக்க வடிவம். ஜெயலலிதா மாதிரி சிலபேர் வந்து அதைச் சீர்குலைத்தார்கள் என்பது வேறு விஷயம். நான் அந்த விவரத்திற்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால் ஜனநாயக அரசமைப்பில் நாடாளுமன்றம் மிக உயர்ந்த வடிவம்; மதிப்புமிக்க வடிவம். அந்த வடிவம் இன்றைக்குக் கேலிக்குரியதாக மாற்றப்பட்டிருக்கிறது ஒரு தீர்ப்பினால் என்பதுதான் என்னுடைய வேதனையாகும். இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பை எழுத நேர்ந்தது, இந்திய நாடாளுமன்ற வரலாற்றில் ஒரு துரதிருஷ்டம் என்று நான் கருத விரும்புகிறேன். ஒரு கரும்புள்ளி என்றும் நான் கருத விரும்புகிறேன். ஏனென்றால் இது ஒன்றும் தமிழ்நாடு சட்டமன்றத்திற்கும் உயர்நீதிமன்றத்திற்கும் இடையேயான பிரச்சினையாக மாறுவதில்லை. உலகு தழுவிய நாடாளுமன்ற முறையின் மைய அம்சத்திற்கு, சென்னை உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியிருக்கிறது. இது ஏதோ தமிழ்நாடு சட்டமன்றத்தில் விவாதிக்கப்படுகிற பொருள் என்று யாராவது கருதுவார்களேயானால், அவர்கள் கிட்டப்பார்வை கொண்டவர்கள் என்றே நான் கருதுகிறேன். இது தமிழ்நாடு சட்டமன்றம் பற்றிய விஷயமல்ல. ஜனநாயக நாடாளுமன்ற முறை பற்றிய விஷயம்.



1999 மார்ச் 26] [திரு. கே. சுப்பராயன்]

முற்பகல் 10-00

இந்த விஷயத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்கிறபோது, 22 ஆம் தேதி தாமரைக்கனி, அவருக்கு இந்த அவை வழங்கிய உரிமையைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார், அவையின் கண்ணியத்தைச் சிதைத்து இருக்கிறார், நாடாளுமன்ற முறையில் நாவைப் பயன்படுத்த வேண்டிய இடத்தில் கையைப் பகிரங்கமாகப் பயன்படுத்திக் காயப்படுத்தியிருக்கிறார். இதில் விசித்திரம் என்னவென்றால், மூக்கில் காயப்பட்டு, காயத்தோடு இருக்கிற அமைச்சர் காயத்தோடு இருந்துகொண்டிருக்கிறார். காயப்படுத்தியவர் சுதந்திரமாக வெளியிலே விடப்பட்டிருக்கிறார். குற்றம் புரிந்தவர்கள் சுதந்திரம் அடைவதும், பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலையை ஏற்படுத்துவதும் எந்த வகைப்பட்ட நீதிக்கும் உடன்பட்டதாக இருக்க முடியாது. இப்படியொரு நிலையை ஊக்குவிக்கிறபோது என்ன நடக்கும்?

அவர் வெளியில் வந்து ஒரு பேட்டி கொடுத்ததைக்கூட நான் படித்தேன். நாள் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் கேட்டிருக்கிறார். அவருடைய உரிமை;. கேட்கட்டும். ஆனால் இங்கே ஜனநாயக ரீதியாக அவையினுடைய கண்ணியத்தைக் குலைக்க ஒருவர் முயலுகிறபோது, அதைத் தடுக்க முயன்ற அமைச்சர், வன்முறையால் இரத்தக்காயப் படுத்தப்பட்டிருக்கிறார். அப்படி ரத்தக் காயப்படுத்தப்பட்டது அவையின் கண்ணியத்தை மீறிய செயல். அவைக்குள்ளே நடைபெற்ற செயல் என்பதால், அவை தங்களுக்கு வழங்கிய உரிமையின் அடிப்படையில் இதைத் தீர்மானித்து, தீர்ப்பளித்து, தண்டித்தீர்கள். இது உங்களுடைய உரிமை. யாரும் கேள்வி கேட்க முடியாத ஒரு உரிமை. இந்த உரிமையை இப்போது சென்னை உயர்நீதிமன்றம் கேள்விக்குறியாக்கியதால், நான் கேட்க விரும்புகிறேன். நாளை இதே நபர், சட்டமன்றத்திற்குள், அவருடைய Suspension காலம் முடிந்தபிறகு, உள்ளே வந்து, தங்களைக் கூட செயல்படவிடாமல், தங்களுடைய இருக்கையிலே வந்துகூட தாக்கலாம். அதற்கும் விடுதலை உண்டு; தீர்ப்பு உண்டு. இங்கே எது செய்தாலும், அதை உடனடியாகத் தட்டிப்பறிக்க சென்னை உயர்நீதிமன்றத்தை, நீதித்துறையை நாடலாம் என்ற தைரியம் ஊக்குவிக்கப்படுமானால், நாடாளுமன்றம் தன்னுடைய இயல்பான கதிப்போக்கில் இயங்க இயலுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

நீதிபதிகள் என்ன செய்திருக்கிறார்கள் என்றால் — நான் தெரிந்தே சொல்கிறேன் — பொறுப்பற்ற முறையில் தீர்ப்பு எழுதியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது அவசியமற்ற

தலையீடு. தலையிடவே கூடாது என்று சொல்லவில்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, murder நடைபெறுமேயானால், அதற்காக இங்கேயே நாம் life sentence கொடுத்துவிட முடியாது; கொடுத்துவிடுவதில்லை; கொடுத்துவிடக் கூடாது என்று நான் கருதுகிறேன். ஆனால் அவையினுடைய கண்ணியத்தைக் கெடுத்ததால், 15 நாட்கள் தண்டிக்கப்படுகிறார் என்றாலும், அவருடைய குற்றச் செயலுக்கு அவரைத் தண்டிப்பதை, சட்டம் எந்த வகையிலும் தடுக்காது என்று clear cut-ஆக Jail Superintendent-க்கு order கொடுக்கப்பட்டது. இதற்குப் பின்னாலும் நீதிமன்றம் இப்படிச் செய்திருக்கிறது. இதிலே ஒரு விசித்திரம் என்னவென்றால், நீங்களே உங்கள் முதல் தீர்ப்பை இரத்து செய்துவிட்டீர்கள். அப்படி இரத்து செய்தபிறகு, எப்படி stay கொடுத்தார்கள்? எப்படி stay கொடுக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புவது, நீதித் துறையின் இப்போதைய செயல்பாடு என்பது உலகு தழுவிய நாடாளுமன்ற மரபையே கேலிக்குரியதாக்கியது. நான் இந்தப் பேரவையின் மூலம் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இந்திய நாடாளுமன்ற முறையையே கேள்வி கேட்பதால், அரசமைப்புச் சட்டம் வழங்கிய உரிமைக்கு அப்பால் தலையீடு செய்வதால், இதுகுறித்து இந்திய அளவில் நாடாளுமன்றம் உட்பட பிற மாநிலங்களின் சட்டமன்றங்கள் உட்பட, சட்டமன்ற ஜனநாயகத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்காக நாம் ஏதாவது செய்யவேண்டும். ஏனென்றால் அதிகாரத் தலையீடு வருகிறது. எனவே நாம் நம்முடைய இறையாண்மையைக் காப்பாற்றுகிறோம் என்ற பெயரால் நாம் நீதிமன்ற Notice-ஐப் பெறுவதில்லை, அல்லது எதுவும் செய்வதில்லை என்ற நிலையை எடுத்திருப்பது சரியாகவே இருந்தாலும் கூட, நாம் சரியாகத்தான் போய்க் கொண்டிருக்கிறோம் என்றாலும் கூட, நம்மீது Bus வந்து ஏறுமானால் என்ன செய்யமுடியும்? இடதுபுறமாக சாலையோரம் நாம் சரியாகச் சென்றால் கூட லாரி நம் மீது வந்து ஏறுகிறபோது, நம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டி நாம் மேலும் செயல்பட வேண்டியிருக்கிறது.

*முற்பகல் 10-05*

அதுபோல, நம்முடைய இயல்பான இயக்கத்தைச் சிதைக்க, சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பு தலையிடுகிறபோது, அந்தத் தீர்ப்புக்கு எதிராக, சில பொருத்தமான வழிமுறைகளை, பொருத்தமான சட்ட



வல்லுநர்களைக் கொண்டு நாம் கலந்தாலோசித்து, இந்தியாவின், சட்டமன்ற ஜனநாயகத்தின் இறையாண்மையைக் காப்பாற்ற செயல்பட வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**THIRU M. ABDUL LATHEEF:** Hon. Mr. Speaker, with a great sense of reluctance, I have to submit that the High Court of Madras, in releasing a detenu who was detained under the order and the authority of a different sovereign body, the Tamil Nadu Legislative Assembly, has clearly transgressed its limits prescribed by the Constitution. I am sorry to say that there was not proper application of judicial mind when this Habeas Corpus Petition was taken for consideration by the Hon. High Court of Chennai. Habeas Corpus Petition has a different connotation and it has got a definite implication. For a detenu, who has been detained by a Constitutional authority in the order passed by such an authority, in the open House of Legislature and has been detained by the appropriate authority responsible for such detention, first of all, whether Habeas Corpus Petition, could be entertained is a major question that should have been decided before delving deep into the points raised by the counsel for the detenu. I am of the opinion that the High Court has no jurisdiction so far as this question is concerned because the High Court — a judicial forum in the State — has a right to go into any question wherein the ultra vires of intra vires or any statute or any Act passed by the legislature is in question.

The legislature exercises its legislative powers and passes a legislation in its collective wisdom which is deemed appropriate and necessary to further any particular social and economic cause. But, after enactment, it is open to any citizen and any group of citizens to challenge the validity of such an enactment before either the High Court or the Supreme Court and the High Court is entitled to go into the question to find out whether the Act enacted by the Legislature is intra vires or ultra vires. But this is not a question wherein the constitutional validity of an action of Legislature is questioned by an outside element, an outside agency, which is a question entirely within the jurisdiction of the House, as has been prescribed and upheld by the conventions and customs during the functioning of legislative bodies ever since 1950 sofaras India is concerned and before that the conventions and

customs evolved by the House of Commons under the British Parliamentary System which is also taken as a precedence, as a valid precedence to decide the authority or otherwise of a particular Constitutional body.

*முற்பகல் 10-10*

In our case we also differ. Eventhough the House of Commons is considered as the mother of Parliaments so far as we are concerned we are governed by a written constitution. We are governed by conventions judicial customs, and judicial pronouncements. unlike the British House of Commons which is not governed by a written Constitution but by an unwritten conventional, customary Constitution, in our country we are governed by a written Constitution.

In a well known case where we have a confrontation — it was construed as a confrontation more or less a Constitutional crisis warranting the attention of all concerned — we have decided in a manner which will be happier, which will be in the larger interests of the Constitutional authority of the country.

I am very reluctant and sorry to say, Mr. Speaker, that the High Court of Chennai while deciding this matter has unfortunately failed to apply its judicial mind. Thumping of desks. This is my contention Because the order itself is a bald order. Of course, it is a temporary order, an interim relief that was made available to the petitioner. The High Court is entitled to do so. At the same time should it not go into the question about the maintainability of the petition because so far as this case is concerned, the petition filed for Habeas Corpus Petition is concerned, I am to say that Article 21 does not arise. It is not a question of life and property, the freedom of an individual. because the individual— was very free, he was free to the extent of assaulting a Minister. He—was not restricted. He was so much free, so much ruthlessly and recklessly free in this House that he had the audacity to attack a Minister. I am not defending because there should not be a difference between a Minister and an ordinary Member.

I was also sitting beside him. My vulnerability was greater than anybody else in this House, Mr. Speaker, because all of them fell upon me. I was



pushed. I had so much agony than anybody else because I had much of the weight to bear. I bore the brunt, weight of all the people. Still I was tolerant. He is there free

The Member was ordered to be kept under Police custody. That was the first part of your order. And secondly you have stated Mr. Speaker, that you have not entered the domain of Criminal Law. Wherever Criminal Law is to be applied for any criminal affairs, The Speaker is conscious enough to use such machinery as is essential to punish the criminal under the Criminal Act. But you should not wait. As a Speaker, you are not expected to wait to safeguard the dignity and decorum of this House.

If the House is put to contempt, if the House is treated with scant respect treating all the Members as non-entities, of no consequence including the Hon. Speaker of the House who is the repository custodian of the dignity of this House, then the Hon. Speaker shall take action for such mistakes. The Member has committed this mistake. The Speaker also was very careful. You have very clearly stated in the order passed by you, Mr. Speaker, that he is awarded this punishment of 15 days' imprisonment or legal custody or whatever it may be. You have awarded this only for his transgression of limits prescribed by the rules of this House. Even under Article 194 (1) or particularly under Article 194 (3), a Member is expected to conduct himself in manners prescribed by the House and evolved and upheld by the legislative convention. But, when the Member transgresses the limits, it is your paramount and primary duty to bring the Member and to take him back within the sphere of decency and decorum. That is what you have done.

*முற்பகல் 10-15*

There has been an argument that the Member has been put to double jeopardy. You know, under law, a person cannot be punished twice for a single offence. This argument has been adduced before the Honourable High Court, before the Lordships of the High Court, that the Member has been awarded two punishments for one offence. They have invoked the rule against double jeopardy.

I would submit that this is not the place where you should invoke this particular rule against double jeopardy. The Speaker is well within his right to take such action as is warranted under a particular circumstance. The punishment passed, was warranted by the circumstance. Therefore, I would

[திரு. ம. அப்துல் லத்திப்] [1999 மார்ச் 26

like to ask any authority, either judicial or otherwise, whether this Constitutional authority should function as per the spirit of Constitution, as per the delineation evolved by the Constitution or not. That is the question they have to answer. We expect the judiciary to rise to the occasion and they should provide guidelines even if the Legislature goes wrong. We expect the judiciary to provide guidelines and if anybody goes astray, it is the primary responsibility of the judiciary to bring them to the right track. Instead of bringing other agencies to the right track, if the judiciary itself goes wrong, then what is the remedy for us? What is the remedy for the individuals? If even the Legislative Assembly is treated in such a callous and casual manner, I would like to ask, with all sense of respect and regard to any other authority including judicial authority, where the remedy lies. Our relief is that the judiciary is the ultimate authority where we can seek relief.

So far as the Speaker is concerned, let them understand — I am not telling any particular authority; I tell and address the other authorities; let them understand--that you are the ultimate arbiter of the destinies of this House. So far as this House is concerned, you are the ultimate arbiter. But if your authority itself is challenged in a most unconstitutional manner by even that authority which is there to spell the meaning, the substance of the Constitutional provisions, then where is the remedy for us? I think it is suffice to say. I don't want to delve deep into the question of various laws. But I say that this House is paramount, so far as the sphere assigned to it is concerned. This House is supreme and its legislative powers, privileges and immunities as guaranteed by the Constitution, cannot be questioned by any other authority except the authority of this House. This authority has been exercised by us with great reason and with great amount of restraint. I therefore submit, Mr. Speaker, that we should assert ourselves. Our only anxiety is that we should not fail in this and we should assert ourselves and reiterate that whatever resolution we have passed the other day is perfectly Constitutional and is on valid ground and that it should not be challenged in any other way. However, in this matter it has been challenged. Unless and until the Speaker permits me, I will not go beyond the limits because the matter pertains to a supposed confrontation between the two Constitutional authorities. Therefore, I restrain myself and whatever the decision you take Mr. Speaker, I feel as a student of the Constitution, and I submit, that yours is the final decision. (Thumping of desks) We are not bound by any other authority. You can



1999 மார்ச் 26] [திரு. ம. அப்துல் லத்திப்]

rest assured and you can take any decision according to the genious of this House. The entire House is behind the Speaker (Thumping of desks) as usual. Thank you very much.

**HON. SPEAKER:** I congratulate the Hon. Member for his restraint. I request Thiru. Thirunavukkarasu to be very brief.

*முற்பகல் 10-20*

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். பத்திரிகைகளிலே வந்திருக்கின்ற செய்திகளின்படி இந்த நீதிபதிகள் என்ன நினைத்திருப்பார்கள் என்று தோன்றுகிறதென்றால்—ஏதோ இங்கே வழங்கப்பட்ட 15 நாள் சாதாரண சிறைத் தண்டனை என்பது நீதிமன்றத்திற்குரிய அதிகாரத்தை இந்தச் சட்டமன்றம் எடுத்துக்கொண்டு Indian Penal Code-ன்கீழே தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றதோ என்பதைப் போன்ற ஒரு சந்தேகம் வெளியே எழுப்பப்பட்டிருக்கிறது. காரணம், நண்பர் சோ அவர்கள் எழுதுகிறபோது, இதைப் பற்றிக் கருத்துச் சொல்கிறபோது அதைத்தான் சொல்லியிருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர்கள் இது இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழே தண்டனைக்குரியது என்று பேசியதெல்லாம் பெரியதாக வந்திருக்கிறது, Privilege என்ற அடிப்படையிலே கொடுத்திருந்தால் அந்தத் தீர்ப்பு நின்றிருக்கும் என்று இப்படிப் பலரும் வெளியே அபிப்ராயம் சொல்லியிருக்கிறார்கள். அன்றைக்கு அப்படிப் பேசப்பட்டது உண்மைதான்.

இங்கே நடந்த அந்த வன்முறை, மாண்புமிகு வீரபாண்டி ஆறுமுகம் தாக்கப்பட்டது criminal குற்றம், Indian Penal Code பிரகாரம் 326-வது பிரிவின்கீழ் தண்டனைக்குரியது என்றெல்லாம் இங்கே பேசப்பட்டதே தவிர, நீங்கள் தண்டனை கொடுத்தது Indian Penal Code-லே கிடையாது. அதை நீங்கள் பயன்படுத்தவுமில்லை. ஆகவே, அதை முதலிலே நான் தெளிவாக்க விரும்புகிறேன். இங்கே நண்பர்கள் சொன்னமாதிரி, நீங்கள் திரும்பத் திரும்ப உங்களுடைய உத்தரவிலே சொல்லியிருக்கிறீர்கள்.

"..Thamaraikani has committed a breach of privilege and contempt of the House and therefore he be taken into custody." இதைத்தான் சொல்லியிருக்கிறீர்கள்.

மீண்டும் அடுத்த பத்தியிலே சொல்கிறபோது, அதையும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 மார்ச் 26

"..Thiru Thamaraikani has committed breach of privilege and contempt of the House and therefore he be kept in prison." என்று கூறிவிட்டு இந்த I.P.C.-ன் கீழே தண்டனை தரவில்லை என்பதை நீங்கள் மறைவாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதாவது கீழே சொல்லியிருக்கிறீர்கள், "..The above order is without prejudice to any other punishment under the law." under the law என்றால் under the--I.P.C./Indian Penal Code-ல் தண்டனைக் கொடுப்பது என்பது- நீங்கள் கொடுத்த உத்தரவு அதைக் கட்டுப்படுத்தாது. அதில் வேறு நடவடிக்கை வேண்டுமானால் எடுத்துக்கொள்ளலாம். ஆனால், அந்த அடிப்படையிலே நான் தண்டனை தரவில்லை என்பதைத் தெளிவாக உங்களுடைய உத்தரவிலே வெளியிட்டிருக்கிறீர்கள். எனவே, அதைத்தான் நான் முதலிலே தெளிவுபடுத்த விரும்புகிறேன். எனவே, இங்கே தரப்பட்ட தண்டனை என்பது இந்திய தண்டனைச் சட்டப் பிரிவின்கீழே தரப்பட்ட தண்டனை அல்ல. இங்கே இந்த மன்றத்தின் உரிமையைப் மீறியதற்காகத் தரப்பட்ட தண்டனையாகும். மன்றத்தின் உரிமையை, பேச்சால் மீறலாம், எழுத்தால் மீறலாம், செய்கையால் மீறலாம். இங்கே தன்னுடைய செய்கையால் எதிரேயிருந்த அமைச்சரை அடித்ததால் தன்னுடைய mis-conduct ஆல் அவர் மீறியிருக்கிறார். எனவே, அதை நீங்கள் Privilage-ஆக எடுத்துக் கொண்டு, அதற்கு நீங்கள் இந்த மன்றத்தின் மூலமாகத் தண்டனை தந்திருக்கிறீர்கள்.

*முற்பகல் 10-25*

இன்னொன்றையும் நான் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். நீதிபதிகள் கேட்டிருக்கிறார்கள் இங்கே ஒரு கொலை நடந்தால் உடனே தண்டனை தர முடியுமா என்று. அப்படி நீங்கள் தரவில்லை; இந்த மன்றமும் தரவில்லை, இந்தச் சம்பவம் நடந்த உடனே என்ன செய்திருக்கிறீர்கள் என்று சொன்னால், வெறும் கைது செய்து வையுங்கள் என்றுதான் சொல்லி இருக்கிறீர்கள். வேறு என்ன செய்வது? சரி, கைது செய்தால் எங்கே வைப்பது? சபாநாயகர் வீட்டிலே வைத்துக் கொள்ள முடியுமா? அல்லது அவர்களுடைய கட்சித் தலைவர் வீட்டிலே கொண்டுபோய் வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்ல முடியுமா? ஜெயிலில் வையுங்கள் என்று சொல்லி இருக்கிறீர்கள். இதுதான் முதல் நாள் தண்டனை; நீங்கள் அறிவித்த அறிவிப்பு. இதற்கு நிச்சயமாக உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது. நீதிபதிக்கு முன்னாலே ஒரு கொலை நடந்தால், நாங்கள் தூக்கிலே போட முடியுமா என்று அவர் கேட்கிறார். தூக்கிலே போட முடியாது. நீதிபதிகளுக்கு முன்னாலே ஒரு கொலை நடந்தால், அவரை கைது செய்யுங்கள் என்றுகூட நீதிபதிகள் சொல்ல



1999 மார்ச் 26] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

மாட்டார்களா? அதற்குக்கூட அதிகாரம் இல்லையா? கண்முன்னாலே ஒரு கொலை நீதிமன்றத்திலே நடக்கிறபோது, அச்சம்பவத்தைப் பார்க்கிறபோது, நீதிபதிகள் என்ன சொல்கிறார்கள். அவரைக் கைது செய்து வையுங்கள் என்று சொல்கிறார்கள். மற்ற சட்ட நடவடிக்கை அப்புறம்,

அதேமாதிரி வேறு சம்பவத்தையும் முன்னாலே பேசி இருக்கிறேன். நீதிமன்ற நீதிபதி மேலேயே செருப்பு வீசியபோது, 3 மாத தண்டனை தரப்பட்டது பற்றி எல்லாம் சொல்லி இருக்கிறேன். அதற்குள்ளேகூட நான் போக விரும்பவில்லை. தண்டனையே வேண்டாம்; arrest him என்று சொல்லி இவரைக் கைது செய்து remand வையுங்கள் என்று சொல்வதற்கு நீதிபதிகளுக்கு அதிகாரம் இருக்கிறது. அதேபோன்ற அதிகாரம், நீதிபதிகள் ஸ்தானத்தில் இருக்கிற உங்களுக்கும் இருக்கிறது. அதைத்தான் முதலிலே நீங்கள் செய்தீர்கள். சரி, இது தவறு என்று நீதிமன்றம் தீர்ப்பு அளித்த உடனே, நீங்கள் முரண்பட்டு இருக்கலாம், சட்டமன்றத்தின் மூலமாக "இல்லை, இல்லை, முடியாது; தாமரைக்கனியை நாங்கள் வெளிவிடமாட்டோம்; நான் போட்ட உத்தரவு உத்தரவுதான்; அதற்குமேலே 15 நாள் தண்டனை தரப்படுகிறது" என்று சொல்லி அப்படியே continuous-ஆக அவரை வைத்திருக்கலாம். ஆனால், மாண்புமிகு முதலமைச்சரும் சரி அல்லது மாண்புமிகு பேரவைத் தலைவரும் சரி அல்லது இந்தச் சட்டமன்றப் பேரவையும் சரி, நீதிமன்றத்தோடு எந்த முரண்பாடும் நமக்கு வேண்டியதில்லை என்று நினைத்த காரணத்தினாலே, முதல்நாள் அவர் வெளியேவிடப்படுகிறார்; ஜெயிலிலே இருந்து release பண்ணப்படுகிறார்.

அதற்குப் பிறகு 23 ஆம் தேதி சட்டமன்றத்திலே resolution கொண்டு வந்து அந்த resolution ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, அதற்குப் பிறகு 15 நாள் தரப்படுகிறது. இதற்குப் பிறகாவது, நீதிபதிகள் சற்று யோசித்து, சிந்தித்து நிதானமாக ஒரு முடிவுக்கு வந்திருக்கலாம். நாம் காட்டிய gesture-ஐ அவர்களும் காட்டி இருக்கலாம். 'நம்மை மதிக்கிறார்கள்; நீதிமன்றத்தை மதித்து இந்த அரசும் சரி, சட்டமன்றமும் சரி, சபாநாயகரும் சரி, நாம் போட்ட உத்தரவை நிறைவேற்றி இருக்கிறார்கள்' என்று நீதிபதிகள் எண்ணியிருக்க வேண்டும். அதற்குப் பிறகு சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம் கொண்டு வந்து unanimous ஆக நிறைவேற்றப்பட்டு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது என்கிறபோது, இதை விசாரித்த நீதிபதிகள் Constitution Bench-க்கு கூட அனுப்பி இருக்கலாம். இது அரசமைப்புச் சட்டம் சம்பந்தப்பட்ட பிரச்சினை;

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 மார்ச் 26

எனவே, சட்டமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையிலான இந்தப் பிரச்சினையை Constitution Bench-க்கு refer பண்ணி, அதற்குப் பின்னாலேகூட முடிவுக்கு வந்துதிருக்கலாம். உடனடியாக, அடுத்த நாளே மீண்டும் விடுதலை செய் என்று அவர்கள் உத்தரவு போட்டிருப்பது துரதிருஷ்டவசமானது, இந்தச் சட்டமன்றமும் சரி, ஆட்சியின் சார்பிலே முதலமைச்சரும் சரி அல்லது பேரவைத் தலைவரான நீங்களும் சரி, நாம் என்ன மரியாதை நீதிமன்றத்திற்கு கொடுத்தோமோ, அதே உரிய மரியாதையை அந்தக் கோணத்திலே, அதைக் கவனத்திலே நீதிமன்றம் எடுத்துக் கொள்ளாதது மிகவும் துரதிருஷ்டவசமானது.

இரண்டாவது அதில் சொல்லப்பட்டு இருப்பது Privilege Committee-க்கு அனுப்ப வேண்டும் என்பது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 208-ன் கீழேதான் சட்டமன்ற விதிகள், அதாவது இந்த Rules frame செய்யப்பட்டிருக்கின்றன. சட்டமன்ற விதிகளிலே மிகத் தெளிவாக இருக்கிறது. அதாவது என்ன முறையிலே உரிமைப் பிரச்சினை கொண்டு வரலாம் என்று இருக்கிறது. அதை மட்டும் நான் படிக்க விரும்புகிறேன்.

விதி 220-ல் "....எனினும், பேரவைக் கூட்டம் நடந்து கொண்டு இருக்கையில் எழுகிற உரிமைப் பிரச்சினைகளைப் பொறுத்தமட்டில், பேரவைத் தலைவர் அத்தகைய முன்னறிவிப்பு ஏதும் இல்லாமலே அவர் பொருத்தமெனக் கருதும் வகையில் எடுத்துக்கொள்ளலாம்." என்றிருக்கிறது எனவே, Notice எல்லாம் கொடுத்து உரிமைப் பிரச்சினை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. இங்கே எடுக்கலாம்.

விதி 221-ல் "...எனினும், பேரவைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கையில் எழும் 'உரிமைப் பிரச்சினை' ஒன்று உடனடியாக மற்ற எல்லா அலுவல்களையும்விட முன்னிடம் பெறும்." என்று இருப்பதால் இங்கே நடந்த நிகழ்ச்சியை மற்ற எல்லா நிகழ்ச்சிகளையும் ஒத்திவைத்துவிட்டு, உரிமைப் பிரச்சினையாக எடுப்பதற்கு உரிமை இருக்கிறது.

விதி 225-ல் "எழுப்பப்பட்ட பிரச்சினை அவையின் உரிமை மீறியதாகவோ அல்லது அவையை அவமதிப்பதாகவோ இருந்து அவையின் தலையீடு அவசியம் எனப் பேரவைத் தலைவர் கருதினால், அவ்வுரிமை மீறல் பிரச்சினை உரிமைக் குழுவிற்கு அனுப்பப் பெற வேண்டும் என்றோ அல்லது பேரவையே நேரடியாக ஆய்வு செய்ய வேண்டும் என்றோ உறுப்பினர் எவரேனும் ஒரு தீர்மானம் கொண்டு வர அனுமதிக்கலாம்" என்று இருக்கிறது. அதுதான் நடந்தது. நீங்கள்



1999 மார்ச் 26] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

நினைத்தால் இங்கு நடக்கிற சம்பவத்தை Privilege Committee-க்கு refer பண்ணலாம். இல்லை, அது தேவையில்லை, இந்த அவையிலேயே உரிமைப் பிரச்சினையாக எடுக்கலாம் என்று நீங்கள் நினைத்தீர்களேயானால், யாராவது resolution கொண்டு வரலாம். அந்த resolution தான் அவை முன்னவரால் கொண்டு வரப்பட்டு, (குறுக்கீடு) 23 ஆம் தேதி பேரவை முன்னவர் அவர்களால் — He is also one of the Members — தீர்மானம் கொண்டு வரப்பட்டு மற்ற எல்லா கட்சிகளாலும் ஆதரிக்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கான அதிகாரம் நம்முடைய சட்டமன்ற விதிகளிலே இருக்கிறது. இதை நீதிபதிகள் கவனத்திலே எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். தண்டனை வழங்குவதில் நீதிமன்றத்திற்கு இருக்கிற அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் வரை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். வெளியிலே அவை உரிமை மீறல் நடந்தபோது, அதற்காக ஒரு வாரம் தண்டனை கொடுத்தது, 15 நாட்கள் தண்டனை கொடுத்தது ஆகிய இவையெல்லாம் உச்ச நீதிமன்றம் வரை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. . .

*முற்பகல் 10-30*

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் பேசும்போது குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். வேகமாகப் பேசி வரும்போது தண்டனை வழங்குவதற்கான அதிகாரம் நீதிமன்றத்திற்கு இருக்கிறது என்று அவருடைய வார்த்தைகளில் இருக்கிறது. அதைச் சட்டமன்றத்திற்கு இருக்கிறது என்று திருத்திக்கொள்ள வேண்டும். Slip of tonque.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நான் சொன்னது அவைக்கு வெளியிலே நடந்ததைப் பற்றி. வெளியிலே நடந்த சம்பவங்களுக்காகச் சொன்னேன். அது வெளியில் நடந்த சம்பவங்கள் பற்றியது.

**திரு. ஆர். சொக்கர்:** அதில்தான் சட்டமன்றம் என திருத்திக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் திருத்திக்கொள்வதற்கு ஒன்றுமில்லை. அவர் சொன்னதை நீங்கள் புரிந்துகொள்ளவில்லை. For what happened outside the House, the judiciary has got the right. For what happened inside the House, the House has got the right எனச் சொல்ல வருகிறார் என நினைக்கிறேன்.

[1999 மார்ச் 26

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நான் சொல்ல வந்தது இந்தச் சட்டமன்றத்திற்குள்ளே நடந்த இந்தச் சம்பவத்தின்மீது நடவடிக்கை எடுக்கும் முன்பு, உரிமைக் குழுவிற்கு Privilege Committee-க்கு அனுப்பியிருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், உரிமைக் குழுவிற்கு அனுப்பாமல், அதை நேரடியாக அவை உரிமை மீறலாகக் கொண்டு வந்து, தீர்மானத்தினை நிறைவேற்றி நடவடிக்கை எடுப்பதற்கு சட்ட விதிகளிலே இடமிருக்கிறது. எனவே நாம் எடுத்த நடவடிக்கை என்பது விதிப்படி எடுத்தது. அதைத்தான் திரும்பத் திரும்பச் சொல்ல விரும்புகிறேன், எந்த விதி மீறலும் இதில் கிடையாது இதை நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்ளாதது துரதிருஷ்டவசமானது, மிகுந்த வருத்தத்திற்குரியது. இந்த அடிப்படையிலேதான் இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டும்.

இதிலே நாம் நீதிமன்றத்திற்குத் தந்த மதிப்பை, சட்டமன்றத்திற்கு அதாவது இன்னொரு sovereign body-யாக இருக்கிற சட்டமன்றத்திற்கும் சட்டமன்ற நடவடிக்கைகளுக்கும் தர வேண்டும் என்பதை நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொண்டதாகக்கூடத் தெரியவில்லை. முதல் நாள் உத்தரவு; அடுத்த நாள் உத்தரவு என நீதிமன்றம் போடுகிறபோது, அது இந்தச் சட்டமன்றத்தினுடைய இறையாண்மையைப் பாதிக்கின்ற விதத்திலே இருக்கிறது.

இன்னும்கூடச் சொல்வேன். S.N. Singh Vs. State of U.P. என்பதில் இதுமாதிரி கொடுத்த ஒரு வார தண்டனையை இரத்து செய்கிறபோது, அந்த நீதிமன்றத்தினுடைய நீதிபதிகள் மீதே contempt போட்டிருக்கிறார்கள். சட்டமன்றத்திலே அதைக் கொண்டு வந்து, Notice கொடுத்தார்கள். அந்த நீதிபதிகளுக்கு, அதாவது தண்டனையை இரத்து செய்தவர்களுக்கு Notice கொடுத்திருக்கிறார்கள். வாதாடிய வக்கீலிலிருந்து 2 நீதிபதிகள் வரை Notice கொடுத்தார்கள். நாம் அதற்கெல்லாம் போகவில்லை. அப்படிப் போவதற்கும் விரும்பவில்லை. அதை மாண்புமிகு முதலமைச்சரும் அனுமதிக்க மாட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும் அப்படி விரும்பவில்லை. நீங்களும் விரும்பவில்லை. மிகுந்த கண்ணியத்தோடும், மிகுந்த நாகரிகத்தோடும் மிகுந்த மரியாதையோடும், நீதிமன்றத்திற்கு உரிய மரியாதையைத் தந்து, சட்டமன்ற நடவடிக்கைகளை இவ்வளவு கவனமாக நடத்திக் கொண்டு செல்கிறபோது, அதே கவனத்தை நீதிமன்றமும், அங்கேயிருக்கிற நீதிபதிகளும் கொண்டிருக்க வேண்டாமா என்பதுதான் நான் கேட்கிற



1999 மார்ச் 26] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

சாதாரண கேள்வியாகும். எனவே இந்தப் பிரச்சினை குறித்து சட்டமன்றத்தின் இறையாண்மையை நிலைநாட்டுகிற விதத்திலே—ஏனென்றால் இது ஏதோ ஒரு சட்டமன்றத்தின் தீர்ப்பு அல்ல. எல்லா சட்டமன்றங்களும் இதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்றன. இந்திய நாடு முழுவதும் உள்ள எல்லா சட்டமன்றங்களும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்றன. சட்டமன்றத்தில் நாம் எடுக்கிற நடவடிக்கை என்பது, எடுக்கப்படுகிற முடிவு என்பது பிற்காலத்திலே மற்ற சட்டமன்றங்களாலே பின்பற்றக்கூடிய முன்னுதாரணமாக இருக்கும். இந்தியாவில் இருக்கிற மற்ற சட்டமன்றங்களும் நாடாளுமன்றமும் மிகக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிற தனித் தன்மையுடைய ஒரு பிரச்சினை. எனவே சட்டமன்றத்தின் இறையாண்மையை நிலைநாட்டுகிற விதத்திலே—நீங்கள் எடுக்கிற முடிவு அமைய வேண்டும். இந்த மாமன்றத்தில் இருக்கிற அனைத்து உறுப்பினர்களும் அதற்குத் துணை இருப்பார்கள் என்பதைக் கூறிக்கொண்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Dr. K. Krishnasamy, please be brief.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம் தாமரைக்கனியை விடுதலை செய்தும், சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இரத்து செய்யும்படியும் கொடுத்திருக்கக்கூடிய தீர்ப்பின்மீது என்னுடைய கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்ற காரணத்தால் முதற்கண் நீதிமன்றத்தினுடைய உத்தரவுக்குப் பணிந்து அல்லது அதை ஏற்று, சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை முறையாக அமலாக்காதது சரியானதல்ல என்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த மூன்று நாட்களில் நடந்த நிகழ்ச்சியில் நீதிமன்றமா சட்டமன்றமா என்ற கேள்வி எழுந்து, இப்பொழுது வரை நீதிமன்றமே என்ற நிலை வந்திருப்பது ஒட்டுமொத்தமாக சட்டமன்றத்தின் மதிப்பைக் குறைத்துவிட்டதோ என்று நான் கருதுகிறேன். அது இன்று மட்டுமல்ல, எதிர்காலத்திலேயும் சட்டமன்றத்திற்கும் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய மதிப்பை ஒட்டுமொத்தமாகக் குறைத்துவிடும். எனவே, மோதலுக்குத் தயாராகக்கூடாது என்ற மனநிலை இல்லாமல், சட்டமன்றத்தினுடைய நடவடிக்கையை, அதாவது சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை அமலாக்கி இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆணித்தரமான வாதம்.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [1999 மார்ச் 26

*முற்பகல் 10-35*

ஓரடி சறுக்கியதன் விளைவாக, தொடர்ச்சியாக அதாவது முதல் நாள் நீங்கள் கொடுத்த தீர்ப்புக்கு இடைக்கால உத்தரவு கொடுத்த அந்த நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை ஏற்றுக்கொண்டதன் விளைவாக, இரண்டாவது நாள் சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தையே இரத்து செய்ய வேண்டுமென்ற தீர்ப்பும் வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, இப்பொழுது உங்கள் மீதே 3 கோடி ரூபாய்க்கு நட்டஈடு கேட்டு வழக்குத் தொடரக்கூடிய வாய்ப்பும் இருப்பதாகக்கூட சொல்லப்படுகிறது. எனவே, இப்படியே சென்றால், அவர் சொல்லியிருக்கிறார்—அந்த வழக்கைக்கூட ஏற்றுக்கொள்ளலாம். சொல்ல முடியாது, அந்த வழக்கைக்கூட நீதிமன்றத்தில் ஏற்று Notice அனுப்பலாம்.

நான் ஒன்று வினவ கடமைப்பட்டிருக்கிறேன். மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிற காரணத்தால், 3 பேர் மீது நிறைவேற்றிவிட்டீர்கள். 50 சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தக் கட்சியில் இருந்து, தினமும் 3 பேராக அடித்துக் கொண்டே இருந்தால், எப்படி நீங்கள் சட்டமன்றத்தை நடத்த முடியும்? தினமும் ஒருவர் ஒரு சட்டமன்ற உறுப்பினரையோ அல்லது அமைச்சரையோ அடித்துவிட்டு, Court-க்குச் சென்று கொண்டே இருந்தால், சட்டமன்றத்திலே, நிகழ்ச்சியை நடத்த முடியுமா? அவர்கள் வாய்ப்பு பெற்று இருக்கின்ற காரணத்தாலே, மத்தியிலே அவர்கள் பங்கு கொண்டு இருக்கிற காரணத்தாலே, நீதிமன்றத்திலே அவர்களாலே தடை பெற்று விட முடிகிறது. எனவே, 'வல்லான் வென்ற வாய்க்கால்' என்றல்லவா போய்விடும். எனவே, இந்தச் சட்டமன்றத்தினுடைய இறையாண்மையைக் காக்கக்கூடிய வகையில்—என்னைப் பொறுத்தமட்டில், நேற்றுகூட விடுதலை செய்தது, அதாவது நாம் சட்டமன்றத்திலே நிறைவேற்றிய தீர்மானத்தை முறையாக அமலாக்காமல், விடுதலை செய்தது தவறு என்பதுதான் புதிய தமிழகத்தினுடைய கருத்தாகக் கருதுகிறேன்.

நேற்றும், இன்றும் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுடைய முகத்தைப் பார்த்தால், மகிழ்ச்சி இல்லாத நிலை, காரணம், மோதலுக்குத் தயாராக வேண்டிய நேரத்தில்— மோதித்தான் ஆகவேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையென்றால் அது தவறாகிவிடும். இது ஒன்றும் நாமே போய் நீதிமன்றத்தினுடைய இறையாண்மையில் தலையிடுவதில்லை. நீங்கள் உங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தியிருக்கிறீர்கள். இந்த மன்றத்திற்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை எல்லோரும் பயன்படுத்தியிருக்கிறோம். எனவே, மோத வேண்டிய நேரத்தில்



1999 மார்ச் 26] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

மோதாமல் இருப்பது தவறானது என்பதை மட்டும் சுட்டிக்காட்டி, இந்தச் சட்டமன்றத்தினுடைய இறையாண்மையைக் காக்கக்கூடிய வகையில் மீண்டும் அதேபோன்று நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்திலே, இதனுடைய மரபுகளையும், சட்டமன்ற விதிமுறைகளையும் மிகக் கேவலப்படுத்தி, நாசப்படுத்திய ஓர் உறுப்பினர்மீது தாங்கள் நடைமுறைக்குட்பட்டு, அனைத்து உறுப்பினர்களுடைய ஒருமித்த கருத்துகளின் அடிப்படையிலே எடுத்த நடவடிக்கை, இப்போது நீதிமன்றத்தினாலே பிரச்சினைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே வேதனையான ஒரு செய்தி.

நம்முடைய அரசமைப்பை உருவாக்கித் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்கள் இந்த ஜனநாயக அமைப்பைப் பற்றி விவரிக்கின்ற வகையில், நாடாளுமன்றமும் சட்டமன்றமும் ஒருங்கே இருக்கின்ற ஆட்சி என்கிற அமைப்பு முதலாவது தூணாகவும் இந்த நாடாளுமன்றமும் சட்டமன்றமும் பிறப்பிக்கின்ற ஆணைகளை நிறைவேற்றுகின்ற நிருவாகமான Executive என்று சொல்லக்கூடியது இரண்டாவது தூணாகவும், இந்த இரண்டும் அரசமைப்பின்படி இயங்குகின்றனவா என்பதைக் கண்காணிக்கின்ற ஒரு பொறுப்பிலே இருந்து மீறப்படுகிறபொழுது, அது தனி நபரானாலும் அல்லது நாட்டினுடைய உரிமைகளானாலும், தலையிடுகின்ற ஒரு மூன்றாவது தூணாகவும்தான் நீதித் துறையை அவர்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

*முற்பகல் 10-40*

நான்காவதாக மக்கள் தொடர்பு சாதனங்கள் வருகின்றன. இந்த ஜனநாயகத்தினுடைய 4 தூண்களிலே அரசமைப்புச் சட்டம் சொல்லியிருக்கின்ற விதிமுறைகளைப் பாதுகாக்கின்ற, மதிக்கின்ற உரிமை சட்டமன்றத்திற்கு மட்டுமல்ல நீதிமன்றத்திற்கும் அந்த அரசமைப்புச் சட்ட விதிமுறைகளை மதிக்கின்ற, பாதுகாக்கின்ற கடமை, உரிமை இருப்பதாகத்தான் நம்மைப் பொறுத்த அளவில் இப்போதுள்ள இந்தச் சட்டத்தைப் பார்க்கிறபோது அறிந்துகொள்ள முடிகிறது.

நம்முடைய அரசமைப்புச் சட்டத்தினுடைய 105-வது பிரிவு, உட்பிரிவு 2-லே நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கான உரிமைகள்

எத்தனை வலிமை வாய்ந்தவை என்பதை நாடாளுமன்றத்திலோ அல்லது அதன் குழுக்களிலோ கூறிய கருத்துக்காகவோ, அளித்த வாக்குக்காகவோ நாடாளுமன்ற உறுப்பினர்மீது யாதொரு நடவடிக்கையும் எந்த நீதிமன்றத்தாலும் எடுக்க இயலாது என்று சொல்லி உறுப்பினர்களுக்கு உள்ள அந்தப் பாதுகாப்பை மிக வலியுறுத்திச் சொல்லக்கூடிய பகுதியாக அது இருக்கிறது. இப்படி உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்று சொல்லுகின்ற அதேநேரத்தில் இந்த அவையினுடைய உரிமையை, சட்டத்தை மதிக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் இருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

அதனை அடுத்து, நாடாளுமன்றத்திலோ அதன் அதிகாரத்தின் கீழோ வெளியிடப்படும் அறிக்கைகள், ஆவணங்கள், குறிப்புகள், நடவடிக்கைப் பதிவுகள்—Proceedings இவை குறித்தும் எந்த நபர் மீதும் நீதி நடவடிக்கை எடுக்க இயலாது என்றுதான் அரசமைப்புச் சட்டத்தினுடைய அந்த 105 வது பிரிவு, உட்பிரிவு 2 வலியுறுத்திச் சொல்கிறது.

நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புவது என்னவென்று சொன்னால் இப்போது வேலிகளே சில நேரங்களில் பயிரை மேய ஆரம்பித்துவிடுகின்றன. அரசமைப்புச் சட்டத்தினுடைய விதிமுறைகளைப் பாதுகாக்க வேண்டிய நீதிமன்றங்களே சில நேரங்களிலே நெருக்கடிக்கு ஆளாகி விடுகின்றனவோ என்ற அச்ச உணர்ச்சியை ஒரு குடிமகன், ஒரு பொறுப்பு வாய்ந்த இந்தியக் குடிமகன் என்ற வகையிலே நான் அந்தக் கவலையை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீதிமன்றங்களுக்கு நெருக்கடி வரலாம். ஆனால் ஒரு காலத்திலும் நீதிக்கு நெருக்கடி வரவே கூடாது என்பதற்காகத்தான் இந்த அவையிலே நீங்கள் எடுத்த அந்த நடவடிக்கைக்குத் துணையாக நாங்கள் உறுதியாக நிற்கிறோம், அந்த நடவடிக்கையை நீங்கள் தொடர வேண்டும். இன்னும்கூட இந்த அவையினுடைய இறையாண்மையைப் பாதுகாப்பதற்காக உள்ள தங்களுக்கான உரிமைகளை நீங்கள் நிலைநாட்ட வேண்டுமென்று நான் இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ் மறையான திருக்குறளில் சொல்லப்பட்டிருக்கின்ற ஒரு குறளை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்."

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். கொலை வெறி பிடித்த ஓர் உறுப்பினரைத்தான் நீங்கள் பயிரிலே இருந்து களையை அகற்றுவது



போல — அதுகூட தண்டனையாகக்கூட அல்ல; அவருக்கு ஒரு பாதுகாப்பு நடவடிக்கை என்றுகூட சொல்லலாம் — நீங்கள் எடுத்த அந்த நடவடிக்கை இந்த அவையினுடைய உரிமையை மீறியதற்காக, மரபுகளை உடைத்து எறிந்ததற்காக எடுத்த சரியான, முறையான நடவடிக்கை என்பதை நான் இந்தநேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதேநேரத்தில், அமெரிக்கா போன்ற நாடுகளிலே, அது நீதிமன்றம் ஆனாலும் சரி, காவல் துறையின் உயர்ந்த அதிகார பதவிகள் ஆனாலும் சரி, எல்லாவற்றுக்கும் பொறுப்பாக்குகின்ற தன்மை உண்டு; Accountability உண்டு. அப்படிப் பொறுப்பாக்குகின்ற தன்மை இருந்தால்தான் யாரும் தங்களுடைய கடமையை எந்தவித நெருக்கடிக்கும் ஆளாகாமல் செய்யமுடியும். அப்படி நெருக்கடிக்கு ஆளாகி ஏதேனும் தவறுதலாக நடப்பார்களானால் அவர்கள் எப்பேர்ப்பட்ட இடத்திலே இருந்தாலும், அவர்களும் தண்டனைக்கு உரியவர்கள் ஆவார்கள் என்கின்ற அந்த Accountability இந்தியத் திருநாட்டில் இல்லாமல் இருக்கின்ற காரணத்தால்தான் இப்படியெல்லாம் நடைபெற்றுவிடுகிறது. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஒரு தவறு செய்த, அதிலும் தெரிந்து செய்த,' என்று சொல்வார்கள். அதுபோல 300-க்கும் மேற்பட்ட சாட்சிகள்: அதாவது பார்வையாளர்கள், இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், அதிகாரிகள் எல்லோரும் உங்கள் முன்னாலே சாட்சிகளாக இருந்திருக்கிறார்கள். இங்கே இரண்டுவிதமான தண்டனைகள் தர முடியுமா ஒரே குற்றத்திற்கு என்று சொல்கிறார்கள். நீதித் துறையிலே 7 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை, 50 ஆயிரம் ரூபாய் அபராதம், இவை இரண்டையும் சேர்த்து விதிப்பார்கள். இல்லை என்று சொன்னால், அபராதத் தொகையைக் கட்டத் தவறினால் ஓர் ஆண்டு சிறைத் தண்டனையைச் சேர்த்து அனுபவிக்க வேண்டும் என்றெல்லாம் சொல்வது கிடையாதா? நீதித் துறையிலே அப்படி ஒரு நடைமுறை இல்லையா? ஆகவே, இப்படிப்பட்டதொரு தண்டனை என்றுகூடச் சொல்ல முடியாது. அவர்களை நீங்கள், ஒழுங்குமுறையை மீறியதற்காக சிறைக் காவலிலேதான் வைக்கச் சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, இந்த நடவடிக்கை உண்மையிலேயே குற்றம் இழைத்தவர்களுக்கு உரிய தண்டனையாக வரவேண்டும். கொலையிற் கொடியவர்களை வளர்ப்பதற்கு நீதிமன்றங்கள் உறுதுணையாக, துணையாகப் போகக்கூடாது; போவதற்கு யாரும் அனுமதிக்கக் கூடாது; இந்த மாமன்றம் அனுமதிக்க வேண்டாம் என்ற வேண்டுகோளை வைத்து,

உங்கள் நடவடிக்கையிலே உறுதியாக இருங்கள். மேலும், அந்த நடவடிக்கைக்கு வலுவூட்டக்கூடிய வகையிலே இந்த மாமன்றத்தினுடைய அனைத்து உறுப்பினர்களுடைய ஒத்துழைப்போடு நீங்கள் தொடர்ந்து செல்ல வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், மிகச் சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் பல உறுப்பினர்கள், இந்த அவையினுடைய இறையாண்மையைக் காப்பாற்ற வேண்டுமென்று, கருத்துகளை மிக ஆணித்தரமாக எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆனால், நாம் எல்லோருமே இப்படி ஆணித்தரமாகப் பேசிவிட்டு, கடைசியிலே நாம், மோதலே வேண்டாம் என்று சொல்லி, நம்முடைய அந்த வாதத்தை அப்படியே தண்ணீரிலே சோப்பைக் கரைத்துவிடுவதுபோலக் கரைத்து விடுகிறோமோ என்றுகூட எனக்கு அச்சமாக இருக்கிறது. பொதுவாக இறையாண்மை என்பது, நீதித் துறைக்கும் தனியாக இருக்கிறது. நமக்கும் தனியாக இருக்கிறது. நம் எல்லைக்குள் நாம்தான் ராஜா. அப்படி இருக்கும்போது, இந்த எல்லைக்குள் நடந்த நிகழ்வுகளுக்கு, உண்மையிலேயே நாம் என்ன செய்திருக்க வேண்டும் என்றால், முதலிலே தங்களுடைய உத்தரவுக்கு எதிராக தாமரைக்கனியை விடுதலை செய்த அந்தச் சிறையினுடைய அதிகாரியைப் பிடித்துக் கொண்டு வந்து நாம் நிறுத்தி இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தும்கூட. நீதிமன்றம் தனியாக எந்த உத்தரவாவது போடட்டும். அது அவர்களுடைய உரிமை. ஆனால், இந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு சட்ட வல்லுநர். நிறையப் படித்திருக்கிறீர்கள். நான் அதையெல்லாம் மறுக்கவில்லை. காவல் துறை ஆணையருக்கு, "நீங்கள் விடக்கூடாது" என்று நான் உத்தரவு போட்டு, அவர் அதை மீறிச் செய்வார் என்றால், நீங்கள் சொல்கிற மாதிரி அவர்களைக் கொண்டு வந்து நிறுத்தலாம். நாம் அவர்களுடைய நடவடிக்கையில் தலையிடவில்லை. நாம் எல்லோரும் சேர்ந்து எடுத்த முடிவு அது. ஆகையினால், அவர்களைப் பற்றிப் பேசிப் பிரயோசனம் இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாமரைக்கனி அவர்கள் இந்த இடத்தில் நடந்து கொண்ட பாங்கு



எல்லோருக்குமே தெரிந்த ஒன்று. அவர் இங்கு மட்டுமல்ல, ஒருவேளை அவர் நீதிமன்றத்திற்கு உள்ளேயிருந்து, அங்கே வாதம் செய்து, ஒருவேளை அங்கே நீதிபதி அவருக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கொடுக்கவில்லையென்றால், அந்த நீதிபதிக்குக்கூட தாமரைக்கனி தன்னுடைய மோதிரத்தால் குத்து விட்டிருக்கக்கூடிய ஒரு நிலைமை வந்திருக்கும். அவருடைய குணங்களைத் தெரியாமல் சிலபேர், அவருக்கு உரிமை வழங்குவதாகச் சொல்லிக்கொண்டு, நாம் எதையெதையோ பேசிக் கொண்டு இருக்கிறோமோ என்றுகூட எனக்கு அச்சம் இருக்கிறது. இதிலே நீதித் துறையில் அவர்கள் ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னாலும்கூட, நம்முடைய சட்டமன்ற வளாகத்திற்குள் நடக்கின்ற ஒரு நிகழ்ச்சி, இதிலே வந்து.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்சிக்கு ஒருவர் என்கிற முறையிலே விதிவிலக்குக் கொடுத்தது, நீங்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர் என்று நீங்களே சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள், ஆகையினால், நீதித் துறையிலே ஏதாவது தீர்ப்பு இருந்தால் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீர்ப்பிற்குத்தான் வருகிறேன். இதுபோன்ற வழக்குகள் வருகிறபோது, இந்த மோதலைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக, சில தீர்ப்புகள் நமக்கு முன்னுதாரணமாக அமைந்து நம்மை வழிநடத்திக் கொண்டிருக்கின்றன. அந்த வகையிலே, சில தீர்ப்புகளை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமையாகும். *1957*-லே பம்பாய் உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. அதிலே கொயாதி என்ற தலைமை நீதிபதி அவர்கள் சொல்கிறார். அதாவது

ILR 1957 Bombay 218

"The framers of the Constitution, intended the House alone to be the sole judge on a question of admitted privilege. To my mind, it is quite clear. Therefore, under Article 194 Sub-section (iii) when it is prescribed that the privileges shall be those of the House of Commons of the Parliament of United Kingdom, the power to punish for contempt is expressly conferred on the House in clear and unequivocal terms and therefore it must follow that the exercise of that power is identical with that of the House of Commons." என்று சொல்லி இருக்கிறார்கள்.

முற்பகல் 10-50

ஆகவே, இந்த நிகழ்வைப் பொறுத்த அளவில் தாங்கள்தான் இதற்கு நீதிபதியே ஒழிய வேறு யாரும் அல்ல என்பதை நான் இந்த இடத்திலே மிகத் தெளிவாகக் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். அதே தீர்ப்பிலேகூட, அடுத்த கட்டத்தில்,

"......The Legislative Assembly was fully entitled to protect its dignity by the exercise of the privilege expressly conferred on it under Article 194 and in exercise of that privilege it issued a warrant which on the face of it states that it is for contempt of the House and therefore that warrant being a general warrant is not subject to scrutiny and that it can be validly executed....." என்று வருகிறது. எனவே உங்களுடைய Warrant-ல் குறிப்பிட்டிருப்பதே contempt of the House என்பதுதான். இந்த அவையினுடைய மாண்பைச் சீர்குலைக்கின்ற வகையிலே அந்த உறுப்பினர் நடந்து கொண்டதற்காக மட்டுமேதான் நீங்கள் தண்டனையை வழங்கியிருக்கிறீர்கள். அப்படி தாங்கள் contempt of the House என்று குறிப்பிட்டு, அந்த Warrant-லே சொல்லப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டிருக்குமேயானால் அந்தத் தீர்ப்பில் நுழைவதற்கு வேறு யாருக்குமே அதிகாரம் இல்லை என்பதுதான் இந்தத் தீர்ப்பிலே மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்ற கருத்து. ஆகவே Courts of Law இதில் எந்த வகையிலும் தங்களுடைய மூக்கை நுழைக்க முடியாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்ராயம் என்பதைவிட மிக ஆணித்தரமான கருத்து என்பதை நான் இங்கே பதியக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, அஸ்ஸாம் உயர்நீதிமன்றத்தில் 1958-லே இன்னுமொரு தீர்ப்பும் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே

"It is well established now that the House of Commons in England has certain well-defined rights and privileges, honoured and sanctified by tradition and custom, one of the most important of them being the right to commit a person for comtempt of its high authority and for breach of its privileges. This power extends not merely to members of the House but even to persons outside it and when the House acts in vindication of these rights and privileges, the Courts of the land have no right to interfere." என்று, அதாவது நீதிமன்றங்கள் தலையிடவே முடியாது என்பதுதான் அஸ்ஸாம் உயர் நீதிமன்றத்திலே 1958-ல் தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கிறது.





"No right to interfere. The proper forum is the House itself where the person affected can claim the redress of his rights. By virtue of the Indian Constitution, these powers and privileges are enjoyed by Houses of Parliament in India and the Houses of State Legislature." என்று மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது, அந்தத் தீர்ப்பிலே. இன்னுமொரு தீர்ப்பிலும்கூட......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த இரண்டு தீர்ப்பே போதும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்திலே திரு. இதயதுல்லா அவர்களே சொல்லி இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உச்ச நீதிமன்றத் தீர்ப்பைச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** 1950-லே திரு. இதயதுல்லா, Chief Justice அவர்களாலே சொல்லப்பட்டிருக்கிற ஒன்றிலேகூட அவர்கள்

"The House had the right to commit for breach of privileges or for conduct amounting to contempt." என்று சொல்லியிருக்கிறார். அதாவது இந்த privilege-ஐப் பொறுத்த அளவிலோ அல்லது contempt of the House என்பதைப் பொறுத்த அளவிலோ எப்பொழுதுமே சட்டமன்றம்தான் அல்லது நாடாளுமன்றம்தான் உ[illegible]ந்து; அவர்கள்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதைச் சொல்லி, அதிலே வேறு யாராவது இருந்தால், நாடாளுமன்றத்தினுடைய அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டால் மட்டும் மற்றவர்கள் தலையிடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல உச்ச நீதிமன்றத்திலே இன்னொரு தீர்ப்பிலே அதாவது 1959 Supreme Court A.R. என்கிற தீர்ப்பில்

"The Courts of Law in India have recognised that a House of Parliament or a State Legislature is the sole authority to judge as to whether or not there has been a breach of privilege in a particular case. It has also been held that the power of the House to commit for contempt is identical with that of the House of Commons and that a Court of Law would be incompetent to scrutinize the exercise of that power." என்று கூறப்பட்டு இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற contempt of the House அல்லது சட்டமன்றத்தினுடைய அந்த உரிமையில் தலையிடக்கூடியவர்களுடைய செய்கையைப் பொறுத்த அளவில் நீதிமன்றங்கள் நிச்சயமாகத் தலையிடமுடியாது என்பதை மட்டும் அல்ல, அவை incompetent; அவர்கள் நுழையவே தகுதியற்றவர்கள் என்கிற கருத்தை உச்சநீதிமன்றம்

ஏற்கெனவே இந்தத் தீர்ப்பில் மிக ஆணித்தரமாக வலியுறுத்தி இருக்கின்ற காரணத்தாலே உங்களுடைய செயல்பாடுகள் என்பது நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற உரிமை. அதாவது, நாம் ஏனோ தானோ என்று தீர்ப்பை வழங்கிவிடவில்லை. நமக்கு அரசமைப்பு சாசனம் வழங்கியிருக்கிற அந்த வரையறைக்குள் நின்றுதான் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். தாங்களும் அந்தத் தீர்ப்பை மிக அழகாக, நிதானமாக, எழுதிக் காட்டியிருக்கிறீர்கள். இப்படிப்பட்ட உங்களை நம்பித்தான் நாங்கள் இந்தச் சட்டமன்றத்திலே பேசிக் கொண்டிருக்கிறோம். எங்களுக்கு இந்தச் சட்டமன்றத்திற்குள்ளே நாங்கள் எதையும் பேசலாம் என்ற உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற சிலவற்றை நீங்கள் அனுமதித்து விடுவீர்களேயானால், நீதிமன்றங்கள் தங்கள் இஷ்டத்திற்குத் தலையிட்டு, சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமையைப் பாதிக்கக்கூடிய வகையிலே, இது அமைந்து விடுமேயானால், நாளைக்கு எங்களாலே இந்த அவையிலே எதுவுமே பேச முடியாமல் போய்விடும். நாளைக்கு நாங்கள் எல்லாம் நீதிமன்றத்தினுடைய கதவைத் தட்டி, அங்கே சிறைக் கம்பிகளை எண்ண வேண்டிய நிலைமைகூட வந்துவிடும். எங்களுக்குப் போதிய உரிமையை அளிக்க வேண்டியது தங்களுடைய தலையாய கடமை. அந்தவகையிலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவற்றை ஏதோ தமிழக சட்டமன்றத்திற்குள்ளே மட்டும் நடந்து கொண்டிருக்கிற நிகழ்வுகளாக நீங்கள் கருதிவிடாமல், உங்களுடைய தீர்ப்பு என்பது, நீங்கள் இந்த இறையாண்மையைக் காக்கக்கூடிய செயல் என்பது, இந்திய நாட்டிற்கு மட்டுமல்ல; உலகத்திற்கே எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய ஒன்றாக அமைய வேண்டும்.

*முற்பகல் 10-55*

Legislature என்பதன் Sovereignty, அந்த இறையாண்மை உங்களுடைய கையில் இப்போது பாதுகாப்பாக இருக்கிறது; அது இன்னும் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த இறையாண்மையில் ஒரு சிறு கீரல்கூட விழுவதற்குத் தாங்கள் அனுமதிக்கக் கூடாது. ஆகவே, இந்தச் சட்டமன்றத்தினுடைய இறையாண்மையைத் தாங்கள் சட்ட விதிகளுக்குட்பட்டு, அரசமைப்பு சாசனம் என்ற அந்தக் கட்டுக்கோப்பிற்குள் நின்று, நாம் செயலாற்றிருக்கக்கூடிய இந்தச் செயலுக்கும் நீங்கள் மகத்துவத்தை அளித்து, உங்களுடைய தீர்ப்பைச் செயல்படுத்துவதற்கு நீங்கள் வழிகாண வேண்டும்.

மோதல் மோதல் என்று சொல்லிக் கொண்டிருப்பதைவிட, இந்தச் சட்டமன்றத்தினுடைய இறையாண்மையில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்; ஆணித்தரமாக இருக்கிறோம். எங்களுடைய உரிமை



பாதுகாக்கப்பட வேண்டும் என்று நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பே சொல்லியிருக்கிறது. ஆகவே, நாம் இந்த நீதிமன்றம் சொல்லியதற்கு விரோதமாகப் போய்விட்டோமே என்று கருதிவிடாதீர்கள். உச்சநீதிமன்றமே இப்போது உங்களுக்கு வழிகாட்டியிருக்கிறது. ஆகவே, உங்களுடைய இறையாண்மைக்குள் யாருமே தலையிட முடியாது என்று சொல்லி என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தாமரைக்கனி விவகாரம் என்பது ஒரு மிகப் பெரிய சதி என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதாவது, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் டெல்லிக்குப் போவதற்கும், அதேநேரத்தில் இந்தச் சட்டமன்றத்திலே இந்தப் பிரச்சினையை எழுப்புவதற்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கிறது. இந்தச் சதியை நாம் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையோ என்றுகூட நான் கருதுகிறேன். ஆனால் நம்முடைய சபாநாயகர் அவர்கள் மிகத் தெளிவாக இந்தச் சதியை முறியடித்து விட்டார்கள் என்று நான் ஆணித்தரமாகத் தெரிவிக்க முடியும்.

நேற்று என்ன நடந்தது என்று சொன்னால், நீதிமன்றத்தில் நமக்கு விரோதமாக ஒரு தீர்ப்பு வந்தது. வந்தவுடன் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் அந்த நீதிமன்றத் தீர்ப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அறிவித்திருந்தால், இந்நேரம் டெல்லியிலே இன்றைக்குக் காலையிலே முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா இருப்பதனால், உடனே அங்கே ஒரு பெரிய பிரச்சினையைக் கிளப்பி, அங்கே இருக்கிற அரசாங்கத்தில் உள்ள அந்த சட்ட அமைச்சர்—அவர் முழுக்க முழுக்க இந்த மன்றத்திற்கு விரோதமானவர் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்; அவர்—உடனே பாரதப் பிரதமரை அணுகி, நீங்கள் இரண்டு மாதங்களாவது suspend செய்து வையுங்கள் இந்த அரசாங்கத்தை; அதற்குள்ளே நாங்கள் case-களை எல்லாம் முடித்துக் கொள்கிறோம் என்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சதியை நம்முடைய சபாநாயகர் அவர்கள் மிகத் திறமையாக முறியடித்திருக்கிறார்கள். இதைப் பத்திரிகைகள் எல்லாம்கூட நன்றாக எழுதியிருக்கின்றன. நம்முடைய சட்ட வல்லுநராக இருக்கின்ற திரு. சிதம்பரம் அவர்கள், உச்சநீதிமன்றத்தினுடைய நீதிபதியாக இருந்த நீதிபதி மோகன் அவர்கள் எல்லாம்கூட நம்முடைய உயர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பு தவறு

என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். வருகின்ற 30ஆம் தேதி தீர்ப்பைப் பார்த்துக் கொண்டு, தனது முடிவைச் சொல்கிறேன் என்று பெருந்தன்மையோடு நேற்று நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் ஓர் அறிவிப்பினை வெளியிட்டார்கள். அதை இன்று எல்லாப் பத்திரிகைகளும் பாராட்டியிருக்கின்றன. இன்று முரசொலியிலேகூட, Hindustan Times என்ற பத்திரிகையின் செய்தியை எடுத்து போட்டிருந்தார்கள். இன்று இந்தியா முழுவதும் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுடைய பெருந்தன்மையை, நாகரிகத்தைப் பாராட்டி எழுதியிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-00*

நான் நம்முடைய இந்த அவைக்கு வேண்டுகோள் விடுப்பது என்ன என்று சொன்னால், தாமரைக்கனியின் சதியை அன்றைக்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருந்திருந்தால் முறியடித்திருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பேசுங்கள், நீங்கள் என்னவேண்டுமென்றாலும் பேசுங்கள் என்று அவரை அனுமதித்து, எல்லோரையும் கையைக் கட்டி உட்கார வைத்திருக்கக்கூடிய சக்தி முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு, அதை அவர் செய்திருப்பார். அவர்கள் இல்லாததன் காரணமாக இந்த நிகழ்ச்சி நடந்துவிட்டது. அதேபோல இப்போது நம்முடைய உயர் நீதிமன்றத்திலே ஒரு பிரச்சினை. அங்கே தலைமை நீதிபதி இப்போது இல்லை. தலைமை நீதிபதி இல்லாததன் காரணமாக, அங்கே பல குழப்பங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அங்கே பலர் அவர்களுடைய வேலைகளையெல்லாம் செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதுகுறித்து நான் ஏதாவது சட்டவிரோதமாகச் சொல்லியிருந்தால் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் அதனைப் பார்த்து, தவறாக இருந்தால், அதை எடுத்துவிட வேண்டுகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு உடனே ஒரு தலைமை நீதிபதியை அங்கே நியமித்தாக வேண்டும். இல்லையென்றால் இன்னும் என்னென்ன குழப்பங்கள் வருமோ என்று நமக்குத் தெரியாது. ஆகவே, தயவுசெய்து உடனடியாகத் தலைமை நீதிபதி நியமிக்கப்பட வேண்டும். நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னது போல 30 ஆம் தேதி வரை பொறுத்து, 30ந் தேதியும் இந்த உயர் நீதிமன்றம் நமக்கு விரோதமாகத் தீர்ப்பு அளிக்குமேயானால் இந்த நாட்டினுடைய மிக உயர்ந்த பதவியிலிருக்கின்ற நாணயத்திற்கும், நேர்மைக்கும் பெயர்போன நம்முடைய ஜனாதிபதி



அவர்களையே நாம் அணுகி இதற்கு நீதி கேட்கலாம் என்பதை தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நீதிமன்றத்திலே வழங்கப்பட்டுள்ள ஓர் இடைக்காலத் தீர்ப்பு, ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ள நிலை, இவை குறித்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றக் கட்சிகளின் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் பல சட்ட நுணுக்கங்களின் அடிப்படையிலும், உச்ச நீதிமன்றத்திலேயிருந்து பல்வேறு உயர் நீதிமன்றங்கள் வரையில் வழங்கப்பட்டத் தீர்ப்புகளின் அடிப்படையிலும், அருமையான வாதங்களை இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசும்பொழுதும், அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்பொழுதும், நாம் தணிந்து போகிறோம்; பணிந்து போகிறோம்; அது கூடாது என்று ஓர் அறிவுரையை இந்த அவைக்கு அல்லது தங்களுக்கு அல்லது எங்களுக்கு அல்லது நமக்கு வழங்கியிருக்கிறார்கள்.

ஞானசேகரன் சொன்னார், சோப்பு, தண்ணீரில் விழுந்ததைப் போலக் கரைந்துவிட்டீர்கள் என்று. சோப்பை வெறுமனே மேலே போட்டுக்கொண்டால் அது பயன்படாது. தண்ணீரில் நனைத்துத்தான் சோப்பை உடம்பிலே தேய்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சோப்பினால் பயன் இருக்காது. நாம் தணிந்து போகிறோம் என்றால் ஒன்றைச் சொல்ல வேண்டும். ஒரு வீடு கட்டும்போது அந்த வீட்டைப் பாதுகாக்க கதவை வைக்கிறோம். கதவு இல்லாமல் வீடு கட்ட முடியாது. அந்தக் கதவுக்குப் பிடிமானமாக நிலைப்படியும் அமைக்கிறோம். அமைக்கப்பட்ட நிலைப்படியின் உயரம் குறைவாக இருந்தால் உயரமானவர்கள் உள்ளே செல்லும்போது குனிந்துதான் செல்லவேண்டும்; என்ன செய்வது? நிலைப்படி அப்படியிருக்கிறதே! நாம் உயரமான மனிதர்களாக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, குனிந்து செல்ல வேண்டிய நிலைமை நமக்கு ஏற்பட்டு இருக்கிறது. இல்லை நிமிர்ந்துதான் செல்வேன் என்று கிருஷ்ணசாமியைப் போல, ஞானசேகரனைப் போலச் சொன்னால் நிலையின் மீது குற்றமில்லை. நம்முடைய தலையில் நாமே அடித்துக் கொள்வோம். எனவே, சில நேரங்களில் சாதுர்யங்களும் தேவைப்படுகின்றன. சாதுர்யத்தைப்

பயன்படுத்துகின்ற காரணத்தால் சுயமரியாதையை இழந்துவிட வேண்டும் என்று யாரும் கருதமாட்டார்கள்.

*முற்பகல் 11-05*

நாம் எடுத்துள்ள நிலை நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல பல்லோராலும் பாராட்டப்பட்டு இருக்கிறது. டெல்லி, கல்கத்தா, பம்பாய் போன்ற பகுதிகளிலேயிருந்து வெளிவருகின்ற ஆங்கில நாளேடுகள் அனைத்தும் நம்முடைய நிலையை ஆதரித்து எழுதியிருக்கின்றன. பெங்களூர் போன்ற பகுதிகளிலிருந்து வருகின்ற ஏடுகளிலும் நம்முடைய நிலை ஆதரிக்கப்பட்டு இருக்கிறது. இன்றைய தினம் இந்து பத்திரிகையிலே எழுதப்பட்டுள்ள தலையங்கத்தில்கூட,

"In the present context, it is commendable that the Legislature and the Executive have shown an eagerness to avoid a confrontation with the judiciary, witness the Speaker, Mr. P.T.R. Palanivel Rajan's categorical declaration that the Assembly had no intention of crossing swords with the judiciary and the Chief Minister, Mr. M. Karunanidhi's statement that he would act as a 'bridge' between the two. Yet another positive signal is provided by the readiness with which the administration has complied with the High Court's order directing the release of Mr. Thamaraikani on bail. One hopes that this trend continues with matching indications by the judiciary, that it recognises that the questions involved are extremely sensitive, given that they have a significant bearing on the functioning of the Constitutional scheme of things." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி இந்த மாமன்றத்திற்கு ஒரு மகத்தான சிறப்பைச் சேர்க்கின்ற வகையில் நாம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற கடமையின்பாற்பட்ட அணுகுமுறை சிறந்தது, வரவேற்கத்தக்கது என்ற நிலையும் நாடு முழுவதும் இன்றைக்கு உருவாகியிருக்கிறது. இந்தப் பிரச்சினை குறித்துச் சொல்ல வேண்டுமேயானால், இது ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அ.இ.அ.தி.மு.க. கட்சிக்கும் இடையிலே ஏற்பட்ட பிரச்சினை என்று மாத்திரம் இதைப் பார்க்கக் கூடாது. அதுபோல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பல்வேறு கட்சிகளின் சார்பில் அமர்ந்து இருக்கின்ற உறுப்பினர்கள் அடங்கிய இந்தப் பேரவைக்கும், நீதிமன்றத்திற்கும் இடையிலே ஏற்பட்டுள்ள பிரச்சினை என்று மாத்திரம் இதைக் கருதி விட்டுவிட முடியாது அல்லது நீதிபதிக்கும் இங்கே அமர்ந்திருக்கின்ற பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் இடையிலே ஏற்பட்டுள்ள பிரச்சினை என்று மாத்திரம் எடுத்துக்கொள்ள முடியாது. பிறகென்ன?



அரசமைப்பு சாசனத்தில், நீதிமன்றத்திலே உள்ள இறையாண்மை, அதனுடைய எல்லை என்ன, அதைப்போல சட்டமன்றத்திற்கு தரப்பட்டுள்ள இறையாண்மை, அதனுடைய எல்லை என்ன என்பதை அறுதியிட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு காலகட்டத்தில் இன்றைக்கு நாம் இருக்கின்றோம். எல்லாவற்றிற்கும் வழிகாட்டியாக தமிழ்நாடு இருப்பதைப்போல இந்தியா முழுமைக்கும் உள்ள நாடாளுமன்ற, சட்டமன்றங்களுக்கு வழிகாட்டியாக (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது தமிழ்நாட்டிலே உருவாகியிருக்கின்ற இந்தப் பிரச்சினை இருக்கும் என்று நான் நம்புகின்றேன். எனவே, உறுப்பினர்கள் எல்லாம் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, அகில இந்திய அளவிலே—ஏதோ ஒரு தமிழ்நாடு சட்டமன்றம் என்ற அளவிலே எடுத்துக்கொள்ளாமல், அகில இந்திய அளவிலே—உள்ள பல்வேறு சட்டமன்றங்களினுடைய இறையாண்மையைப்பற்றி நாம் இங்கே எடுக்கின்ற முடிவுகள்தான் அவர்களையும் பாதிக்கக்கூடிய முடிவுகளாக இருக்க முடியும். எல்லா மாநிலங்களிலுமுள்ள சட்டமன்றங்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவரும் தமிழ்நாட்டிலே எழுந்துள்ள இந்தப் பிரச்சினை குறித்து ஆழ்ந்த கவலையோடு இருக்கின்றார்கள்; விசாரித்துக் கொண்டிருக்கின்றார்கள். தங்களுக்கும் அது சம்பந்தமாக தொலைபேசி அழைப்புகள் வருகின்றன; எங்களுக்கும் வருகின்றன. எனவே, இங்கே எடுக்கும் நிலையைப் பொறுத்துத்தான் மற்ற சட்டமன்றங்கள் நடந்துகொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இதற்கான ஒரு நல்ல முடிவை எடுக்க நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் ஒரு கருத்தைச் சொன்னார். உடனடியாக ஒரு தலைமை நீதிபதியை நியமிக்க முயற்சிக்க வேண்டுமென்று முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன் என்று சொன்னார். அவர் ஏதோ பழைய ஞாபகத்தில், போயஸ் கார்டனில் இருக்கிற முதலமைச்சரைக் கேட்டுக் கொள்வதைப்போல கேட்டுக் கொண்டார். நான் இப்போது, போயஸ் கார்டனிலே உள்ள முதலமைச்சர் அல்ல; நான் சொன்னவுடனே மத்தியிலே இருக்கிற அரசு அதை உடனே கேட்டு, 'அப்படியா' நாளைக்கே ஒரு நிரந்தரமான தலைமை நீதிபதியை நியமிக்கிறேன், என்று சொல்வதற்கு அங்கே யாரும் இல்லை. எனவே, நாமேதான் நமக்காகப் போராட வேண்டும். நமக்கான நிலையை உருவாக்க வேண்டும். சட்டமன்றத்தினுடைய இறையாண்மையைக் காப்பாற்ற நாமே தான் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். நான் நிச்சயமாகச் சொல்கின்றேன், இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு இந்தப்

பேரவையினுடைய இறையாண்மையைக் காப்பாற்றுகின்ற வகையில் நிச்சயமாக நாம் அநாதைகளாக விடப்படமாட்டோம் என்பதை மாத்திரம் உங்களுக்கு நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதற்குமேலாக தொடர்ந்து கருத்துகளை நம்முடைய பேரவையினுடைய தலைவர் அவர்கள், நாம் எல்லாம் நம்பிக்கை பெறுகின்ற அளவிற்கு இங்கே கூறுவார்கள் என்று எதிர்பார்த்து, கூறவேண்டும் என்று அன்போடும், பணிவன்போடும் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒட்டுமொத்தமாக இந்நாட்டிலே இருக்கின்ற உணர்வை மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு இருக்கின்ற வாதத் திறமையிலே ஆயிரத்தில் ஒரு பங்குகூட எனக்கு இல்லை என்ற காரணத்தால் நான் சிறப்பாக எதையும் எடுத்துச் சொல்ல முடியாது. ஆனால், ஒரு கருத்தை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல பல்வேறு மாநில சட்டப் பேரவைத் தலைவர்கள், மேலவைத் தலைவர்கள் என்னோடு தொடர்புகொண்டு இந்தப் பிரச்சினையிலே தங்கள் கவலையைத் தெரிவித்தார்கள். அதன் காரணமாக, நேற்று இரவு நான் மக்களவைத் தலைவர் மாண்புமிகு பாலயோகி அவர்களோடு தொடர்பு கொண்டேன். நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்ட காரணத்தால் அவர்கள் அமலாபுரத்திலே—அவருடைய தொகுதியிலே இருந்தார்கள். நேற்றையதினம் தொலைபேசி மூலமாகப் பேசினேன். நான் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் பேசுகின்றேன் என்று சொன்னவுடனேயே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையையும், தமிழ்நாடு அரசையும் நான் மனமாரப் பாராட்டுகின்றேன் என்று முதல் வார்த்தையிலே அவர் சொன்னார். *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்தப் பாராட்டை ஒருமுறை அல்ல, 5 நிமிடம் தொலைபேசியில் நான் பேசுகின்ற நேரத்தில் 5 தடவை சொன்னார்கள். ஆகவே, அந்தப் பாராட்டு அரசுக்கு உரியது, நம்முடைய பேரவைக்கு உரியது. உங்கள் சார்பிலே நான் பெற்றுக்கொண்டேன், அவ்வளவுதான்.

நான் அவரிடம் ஒரு கருத்தைச் சொன்னேன். இதிலே ஏராளமான பேரவைத் தலைவர்கள், மேலவைத் தலைவர்கள் கருத்து தெரிவிக்கின்றார்கள்; ஆதரவு தெரிவிக்கின்றார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, மற்றவர்கள்



சொன்னதைப்போல இது தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய பிரச்சினை அல்ல, இனிமேல் இது இந்திய ஜனநாயகத்தின் பிரச்சினை. அகில இந்திய பேரவைத் தலைவர்கள் மாநாடு என்ற ஓர் அமைப்பு இருக்கின்றது. அந்த அமைப்பின் தலைவர், நாடாளுமன்ற, மக்களவைத் தலைவர் அவர்கள். ஆகவே இதிலே நம்முடைய நிலை என்ன என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டேன். என்ன செய்யலாம் என்று கேட்டார்கள். உடனடியாக நம்முடைய அகில இந்திய பேரவைத் தலைவர்கள் சங்கக் கூட்டத்தை நாம் கூட்ட வேண்டுமென்ற கருத்தைச் சொன்னேன். உடனடியாகக் கூட்டலாம் என்றுகூட அவர்கள் கருத்து தெரிவித்துவிட்டார்கள். 30 ஆம் தேதிக்கு முன்னாலேயே கூட்டிவிடலாம் என்று சொன்னார்கள். நான் 30 ஆம் தேதிக்கு முன்னால் கூட்ட வேண்டிய அவசியம் இல்லை. 30 ஆம் தேதி ஏதோ வாய்தா நடப்பதாகச் சொல்கின்றார்கள். ஆகவே ஏப்ரல் முதல் வாரம் கூட்டலாம் என்ற கருத்தைச் சொன்னேன். அதற்கும் உடனடியாக இசைவைத் தந்துவிட்டார்கள். நான் 30 ஆம் தேதி வேண்டாம் என்று சொன்னதற்குக் காரணம், இங்கே உயர் நீதிமன்றத்திலே வாய்தா நடக்கப் போவதாகச் சொல்லியிருக்கின்றார்கள். 30 ஆம் தேதி வாய்தாவிலே நமக்கு எதிர்பார்க்கின்ற நியாயமான தீர்ப்பு கிடைக்கும் என்று எனக்கு நம்பிக்கை கிடையாது. ஆகவே, இதை அவைக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். எப்படி முன்னாள் முதலமைச்சர் இந்தத் தீர்ப்பு நான் எதிர்பார்த்த ஒன்று என்று சொன்னார்களோ, அதைப் போலவே எனக்குச் சொல்ல உரிமை உண்டு. தீர்ப்பைப் பற்றி என்னுடைய தனிப்பட்ட கருத்தைச் சொல்ல உரிமை உண்டு.

தீர்ப்பு நமக்குச் சாதகமாக இருக்குமென்ற நம்பிக்கை எனக்குக் கிடையாது என்று சொல்வதற்கு மூன்று காரணங்களை மட்டும் சொல்லலாம் என்று இருக்கின்றேன்.

*முற்பகல் 11-15*

முதலிலே இந்த Writ of Habeas Corpus என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். 'யாரோ அழைத்துச் சென்றார்கள் என் குடும்பத்திலே ஒருவரை. மூன்று நாட்களாக அவர் எங்கே இருக்கின்றார் என்று தெரியாது; எந்தக் காவல் நிலையத்திலே கேட்டாலும் அவர்கள் இல்லை என்கிறார்கள்; சிறைச்சாலையில் கேட்டால் இல்லை என்கின்றார்கள்; அவர் எங்கே இருக்கின்றார் என்பது தெரியவில்லை, ஆகவே ஆளைக் கொண்டு வந்து நீதிமன்றத்திலே நிறுத்த வேண்டும்" என்பதுதான் Writ of Habeas Corpus. இந்த Writ-ஐ தான் முதலிலே போட்டார்கள், இது திரு. தாமரைக்கனியைப் பொறுத்தவரையில் பொருத்தமில்லை என்று அன்றே பலபேர் சொன்னார்கள். காரணம், அவர் சென்னைச்

சிறைச்சாலையில் பத்திரமாக இருக்கிறார் என்பது நாட்டுக்கே தெரியும். இருந்தாலும் அன்று அந்த Writ-ஐ ஏற்றுக்கொண்டார்கள். அந்த Writ-ஐ ஏற்றுக்கொண்டு, காலாவதியான ஒரு உத்தரவின் பேரில் அந்த உத்தரவுக்குத் தடை விதித்து விடுதலை செய்தார்கள். ஆனால், ஒரு நியாயத்தைச் சொல்ல வேண்டும். அவர்கள் என்னுடைய 22 ஆம் தேதி உத்தரவுக்குத் தடை விதித்த நேரத்தில், அந்த உத்தரவை நானே ரத்து செய்துவிட்டேன் என்பது அவர்களுக்குத் தெரிவதற்கு நியாயமில்லை. ஆகவே, அன்று அந்த உத்தரவுக்கு ஒரு தடையுத்தரவைப் பிறப்பித்து, சட்டமன்ற உறுப்பினர் தாமரைக்கனியை விடுதலை செய்ய வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பித்தார்கள். ஆனால் 24 ஆம் தேதி காலையில் அரசாங்கத் தலைமை வழக்கறிஞர் — Advocate General — அவரை அரசாங்க வழக்கறிஞர் என்றுகூடச் சொல்ல முடியாது, அவர் நீதிமன்றத்திற்கு உதவக்கூடிய ஓர் அதிகாரி என்றுதான் சொல்வார்கள். He is the Officer of the Court. ஆங்கிலத்திலே சொல்ல வேண்டுமென்றால் He is the friend of the Court என்ற முறையிலே அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். "நேற்றையதினம் நீங்கள் ஜாமீன் கொடுக்கின்ற நேரத்திலே, இந்த உத்தரவுக்குத் தற்காலிகத் தடை விதித்திருக்கின்றீர்கள். ஆனால் இந்த உத்தரவுக்கு நீங்கள் தடை விதிப்பதற்கு முன்னாலேயே பேரவைத் தலைவர் அந்த உத்தரவை இரத்து செய்துவிட்டார்கள். ஆகவே, அது காலாவதியான உத்தரவு. அதற்குத் தடை இருக்க முடியாது" என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார். அதனை அவர்கள் கேட்கத் தயாராக இல்லை.

இன்னொரு காரணம் சொல்கின்றேன். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் நடந்து 24 ஆம் தேதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருத்தின்படி, சட்டமன்றத்தில் ஓர் உத்தரவு கொடுத்திருக்கின்றார்கள், அவரை உள்ளே வைக்க வேண்டுமென்று, நீதிமன்றமும் ஓர் உத்தரவு கொடுத்திருக்கின்றது, ஜாமீன் கொடுத்து. இதிலே எந்த உத்தரவை சிறைச்சாலை அதிகாரிகள் கடைப்பிடிக்க வேண்டுமென்று. நாம் எந்த முடிவும் எடுக்காமல், நீதிபதிகளிடமே அந்தப் பிரச்சினையை விட்டுவிட்டோம். நீதிபதிகள் நாங்கள் கொடுத்த ஜாமீனை முதலிலே அமல் செய்யுங்கள், பிறகு மற்றதைப் பார்க்கலாம் என்றார்கள். அதன்படி அவர் அன்று ஜாமீனிலே விடப்பட்டார். அன்று மாலையில் இந்த சிறைச்சாலை அதிகாரிமீது நீதிமன்ற அவமதிப்புத் தண்டனை விதிக்க வேண்டுமென்று தாமரைக்கனி அவர்கள் சார்பிலே ஆஜரான வழக்கறிஞர்கள் சொன்னார்கள். Contempt of the Court கிடையாது என்று நீதிபதிகள் சொன்னதாக ஏறத்தாழ தமிழ்நாட்டிலே எல்லா பத்திரிகைகளிலுமே நேற்று காலையிலேயே செய்தி வந்துவிட்டது. எல்லா



உறுப்பினர்களுமே பார்த்திருப்பீர்கள். நான் அந்தப் பத்திரிகைகளை எல்லாம் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கின்றேன். ஆனால், ஆச்சரியம் என்னவென்றால், நேற்று காலையில் 2-வது முறையாக தாமரைக்கனி அவர்களை விடுதலை செய்கின்ற நேரத்தில் இந்தச் சிறைத் துறை Superintendent-க்கு மீண்டும் ஒரு Contempt Notice-ஐ அனுப்பி வைத்திருக்கின்றார்கள். Contempt கிடையாது என்று நீதிபதிகள் சொல்லிவிட்டார்கள் என்று எல்லா பத்திரிகைகளும் எழுதிய பிறகும் மீண்டும் ஒரு தடவை இந்த Contempt Notice-ஐ அனுப்பி வைத்திருக்கின்றார்கள். ஆகவே, 30 ஆம் தேதி பெரிதாக எதுவும் வரும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இதை உங்களுக்கு முதலிலேயே சொல்லவேண்டும். ஏனென்றால், பின்னால், 30 ஆம் தேதி ஒன்றும் வரவில்லை என்று இந்த உறுப்பினர்களெல்லாம் மிகவும் வருத்தத்தோடு இருக்கிறார்கள் என்று பலபேர் பேசினார்கள். 30 ஆம் தேதி — மீண்டும் வருத்தப்படக் கூடாது (சிரிப்பு). ஆகையினால், என்னைப் பொறுத்தவரையில் இன்னொரு கருத்தையும் நம்முடைய நாடாளுமன்ற சபாநாயகர் அவர்களிடம் சொன்னேன். இதைப் பேரவைத் தலைவர்கள் எல்லாம் கூடிப்பேசி, தேவைப்பட்டால் குடியரசுத் தலைவரை. நாம் தூதுக் குழுவாகச் சென்று பார்க்கலாம் என்ற கருத்தையும் சொன்னேன். அவர்கள் அந்தக் கருத்திற்கும் இசைவு தந்திருக்கிறார்கள். தேவைப்பட்டால், பேரவைத் தலைவர்கள் சார்பிலே ஒரு தூதுக் குழு போய் குடியரசுத் தலைவரைச் சந்தித்து இது பெரிதாக ஒரு பிரச்சினையாக வராமல் அவர் தலையிட்டுத் தடுக்க வேண்டுமென்று சொல்லலாம் என்ற ஒரு கருத்தையும் அவர் ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆகவே, இந்த அளவோடு இந்தப் பிரச்சினையை முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகின்றேன்.

இந்தப் பிரச்சினை குறித்து, உறுப்பினர் திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களும் அறிவிப்பு கொடுத்திருக்கின்றார்கள் என்பதை மட்டும் இப்போது அறிவிக்கின்றேன்.

அடுத்து, நிதிநிலை அறிக்கையை மறந்தேபோய்விட்டோம், மூன்று நாட்களாக. ஆகவே, இந்த அளவோடு நிறுத்திவிடலாம். இந்த தாமரைக்கனி விவகாரத்தை இனிமேல் நாம் இங்கே பேசவே வேண்டிய தேவையில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, இங்கே யாரும் பயந்தவர்களோ, சளைத்தவர்களோ இல்லை. நாட்டின் நலன் கருதி எவ்வளவு அமைதியாகப் போக முடியுமோ போய் விடுவோம், அந்தப் பாதையிலே போவோம். தேவைப்பட்டால் எந்த முடிவிற்கும் தயாராக நிற்போம் என்ற உறுதியை அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முற்பகல் 11-20

## 6. வரவு-செலவுத் திட்டம் 1999-2000, பொது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1999-2000 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம். டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களைப் பேச அழைக்கின்றேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அளித்த 1999-2000 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது அன்புத் தலைவர், மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்கள் தோற்றுவித்த தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்க விழைகின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

20 ஆம் நூற்றாண்டையும் 21 ஆம் நூற்றாண்டையும் இணைக்கின்ற நிதிநிலை அறிக்கையாக இந்த அறிக்கை இந்த அவையில் இருக்கின்றது. உயர்நிலைப் பள்ளிகள்தோறும் கணினி பாடம் தொடங்குவது, தமிழ் இணையம் அமைப்பது குறித்த ஆய்வுகள், உலக நாடுகள் அனைத்திற்கும் சீராக தமிழ் மென்பொருட்கள், நவீன உத்திகள் ஆகிய இவைபால் தமிழக அரசு கொண்டுள்ள அக்கறையையும், கவனத்தையும் வரவேற்கின்றேன். 105 கோடி ரூபாய் இதற்காக தமிழக அரசு ஒதுக்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. பள்ளி மாணவர்கள், பள்ளிகளிலேயிருந்து வெளியே வரும்போது சாதிச் சான்றிதழ் வழங்கும் திட்டம் பல்வேறு இன்னல்களை மாணவ, மாணவியர்களுக்குப் போக்கிடும் மிக அரிய திட்டமாகும்.

சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியொதுக்கீடு ரூபாய் 35 இலட்சத்திலிருந்து 50 இலட்சம் ரூபாயாக உயர்த்தியிருப்பது என்பது வரவேற்கக்கூடிய ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் A.L.S. அவர்கள் பேசுகின்றபோது, இது, நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய நிதியொதுக்கீட்டைவிட அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். என்றாலும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற நிதி அத்தியாவசியமான பணிகளுக்காக, மக்களின் தேவைகளுக்கேற்ப



செலவிடப்படுகின்றது என்பதால் அரசு அதிலே அதிக அக்கறை காட்டி இப்போது ஒதுக்கியிருக்கின்ற 50 இலட்சம் ரூபாயை 70 இலட்சம் ரூபாயாக ஆக்க வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகின்றேன்.

அரசு திட்டங்களைத் தீட்டுகின்றபோது மிக வேகமாக செயல்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. ஆனால், நிறைவேற்றுகின்ற சில அதிகாரிகள் மெத்தனமாகச் செயல்பட்டு, அந்த 5 ஆண்டுகள் என்கின்ற ஒரு longest period என்று சொல்வார்கள், தலைவர் மூப்பனார் அவர்கள் சொல்கின்றபோது for a Government or for a Politician 5 ஆண்டுகாலம் என்பது நீண்ட நெடிய காலம் என்று சொல்வார்கள். அத்தகைய காலத்தை ஒரு கணக்காக எடுத்துக்கொண்டு அதிகாரிகள் மிக நிதானமாக செயல்பட்டு, அரசினுடைய திட்டங்களைச் சீர்குலைத்து விடுகிறார்கள் என்பது வருத்தத்திற்குரிய செய்தி. இத்தகைய அதிகாரிகளை இனம் கண்டுகொண்டு அவர்கள்மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதைத்தான் திருநெல்வேலியிலே பத்திரிகையாளர்களிடையே பேசுகின்றபோதுகூட தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் அன்புத் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலே, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டிற்குள், ஒருங்கிணைப்பிற்குள் எல்லாத் துறைகளும் வரவேண்டும். அப்படி வந்தால்தான் அந்த மாவட்டத்தில் நடைபெறுகின்ற பணிகளை ஒருங்கிணைத்து செம்மையாகச் செயல்படுத்த முடியும். மாவட்ட வளர்ச்சி மன்றம் (District Development Council) என்பது மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு மிகப்பெரிய நிர்வாக அமைப்பு. சென்ற காலங்களிலே பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழாகச் செயல்பட்டு, மாவட்டத்தில் நடக்கின்ற அனைத்துப் பணிகளையும் சீராக, செம்மையாகச் சீர்தூக்கி ஆராய்ந்து செயல்பட்டார்கள். அத்தகைய அமைப்பு இப்போது இல்லாதிருப்பது மிகப்பெரிய குறையாகும் என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாவட்ட வளர்ச்சி மன்றம் இருக்கின்ற இடத்திலே இப்போது மாவட்ட திட்டக் குழு என்ற ஓர் அமைப்பு இருக்கிறது. ஆனால், அந்தத் திட்டக் குழு கூடுவதே இல்லை. அப்படியே கூடினாலும், வருடத்திற்கு ஒரு முறை கூடினாலும் சம்பிரதாயமாகவே சாதாரண ஒரு கூட்டமாகவே நடக்கிறது. இது மிக வருத்தத்திற்குரிய செய்தி என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

ஆகவே, மீண்டும் District Development Council என்று சொல்லப்படுகின்ற மாவட்ட வளர்ச்சி மன்றத்தை நிறுவ வேண்டும் என்று தமிழக அரசை நான் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாமன்றத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சட்டமன்றம் கூடித்தான் அதை நாம் மாற்றி இருக்கிறோம். இதற்குப் பிறகு சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊராட்சி நிறுவனங்களைச் சேர்ந்த தலைவர்களெல்லாம் இணைந்து ஒரு குழுவும் போட்டிருக்கிறோம். அந்தக் குழு எல்லாப் பணிகளையும் ஆய்வு செய்திருக்கும். அதைப்பற்றிப் பரிந்துரைப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். விரைவில் இது நடைமுறைப்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்தகைய அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், கூட அத்தகைய அமைப்பு இந்நாள் வரை செயல்படவில்லை என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குரிய அறிவுரைகளை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் வழங்கி அந்தக் குழு குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு முறையாவது கூடி மாவட்ட வளர்ச்சி மன்றம் செய்த பணிகளைச் செம்மையாகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அந்த மாவட்டத்திலே பணி நடைபெறும்.

மாவட்ட ஆட்சித் தலைவருடைய கண்காணிப்பிலே வருகின்ற பல்வேறு துறைகளில், குறிப்பாக வருவாய்த் துறை மற்றும் உள்ளாட்சித் துறை என இந்த இரண்டு துறைகள்தான் நேரடிக் கண்காணிப்பிலே வருகின்றன. பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, மருத்துவத் துறை போன்ற அமைப்புகளெல்லாம் அவருடைய நேரடிப் பார்வையில் வராத காரணத்தால் அங்கே ஒரு ஒருங்கிணைப்பு (Co-ordination) அவ்வளவு சிறப்பாக இல்லையென்பது நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய செய்தியாகும். ஆகவே, அந்த நிலையைப் போக்குவதற்குத் தமிழக அரசு மிகுந்த கவனத்தோடு சம்பந்தப்பட்ட ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் டாக்டர் ஆ. ஞானசேகரன் தலைமை)*

தோட்டக்கலை உற்பத்திப் பொருட்கள் உபரியாக இருக்கின்ற காலத்தில், உபரியாகச் சேமிக்கப்படும்பொழுது நியாயமான விலை பெறுவதற்கு, குளிர் சாதனக் கிடங்குகள் அமைப்பதற்கு ரூபாய் 40 கோடி ஒதுக்கியிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இத்தகைய வசதிகளைப் பெறாத காரணத்தினால்தான், மத்திய அரசு கடந்த 4 மாநிலச் சட்டமன்றத் தேர்தல்களிலே வெங்காயத்தைப் பொருட்படுத்தாமல் இருந்து பெருங்காயத்தைப் பெற்று இப்பொழுது பாடத்தைக் கற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகவே, இத்தகைய திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தியிருப்பது மிகவும் வரவேற்கத்தகுந்த ஒன்று என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுக் கணக்குக் குழுவிலே மாண்புமிகு உறுப்பினர் அழகிரி அவர்களுடன் மணிப்பூர் போன்ற மாநிலங்களிலே நாங்கள் சுற்றுப்பயணம் செய்தபொழுது அமைதியற்ற நிலையை நாங்கள் கண்டோம். அந்தக் காலங்களிலே, வடகிழக்கு மாநிலங்கள் செம்மை பெறுவதற்கு மத்திய அரசு ரூபாய் 5200 கோடி Special Package ஆக, ஒரு சிறப்புத் திட்டமாக அன்றைக்கு இருந்த பிரதமர் மாண்புமிகு தேவகவுடா அவர்கள் அறிவித்து ஒரு திட்டத்தைத் தீட்டியிருந்தார்கள். ஏனென்று சொன்னால், வேலையற்று இருக்கின்ற பட்டதாரிகள், வேலையற்ற இளைஞர்கள், பட்டதாரி இளைஞர்கள் அல்லது பட்டம் பெறாத இளைஞர்கள் என்று பல்வேறு நிலைகளிலேதான் இந்தத் தீவிரவாத அமைப்புகள் தோன்றுகின்ற நிலையிலே வடகிழக்கு மாநிலங்களுக்கு என்று மாத்திரம் 5200 கோடி ரூபாய் மத்திய அரசு சிறப்பு திட்டமாக, நிதி ஒதுக்கீடு செய்திருந்தது. அத்தகைய நிதி ஒதுக்கீட்டை இந்த நிதிநிலை அறிக்கையிலே நாம் எதிர்பார்த்தோம். குறிப்பாக, நீதிபதி மோகன் அவர்கள் தென்மாவட்டங்களில் கலவரங்கள் தோன்றுவது வேலையில்லா இளைஞர்களுடைய நிலையை ஒட்டியும், அங்கிருக்கின்ற தாழ்த்தப்பட்ட அல்லது பின்தங்கியிருக்கின்ற நிலையை ஒட்டியும் வருகிறது என்று சொன்னார்கள். ஆகவேதான், தென் மாவட்டங்களிலே கலவரங்களைப் போக்குவதற்கு அல்லது மறுபடி வராமல் தடுப்பதற்கு திட்டம் ஒன்றை Special Scheme அல்லது ஒரு Special Package என்ற அளவிலே சிறப்புத் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

டீசல் விலை, யூரியா விலை போன்றவையெல்லாம் உயர்வாக ஆகிவிட்ட இந்த நிலையிலே விவசாயிகளுக்கு சிறப்புத் திட்டத்தைத் தமிழக அரசு அறிவிக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் ஜப்தி போன்ற நடவடிக்கைகளைக் குறித்து விளக்கினார்கள். இருந்தாலும்கூட, இருக்கின்ற நிலைமையிலே கெடுபிடிகளை சற்றுத் தளர்த்தி குறிப்பிட்ட கால அவகாசத்தையாவது அவர்களுக்குக் கொடுத்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

நீதி நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலே, தமிழகத்திலுள்ள சட்டத் துறை மிகவும் விழிப்போடு செயல்பட வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, இந்த சிற்றுந்து (Mini Bus) விஷயத்திலேகூட தமிழக அரசு இன்னும் சற்று விழிப்பாகச் செயல்பட்டிருக்கலாம் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஏனென்று சொன்னால், நாங்கள் கரூர் மாவட்டத்திலே சுற்றுப்பயணம் செய்கின்றபொழுது அங்கிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அந்த மாவட்டத்தில் மாத்திரம் 120 சிற்றுந்துகள் (120 Mini Buses) இயங்குவதாகச் சொன்னார்கள். அங்கே, கரூர் மாவட்டத்தில் 4 சட்டமன்றத் தொகுதிகள். ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு 30 Mini Buses அங்கே இருக்கிறது. அப்படி ஒரு தொகுதிக்கு 30 Mini Buses இயங்கினால் நிச்சயமாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அடுத்த முறை தேர்தலிலே ஓட்டுக் கேட்கக்கூடத் தேவையில்லை என்று நான் நினைக்கின்றேன்.

அத்தகைய பெரும் வசதிகளைச் செய்யக்கூடிய ஒரு சிறப்புத் திட்டத்தை Caveat போன்ற நடவடிக்கையினால் சிலர் தடை செய்திருக்கிறார்கள். தமிழக அரசு ஒரு ஆணையின் மூலம் அதைத் தடை செய்திருக்கமுடியும். ஆகவே அரசின் சட்டத் துறை இன்னும் மின்னல் வேகத்திலே செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் Mini Bus விஷயத்தில் தினமலர் பத்திரிகை முழுப் பக்கச் செய்தியாகக்கூட வெளியிட்டிருந்தார்கள். மகிழ்ச்சி வெள்ளத்தில் மக்கள், என்று எழுதியிருந்தார்கள். தமிழக அரசு கூட அதை மாலைமுரசு பத்திரிகையில் விளம்பரமாக வெளியிட்டு இருந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டமாக, மகத்தான திட்டமாக, Mini Bus திட்டம் அமைந்திருப்பதால், அதிலே சிறப்பான கவனம் செலுத்தி வெற்றிபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் 10 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் கொடுப்பேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** பொதுவாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் ஒரு மாற்றம் வந்திருக்கிறது. தனியார் துறையைப் பொறுத்தவரையில், அவர்கள் கொண்டிருந்த அபிப்பிராயம் Mini Bus திட்டத்தின் வெற்றி காரணமாக மாறியிருக்கிறது என்று கருதுகின்றேன். ஆகவே, சிறப்பாக செயல்படக்கூடியவர்கள் யாராக இருந்தாலும் மக்களுக்குச் செயல்படக்கூடிய வகையில் அமையுமானால், அதை வரவேற்பதற்குத் தமிழக அரசு தயாராக இருக்கவேண்டுமென்று நான் கோரிக்கைவிடுக்க விரும்புகிறேன்.

மாசுக் கட்டுப்பாடு வாரியம் தன்னுடைய கடமைகளைச் செய்கிறபோது பல்வேறு நிலைகளில் பல தொழிற்சாலைகள் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக, ஏற்கெனவே சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டதைப்போல, ஜவ்வரிசித் தொழிற்சாலை அல்லது சாயத் தொழிற்சாலைகளின் பணிகள் எல்லாம் இப்போது நின்றுபோய் இருக்கின்றன. ஆகவே மாசுக் கட்டுப்பாடு வாரியம், ஒரு குற்றவாளியைப் பிடிப்பதுபோல அணுகாமல், ஒரு தொழிலாகக் கருதி, உறுதுணையானத் திட்டங்களை வகுத்து, தோழமை உணர்வோடு அந்தத் தொழிற்சாலைகளை நடத்த வேண்டுமென்று கூற விரும்புகிறேன். ஏனென்றால், அப்படியிருந்தால்தான், தொழில் செய்கிறவர்களுக்குக்கூட நம்பிக்கை இருக்கும். சாயத் தொழிற்சாலைகளும், ஜவ்வரிசித் தொழிற்சாலைகளும், சிறிய அளவில் செய்யக்கூடியவையாக இருந்தாலும், ஆயிரக்கணக்கான நெசவாளர்களும், விவசாயிகளும் அதனால் பயன்பெறுகின்ற திட்டங்கள் என்பதால், அவற்றின்மீது தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தன்னுடைய கருத்தைச் சிறப்பாகவும் செம்மையாகவும் அதேநேரத்தில் திட்டமிட்ட முறையிலும் செலுத்தி செயல்படவேண்டுமென்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், புதிதாகத் தொடங்கப்படுகின்ற புதிய தொழிற்சாலை விஷயத்தில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு மேலும் இரண்டு நிமிடங்கள் கொடுத்தது, நீங்கள் பேசிய கருத்துகளை முடித்துக்கொண்டு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு உட்கார வேண்டும் என்பதற்குத்தான். அதன் பொருள் என்ன என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். ஆனால்,

நீங்கள் புதிய புதிய கருத்தாக ஆரம்பித்துச் சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். இன்னும் ஒரு நிமிடம்தான் கொடுப்பேன். அதற்குள் பேசி முடியுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** புதிய தொழிற்சாலைகள் பற்றிய விஷயத்தில், குறிப்பாக என்னுடைய பள்ளிப்பட்டு தொகுதியைப் பொறுத்தவரையில், புதிய தொழில்களை அங்கே தொடங்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். பள்ளிப்பட்டு தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருப்பதால், அந்தப் பகுதிக்கு மீண்டும் தொழில் தொடங்க சலுகைகளை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1980-லே வட்டத் தலைநகராகப் பள்ளிப்பட்டு அறிவிக்கப்பட்டபோதிலும், இதுவரை வட்டத் தலைநகருக்குண்டான வட்டாட்சியர் அலுவலகம் அமையப்பெறவில்லை. அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, நான் நீண்ட நெடிய காலமாகக் கோரிவருகின்ற ஈச்சன் கிராமத்தில் ஒரு புதிய கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அன்புத் தலைவர் ஐயா அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, குமரி முனையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பெயராலே ஒரு நினைவு மண்டபத்தைக் கட்ட வேண்டும். காந்தி மண்டபம் எப்படி குமரிக்குச் சிறப்புச் சேர்க்கிறதோ, அதேபோல, சிறப்புச் சேர்க்கிற விதத்திலே குமரி முனையிலே பெருந்தலைவர் காமராஜர் நினைவாக, அவருடைய நீண்ட ஆட்சியின் நினைவாக ஒரு பெரிய மணி மண்டபம் கட்டி, அவருடைய வாழ்க்கை வரலாற்றை அங்கே விவரிக்கும் வண்ணம் சிறப்புச் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். (குறுக்கீடு) நான் சொல்லிக் கொண்டேயிருக்கிறேன். உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர். மற்ற உறுப்பினர்களை அவரே கட்டுப்படுத்துவார். ஆகவே அவரைக் கட்டுப்படுத்தத் தேவையில்லை. அவரே உரிய நேரத்தில் பேசி முடித்துவிடுவார்.



**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: *(பேரவைத் துணைத் தலைவர்)*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்த மாமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற 1999-2000 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற விவாதத்தில் கலந்துகொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளைக் கூறுவதற்கு, தாங்கள் வழங்கிய மேலான வாய்ப்புக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னைப் பேச அனுமதிக்கும்போதே, தாங்கள் இட்டிருக்கின்ற கட்டளையையும் நிறைவேற்றுவேன் என்ற உறுதியையும் வழங்குகின்றேன். 19 ஆம் நூற்றாண்டின் பழமையைத் தகர்த்து, 20 ஆம் நூற்றாண்டின் புதிய இலக்கணத்தைப் படைத்து, 21 ஆம் நூற்றாண்டுக்கு நாட்டைக் கொண்டு செல்வதற்கு, தன்னுடைய சிந்தனை அனைத்தையும் செலவழித்து, தள்ளாத வயதிலும் தளராத நெஞ்சுரத்தோடு, அஞ்சாமல், கண் துஞ்சாமல், ஓய்வுக்கு ஓய்வு கொடுத்து உழைத்துக் கொண்டிருக்கும் உத்தமத் தலைவர், முத்தமிழ் அறிஞர், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திற்கு வழங்கியிருக்கின்றார்கள். இது அவர்களுடைய 12 ஆவது நிதிநிலை அறிக்கை. இதற்கு முன்பு பதினொன்று முறை நிதிநிலை அறிக்கைகளைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். ஆனால், அந்த நிதிநிலை அறிக்கைகளுக்கெல்லாம் இல்லாத சிறப்பு இந்த நிதிநிலை அறிக்கைக்கு உண்டு. காரணம், இது 1999-2000 ஆவது ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை. இதில், ஒரு நூறு ஆண்டுகள் முடிகின்றன. ஓர் ஆயிரமாவது ஆண்டும் முடிகிறது. இன்னும் சொல்லப்போனால், இந்த நூற்றாண்டின் இறுதியையும், அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தையும் இணைத்திருக்கின்ற ஒரு நிதிநிலை அறிக்கையாகும். பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு முறை மகாமகம் வருவதுபோல, பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒரு முறை குறிஞ்சி மலர் பூப்பதுபோல, இதுபோன்ற நிதியாண்டு வரவேண்டுமானால் இன்னும் நூறு ஆண்டுகள் நாம் காத்திருக்க வேண்டும். அப்படியே காத்திருந்தாலும், நாம் இருப்போமா என்பது சந்தேகம்தான். ஆக, அந்த அடிப்படையிலே இது.....

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உறுதியாக இருக்கமாட்டீர்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** *(பேரவைத் துணைத் தலைவர்):* நான் எல்லோரையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். அப்படியொரு நிதியாண்டு வருகிறபோது நிச்சயமாக நாம் இருக்கமாட்டோம். ஆக, அந்த அடிப்படையிலே ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்கிறபோது, நானும் இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்தேன் என்பதிலே எனக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களாகிய மற்றவர்களுக்கும், ஏன், பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் பெருமை அளிக்கக்கூடிய ஒன்று என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையை அளித்த தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய வணக்கங்களையும், வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த சில நாட்களாக இந்த மன்றத்திலே நடந்த விவாதங்களைப் பார்க்கின்றபோது, எங்கேயோ வெளியிலே இருக்கிற சதிகாரக் கூட்டம், சதி ஆலோசனை செய்து இந்த மாமன்றத்தில் அரங்கேற்றிய நாடகத்தின் விளைவாக, அவர்களுடைய எண்ணம் நிறைவேறி இருக்கிறதோ என்று அஞ்சத் தோன்றுகிறது. காரணம், தாங்களே சொன்னீர்கள், பட்ஜெட் விவாதத்திற்கு முக்கியத்துவம் இல்லாமல்போகும்; எனவே இந்த விவாதத்தைப்பற்றியே பேசிக்கொண்டிருக்காமல், இத்தோடு முற்றுப்புள்ளி வையுங்கள் என்று. ஏனென்றால், இது ஓர் அற்புதமான பட்ஜெட் என்று பல்வேறு பத்திரிகைகள் பாராட்டியிருக்கின்றன. குறிப்பாக, தினமணி பத்திரிகை 'வளர்முக பட்ஜெட்' என்று பாராட்டி இருக்கிறது. இன்னொரு பத்திரிகை, 'சுமைகள் இல்லாத சுகமான பட்ஜெட்' என்று பாராட்டியிருக்கிறது. இதிலே, பொதுவான திட்டங்களும் உண்டு; பொருளாதாரத் திட்டங்களும் உண்டு; சமூக நலத் திட்டங்களும் உண்டு. இப்படி, பல்வேறு நலத் திட்டங்களை உள்ளடக்கியிருக்கிற இந்த பட்ஜெட்டினுடைய சிறப்பு நாட்டு மக்களுடைய கவனத்திற்குப் போய்ச் சேரக்கூடாது என்பதற்காகவும், நாகரிகமும், பண்பாடும் மிக்க இரண்டு பெண்மணிகள் Auditor ஒருவரை அடித்து, ஆஸ்பத்திரியிலே போட்டிருக்கிற அந்தச் செய்தி மக்களிடம் பரவி விடக்கூடாது என்பதற்காகவும் இங்கே ஒரு நாடகத்தை அரங்கேற்றி, அதன் தொடர்பாக இரண்டு நாட்கள் இங்கே நடைபெற்ற விவாதங்களைப் பார்க்கின்றபோது, அவர்களுடைய எண்ணம் ஈடேறி இருக்கிறதோ என்று அஞ்சத் தோன்றுகிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர்



அவர்கள் அன்றைக்கு இந்த அவையிலே இருந்திருந்தால், எவ்வளவு வேண்டுமானாலும் பேசட்டும் என்று விட்டுவிட்டு, இந்தச் சம்பவமே நடைபெறாமல் தடுத்திருப்பார் என்று சொன்னார்கள். அது அவருடைய பெருந்தன்மை. அந்தப் பெருந்தன்மையை, மாற்றார்கள் ஏமாளித்தனம் என்று நினைப்பார்கள் என்றால், அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், யாருக்காகவும் அஞ்சி, பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளவில்லை. இந்த மன்றத்தினுடைய இறையாண்மையை, கண்ணியத்தை, கௌரவத்தை மரபைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்படி நடந்து கொள்கிறார். அதையே எங்களுடைய பலவீனமாக, அதையே ஏமாளித்தனமாக மாற்றார்கள் நினைப்பார்களேயானால், ஒரேயொரு உதாரணத்தை மட்டும் அதற்காகச் சொல்லிக்கொள்கிறேன்.

கோயில் குளத்திலே நீராடிவிட்டு மாட வீதி வழியாக வருகின்ற கோயில் யானை எதிரே, சேற்றிலும், சகதியிலும் புரண்டுவிட்டு வருகிற ஒரு பிராணியைப் பார்த்து யானை ஒதுங்கிப் போவது ஏன் தெரியுமா? நாம், கோயில் பொற்றாமரைக் குளத்தில் நீராடிவிட்டு வருகிறோம், எதிரிலே வருவதோ, சாக்கடையிலும், சகதியிலும் புரண்டுவிட்டு வருகிறது. அதன்மீது இருப்பது நம்மீது வந்து பட்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான் யானை ஒதுங்கிப் போகிறதே தவிர, யானை ஒரு நிமிடம் நின்று, நிதானித்து, தன்னுடைய பலத்தை எண்ணிப் பார்க்குமேயானால், அந்தப் பிராணிக்கு என்ன கதி ஏற்படுமோ அந்த கதிதான் இவர்களுக்கு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நான் இந்த பட்ஜெட் விவாதத்திற்கு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட்டை, ஒரு பற்றாக்குறை பட்ஜெட் என்று வெளியிலே இருக்கிற பொருளாதார மேதாவிகள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். வருவாய்க் கணக்கில் வரவு ரூ.15,867.78 கோடி; வருவாய்க் கணக்கில் செலவு ரூ.18,500.32 கோடி; இதிலே பற்றாக்குறை ரூ.2,632.54 கோடி. மூலதனக் கணக்கில் உபரியாக வருகின்ற ரூ. 849.96 கோடியும், பொதுக் கணக்கில் நிகரத் தொகையாக வருகின்ற ரூ. 992.45 கோடியும் இவை இரண்டும் சேர்த்து ரூ. 1,842.41 கோடியை பற்றாக்குறையான ரூ. 2,632.54 கோடியில் கழித்தால், மொத்தம் ரூ.790.13 கோடி பற்றாக்குறை வருகிறது. இதிலே புதிய வரிகள் போடுவதன் மூலமாக வருகின்ற வருவாய் ரூ.261 கோடி. இதையும் ரூ. 790.13 கோடியில் குறைத்தால், இறுதிப் பற்றாக்குறை என்பது ரூ. 529.13 கோடி வருகிறது.

பற்றாக்குறை, பற்றாக்குறை என்று பேசுகிறார்கள். பற்றாக்குறை இல்லாமல் பட்ஜெட் போட முடியுமா என்றால், முடியும். ஆனால், அப்படிப் போடப்பட்டால், நாட்டு மக்களுக்கு எந்த நன்மையும் இருக்காது. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று இந்த ஆண்டிலேயிருந்து ரூ.50 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. இந்த 235 சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துப் பார்க்கின்றபோது 117½ கோடி வருகிறது. இந்தத் திட்டத்தை ஒதுக்கி விட்டால் — பாலங்கள் கட்டுவதற்கு 450 கோடி, அதேபோல இன்னும் பல்வேறு திட்டங்கள், கல்வித் துறைக்கு எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு 4,092 கோடி, மருத்துவத் துறைக்கு 1,072 கோடி, இவற்றில் ஏதாவது ஒரு திட்டத்திலே கைவைத்து அதைக் கழித்தால் பற்றாக்குறை இல்லாத பட்ஜெட்டை போடமுடியும். ஆனால் நாட்டு மக்களுக்கு இதனால் என்ன நன்மை உண்டாகும் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

முற்பகல் 11·40

பற்றாக்குறை பட்ஜெட் போடுவது ஒன்றும் பாவமான காரியம் அல்ல. அப்படிப் பார்த்தீர்களென்றால் மத்திய அரசாங்கமே ஏறத்தாழ 89,000 கோடிக்கு மேற்பட்ட பற்றாக்குறை பட்ஜெட்டைத்தான் தாக்கல் செய்திருக்கிறது. பற்றாக்குறை பட்ஜெட் போடுவது என்பது பெரிதல்ல. ஆனால், பற்றாக்குறையை எப்படி நிவர்த்தி செய்வது என்பது நிதித் துறையைக் கையாள்கிறவர்களுடைய நிர்வாகத் திறமையைப் பொறுத்தது.

**திரு. ஆர். சொக்கர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிய நேரத்தில், அவர் தனது உரையை முடிக்க வேண்டுமென்று நான் சொல்லியிருக்கிறேன். அவர் வருடத்திற்கு ஒரு தடவைதான் பேசுகிறார். நீங்கள் ஏன் குறுக்கே எழுந்து நின்று பேசுகிறீர்கள்?

**திரு. ஆர். சொக்கர்:** Point of Order. மத்திய அரசு பட்ஜெட் பற்றாக்குறை 89,000 கோடி ரூபாய் என்று காட்டியிருப்பது வழக்கமாக கணக்கு வெளியிடப்படும் முறையை மாற்றி கணக்கிலே, jugglery செய்து பற்றாக்குறையைக் குறைத்துக் காட்டி இருக்கிறார்கள். அதாவது சேமிப்புக் கணக்கிலே இருக்கக்கூடிய 25,000 கோடியை வழக்கமாக கணக்கிலே கொண்டுவருவதைப்போலக் கொண்டுவந்து காட்டியிருந்தால் 1,04,000 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருந்திருக்கும். மத்திய அரசு கணக்கிலே



குளறுபடி செய்து மக்களைத் திசை திருப்புவதற்காக பற்றாக்குறையை குறைத்துக் காட்டியிருக்கிறது. ஆகவே, 89,000 கோடி பற்றாக்குறை என்பதைவிட, 1,04,000 கோடி பற்றாக்குறை என்பதுதான் சரியான பற்றாக்குறை.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல மத்திய அரசாங்கத்தினுடைய பட்ஜெட்பற்றி கருத்துச் சொல்கிறபோது-முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் அவர்கள் இதைச் சொல்லியிருக்கின்றார்கள், இந்தப் பற்றாக்குறையை மூடி மறைத்து மத்திய அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது. இது அவருடைய கண்ணோட்டத்திலே மூடி மறைக்கப்பட்டிருக்கிறது. அவர் பொருளாதார நிபுணர் என்ற காரணத்தால் தெரிகிறது. எனக்கு அந்த அளவு தெரியாது. இருந்தாலும் அவர் சொன்னதை இந்த நேரத்திலே சேர்த்துக்கொள்வது நல்லது என்று கருதுகிறேன். அதுமட்டுமல்ல, பற்றாக்குறையை எப்படி நிவர்த்தி செய்வது என்பது தலைவர் கலைஞர் அவர்களுக்கு கை வந்த கலை. ஏற்கெனவே அவர் அதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார். சென்ற ஆண்டு 876.67 கோடியாக இருந்த பற்றாக்குறை, 235.73 கோடியாகக் குறைந்திருக்கிறது. நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்கின்றபோது தாங்கள் ஒரு குறளைச் சொல்லி அதற்கு ஒரு விளக்கத்தைச் சொல்லி ஆரம்பித்து வைத்தீர்கள்.

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை."

வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களையும் பெருக்கி, இடர்ப்பாடுகளையும் ஆராய்ந்து நீக்கிட செயலாற்றும் திறம் உள்ளவனே, அரசன் என்று சொன்னீர்கள். அந்தத் திறமுள்ள அரசர்தான் இங்கே நிதி அமைச்சராக இருந்து கொண்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இப்போது நாடு இருக்கிற நிதி நெருக்கடி நிலைமையை கொஞ்சம் எண்ணிப்பார்க்க வேண்டும். 5-வது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமலாக்கியதன் காரணமாக இப்போது மாநில அரசுக்கு ஏற்பட்டிருக்கிற பொருளாதார நெருக்கடி ஒரு பக்கம், பொருளாதாரச் சுணக்கத்தால் வரி வருவாய் குறைந்துவிட்ட சூழ்நிலை ஒரு பக்கம். மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்க வேண்டிய வருவாயில்

மத்திய அரசின் முரணான அணுகுமுறையால் குறைந்துவிட்ட சூழ்நிலை ஒரு பக்கம். இப்படிப்பட்ட சூழ்நிலையிலே இப்படி அனைத்துத் தரப்பு மக்களுக்கும் திருப்தி அளித்திருக்கக்கூடிய பட்ஜெட்டை உருவாக்குவது என்பது மிக மிகக் கடினமான காரியம். அத்தகைய கடினமான காரியத்தைச் செவ்வனே செய்திருப்பவர்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னும் நான் சொல்லவேண்டுமானால், இந்த பட்டுஜெட் ஓர் அறிவியல் கண்ணோட்டத்தோடு உருவாக்கப் பட்டிருக்கிற பட்ஜெட் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், இன்றைய சூழ்நிலை, இது கணிப்பொறி உலகம், இந்தக் கணிப்பொறி உலகத்திலே--Internet இனி வருங்காலத்தில் "Internet" தான் உலகத்தை ஆளப்போகிறது. அப்படிப்பட்ட அந்த "Internet" தமிழ்நாடு முழுவதும் பரவி அதன்மூலம் தமிழகத்தினுடைய பெருமை உலகம் முழுவதும் பவனி வரவேண்டும் என்ற கருத்திலேதான் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவியல் கண்ணோட்டத்தோடு கூடிய் இந்த தனி நிதிநிலை அறிக்கையை இங்கே தயாரித்தளித்திருக்கிறார்கள். இன்னும் சொல்லவேண்டுமானால், A Politician thinks about next election; but a Statesman thinks about next generation என்று சொல்வார்கள். ஓர் அரசியல்வாதி அடுத்த தேர்தலைப்பற்றிச் சிந்திக்கிறான், ஒரு மகத்தான தலைவர் அடுத்த தலைமுறையைப்பற்றிச் சிந்திக்கிறார் என்று சொல்வார்கள். அடுத்த தலைமுறையைப்பற்றி சிந்தித்த காரணத்தால்தான் இன்றைக்கு நாடு இருக்கிற சூழ்நிலையிலே விஞ்ஞானம் வேகமாக வளர்ச்சி அடைந்து வருகிற இந்தக் காலக்கட்டத்திலே அடுத்து கணினிதான், Internet-தான் இந்த உலகத்தை ஆளப்போகிறது என்ற நிலையிலே அடுத்து வருகின்ற எதிர்காலத் தலைமுறையினரை போட்டி போட்டுக்கொண்டு அதற்கு இணையாக வெற்றி பெறக்கூடிய தகுதி உள்ளவர்களாக உருவாக்க வேண்டும் என்கிற காரணத்தாலேதான் தலைவர் கலைஞர் அவர்கள் 1,200 பள்ளிகளிலே இப்போது +1, +2, வகுப்புகளிலே விருப்பப் பாடமாக கணினியைக் கொண்டுவந்து இருக்கிறார்கள். அதன்மூலம் ஒரு பள்ளிக்கு 40 மாணவர்கள் என்ற வீதம், 48,000 மாணவர்கள் ஆண்டுதோறும், அதாவது தொழில் நுட்பக் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள் வெளியே வருகின்றபோது அவர்கள் வேலைவாய்ப்புக்கான உத்தரவாதத்தோடு வெளியே வருவார்கள்.



முற்பகல் 11-45

அதுபோல கணினி பயிற்சி பெற்று வெளிவருகிற மாணவர்கள் மென்பொருள் (software) தகுதியோடு துறையிலே வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான தகுதியோடு வெளியே வரக்கூடிய சூழ்நிலையை நம்முடைய கலைஞர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். இதை எண்ணிப்பார்க்கும்போது தலைவர் கலைஞர் அவர்கள் இந்த பட்ஜெட்டின் இறுதிப் பகுதியில் பாவேந்தர் பாரதிதாசன் பாடலை நினைவுகூர்ந்தார்கள்.

என்னருந் தமிழ்நாட் டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்
பராக்கிர மத்தால், அன்பால்
உன்னத இமம லை போல்
ஓங்கிடும் கீர்த்தி யெய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக்கேட் டிடல் எந் நாளோ?

என்ற பாவேந்தர் பாடலை நினைவுகூர்ந்தார். பாவேந்தர் பாரதிதாசன் இன்று உயிரோடு இருப்பாரேயானால் அதைக் கொஞ்சம் மாற்றிப் பாடி இருப்பார்கள்.

என்னருந் தமிழ்நாட் டின்கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்
பராக்கிர மத்தால்

என்று இருப்பதை மாற்றி,

என்னருந் தமிழ்நாட் டின்கண்
எல்லோரும் கம்ப்யூட்டர்
கல்வி கற்றுப் பன்னருங்
கலைஞா னத்தால் பராக்கிர மத்தால்
அன்பால் உன்னத இமமலை
போல் ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?

என்று பாடி இருப்பார்கள். ஆக எல்லோரும் கல்வி கற்று உயர்ந்திட வேண்டும் என்பதுதான் பாவேந்தரின் கனவு; எல்லோரும் Computer

கல்வி கற்று சிறந்து விளங்க வேண்டுமென்பது தானைத் தலைவர் கலைஞர் அவர்களுடைய கனவு. அந்தக் கனவை நனவாக்குகின்ற வகையில் தான் Computer உலகத்தில் இத்தனை புரட்சியை அவர்கள் செய்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், Computer பற்றி பேசிக்கொண்டே போகலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலின் ஆழத்தின் உள்ளே போகப் போக பல அதிசயங்களை நாம் பார்ப்பதைப்போல இந்த Computer உள்ளே எத்தனையோ அதிசயங்கள் இருக்கின்றன. உட்கார்ந்த இடத்திலிருந்து, எல்லாவிதமான விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம். ஒரு பத்து வருடம் கழித்து Computer தெரியாமல் இருப்போமேயானால் நாம் எல்லோரும் பின்தங்கிவிடுவோம். அந்த அளவு Computer இன்றைக்கு வளர்ச்சி பெற்று இருக்கிறது. இந்தக் Computer-ன் மூலம் அது தொழிலாக இருந்தாலும், வியாபாரமாக இருந்தாலும், கலையாக இருந்தாலும், கலாச்சாரமாக இருந்தாலும், விளையாட்டாக இருந்தாலும், பொழுதுபோக்காக இருந்தாலும் எல்லா தகவல்களையும் உட்கார்ந்த இடத்தில் இருந்தே தெரிந்துகொள்ளலாம். இந்த இடத்திலே கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் பாடிய ஒரு பாடல் நினைவுக்கு வருகிறது, அவர் ஒரு படத்தில் பாடுவார், "விஞ்ஞானத்தை வளர்க்கப் போரேண்டி, மேநாட்டார விருந்து வச்சி காட்டப்போரேண்டி, அஞ்ஞானத்தை அழிக்கப் போரேண்டி, "அணுசக்தியாலே ஆயுள்விருத்தி செய்யப் போறேண்டி" என்று என்.எஸ்.கே. பாடும்போது, டி.எ. மதுரம் வருவார்கள், "வீட்டுக்கென்ன செய்யப் போறீங்க அதையும் கொஞ்சம் விவரமாக விளக்கிப் போடுங்க" "என்றதும்" அப்படியா. என்ன வேணும் கேட்டுக்கோ" என்று அவர் சொல்வார். உடனே அந்த அம்மா அடுக்க ஆரம்பித்துச் சொல்வார்கள், "நெல் அறைக்க, மாவரைக்க, நீர் இறைக்க மிஷினு" அல்லும் பகலும் ஆக்கி இறைக்க அதுக்கு ஒரு மிஷினு" என்று சொன்னவுடனே என்.எஸ்.கே. கேட்பார் "போதுமா" என்று. அப்போது அந்த அம்மா "ஒன்னை மறந்துட்டேன்", என்றவுடன் அவர் 'என்னா வேணும் என்று' கேட்டவுடன் அந்த அம்மா, 'பட்டனைத் தட்டிவிட்டா இரண்டு தட்டிலே இட்டிலியும் காபியும் நம்ம பக்கத்திலே வந்திடணும்" என்பார். அந்த அம்மா அந்தக் காலத்திலே கனவு கண்டிருக்கிறார்கள். பட்டனைத் தட்டினால் காபி பக்கத்தில் வரவேண்டுமென்று.

அந்த மாதிரி இந்த Computer-ல் உட்கார்ந்துகொண்டு, Key Board-லே இருக்கிற button-ஐ தட்டிய உடனே பாரதத்தின் பிரதமர் பஸ்ஸில் ஏறி பாகிஸ்தானிற்கு போவதிலிருந்து, Auditor அடிவாங்கி ஆஸ்பத்திரி



இருக்கிற வரைக்கும் இருக்கிற எல்லா விவரங்களையும் நாம் தெரிந்துகொள்ள முடியும். அதுபோல இன்னும் சொல்ல வேண்டுமானால் Telemedicine என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் மிகச் சிறந்த, இன்னும் சொல்லப்போனால் ஞானியாக விளங்கினார் என்று சொல்ல வேண்டும். ஆணும் பெண்ணும் இல்லாமல் குழந்தை பிறக்கின்ற காலத்தை நாம் கனவு காணப் போகிறோம் என்று சொன்னார். அது நிரூபணம் ஆகிவிட்டது என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மிக முக்கியமான கருத்தை விட்டுவிட்டார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, "மாட்டு வண்டியிலே சூடசத்தை வைச்சு, என் மாமியாரை ஓட்டி ஓட்டிக் காட்டப் போறேண்டி, அதிலே உன்னையும் எத்திகிட்டு.... என்று சொல்லியிருக்கிறார்.

நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் அந்த அளவுக்கு இப்போது Computer பிரசித்தி பெற்று இருக்கிறது. அந்தக் Computer-லே தமிழ்நாட்டின் எதிர்காலச் சந்ததிகள் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்பதால், தலைவர் கலைஞர் அவர்கள் இங்கிலாந்திலுள்ள வேர்ல்டு டெல் நிறுவனத்துடன் இணைந்து தமிழகம் முழுவதும் 1500 Social Internet-களை உருவாக்க இருக்கிறார்கள்.

அடுத்தபடியாக பார்ப்போமேயானால், Telemedicine. உதாரணமாக நமக்கு உடம்புக்கு ஏதாவது ஏற்பட்டுவிட்டால் நாம் இங்கிருந்து கொண்டு, மதுரையில் டாக்டர் இருக்கிறார் என்றால் மதுரைக்கு ஓட வேண்டிய அவசியம் இல்லை. இங்கே Key Board தட்டினால் போதும், அவருடைய Consultation பெற்று சிகிச்சைப் பெற்றுக்கொள்ள முடியும். இதை நினைக்கும் போது, தலைவர் கலைஞர் அவர்கள் யாரை நினைத்துக் கொண்டு இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. ஏனென்றால் ஒரு காலத்தில் சிலபேர் தனக்கு மூட்டுவலி, முதுகுவலி, கழுத்துவலி, திருகுவலி என்று வருகிறபோது, ஹைதராபாத்துக்கு அல்லது ஆந்திராவிற்கு என்று ஓடினார்கள். ஏனென்றால் இங்கிருந்த மருத்துவர்கள் மீது அவர்களுக்கு நம்பிக்கையில்லை. நீதிபதிகளையே நம்ப மாட்டார்கள் என்கிறபோது மருத்துவர்களை எப்படி நம்புவார்கள், ஆக அப்படி ஓடினார்கள்.

ஆனால் இப்போது ஹைதராபாத்துக்கு ஓட வேண்டியதில்லை ஆந்திராவிற்கு ஓட வேண்டியதில்லை. வீட்டிலேயிருந்து கணிப்பொறியின் Button தட்டினால் மூட்டு வலிக்கென்ன, முதுகு வலிக்கென்ன, திருகு வலிக்கென்ன சிகிச்சை என்ன என்று தெரிந்து கொள்ளலாம். அந்த அளவுக்கு இந்தத் திட்டத்தைப் பார்க்கும்போது, பகைவர்க்கும் அருள்வாய் நன்நெஞ்சே என்று எங்கேயோ படித்தது என் நினைவுக்கு வருகிறது. இன்னும் சொல்லப்போனால் தலைவர் கலைஞர் அவர்கள், இந்த இணையம் 99 மாநாடு நடத்தி அந்த மாநாட்டில் 7 நாடுகள் சேர்ந்து 150 வல்லுநர்கள் கலந்துகொண்டு பொதுவான ஒரு குறியீடு தமிழுக்கு வேண்டும் என்பதைப் பேசி, ஒருமுகமான ஒரு கருத்தை உருவாக்கி விசைப் பலகையினுடைய தரத்தை உயர்த்துவதற்கு, உதாரணமாக இப்போது இருக்கின்ற கணினியில் 'A' இது international முழுவதும் ஒரே மாதிரிதான். ஆனால், அதேமாதிரி இப்போது தமிழில் கணினி பயன்படுத்துகிறார்கள். ஆனால், ஒரு பொதுவான குறியீடு கிடையாது. ஆகையினால், எல்லோரையும் கூட்டி வைத்து, ஒரு மாநாட்டைக் கூட்டி, ஒரு பொதுவான குறியீட்டை உருவாக்குவதற்கு, ஒரு ஒருமித்த கருத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இதைப் பார்க்கிறபோது சங்கப் பலகை வைத்து தமிழ் வளர்த்தார்கள் அந்தக் காலத்திலே. ஆனால், விசைப்பலகையும் முத்தமிழோடு நான்காவது தமிழையும் தலைவர் கலைஞர் அவர்கள் வளர்ப்பதற்குக் காரணமாக இருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது உள்ளபடியே *(மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 நிமிடங்களுக்கு 14 நிமிடங்கள் கொடுத்துவிட்டேன். பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம் வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்களே சொன்னீர்கள், வருடத்திற்கு ஒருமுறை என்று. வருடத்திற்கு ஒருமுறை அல்ல, 3 வருடங்களுக்கு ஒரு முறை பேசுகிறேன். ஆகவே, அருள்கூர்ந்து நேரம் தர வேண்டும். எதற்காகச் சொல்கிறேன் என்றால் எவ்வளவு திட்டங்கள் இருக்கின்றன. பொதுவான திட்டங்கள் இருக்கின்றன, பொருளாதாரத் திட்டங்கள் இருக்கின்றன, சமூக நலத் திட்டங்கள் இருக்கின்றன. உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், தூர்வாரும் பணிகளைச் சொல்லலாம். அந்தப் பணிகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், பிற்காலச் சோழர்களிலே முதலாம் பராந்தக சுந்தர சோழன் காலத்திலேதான் தஞ்சாவூரிலேயிருக்கின்ற 23 கிளை நதிகள் வெட்டப்பட்டு, தாய் நதியான காவிரியிலே வருகின்ற தண்ணீர் கல்லணை, கொள்ளிடம் போன்ற இடங்களில் தேக்கம் செய்யப்பட்டு, அதன்மூலம் பாசனம் செய்யப்பட்டு, தஞ்சாவூர், நாகை, திருவாரூர்,



கடலூரில் ஒரு பகுதி, திருச்சி மாவட்டத்திலே ஒரு பகுதி ஆகியவை வளம் பெற்ற மாவட்டங்களாக திகழ்கிறதென்றால், அந்தக் காலத்திலே அவை பிற்கால சோழர்களில் முதலாம் பராந்தக சுந்தர சோழன் காலத்திலே அவை வெட்டப்பட்டன. அந்த ஆறுகளையெல்லாம் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய குடமுருட்டி காவிரி பெண் ஆடுகின்ற காட்சி கண்டு காதல் கொள்ளிடம் இதுதான் என்று ஓடம்போக்கி வருகிறான் வீரசோழன். நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை தூக்கத்திலே எழுப்பிக் கேட்டால்கூட, அவர் சரியாகச் சொல்லிவிடுவார். உப்பனார், வெட்டார், வீரசோழன் ஆறு, அரிச்சந்திர ஆறு, பென்னாறு என்ற இந்த 23 கிளை ஆறுகள் பிற்கால சோழன் காலத்திலே வெட்டப்பட்டவை. அதற்குப் பிறகு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறந்த 1924 ஆம் ஆண்டிலே வெள்ளையர் ஆட்சியாளரால் மராமத்து செய்யப்பட்டன. பிற்காலச் சோழன் காலத்திலே வெட்டப்பட்டு, வெள்ளையன் ஆட்சிக் காலத்திலே மராமத்து செய்யப்பட்டு, அதற்குப் பிறகு 75 ஆண்டுகள் அந்தப் பிற்கால சோழனுக்குப் பிறகு, இந்தத் தற்கால ஆரூர் சோழன் முதலமைச்சராக வந்த பிறகுதான் *(மேசையயை தட்டும் ஒலி)* 50 கோடி ரூபாயில் தூர் வாரும் பணி சிறப்பாக நடைபெற்று இருக்கிறது. அப்படித் தூர் வாரிய காரணத்தினால் தஞ்சை வள நாட்டிலே சென்ற ஆண்டு 85 டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி, இந்த ஆண்டு 98 டன்னாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்படித் தூர் வாரும் பணி நடைபெற்றுள்ளது.

அதுபோல பாலங்கள். பாலங்கள் என்று எடுத்துக்கொள்கிறபோது இன்றைக்கு 208 பாலங்கள் மாநிலம் முழுவதும்...

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரை ஆரூர் சோழன் என்று குறிப்பிட்டார்கள். அவர் நாகை தொகுதியைச் சார்ந்தவர், வேண்டுமென்றால் தஞ்சை சோழன் என்று குறிப்பிடலாம்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பிறந்த இடத்தை வைத்துத்தான் சொல்வார்கள்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** அப்படிப் பார்த்தால் அவர் பிறந்தது நாகைத் தொகுதியிலே. அது இந்த மாமன்றத்திற்குத் தெரியும். படித்தது வேண்டுமானால் திருவாரூரில் இருக்கலாம்.

**திரு. ஜி. பழனிசாமி :** ஒன்றுபட்ட தஞ்சை தொகுதி. நாகை சமீபத்திலே இணைக்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம் என்பதை மறக்காமலேயே இருக்கிறார். ஏன் அதை ஞாபகப்படுத்துகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டுக்குச் சொந்தம். (மேசையைத் தட்டும் ஒலி) எந்த ஒரு மாவட்டமும் தனிச் சலுகையை அவரிடம் எதிர்பார்ப்பதற்கு இப்படியெல்லாம் பேசக் கூடாது. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொல்ல வந்தேன். இன்னும் அந்தக் குறுகிய கண்ணோட்டம் நம்மைவிட்டு அகலவில்லை. தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; தமிழ்நாட்டைத் தாண்டி விந்தியத்திற்கு அப்பால் - இன்னும் சொல்ல வேண்டுமானால் மத்திய திட்டக் குழுவே பாராட்டி இருக்கிறது. இருக்கின்ற மாநில அரசாங்கங்களிலே ஒழுங்காக திட்ட இலக்கை அடைந்த ஒரே மாநிலம் தானைத் தலைவர் கலைஞர் அவர்களை முதலமைச்சராக கொண்டிருக்கின்ற தமிழ்நாடு அரசாங்கம்தான் என்று திட்டக் குழுவே பாராட்டியிருக்கிறது.

அதேபோல பாலங்கள். 208 பாலங்கள் 450 கோடி ரூபாயிலே. இந்தப் பாலங்கள் என்று வருகிறபோது, சென்னை மாநகரத்திலே 10 பாலங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு சிறப்பாக வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் 10 பாலங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு மாநகராட்சியிடத்திலே இருக்கிறது. இதைப் பார்க்கிறபோது—அப்படியே கற்பனை செய்து பார்க்கிறபோது, இன்னும் ஓராண்டு கழித்து 10 பாலங்கள், அதற்குப் பிறகு மேலும் 10 பாலங்கள் என்று வருகிறபோது—இப்போது கர்நாடகத்திலே இருக்கிற பெங்களூர் மாநகரத்தை 'Garden City of India'; அதைப்போல, ஜெய்ப்பூரை 'Pink City of India'; அதைப்போல தாங்கள் இருக்கின்ற மதுரையை 'Temple City of India'; என்று சொல்கிறார்களே, அதைப்போல இந்தச் சென்னை மாநகரம் 'Bridges City of India' (மேசையைத் தட்டும் ஒலி) என்று உருவாகக்கூடிய அந்தப் பெருமை நிச்சயமாக நம்முடைய வணக்கத்திற்குரிய சென்னை மாநகரத் தந்தை அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்திலே வெளிப்படையாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.



இதைச் சொல்வதற்குக் காரணம், இந்த மாநில சர்க்காருக்கு எப்படி நிதிப் பற்றாக்குறை இருக்கிறதோ, அதைப்போல, மாநகராட்சிக்கும் பற்றாக்குறை இருக்கிறது. அவர்களுக்கு வருகின்ற வருமானத்திலே 70 சதவீதம் ஊழியர்களுக்கே சம்பளமாகக் கொடுத்துவிடுகிறார்கள்.

முற்பகல் 11-55

இப்படிப்பட்ட சூழ்நிலையிலே பாலங்கள் எல்லாம் கட்டி இந்த சென்னை மாநகரத்தை சிங்காரச் சென்னையாகக் கொண்டுவர வேண்டும் என்று அவர்கள் முயற்சிக்கின்றபோது, இந்த மாநில அரசாங்கம் கொஞ்சம் தாராள மனப்பான்மையோடு மாநகராட்சிக்கு மானியத் தொகை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், நீங்களே கேட்டு இருக்கிறீர்கள். சிறு சேமிப்பு மூலம் வரக்கூடிய வருவாயிலே 29 சதவீதம் கொடுக்கப்படுகிறது என்பதை மாற்றி 33 சதவீதம் கொடுக்க வேண்டும் என்று. அந்த 33 சதவீதம் வருகின்றபோது, போதிய சதவீதம் மாநகராட்சிக்கும் தர வேண்டும் என்று சென்னை மாநகரத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் எல்லாம் இருக்கின்றபோது, இவை பற்றிப் பேசுவதை விட்டு விட்டு... அதுமட்டுமல்ல, எதிர்க்கட்சியான நீங்கள் எல்லாம் தட்டியும் கேளுங்கள் குட்டியும் கேளுங்கள்: மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன்கூட தென்னாலி ராமன் கதையைச் சொன்னார். ஆனால், இன்னொரு நல்ல கதையை இதே மன்றத்திலே இதே முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஒருத்தி என்னதான் பேரழகியாக இருந்தாலும், அவள் பட்டாடை உடுத்திக்கொண்டு நெற்றியிலே பொட்டு வைத்துக்கொண்டு, நகைநட்டு போட்டுக்கொண்டு வெளியிலே கிளம்புவதற்கு முன்பு நிலைக் கண்ணாடி முன்னால் நின்று கொஞ்சம் பார்த்துக்கொள்வாள், தன் அலங்காரம் சரியாக இருக்கிறதா என்று. அதேபோல எதிர்க்கட்சியாக நீங்கள் இருங்கள். வளமான ஒரு ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சி என்ற நிலைக்கண்ணாடி மூலம் பார்த்து, அவ்வப்போது திருத்திக்கொள்கிறேன் என்று சொல்கின்ற பக்குவம் வாய்ந்த பெருந்தன்மைமிக்க தலைவர் டாக்டர் கலைஞர் இங்கே முதலமைச்சராக இருக்கிறார். அப்படி இருக்கும்போது - இங்கே வந்து பட்ஜெட்டை கிழித்துப் போடுவது, தகராறுகள் செய்வது, பிறகு வந்து என்ன சொல்வது (குறுக்கீடு) நான் அவரைச் சொல்லவில்லை;

செய்தவர்களை சொல்கிறேன். பிறகு என்ன சொல்வது? என் தொகுதிக்கு **எதுவுமே செய்யவில்லை**; என் தொகுதி புறக்கணிக்கப்படுகிறது என்று சொன்னார், ஆனால், அன்றைக்குப் பட்டியல் போட்டுக் காட்டினாரே முதலமைச்சர்; 52.41 கோடி ரூபாய்க்கு இராசிபுரத்திலே பணிகளும் பயன்களும் நடைபெற்று இருக்கின்றன என்று; இவ்வளவும் செய்து இருக்கிறார்கள்; அதைப் பாராட்டக்கூடிய மனப்பான்மை இல்லை என்றாலும், இருக்கின்ற மற்ற திட்டங்களையாவது எடுத்துச்சொல்லி, ஓர் ஆரோக்கியமான விவாதத்திலே இங்கே கலந்துகொண்டு கருத்துக்களைச் சொல்லலாம். அதை விட்டுவிட்டு, இந்த சபையினுடைய கண்ணியத்தையும் கௌரவத்தையும் குலைக்கின்ற விதத்திலே, குந்தகம் ஏற்படுத்துகின்ற விதத்திலே நடந்துகொள்வது எந்தவகையிலே நியாயம்? நானும் உங்களுடைய அங்கம் என்கிற காரணத்தால், இதற்குமேல், நான் அதற்குள் செல்ல விரும்பவில்லை.

அதுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, இதை எல்லாம் பார்க்கும்போது, விவேகசிந்தாமணியிலே ஒரு பாட்டு—

"கற்பூரப் பாத்தி கட்டி கஸ்தூரி எருப்போட்டுகமழ்நீர் பாய்ச்சி
பொற்பூர உள்ளியினை விதைத்தாலும்
அதன் குணத்தைப் பொருந்தக் காட்டும்சொற் பேதையருக்கு அறிவு
இங்கு இனிதாக வருமெனவே
சொல்லினாலும்,நற்போதம் வராது அங்கு அவர் குணமே மேலாக
நடக்கும் தானே,"

என்று விவேகசிந்தாமணியிலே கூறப்பட்டு இருக்கிறது.

வாசமிகு பச்சைக் கற்பூரத்தால் பாத்தி அமைத்து மணம் வீசும் புனுகு கஸ்தூரியை எருவாகப் போட்டு, பன்னீரை ஊற்றி அழகாக வெள்ளைப் பூண்டை விதைத்தாலும்—கவனிக்கவும், வெங்காயம் அல்ல, வெள்ளைப் பூண்டை விதைத்தாலும்—பாதுகாத்து வளர்த்தாலும், அது வளர்ந்தவுடன் அதன் குணத்தைக் காட்டுமே தவிர, கற்பூரம், கஸ்தூரி புனுகு வாசம் துளியும் தலைகாட்டச் செய்யாது, அதேபோலத் தான் கற்றறிவில்லாத மூடருக்கு நல்லறிவு வரும் என்று என்னதான் புத்திமதி கூறினாலும், அவருக்கு நல்லறிவு உண்டாகாது. அவரிடமிருந்து இழிந்த குணமே மேலோங்கி நிற்கும் என்று நான் சொல்லவில்லை; பேரவைத் தலைவர் அவர்களே, விவேகசிந்தாமணி சொல்கிறது. (மேசையைத்தட்டும் ஒலி)



அதேபோல, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், நானும் ஒரு காலத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, எழுந்து வந்து பட்ஜெட் புத்தகத்தை கிழித்திருந்தால் எங்கள் நிலைமை என்ன ஆகியிருக்கும் என்பதை கொஞ்சம் எண்ணிப்பாருங்கள். நேற்று அடுக்கடுக்காக அண்ணன் திருநாவுக்கரசு இங்கே எடுத்துக் காட்டினார்கள். பேரவைத் தலைவராகிய நீங்கள் இங்கு நடந்து கொள்கிற விதத்தை இன்றைக்கு அகில இந்தியாவே பாராட்டிக்கொண்டு இருக்கிறது. எல்லா சட்டமன்றத் தலைவர்களும் நாடாளுமன்றத் தலைவரும் உள்கள் பக்கம்தான் நிற்போம் என்று சொல்கிறார்கள் என்றால், அது நீங்கள் சபையை நடத்துகிற விதம். ஆனால், இதற்கு முன்பு, அந்த இடத்திலே இருந்து நான் பேரவைத் தலைவருடைய கவனத்தை என் பக்கம் கவருவதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Hon. Speaker Sir, என்று கையை நீட்டிப் பேசினால், அன்றைய பேரவைத் தலைவர் என்ற சொல்லுவார் தெரியுமா? இந்தக் கையை நீட்டி மிரட்டுகிற வேலை என்னிடம் வேண்டாம் என்று சொல்லுவார்; உடனே அடுத்த நாள் நானும் நண்பர் குமாரதாசும் கையைக் கட்டிக் கொண்டு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் மகாமகத்தில் 100 பேர் இறந்து விட்டார்கள்; அது குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்; அது எப்போது எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள்? இப்போது எடுத்துக் கொள்வீர்களா? நாளை எடுத்துக் கொள்வீர்களா, எப்போது எடுத்துக்கொள்வீர்கள் என்று கேட்டால், இந்த கிண்டல் எல்லாம் என்னிடம் வைத்துக் கொள்ளாதீர்கள் என்று சொல்லுவார். கையை நீட்டிப் பேசினால், மிரட்டிப் பேசுகிறோம் என்று சொல்லுவார்; கையை மடக்கிக் கொண்டு பேசினால், கிண்டல் செய்கிறோம் என்று சொல்லுவார் இப்படி எல்லாம் நடத்தப்பட்ட காலம் உண்டு. அதுமட்டுமல்ல, என் மீதும் ஞானசேகரன் மீதும் என்ன வழக்கு தெரியுமா? எங்கள் இருவரின் உருவங்களைப் பாருங்கள், எப்படி இருக்கிறோம் என்று- காற்று வேகமாக அடித்தால், நாங்கள் அதோடு போட்டி போட்டுக் கொண்டு ஓடுவோம்-ஆனால் 8 காவலர்களை அடித்துத் தாக்கினோம் என்று எங்கள் மீது வழக்கு போட்டு நள்ளிரவில்-இப்போது பெரிதாகப் பேசுகிறார்கள். இதிலே வேறு நஷ்டஈடு கேட்கிறார்கள்; பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடம் நஷ்டஈடு கேட்கிறார்கள்; ஒரு கோடி, 2 கோடி, 3 கோடி என்று கேட்டு இருக்கிறார்கள். இப்போது உள்ளபடியே அவருக்கு யார் மீது கோபம் இருந்திருக்கும் என்றால், நீதிபதி மீதுதான் கோபம் இருந்திருக்கும். இந்த stay கொடுக்காமல் இருந்திருந்தால் 15 கோடி கேட்டு இருப்பார்; இப்போது 3 கோடி அளவுக்குத்தான் கேட்கும்படியாகப்

பண்ணியிருக்கிறார் இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அப்படியெல்லாம் நடந்தது இந்தச் சட்டமன்றத்திலே, பார்வையாளர்கள் பார்த்தார்கள்; பத்திரிகையாளர்களும் பார்த்தார்கள். ஆனால் அன்றைக்கிருந்த சட்டமன்றத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இன்று எதிர்க்கட்சிகளுக்கு அதிக வாய்ப்புத் தரப்படுகிறது. நீங்களே சொன்னீர்கள், எனக்கு 3 வருடத்திற்கு ஒரு முறைதான் பேச வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்று தினந்தோறும் என் பெயரை எழுதி வைத்து, தினமும் உங்களாலே அடிக்கப்பட்டது. மற்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்புத் தரப்பட்டு, அதிலும் குறிப்பாக எங்களுடைய ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் குறைக்கப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது) ஆனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு அந்த வாய்ப்புத் தரப்பட்டது. இதிலேயுள்ள உங்களுடைய பெருந்தன்மையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். எங்களுடைய பெருந்தன்மையையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவதைக் காட்டிலும் மணி அடிக்கிற அதிகாரம்தான் உங்களுக்குப் பெரிய அதிகாரம், அதை உங்களுக்கு நிறைய வழங்கியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மணி அடிக்கிற அதிகாரத்தை நீங்கள் நினைவூட்டிய காரணத்தால் ஒன்றை மட்டும் சொல்லி விடை பெற்றுக்கொள்கிறேன்.

தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை என்பது சாதாரண வெறும் 47 பக்கங்களைக் கொண்ட காகிதம் என்று யாரும் நினைத்துவிட வேண்டாம். எதிர்கால தமிழகத்தின் தலையெழுத்தை நிர்ணயிக்கக்கூடிய கருத்துப் பெட்டகம், காலக் கண்ணாடி. நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசுவார்கள், பேரவைத் துணைத் தலைவரை, வாழ்த்துகிற நேரத்தில் ஒழுங்காக மணி அடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 10 நிமிடங்களுக்கு மேல் யாருக்கும் பேச அனுமதி கொடுக்கக்கூடாது. (சிரிப்பு)

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே



பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி சொல்லி, என்னுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒருசில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய நம்முடைய தமிழகம் முன்னேறுவதற்கு, பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்திருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்திலே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடி இனத்தவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கியிருக்கக்கூடிய அந்த அடிப்படையிலேதான் அவர்களுடைய சமூக, கல்வி பொருளாதாரம் மேம்பாடு அடையக்கூடியது என்ற நிலையை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்திலே இன்றிருக்கக்கூடிய இந்த இட ஒதுக்கீட்டிலே பல்வேறு குறைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நன்றாக அறிந்த காரணத்தினாலே, ஆதிதிராவிட மக்களுக்காக, அவர்களுடைய இட ஒதுக்கீட்டிலே இருக்கின்ற குறைகளைக் களைவதற்காக அதேபோல பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தவர்களுக்கு வழங்கியிருக்கக்கூடிய இட ஒதுக்கீட்டிலேயுள்ள குறைபாடுகளைக் களைவதற்காக இரண்டு மேல்மட்டக் குழுக்களை அமைத்து, அவற்றின் கருத்துரைகளைக் கேட்டிருக்கிறார்கள். அந்தக் குழுக்களினுடைய பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் குழுக்களினுடைய அறிக்கைகளைப் பார்க்கிறபோது மிகுந்த வேதனையாக இருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் அவர்களுக்குரிய இட ஒதுக்கீட்டிலே முழுமையாகப் பங்களிப்புப் பெறவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், ஒட்டுமொத்தமாக மிகவும் பின்தங்கிய மக்களுக்கு 20 சதவீதம் இட ஒதுக்கீடு என்பதில் முழுமையாகப் பெறப்பட்டிருப்பது 10.69 சதவீதம்தான். அதேபோல தாழ்த்தப்பட்ட மக்கள் 18 சதவீதம் இருக்க வேண்டுமானால் 15.39 சதவீதம்தான் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இப்படி மிகக் குறைவாக இருக்கிறார்கள். ஆகவே மற்றவர்களுக்கு வாய்ப்பளிக்கக்கூடிய வகையிலே இதைத் திருத்தி அமைத்து, காலியாக உள்ள இடங்களிலே மற்றவர்களைக் கொண்டு நிரப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த கூட்டத் தொடரிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பதில் அளிக்கையில், நான் குறிப்பிட்டு கேட்டதைச் சொல்லி, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களில் 108 சாதிகள் உள்ளன எனவும், அவற்றில் சில 20 சதவீதத்திற்கும் குறைவாக இருப்பதாகவும், மக்கள் தொகையிலே

குறைவாக இருக்கக்கூடிய வன்னியர்களும், சீர்மரபினரான முக்குலத்தோரும் அதிக வாய்ப்புகளைப் பெறுகிறார்கள் என்று சொன்னார்கள். நான் இங்கே மாண்புமிகு முதலமைச்சரிடத்தில் மனந்திறந்து ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் வகுத்தளித்த இந்த இட ஒதுக்கீட்டை நாங்கள் வரவேற்கிறோம்; பாராட்டுகிறோம். அதே நேரத்தில் இதில் சில குறைகள் இருக்கின்றன. என்ன குறை என்று சொன்னால், மண்டல் குழு அறிக்கையின்படி, சாதிவாரியாகக் கணக்கெடுக்கும்போது, வன்னியர்களுக்கான கணக்கெடுக்கும்போது, பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு பெயர்களிலே கவுண்டர் என்று சொல்கிறார்கள்; கண்டர் என்று சொல்கிறார்கள்; பள்ளி என்று சொல்கிறார்கள்; படையாச்சி என்று சொல்கிறார்கள்; ரெட்டி என்று சொல்கிறார்கள்; இப்படிப் பல்வேறு பெயர்களிலே, பல இடங்களிலே இருந்த காரணத்தினாலே அவர்கள் முழுமையாக வன்னியர்கள் என்ற அந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பிலே வர இயலாத நிலையிருந்தது. கவுண்டர் என்று சொன்ன காரணத்தினாலே வேளாண் கவுண்டர் இனத்திலேயும், இங்கே திருத்தணி போன்ற இடங்களிலே ரெட்டி என்று சொன்ன காரணத்தினாலே அவர்களை ரெட்டி இனத்திலேயும் பல்வேறு சாதிகளோடு சேர்த்த காரணத்தினாலே எங்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. ஆகவே அது குறைந்த காரணத்தால்தான், முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது 60 இலட்சம் சொச்சம் என்று சொன்னார்கள். உள்ளபடியே வன்னியர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அதேபோல, ஆதிதிராவிடர்களுடைய எண்ணிக்கையும் ஏறக்குறைய 22 சதவிகிதத்திற்கு மேலே இருக்கிற காரணத்தால்தான் அதை நீங்கள் மறுபரிசீலனை செய்து திருத்தி அமைக்க வேண்டுமென்று இங்கே பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 12-05*

அதுமாத்திரமல்ல, நீங்கள் சொல்கிறமாதிரி, ஒரு சில இடங்களிலே இட ஒதுக்கீட்டினால் பயனடைகிறபோது, சில இடங்களிலே அதிகமாக இருக்கக்கூடிய வன்னியர்களும், சிறுபான்மையினரும் பலன்களைப் பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அதேநேரத்திலே சில இடங்களிலே சில பயன்களைப் பெறுகிறபொழுது, குறைவாக எண்ணிக்கையில் இருக்கக்கூடியவர்களும், இவர்களுடைய பயன்களைப் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, யாருடைய பயனையும் யாரும் பெற்றுக்கொள்ளாத வகையிலே எல்லோருக்கும் சமூக நீதி சமமாகக் கிடைக்கின்ற வகையில், கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருப்பதைப்போல, இங்கே தொகுப்பு இடஒதுக்கீடு முறையை, அல்லது



மாவட்ட வாரியாக, மண்டல வாரியாக மக்கள் தொகை அடிப்படையில் வழங்க வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இடஒதுக்கீட்டு முறையில் இப்படியெல்லாம் குறைகள் இருக்கிற காரணத்தால், இதற்கு முன்னால்கூட நாங்கள் வெள்ளை அறிக்கைகூட கேட்டு இருந்தோம், இப்பொழுது வெள்ளை அறிக்கை கேட்கவில்லை என்று சொன்னாலும் கூட, இது உங்களுடைய காலத்தில் நிச்சயமாகக் களையப்பட வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லவேண்டுமென்றால், இடைநிலை ஆசிரியர்கள் பயிற்சி இடங்களைப் பொறுத்தவரையில் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் எல்லாம் சேர்த்து மொத்தமாக ஆண்டுக்கு தேர்வு செய்யப்பட வேண்டிய மாணவர்களுடைய எண்ணிக்கை 4480. இதிலே தாழ்த்தப்பட்டவர்களுக்குக் குறைவாக இருக்கின்ற காரணத்தால்தான், அந்த இடங்களையெல்லாம், காலி பின்னடைவு இடங்களையெல்லாம், நிறைவு செய்வதற்காக இப்பொழுது ஒவ்வொரு பள்ளியிலேயும் 100 மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதாக சிறப்பு இட ஒதுக்கீட்டுத் திட்டத்தை வழங்கியிருக்கிறீர்கள். உள்ளபடியே நாங்கள் வரவேற்கிறோம். பொருளாதாரரீதியாக, கல்விரீதியாக பின்தங்கி இருக்கக்கூடிய அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் பயனடைவதற்கு வகுத்துள்ள திட்டத்தை வரவேற்கின்ற அதேநேரத்தில் இங்கே மிகவும் பின் தங்கியவர்களிடமும் இந்த நிலை இருக்கிறது. ஓர் ஆண்டுக்கு 4480 மாணவர்களைத் தேர்வு செய்கின்றபோது இங்கே மிகவும் பின்தங்கியவர்களுக்கு 20 சதவீத இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் 896 பேர் தேர்வு செய்யப்படவேண்டும். ஆனால் அவர்களுக்கு உள்ளபடியே கிடைக்கக்கூடிய இடங்கள் எத்தனை என்று சொன்னால், 294 இடங்கள், ஆக, 6.80% தான் இங்கே கிடைக்கிறது. மீதியெல்லாம் ஏமாற்றப்படுகிறது. ஏமாற்றம் இல்லையென்று சொன்னாலும், தனியார் நிறுவனங்களில் அதிலும் குறிப்பாக சிறுபான்மையினர் இங்கே ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் வைத்திருக்கிற காரணத்தால், அங்கெல்லாம் இடஒதுக்கீடு இல்லாத காரணத்தால், பற்றாக்குறை ஏற்படுகிறது. ஒரு ஆண்டுக்கு 10 ஆயிரம் ஆசிரியர்கள் தேர்வு செய்யப்படுவதாக வைத்துக்கொண்டால், இங்கே மிகவும் பின்தங்கியவர்கள் என்று சொல்லக்கூடிய 108 சாதியினருக்கு 300 இடங்கள் மட்டுமே பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மீதி 1700 இடங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன. ஆகவே இப்படி குறைகளை புள்ளி விவரமாக சொல்ல வேண்டுமென்று சொன்னால் நிறையச் சொல்லலாம். ஆகவே இவற்றையெல்லாம் களைந்தெறிவதற்கு நீங்கள் நல்ல

வழிவகைகளைக் காண வேண்டுமென்று சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இன்னொன்றையும் இதற்கு முன்னால் சொன்னீர்கள். இந்த மாநில அரசு இடஒதுக்கீடு திட்டத்தை வகுத்துக்கொள்வதற்கு வழிவகை செய்ய சட்டதிருத்தம் கொண்டுவரப்படும் என்று சொல்லியிருந்தது. அதை மனதார வரவேற்கின்றோம். அந்த அடிப்படையிலே உங்களுடைய அந்தக் கூற்றை ஏற்றுக்கொண்டு நாங்கள்கூட, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரக்கூடிய மே மாதம் 5 ஆம் தேதி, மத்திய அரசில் இருக்கக்கூடிய இட ஒதுக்கீட்டிலே, குறிப்பாக வேலைவாய்ப்பிலேயும், பதவி உயர்விலேயும் இட ஒதுக்கீட்டினுடைய குறைபாடுகளைக் களைவதற்கு, இந்திய நாட்டிலே இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத் தலைவர்கள், இட ஒதுக்கீட்டிலே, சமூக நீதியிலே அக்கறை கொண்டுள்ள அத்தனை தலைவர்களையும் டெல்லிக்கு அழைத்து மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்வதற்கு ஒரு மாநாட்டை டெல்லியிலே நடத்தவிருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆக அந்த வகையிலே இட ஒதுக்கீடு என்பது உயிர் மூச்சுப் பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தால்தான், இன்று ஆசிரியர் பயிற்சி பிரச்சினையாக இருந்தாலும், கல்வி நிறுவனமாக இருந்தாலும், சிறுபான்மை நிறுவனங்களில் இட ஒதுக்கீடு முறை அமல்படுத்தாத நிலை இருக்கிறது. இட ஒதுக்கீட்டில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வாய்ப்பு அளிக்காத நிலை இருக்கிற காரணத்தால், நிச்சயமாக இட ஒதுக்கீட்டைக் கொண்டு வருவதற்கு மத்திய அரசு முன்வர வேண்டும். தமிழக அரசு மத்திய அரசுக்கு ஒரு தீர்மானம் வடிவில் எடுத்துச் சொல்வதற்கு முன்வர வேண்டுமென்று இங்கே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

இங்கேகூட மொழிப்போர் தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்பில் அவர்களுடைய குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்குவதாக அறிவித்திருக்கிறீர்கள், வரவேற்கிறோம். அதே நேரத்தில் உயிரோட்டமான பிரச்சினை என்று சொல்லக்கூடிய, இடஒதுக்கீடு, சமூக நீதிப் பிரச்சினைக்காகப் போராடி உயிர்த் துறந்தவர்கள் ஏராளமானவர்கள் ஆவர். அதை நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள்; நிதி வழங்கியிருக்கிறீர்கள். அதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன், உங்களை இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், அந்தச் சமூக நீதிக்காகப் போராடியவர்கள், சிறை சென்றவர்கள்



குடும்பங்களுக்கு ஓய்வூதியம் வழங்கக்கூடிய அதே நேரத்தில் வேலைவாய்ப்பிலும் அவர்களுடைய குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது கணினியை அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள். அதையும் நாங்கள் வரவேற்கிறோம். அதே நேரத்தில் கணினித் திட்டத்திற்கு மாணவர்களைத் தேர்வு செய்யும்போது, அதிலும் இட ஒதுக்கீட்டு முறையைக் கொண்டுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படி பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சியைத் கொடுக்கின்ற அதே நேரத்தில் படித்து முடித்த மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுகின்ற வகையில்—ஏராளமானவர்கள் காத்திருக்கிறார்கள்—அவர்களுக்கும் இந்தப் பயிற்சியைக் கொடுப்பதற்கு முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டிற்காக ஒரு கழகத்தை ஏற்படுத்தியிருக்கிறீர்கள். இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தில்தான் இது முதல் முதலாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதை நீங்கள்தான் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆனால், இதில் பொருளாதார மேம்பாட்டிற்கு நிதி கடந்த காலங்களில் ஒதுக்கப்பட்டதா, ஏதாவது திட்டங்கள் இருக்கிறதா என்று கேட்டால், அது கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது.

இந்த ஆண்டு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறைக்கு 150 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறீர்கள். அது பற்றாக்குறையாக இருக்கிறது. அது சம்பளத்திற்கு சரியாகப் போய்விடுமே தவிர, பொருளாதார மேம்பாட்டிற்கு எந்த வகையிலும் வழிவகுக்காது என்கின்ற காரணத்தால் கூடுதலாக நிதி ஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நமக்குப் பின்னால் ஆந்திராவிலே இந்த பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் இந்த ஆண்டு 100 கோடி ரூபாயை 'அதர்னா' என்ற திட்டத்தின்கீழ் மாநில அரசின் ஒதுக்கீட்டாக வழங்கி 100 கோடி ரூபாய்க்கு மேலே மத்திய அரசு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இங்கேயும் அப்படிப்பட்ட நிலையை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டிற்காகக் கொண்டுவர வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, S.T. என்று சொல்லப்படுகின்ற, ஆந்திராவிலிருந்து கர்நாடகத்திற்குச் சென்று, கர்நாடகத்திலிருந்து மைசூர் கொல்லேகால்

வழியாக, ரெட்டியார் இனத்தைச் சேர்ந்தவர்கள், கொண்டா ரெட்டி என்று சொல்லக்கூடியவர்கள், ஈரோடு மாவட்டத்தின் ஒரு பகுதியிலும் சேலம் மாவட்டம், மேட்டூர், கொளத்தூர் ஆகிய பகுதிகளிலும், தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் பகுதியிலும் இந்த ரெட்டியார் இனத்தைச் சார்ந்தவர்கள், கொண்டா ரெட்டி இனத்தைச் சார்ந்தவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். 1988 வரை அவர்களுக்கு S.T. சான்றிதழ் வழங்கப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு அவர்களுக்கு மலைவாழ் பழங்குடியினர் என்று சொல்லப்படுகின்ற அந்த S.T. சான்றிதழ் வழங்கப்படாத நிலையில் (மணியடிக்கப்பெற்றது) அவர்கள் எல்லாம் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். தாங்கள் இதனைப் பெரிதும் கவனத்தில் கொண்டு அவர்களுக்கு இந்த S.T. சான்றிதழ் வழங்குவதற்கு முன்வர வேண்டுமென்றும் அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கிறார்கள். நமது நாட்டில் 65 சதவிகிதம் பேர் விவசாயிகளாக இருக்கிறார்கள். அந்த விவசாயிகளுடைய நலனுக்காக நாம் குறைவான காரியங்களைச் செய்திருக்கிறோம் என்பதை நான் மனம் திறந்து சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டுக்கு உணவளிக்கக்கூடியவர்கள் விவசாயிகள். அவர்கள் எந்த நிலையில் இருக்கக்கூடியவர்களாக இருந்தாலும் சரி, உணவு அளிக்கக்கூடியவர்களான அவர்களுக்கு நிதி ஒதுக்கீடு குறைவாகவும், அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டங்கள் குறைவாகவும் இருக்கின்ற காரணத்தால், இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து அவர்களுடைய வாழ்வில் விளக்கேற்றி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், விவசாயிகள் இந்த ஆண்டு மிகவும் எதிர்பார்த்தார்கள். கரும்பு விவசாயிகள் டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார்கள். அது கிடைக்கவில்லை. பெருத்த ஏமாற்றத்திற்கு ஆளானார்கள். அவர்கள் பல்வேறு நிலைகளிலே போராடி வருகிறார்கள். எனவே, கரும்புக்கு, டன் ஒன்றுக்கு 1000 ரூபாய் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும், விவசாயிகள் தங்களுடைய கடன்கள் இரத்து செய்யப்படும் என்று எதிர்பார்த்தார்கள். இரத்து செய்யப்படவில்லையென்றாலும் கூட வட்டியையாவது தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, பெண்கள் திருமண உதவித் திட்டம். இது வரவேற்கக்கூடிய ஒரு திட்டமாகும். இத்திட்டம் உங்களாலே கொண்டுவரப்பட்டது.



8 ஆம் வகுப்புவரை படித்தவர்களுக்கெல்லாம் வழங்கினீர்கள். இந்த ஆண்டு கல்வித் தகுதியை 10 ஆம் வகுப்புவரை என்று நிர்ணயித்த காரணத்தால் கிராமப்புற ஏழை எளிய, சாதாரண குடும்பங்களைச் சார்ந்த பெண்கள் எல்லாம் பலன் அடையக்கூடிய நிலை இல்லாத காரணத்தாலே, மீண்டும் தாங்கள் மறுபரிசீலனை செய்து, கருணைகூர்ந்து, அந்த 8 ஆம் வகுப்புக் கல்வித் தகுதியையே நிர்ணயிக்க வேண்டுமென்று நான் இங்கே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பத்திரிகையாளர் ஓய்வூதியம் என்று சொல்லி 1,500 ரூபாயை வழங்கியிருக்கிறீர்கள். அதை 2,500 ரூபாயாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்களுடைய ஓய்வூதியம் 1,500 ரூபாய்க்கு அவர்களே நன்றி தெரிவித்து எனக்குக் கடிதம் எழுதிவிட்டார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அதை 2,500 ரூபாயாக ஆக்க வேண்டுமென்று கேட்பது ஆச்சரியமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழங்கியதற்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் கூடுதலாக வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, கருணை கூர்ந்து கூடுதலாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பணிக்காலத்தில் இறக்க நேரிட்டால் வழங்கப்படும் உதவித் தொகை 40 ஆயிரம் என்பதை ஒரு இலட்ச ரூபாயாக ஆக்க வேண்டுமென்று நீண்டகாலமாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதையும் நீங்கள் கருணை கூர்ந்து ஒரு இலட்சம் ரூபாயாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதேநேரத்தில் எங்களுடைய தருமபுரி மாவட்டத்திலே...(மணியடிக்கப்பெற்றது) தொகுதி பற்றி...

பிற்பகல் 12-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது எனது

கருத்துகளை எடுத்துரைக்க வாய்ப்புத் தந்தமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"
என்பது பழமொழி.

"எண்ணும் கணினியும் கண்ணெனத்தகும்"
என்பது புதுமொழி.

வளர்ந்த நாடுகளுக்கு இணையாக Computer துறையில் தமிழ்நாட்டை உயர்த்த கலைஞர் அவர்கள் தெரிவித்த திட்டங்களை தமிழ்கூறும் நல்லுலகம் பாராட்டுகிறது. சான்றிதழ்களுக்காகப் படித்த இளைஞர்கள் வட்டாட்சியர் அலுவலகங்களில் கால்கடுக்க நின்றதுபோய், அந்தச் சான்றிதழ்கள் அவர்கள் இருப்பிடத்துக்கே வரச்செய்த செயலை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இந்தியா முழுவதுமே பின்பற்ற வேண்டிய அருமையான திட்டம்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீட்டை ரூ. 50 இலட்சம் உயர்த்தியதும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். உயர்நிலைப்பள்ளிகள், ஒன்றியப்பள்ளிகள் வளர்ச்சிக்கு இத்தொகை பயன்படுத்தப்படுகிறது. இருப்பினும், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் எதுவும் செய்ய இயலாத நிலை உள்ளது. நாடாளுமன்றத் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து நிதியுதவி பள்ளிகளுக்கு உதவி செய்வதுபோல, சட்டமன்றத் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து உதவி செய்யத் தக்க திருத்தங்களைக் கொண்டுவர தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று தமிழகத்தில் பல அணைகள் கட்டப்படுகின்றன, கால்வாய்கள் வெட்டப்படுகின்றன, பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். எனது தொகுதியில் மாண்புமிகு அண்ணன் ஆற்காட்டார் காலத்திலிருந்து சட்டமன்றத்தில் கேட்கப்படும் ரெட்டி திப்பை தேவனாசமய அணையைக் கட்ட நிதி ஒதுக்க வேண்டுமாய்க் கோருகிறேன்.

எனது தொகுதியில் சுமார் 50 ஏக்கர் நிலம் வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான இடம் பயனில்லாமல் உள்ளது. அந்த இடத்தில் எண்ணெய் வித்து ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர் நலன்கள், உயர்நிலைக் குழுவின் பரிந்துரையை ஏற்று செயல்படுத்தப்படுகின்றன என்றாலும், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் பெறும் சலுகைகள் யாவும், தனியார் கட்டுப்பாட்டில் உள்ள நெசவாளர்களுக்கும், விரிவுபடுத்த இத்தருணத்தில் முதல்வர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.



தனியார் துறையில் உள்ள நெசவாளர்களின் துயரங்களைத் தங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். சென்னைக்குப் பக்கத்தில், குன்றத்தூர், திருமழிசை, அனகாபுத்தூர், மேப்பூர், படப்பை ஆகிய ஊர்களில் சுமார் 11,000 தறிகள் இயங்கி வந்தன. தற்போது 2,500 கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது. மேலும், குடியாத்தத்தில் 10,000 தறிகளில் இன்று சுமார் 4,000 தொழிலாளர்களுக்கு பாதிவேலைதான் கிடைக்கிறது. அதேபோல், ஆற்காட்டில் 1,000 தறிகளில் 500 தொழிலாளர்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது. கடலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் சுமார் 15 சதவிகிதம்தான் வேலை கிடைக்கிறது. இதற்குக் காரணம், கைத்தறிக்கு ஒதுக்கிய 22 இரகங்களைத் தற்போது 11 இரகங்களாக மாற்றியும், விசைத்தறியாளர்கள் அதை நடைமுறைப்படுத்தாமல், தயாரிக்கிறார்கள். கைத்தறிக்கு ஒதுக்கிய 11 இரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்யாமல் தடுத்து, கைத்தறித் தொழிலைப் பாதுகாத்து வாழ்வளிக்கக் கோருகிறேன்.

மேலும், வெளிநாடுகளான மியான்மர் என்கிற பர்மாவில், தேசிய உடை லுங்கியாகும். கடந்த ஐந்து ஆண்டுகளாக விசைத்தறியில் உற்பத்தி செய்யப்படும் லுங்கிகள்தான் அனுப்புகிறார்கள். மேலும், சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு விசைத்தறி லுங்கிகளைத்தான் அனுப்புகிறார்கள். அதுமட்டுமல்ல. அந்த நாடுகளில் பொருளாதார வீழ்ச்சி கடந்த 1½ ஆண்டுகளாக ஏற்பட்டுள்ளது. ஏற்றுமதி செய்யும் சரக்குக்கு கடந்த 1½ ஆண்டுகளுக்கு முன், ஒரு வெள்ளிக்கு இந்தியன் கரன்சி ரூ. 14/- கிடைத்தது. தற்போது ரூ. 11/- தான் கிடைக்கிறது. அதேபோல், இந்தியாவிலிருந்து சிங்கப்பூருக்கு அனுப்பும் சரக்குக்கு 100 டாலருக்கு இந்தோனேஷியா ரூபியா 2,500 முதல் 3,000 வரை இருந்தது. தற்போது 100 டாலருக்கு இந்தோனேஷியா ரூபியா 9,300 கொடுக்க வேண்டியுள்ளது. ஏற்றுமதி செய்யும் சரக்கிற்குண்டான தொகைக்கு 31-3-1992 வரை 20 சதவிகிதம் ஊக்கத்தொகை மத்திய சர்க்கார் கொடுத்தார்கள். மேற்கண்ட கருணைத் தொகையைத் தொடர்ந்து கொடுக்க மத்திய சர்க்காரை தமிழக சர்க்கார் வலியுறுத்தக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், கைத்தறி லுங்கி வாங்கிவந்த வியாபாரிகள், ஏற்றுமதியாளர்கள் இப்போது விசைத்தறி லுங்கி வாங்குகிறார்கள். இப்போது விசைத்தறியில் உற்பத்தி செய்யும் துணி வாங்குகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் வாழ்க்கை கேள்விக்குறியாகி, பசி பட்டினியால் அல்லல்படுகிறார்கள்.

கைத்தறிப் பிரச்சினை தீர என்னுடைய யோசனையைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். ஒன்று, கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட இரகங்களை

[திரு. பி.என். சுப்பிரமணி] [1999 மார்ச் 26

விசைத்தறியில் தயார் செய்யாமல் இருப்பது; இரண்டு, 40 இஞ்ச் அகலத்திற்கு மேல் தயாரிப்பதைத் தடுப்பது; மூன்று, நாற்பதுக்கு நாற்பது நம்பர் நூலுக்கு மேலுள்ள நூலில் தயாரிப்பதைத் தடுப்பது போன்றவற்றைச் செய்தால் கைத்தறித் தொழில் ஓரளவிற்குச் சீர்படும் என்பதைப் பணிவன்போடு தெரியப்படுத்திக்கொள்கிறேன். ரூபாய் 185.26 கோடி மதிப்பீட்டில் 18 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு தொழில்நுட்பத்தை அளிக்கும் புனரமைப்புத் திட்டத்தை அரசு செயல்படுத்தும்போது வேலூர் மாவட்டத்திலுள்ள அரியூர் நூற்பாலைக்குத் தரமான பஞ்சு, புதிய இயந்திரங்கள் வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

நிதிநிலை அறிக்கையில் அண்டை மாநிலமான கர்நாடகாவைப் போல் வைரம் போன்ற பல பொருட்களுக்கு வரியைக் குறைத்துள்ளீர்கள். அது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

கர்நாடக கைத்தறி வளர்ச்சிக் கழகம் மற்றும் கைத்தறி நெசவாளர்களின் சமமேளனம் ஆகியவற்றின் மூலம் விற்பனை செய்யப்படும் சிட்டா நூலுக்கு 2 சதவிகிதம் என்றுள்ள வரியை முழுமையாக 1-4-1997 முதல் நீக்கியுள்ளார்கள். அதேபோல அண்டை மாநிலமான ஆந்திராவில் கைத்தறிக்குப் பயன்படும் சிட்டா நூலுக்கு வரியில்லை. தமிழ்நாட்டில் தயாராகும் சிட்டா நூலை விற்க நூல் மில் அதிபர்கள் ஆந்திராவில் டிப்போ வைத்துள்ளார்கள். அங்கு விற்கப்படும் நூலுக்கு வரியில்லை. அதனால் அங்கு தயாராகும் துணிகளைக் குறைந்த விலைக்கு விற்கிறார்கள். ஆந்திராவில் உற்பத்தியாகும் துணிகள் வரி இல்லாததினால் குறைந்த விலைக்கு விற்கமுடிகிறது. அப்படி விற்பதினால் தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் துணிகளை விற்க முடியாமல் அவை தேங்கிப் போய் இருக்கின்றன. 1977 ஆம் ஆண்டு ஆளுநர் அலெக்சாண்டர் ஆட்சியில் சிட்டா நூலுக்கு 3 சதவிகிதம் என்றிருந்த வரியை 2 சதவிகிதமாகக் குறைத்தார்கள். எனவே தாயுள்ளம் கொண்ட கலைஞர் அவர்கள் கைத்தறி நெசவாளர்கள் பயன்படுத்தும் சிட்டா நூலுக்கு 2 சதவிகிதம் என்றுள்ள வரியை அறவே நீக்க வேண்டும் எனப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிதிநிலை அறிக்கைத் தமிழர்களின் எதிர்காலத்தை நெஞ்சில் நிறுத்தி, குறிப்பாக இளைஞர்களின் எதிர்காலத்தை உணர்ந்து தமிழுலகம் நிமிர்ந்து நிற்கச் செய்ய தயாரிக்கப்பட்டது என்பதில் ஐயமில்லை எனக் கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.



1999 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துகளை எடுத்துச்சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றி. பொதுவாக பட்ஜெட் போடுகின்றபோது, இந்த ஆண்டு வருமானம் எவ்வளவு இருக்கும், இந்த ஆண்டு செலவு எவ்வளவாக இருக்கும் என்று நிர்ணயம் செய்கின்றபோது ஏதோ குத்துமதிப்பாகப் போடுவதில்லை. நிதி ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு எவ்வளவு வரும் என்பதைக் கணக்கிட்டு அந்தத் தொகை குறிக்கப்படுகிறது. அதற்கேற்ப செலவு வகையறாவும் நிர்ணயிக்கப்படுகிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னால் இந்த ஆண்டு 1000 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று எதிர்பார்த்து அரசின் பட்ஜெட் 1000 கோடி வருமானம் என்று போட்டால் அடுத்த ஆண்டு அந்த Budgetary Estimate 1000 கோடியாக நாம் நிர்ணயித்தது 1100 கோடி ரூபாயாக உயர்ந்திருப்பது நல்லது. அதேமாதிரி இந்த 1000 கோடிக்கு, 1200 கோடிக்கு செலவினங்களுக்கு Estimate போடுகிறபோது 1200 கோடி ரூபாய்க்குப் பதிலாக 1300 கோடி அல்லது 1250 கோடி ரூபாய்க்குச் செலவாகியிருக்கிறது என்று வர வேண்டும்.

பிற்பகல் 12-25

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைந்த அனுபவம் உடையவர். இது அவருடைய 12-வது பட்ஜெட். முன்பெல்லாம் பெரும்பாலும் பார்த்தீர்கள் என்று சொன்னால் அப்படித்தான் இருக்கும். அது ஏனோ தெரியவில்லை சென்ற ஆண்டைப் பொறுத்தவரை வருவாய் என்று எடுத்தால் Budgetary Estimate 15,039 கோடி அதாவது 15,040 கோடி ரூபாய். Revised Estimate—எவ்வளவு உண்மையான வருமானம் வந்திருக்கிறது என்று சொன்னால் 14,200 கோடி ரூபாய். இதில் குறைவு எவ்வளவு என்றால் 840 கோடி ரூபாய். இந்த 840 கோடி ரூபாய், ஏன் குறைவு வந்திருக்கிறது. எதிலே குறைவு வந்திருக்கிறது என்று பார்த்தால், அரசாங்கம் எதிர்பார்த்ததிலே, எந்த இனத்தின் கீழே இந்த 840 கோடி ரூபாய் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, மாநில அரசினுடைய வருவாயிலே State tax—tax revenue-விலே 1998-99-லே Budget estimate ஏறக்குறைய 10,024 கோடி ரூபாய். இதிலே வந்திருப்பது Revised estimate பிரகாரம், 9,625 கோடி ரூபாய். இதிலே மாநில அரசு வரி வருவாயில் — State tax-லே 400 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. அரசாங்கத்திற்கு வரவேண்டியதிலே குறைந்திருக்கிறது. மத்திய அரசு

பிரித்துக் கொடுப்பதன் மூலமாக, மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் வருவாய் — Central Government மூலமாக, அவர்கள் பிரித்துத் தருவதிலே நமக்கு வருகிற பணம், 1998-99-லே Budget Estimate -லே எவ்வளவு என்று கேட்டீர்கள் என்றால், ரூ. 2,920 கோடி. இதிலே நமக்கு வந்திருப்பது ரூ. 2,409 கோடி. ஆக இந்த வகைவருவாயிலே மத்திய அரசு பிரித்துத் தருகிற பணத்திலிருந்து மாநில அரசுக்குக் கிடைக்க வேண்டிய தொகையிலே சுமார் 511 கோடி ரூபாய் குறைவு ஏற்பட்டிருக்கிறது. அதனாலேதான், மாநில அரசிலே சுமார் 840 கோடி ரூபாய் Budget Estimate-ஐ விட Revised Estimate குறைந்திருக்கிறது. வருமானம் குறைகிறபோது, அதற்கேற்ப செலவும் குறைந்தாக வேண்டும். வேறு வழி கிடையாது. அதனாலே என்ன ஆகியிருக்கிறது என்று சொன்னால், அதற்கேற்ப செலவினம் குறைந்திருக்கிறது. மொத்தத்திலே வருவாய்க் கணக்கிலே செலவு 18,048 கோடி ரூபாய்க்கு Budget Estimate; 1998-99-லே Revised Estimate 17,154 கோடி ரூபாய்தான். ஆக, குறைவு என்ன என்றால் 864 கோடி ரூபாய். என்னென்ன இனங்களுக்காக ஒதுக்கி, எவ்வளவு செலவு என்று போடுகிறோமோ, அதிலே 864 கோடி ரூபாய் குறைவு என்று சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம், 864 கோடி ரூபாய் வருமானமே குறைந்திருக்கிறது என்ற கார்ணத்தினாலேதான்.

அதிலே இன்னொன்று State Tax என்று சொன்னேன். Particular-ஆக எந்த இனத்திலே இந்த Tax குறைந்திருக்கிறது என்று சொன்னால், அரசு வருமானத்திலே, மாநில அரசினுடைய வரிகளிலே மிக முக்கியமான பகுதியாக இருப்பது Sales Tax விற்பனை வரி. அதன் மூலமாகத்தான் அதிகமான வருமானம் கிடைக்கிறது. அதிலே, 1998-99 Budget Estimate பிரகாரம், எதிர்பார்த்தது ரூ. 6,517 கோடி. அதிலே Revised Estimate பிரகாரம் வந்திருப்பது 6,100 கோடி ரூபாய். எனவே, Sales Tax-லே அரசாங்கத்திற்கு வந்திருக்க வேண்டிய வருமானம் சுமார் 417 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 417 கோடி ரூபாய்க்கு ஓராண்டிலே நாம் அறிவித்ததற்குப் பின்னாலே வரிவிலக்கு ஏதேனும் தரப்பட்டிருக்கிறதா அல்லது வரிவசூல் செய்வதிலே மெத்தனப்போக்கோ அல்லது அதிகாரிகளினுடைய ஒத்துழைப்பு இல்லாமையோ அல்லது வரியே வசூலாகாமல் இருக்கின்றதோ, எதனாலே இந்த 417 கோடி ரூபாய் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை விளக்க வேண்டும், நிதித் துறை சார்பிலே இதை நான் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.



இதுதான் Major item. இதிலே 417 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. இந்த ஆண்டு போடுகிறபோதுகூட, ஒருசில இனங்களிலே குறைந்திருக்கிறது ; அதை நான் பெரிதாகக் குறிப்பிட விரும்பவில்லை. இவையெல்லாம் ஒவ்வோராண்டும் அரசாங்கத்திலே போடப்பட்டவை. பல துறைகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் முதலில் இந்தத் துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பது ; அடுத்த ஆண்டு அடுத்த துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்கிறபோது, சில துறைகளிலே குறைவதும், சில துறைகளிலே ஒதுக்கீடு கூடுவதும் ஒரு அரசு எடுக்க வேண்டிய அல்லது எடுக்கக்கூடிய காரியம்தான். சுகாதாரத் துறையை சென்ற ஆண்டோடு ஒப்பிட்டால், ஏறத்தாழ 24 கோடி ரூபாய் — Revised Estimate-க்கும் Budget Estimate-க்கும் போட்டு இருப்பதில் 24 கோடி ரூபாய் வருகிறது. வேளாண்மை சம்பந்தமான துறையில், 334 கோடி ரூபாய் குறைவு, அதாவது போன தடவை போட்டிருக்கிற Revised Estimate-ஐ விடக் குறைவு. அதிலே இருந்து ஆரம்பிக்கவேண்டும். அதிலேயிருந்து குறைவாக இருக்கும். அதற்கு என்ன சொல்லலாம் என்றால், Budget Estimate தான். அடுத்த ஆண்டு Revised Estimate-வருகிறபோது, அந்தத் தொகையேகூட அதிகமாக வரும் என்று சொல்ல முடியும். இதை நான் பெரிதாக, குறையாக சொல்லவில்லை. இப்படி துறைகளிலே வித்தியாசம் வரலாம். அதிலே ஒன்றும் தவறு கிடையாது. நான் சுருக்கமாகச் சொல்லக்கூடியது; நான் முதலிலே சொன்னதை மீண்டும் வலியுறுத்த விரும்புவது, வருமானம் என்ன எதிர்பார்க்கிறோமோ அதிலே குறைவு வராமல் அதிலே என்னென்ன மத்திய அரசிடமிருந்து வரவில்லையோ, மத்திய அரசிடமிருந்து 400 கோடி வரவில்லை என்றால், எந்தெந்த இனத்திலே பணம் நமக்கு வராமல் இருக்கிறதோ, அதைக் கவனத்திலே கொண்டு, மத்திய அரசு தரவேண்டிய பணத்தை நாம் கேட்டுப் பெறவேண்டும், ஏனென்றால் சுமார் 400 கோடி ரூபாய் என்பது ஒரு பெரிய தொகை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையாகும்.

பிற்பகல் 12-30

மற்றபடி பட்ஜெட்டிலே இருக்கிற உள் விவரங்களைப் பொறுத்தவரையில் சொல்லவேண்டுமென்றால்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பட்ஜெட் என்றால், நானும் அவர்களை ஏறக்குறைய 1977லிருந்து 22 ஆண்டுகளாக அவர் பட்ஜெட்டிலே பேசும் போது பார்த்திருக்கிறேன். அவர் பட்ஜெட் தயாரித்து அளிக்கும்போது எதிர்கட்சி வரிசையிலே இருந்தும் பார்த்திருக்கிறேன். பட்ஜெட்டைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டு மக்களுக்காக, மக்களின் எதிர்காலத்தை

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1999 மார்ச் 26

மனதிலே கொண்டு, அரசாங்கம் தீட்டுகின்ற திட்டங்களை, மிகுந்த கவனத்தோடு பரிசீலித்து அதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து மிகச் சிறப்பாக தயாரிக்கக்கூடியவர். அதுபோல இந்த பட்ஜெட்டும் மிகுந்த நுட்பமாக தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதிலே எந்த சந்தேகமும் கிடையாது. எனவே, இதிலே உள்ள சில அம்சங்களை நான் உள்ளபடியே வரவேற்கிறேன்.

தமிழ்நாட்டிலே வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களுடைய எண்ணிக்கை என்பது 35 சதவிகிதத்திலிருந்து 27 சதவிகிதமாக குறைந்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்று. உள்ளபடியே அதை நான் வரவேற்கிறேன்.

உள்ளாட்சி மன்றங்களுக்கான நிதி ஒதுக்கீடு ஏறக்குறைய 8 சதவிகிதமாக இருந்தது. இப்போது மொத்த வருவாயிலே, அதாவது ஏறக்குறைய 2023 கோடி ரூபாயிலே, சதவிகிதத்திலே சொன்னால் அது 19 சதவிகிதம் என்று பார்க்கிறபோது அது உள்ளபடியே வரவேற்கக்கூடிய அம்சமாகும். கிராமப்புறங்கள்தான் நாட்டின் ஜீவநாடிகள். கிராம மக்களை, கிராம மன்றங்களை, உள்ளாட்சி மன்றங்களை உற்சாகப்படுத்துகிற விதத்திலே, பணிகள் அதிகமாக நடைபெறுகிற விதத்திலே இந்த ஒதுக்கீட்டினை அதிகரித்திருப்பது பாராட்டத்தக்கது.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட மிகச் சிறப்பான திட்டமாகும். நான் ஆளுநர் உரையிலேயே முதலமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோளை சொன்னேன். அந்த வேண்டுகோளினை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். அதாவது அந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் தொகுதிக்கு ஒன்று என்று இருப்பதை தயவுசெய்து ஒன்றியத்திற்கு ஒன்றாக மாற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தொகுதிக்கு ஒன்று என்றால் அது சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் கெட்ட பெயர். எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கெட்ட பெயர். எந்த ஊரிலே திட்டத்தை எடுக்கவேண்டுமென்பதிலே பிரச்சினை இருக்கிறது. பலபேர் இதிலே நீதிமன்றத்திற்குக்கூட போனார்கள். ஏதாவது ஒரு ஊரைவிட்டு இன்னொரு ஊருக்கு திட்டத்தை எடுத்துச் சென்றார்கள் என்றால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். எனவே, குறைந்தபட்சம் ஒரு ஒன்றியத்திற்கு ஒரு பஞ்சாயத்து என்று எடுத்துக்கெண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழே சென்ற ஆண்டு 182 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால்...



1999 மார்ச் 26]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் சொல்கிறபோது ஒரு ஒன்றியத்திற்கு ஒரு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அது அவருடைய பகுதிக்கு வேண்டுமானால் பொருந்தக்கூடியதாக இருக்கும். ஆனால், வேலூர் ஒன்றியத்தைப் பொறுத்தளவில் ஒரு பாதி அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருக்குப் போகிறது. இன்னொரு பாதி எனக்கு வருகிறது. எனவே, நீங்கள் ஒன்றியத்திற்கு ஒன்று என்று ஆரம்பித்தீர்கள் என்று சொன்னால் ஒரு வருடத்திலே எனக்கு வரும். இன்னொரு வருடம் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருக்குப் போய்விடும். எனவே, அது மாதிரி தொகுதிகளையெல்லாம் விட்டு விட்டு, பெரிதாக இருக்கிற பகுதிகளிலே வேண்டுமானால் அதை நடைமுறைப்படுத்தலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இரண்டு பேரும் மனது வைத்தால் அந்த ஒன்றியத்திற்கு இரண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் கிடைக்கும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் சொல்கிற மாதிரி ஒன்றியமே தேவையில்லை; தொகுதிக்கு இரண்டு, மூன்று கொடுத்துவிட்டால் பிரச்சினையே இல்லாமல் போய்விடும். தொகுதிக்கு இரண்டு அல்லது மூன்று அல்லது குறைந்தபட்சம் இரண்டு வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். எவ்வளவு செய்ய முடியும் என்பதை நிதி ஆதாரங்களை உணர்ந்து பார்த்துத்தான் சொல்கிறேன். அதாவது இருக்கிற கஷ்டத்தை எல்லாம் உணர்ந்து பார்க்கிறேன். நாங்கள் ஒரு தொகுதியிலே பத்துகூட கேட்கலாம். கேட்பது எளிது. ஆனால் அதிலுள்ள சிரமத்தை உணர்கிறேன். எனவே, தயவுசெய்து ஒரு தொகுதிக்கு இரண்டு திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு இன்னொரு எளிமையான வழி சொல்கிறேன். அது என்னவென்றால், போன ஆண்டு ஏறக்குறைய 182 கோடி இதற்காகச் செலவாகியிருக்கிறது. இவ்வளவுகூட செலவழிக்க வேண்டியதில்லை. செலவுகளை நீங்கள் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள். ஒரு பஞ்சாயத்திலே என்ன அடிப்படையான வசதிகள் தேவையோ, அந்த அடிப்படைத் தேவைகளோடு நிறுத்திக்கொண்டு கொஞ்சம் குறைத்துக்கூடச் செய்யலாம். பஞ்சாயத்துக்களுடைய எண்ணிக்கையை அதிகமாக்கலாம் என்பது என்னுடைய வேண்டுகோளாகும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நான்கூட என்ன எதிர்பார்த்தேன் என்றால், 35 இலட்சத்திலிருந்து 40 இலட்சமாக ஆக்குவீர்கள் என்பதுதான். கேட்கும்போது 50 இலட்சமாகக் கேட்டோமே தவிர இருக்கிற நிதிநிலையில் 5 இலட்சத்தை அதிகரித்து 40 இலட்சமாக ஆக்குவீர்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால், நீங்கள் தாராளமாக அதனை 50 இலட்சமாக உயர்த்தியிருக்கிறீர்கள். சட்டமன்ற, உறுப்பினர்களுடைய சிரமத்தைப் போக்கியிருக்கிறீர்கள். அதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலே எங்களுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் நலப் பணியாளர்களுக்கு 500 ரூபாயிலிருந்து 800 ரூபாயாக உயர்த்தியிருக்கிறீர்கள், அதுவும் நல்ல திட்டம்.

அது மாதிரி தரிசு நில மேம்பாட்டு ஆணையம் ஆரம்பிக்கப்படும் என்று! சொல்லியிருக்கிறீர்கள். அதிலே 10,000 ஹெக்டேர் நிலப்பரப்பிலே புதியதாக விளைச்சல் அதிகரிக்கக்கூடிய நடவடிக்கைகள் வரவேற்கக்கூடியது.

பிற்பகல் 12-35

50,000 மாணவர்களுக்கு ப்ளஸ் 1 மற்றும் ப்ளஸ் 2 படித்த பின்னாலே வேலை கிடைக்கக்கூடிய அளவிற்குக் கணினியை விருப்பப்பாடமாக கொண்டு வந்திருப்பது, அவர்களுக்குப் பயிற்சி தருவது என்பது பாராட்டுக்குரியது. தந்தை பெரியார் ஒருமுறை சொன்னார், உண்மையான கல்வி என்னவென்றால், அந்தக் கல்வி எந்த நிலையிலே தடைபட்டாலும் அதுவரையிலே அவன் கற்றிருக்கிற கல்வி, அவனுக்கு ஏதாவது ஒரு பணியைச் செய்கிற, தகுதியை தந்திருக்க வேண்டும், அதுதான் கல்வி என்று தந்தை பெரியார் சொன்னார். M.A., M.Sc. என்று படித்து certificate வாங்கியும் சாதாரண ஒரு switch கூட போட முடியாமல், வீட்டிலே ஒரு fuse carrier கூட மாட்ட முடியாமல் இருக்கிற அந்தப் படிப்பினால் எந்தப் பயனும் இல்லை. எந்த நிலையிலே படிப்பு தடைபட்டாலும், அதுவரையிலே அவன் படித்த படிப்பு ஏதாவது ஒரு வேலை செய்கிற சக்தியை அவனுக்குத் தர வேண்டும். இதிலே பெரும்பாலும், 10-வது 11-வதிலே நின்று போகிறார்கள் இலட்சக்கணக்கான மாணவர்கள். எனவே, அந்த நிலையிலே இருக்கிற அந்த மாணவர்களுக்கு ஆண்டுக்கு சுமார் 50,000 பேர் என்று நீங்கள். கொண்டு வந்திருக்கிற திட்டத்தினாலே, வாழ்க்கையிலே தங்களுடைய



வறுமையைப் போக்கிக்கொள்ள, ஏதாவது ஒரு பணியிலே தங்களை அமர்த்திக்கொள்ளக்கூடிய அந்தத் தகுதியை அந்தக் கல்வி தருகிறது. அந்தத் திட்டத்தை நீங்கள் அமல்படுத்தியிருப்பதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

அதைப்போல, பத்திரிகையாளர் நலனுக்காக ரூ. 1000-த்திலிருந்து 1500 ஆக ஆக்கியிருக்கிறீர்கள். அதைப்பற்றி பிரச்சினை இல்லை. இன்னும் வருஷா வருஷம் கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றிக்கொண்டேதான் போகப் போகிறீர்கள். அதனாலே, இறந்து போனால் 40,000 ரூபாய் என்றிருப்பதை Round ஆக 50,000 ரூபாயாக வைக்கலாமா என்று யோசிக்கலாம்.

இன்னொரு பிரச்சினை. தென் மாவட்டங்களிலே ஜாதிக் கலவரங்கள், வன்முறைகள் ஏற்பட்டபோது, நீதிபதி மோகன் தலைமையிலே ஒரு குழு அமைத்தீர்கள். அந்தக் குழு தந்த அறிக்கையின் அடிப்படையிலே அந்தப் பகுதியிலே வேலைவாய்ப்புகளை உருவாக்க, தொழிற்சாலைகளை உருவாக்க, இதற்காகவெல்லாம் சில மாவட்டங்களைப் பரிந்துரை செய்து அதற்கு ஓர் உயர்மட்டக் குழுவை அமைத்து, அந்தப் பகுதியிலே வன்முறை வருவதற்கும், ஜாதிச் சண்டை நடப்பதற்கும், வேலைவாய்ப்பு இல்லாது இருப்பதுதான் காரணம் என்பதை அறிந்து, அங்கு பொருளாதார வளர்ச்சி இல்லாத சூழ்நிலை, இவை எல்லாம்தான் காரணம் என்பதைக் கருத்திலே கொண்டு, நீதிபதி மோகன் குழுவிலே சொல்லி இருப்பதைக் கருத்திலே கொண்டு, ஓர் உயர் மட்டக் குழுவை அமைத்து, அதற்கென்ன செய்யலாம் என்று யோசிக்கிறீர்கள். அது வரவேற்கக் கூடியது. ஓர் Action taken என்ற முறையிலே அந்தக் குழுவினுடைய அறிக்கையின் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதை வரவேற்கிறேன். அது சிவகங்கை, இராமநாதபுரம், திண்டுக்கல், மதுரை, தேனி, நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் வரையிலே வருகிறது. அதிலே புதுக்கோட்டை மாவட்டம் வரவில்லை. புதுக்கோட்டை தென் மாவட்டத்திலே வருகிறதா, வட மாவட்டத்திலே வருகிறதா எனத் தெரியவில்லை. இது இரண்டிற்கும் இடையிலே இருக்கிறது. ஏறக்குறைய இராமநாதபுரத்திலே என்ன சூழ்நிலை, மாண்புமிகு முதலமைச்சருக்குத் தெளிவாகத் தெரியும். அதைச் சொல்லக் காரணம் தஞ்சாவூர் C.M.P area; திருச்சி C.M.P. area; அதிலேயிருந்து இந்தப் பக்கம் ஒருமாதிரி. புதுக்கோட்டை என்பது just like இராமநாதபும் மாதிரிதான். இராமநாதபுரத்தில் என்ன சீதோஷ்ண நிலையோ. என்ன சூழ்நிலையோ அதேதான் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும், except 10 பஞ்சாயத்து தவிர்த்து. அதிலே C.M.P. தஞ்சாவூரிலேயிருந்து தண்ணீர்

வருகிறது 10, 15 பஞ்சாயத்துகளுக்கு. அது தொகுதிகூட அல்ல, 10 பஞ்சாயத்துதான். அதைத் தவிர்த்து, மற்ற தொகுதிகளையெல்லாம் பார்த்தீர்களென்றால், இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் மாவட்டங்களிலே என்ன சூழ்நிலையோ என்ன சீதோஷ்ண நிலையோ, என்ன மக்களுடைய வாழ்க்கைத் தரமோ, வறுமையோ, கஷ்டமோ எல்லாம் ஒரே மாதிரிதான். அதனாலே அவர்கள் ஜாதிச் சண்டை போடாமல் இருந்தார்கள், கலவரம் இல்லாமல் இருந்தார்கள் என்பதற்காக அவர்களுக்கு punishment கொடுக்கக் கூடாது. அதனால் இந்தக் குழு விசாரிக்கிறபோது இந்த மாவட்டத்திற்கும் என்ன செய்யலாம் என்பதை யோசிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு பிரச்சினை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தை தனி மாவட்டமாக 1974-லே ஆக்கியிருக்கிறார்கள். அதற்கு முன்னாடி அது தஞ்சையிலேதான் இருந்தது. இப்போது 25 ஆண்டுகள் ஆகிவிட்டன.

இதிலே மக்களுடைய ஒரு கோரிக்கை என்னவென்றால், Collectorate-ஐ வாங்கியிருக்கிறார்கள் அப்போது இராஜகோபால தொண்டைமான் அவர்களிடம் பேசி. அது 100 ஏக்கர். அப்போது அவர் புதுக்கோட்டை மன்னர். அங்கே வருகிற Collector-ஐ எல்லாம் நீங்கள் பார்த்தீர்கள் என்றால், அவர்கள் புதுக்கோட்டை வந்தால், மகாராஜா மாதிரிதான். அந்த மகாராஜா இருந்த கட்டடத்திலேதான் ஏறி உயரமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அது 100 ஏக்கரில் உள்ள பெரிய பிரமாண்டமான அரண்மனை. 35 இலட்ச ரூபாய்க்கு பேசி வாங்கியிருக்கிறார்கள். அந்தக் காலத்திலே. இப்போது குறைந்தது 50 கோடி ரூபாய் போகும். அதிலே ஒரேயொரு கோரிக்கை என்னவென்றால், அதை ரொம்ப குறைந்த விலைக்கு அரசு கேட்டதனாலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டதனாலே கொடுத்தார்கள். அந்தக் Compound-க்கு 'இராஜா தொண்டமானுடைய வளாகம்' என்று பெயர் எல்லாம் வைத்திருக்கிறார்கள். அந்த வளாகத்திற்குள்ளே அவருக்குச் சிலை ஒன்று வைக்க வேண்டுமென்பதுதான் கோரிக்கை. அந்த இராஜா குடும்பத்திலே வேறு ஒருவரும் கிடையாது, ஆட்களும் கிடையாது. பலபேருக்கு அரசு சிறப்புச் செய்திருக்கிறது. அந்தப் புதுக்கோட்டை மண்ணை ஆண்டவர் என்ற முறையிலே, குறைந்த விலைக்கு 35 இலட்ச ரூபாய்க்கு அந்த 100 ஏக்கரைக் கொடுத்தார் என்பதனாலே அந்த வளாகத்திற்குள்ளே இராஜகோபால் தொண்டைமானுடைய முழு உருவ வெண்கலச்



சிலையை அரசே நிறுவ வேண்டுமென்பது அந்தப் பகுதியிலே இருக்கிற மக்களுடைய கோரிக்கை. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) தொகுதிக்கான 2, 3 கோரிக்கைகளைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

வரியை பொறுத்த வரைக்கும், வரியிலே ஏற்கெனவே வருமானம் குறைவு என்று நானே சொன்னேன். அதனாலே ரொம்ப குறைக்கச் சொல்லவில்லை எதையும். இருக்கிற வரியை 4-லிருந்து 10 சதவிகிதமாக போட்டு இருக்கிறீர்கள். T.V.-யைப் பார்த்தீர்கள் என்று சொன்னால் அது ஒன்றும் luxury item அல்ல. முடிந்தவரை தவணை முறையிலேகூட வாங்கக்கூடிய சூழ்நிலை, T.V. வாங்குவது நல்லது, மக்களுடைய அறிவு வளர்ச்சிக்கு, நாட்டிலே நடக்கிற சம்பவங்களை தெரிந்துகொள்ள, கிராமப்புறம் வரைக்கும் T.V. அதிகமாகி வருவது நல்லது. எனவே இந்த T.V.-க்கு நான்கு சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்திருப்பதைக் குறைக்கவேண்டும். முன்பிருந்த 4 சதவீதத்தையாவது வைத்துக் கொள்ளுங்கள், அதிகரிக்க வேண்டாம் என்ற என்னுடைய வேண்டுகோளை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-40

அதேபோல் மண்ணெண்ணையில் எரியும் Pressure அடுப்பு என்று இருக்கிறது. மொத்தமே ரூ. 75 தான். அதைக் குடிசைத்தொழிலாக அங்கங்கே செய்கிறார்கள். மண்ணெண்ணெய் போட்டு, திரி போடுகிற அடுப்புகளுக்கு எல்லாம் வரி குறைத்திருக்கிறீர்கள். அதெல்லாம் ரூ. 250, ரூ. 300. இது ரூ. 75 தான். படித்தவர்கள் அங்கங்கே வைத்துக்கொண்டு, 4, 10 என்று தயாரிக்கிறார்கள். கிராமப்புறங்களிலே பயன்படுத்துகிறார்கள். அதனுடைய மொத்த அடக்கமே ரூ. 75 தான். எனவே அதனுடைய வரியைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பருப்புக்கெல்லாம் வரியைக் குறைத்திருக்கிறீர்கள். பொரி கடலை, பட்டாணி இந்த மாதிரி இனங்கள் சாதாரணமாக ஏழைகள் பயன்படுத்துகின்ற இனங்கள். பொரிகடலைக்கு 20 சதவீதம் இருக்கிறது. ஆக அதனுடைய வரி உயர்ந்திருப்பதாக அந்தச் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் குறைக்கலாம் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு மேலே அதிகமாக குறைக்க வேண்டியதில்லை. அதிகமாக சர்க்காருக்கு வருவாய் வருகின்ற வகையில், வரி அதிகமாக வரவேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பமாகும்.

அடுத்து, ஒன்றிரண்டு, மாவட்டத்தைப் பொறுத்து. புதுக்கோட்டை மாவட்டம் வறட்சி மாவட்டம். அங்கு கொள்ளிடத்திலேயிருந்து உபரித் தண்ணீர் வருகிறபோது புதுக்கோட்டை மாவட்டம் முழுவதற்கும் அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தக்கூடிய திட்டம், ரொம்ப காலமாக இருந்து, புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கின்றபோது, அப்போதெல்லாம், ரூ. 40, ரூ. 50, ரூ. 60 கோடி என்று உயர்ந்து உயர்ந்து இப்போது ரூ. 100, ரூ. 125 கோடியாகிவிட்டது. ஏனென்றால் கடலுக்கு வீணாகப் போகின்ற உபரித் தண்ணீர் அந்த மாவட்டத்திற்கு வந்தால் முழு மாவட்டமும் அதனாலே பயன்படுகின்ற சூழ்நிலை ஏற்படும். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு, ஒரு குழுவைப் போட்டு பரிசீலிக்க, உத்தரவிடவேண்டும். ரூ. 120 கோடியாகும் என்று சொல்கின்றார்கள். அந்த உபரித் தண்ணீர் போகும்போது புதுக்கோட்டை மாவட்டம் முழுவதற்கும் இந்தக் காவிரித் தண்ணீர் கிடைக்கிற விதத்திலே கொள்ளிடத்திலேயிருந்து எடுத்துச்செல்ல, அதுகுறித்து அரசு ஆய்வு செய்யவேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முயற்சி செய்தால்தான் முடியும். புதுக்கோட்டை மாவட்டம் பின்தங்கிய மாவட்டம், அந்த மாவட்டத்து மக்கள் அதனாலே பலனடைவார்கள்.

இரண்டாவது, சர்க்கரை ஆலை. ஒவ்வொரு முறையும் சொல்வதுதான் சரி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து 25 வருஷம் ஆகிறது. இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிந்த உடனேயாவது புதுக்கோட்டை வந்து, இதிலே கலந்து கொண்டு அடிக்கல் நாட்டவேண்டும். அதைத் தொடங்கி வைக்க வேண்டும். இடம் தரவில்லை. அதற்கு இன்னும் அரசு அலுவலர்கள் மட்டத்திலேயே, அந்தக் கடிதப் போக்குவரத்திலேயே போய், போய் வந்துகொண்டிருக்கிறது. இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு போட்ட பிறகும், தனியார், ஆலையைக் கட்ட தயாரான பிறகும் - இந்த மார்ச்சிற்குள் ஆரம்பித்தால்தான் அவர்களுக்கு Subsidy போன்றவை கிடைக்குமாம். ஆகவே இந்த மார்ச்சிற்குள்ளாக நிலம் ஒதுக்கிடு தரவேண்டும். இலவசமாக கொடுக்கமுடியாது என்றால் ஒரு Normal Cost போட்டால் கூடப் பரவாயில்லை. அவர்கள் கட்டத் தயாராக இருக்கிறார்கள். எனவே அதற்கு ஒதுக்கிடு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு கல்லூரியில்கூட B.B.A., (Computer) ஆகி.ய Courses கிடையாது. மாண்புமிகு கல்வி அமைச்சர்



அவர்கள் இங்கே இருக்கிறார்கள். பெண்கள் கல்லூரி, ஆண்கள் கல்லூரி எல்லாம் இருக்கின்றன. எனவே, அங்கே B.B.A., B.Sc. (Computer) ஆகிய Courses ஆரம்பித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கறம்பக்குடி தாலுகாவை தனி தாலுகாவாக மாற்ற வேண்டுமென்று நான் சென்றமுறைகூட வற்புறுத்தினேன். அந்த ஆலங்குடி முழுவதும் ஒரே தாலுகாவாக, பெரிய தாலுகாவாக இருக்கிறது. அதற்காகத்தான் முதலமைச்சர் அவர்களே பார்க்க வந்தபோது - முன்னாள் சேர்மன்கூட - இறந்துவிட்டார்கள். போன தடவைகூட குறிப்பிட்டுச் சொன்னேன். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாதிரி திருவரங்குளம் ஒன்றியம், அறந்தாங்கி ஒன்றியம் இரண்டும் பெரிய ஒன்றியங்கள். அவற்றை இரண்டு ஒன்றியங்களாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மணமேல்குடி தாலுகா தந்துவிட்டீர்கள். வழக்கமாகக் கேட்பதுதான். தாலுகா கொடுத்தால் கட்டடம் கேட்போம். கட்டடம் இல்லாமல் இருக்கிறது. புதிய கட்டடங்களை அநத தாலுகாவிற்கும், இலுப்பூருக்கும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதனூரில் Bus stand கிடையாது. அங்கு Bus stand அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாலுகா மருத்துவமனை இருக்கிறது. அங்கு 8 டாக்டர்கள் இருக்க வேண்டும். அதற்கு மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் இங்கே பேசினால்தான் நடவடிக்கை எடுப்பார்கள். நேரடியாகக்கூட சொல்லலாம், சுகாதாரத் துறை அமைச்சரிடம். ஏனென்றால் அந்தத் தொகுதி மக்கள் இதையெல்லாம் உள்ளே பேசுங்கள் என்கிறார்கள். டாக்டர்களே இல்லையென்று சொல்கிறார்கள். Petitions நிறைய வருகின்றன. எனவே, அரசு அதிகாரிகளின் கவனத்திற்குப் போகவேண்டும்; அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவற்றை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஏந்தலிலே ஆண்கள் மேல்நிலைப் பள்ளி — கட்டடத்திற்காக ரூ. 2.இலட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கட்டி காத்திருக்கிறார்கள்- மணமேல்குடியிலே பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய இரண்டிற்குமாக இந்த ஆண்டாவது கட்டடங்கள் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்னும் ஒரு முக்கியமான பிரச்சினை. அறந்தாங்கியிலே ஒரு சந்தை இருக்கிறது. அது சத்திரம் Department-லே இருக்கிறது. ஏற்கெனவே அறந்தாங்கி, தஞ்சாவூர் மாவட்டத்தில் இருந்தபோது சத்திரம் Department-ல் இருந்த ஹாஸ்டல்களுக்கு எல்லாம் இதிலிருந்து வந்த வருமானத்தைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். இப்போது புதுக்கோட்டை தனி மாவட்டமாகி விட்டது. இன்னும் அந்த சத்திரம் Department தஞ்சாவூர் கலெக்டர் கண்ட்ரோலில்தான் இருக்கிறது. அதிலே வருகின்ற வருமானம், சந்தைக்கு வருகின்ற புதுக்கோட்டை மாவட்ட மக்களிடமிருந்துதான் வருகின்றது. ஆனால் அதிலேயிருந்து வருகின்ற வருமானம் எல்லாம் தஞ்சாவூர் கலெக்டருக்குப் போய், சத்திரம் Department-குப் போகின்றது. அது 2, 3 Departments சேர்ந்து அதாவது ரெவின்யூ, உள்ளாட்சித் துறைகள் எல்லாம் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவு. அந்தச் சந்தையை அறந்தாங்கி முனிசிபாலிட்டிக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள இந்தச் சந்தையின் ஏலத்திலிருந்து வருகிற வருமானம் எல்லாம் நகராட்சிக்கு வந்தால் நகராட்சி வளர்ச்சியடையும். இதற்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

*பிற்பகல் 12-45*

பொதுவான சில பிரச்சினைகளைச் சொல்கிறேன். விவசாயிகளைப் பொறுத்தவரைக்கும் இன்னும் போராட்டம் எல்லாம் நடக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறு விவசாயிகளுக்கு ஜப்தியில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் ஏற்கெனவே முன்னுதாரணம் இருக்கிறது. இதில் சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்ற பிரச்சினை இருக்கிறது. பெரிய விவசாயி என்பது 15 ஸ்டாண்டர்டு ஏக்கர்தான் சட்டப்படி. அந்தப் பதினைந்து ஏக்கரும் அதிகமாகப் போனால் 15 இலட்ச ரூபாய்தான் இருக்கும். ஆனால் சென்னையிலே அரை கிரவுண்டு இடம் ஒருவருக்கு இருக்கிறது என்று சொன்னால் இந்த 15 ஏக்கர் வைத்திருக்கிற விவசாயியைவிட அவர் பெரிய ஆள் என அர்த்தம். எனவே இதிலே அவர்களுக்கு இருக்கிற கடனுக்கான சாதாரண வட்டியையாவது தள்ளுபடி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

இன்னொரு முக்கியமான பிரச்சினை வேலைவாய்ப்புப் பிரச்சினை. ஏற்கெனவே முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து எம்.ஜி.ஆர். அண்ணா



திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே மனு கொடுத்திருக்கிறோம். அதில், நான் என்ன சொல்கிறேன் என்றால் பரீட்சார்த்தமாக—பல்வேறு இலாகாக்களின் சார்பிலே வேலைவாய்ப்புகள் தருவதாக அறிவித்திருக்கிறார்கள், நான் வரவேற்கின்றேன். ஆனால் அவையெல்லாம் Department wise ஆகப் போகிறது. நான் சொல்வது அவர்களுக்கு Finance பண்ணுவது. எப்படி Finance பண்ண வேண்டும் என்றால், இப்போது வங்கியிலே கடன் வாங்குவது என்று வைத்துக்கொண்டால் — உதாரணத்திற்காகச் சொல்கிறேன் — பி-பாம் படித்த ஒரு பையன் 5 இலட்ச ரூபாய்க்கு மெடிக்கல் ஸ்டோர் வைக்க வேண்டும். பேங்க் லோன் இருந்தாலும்கூட, அவனுடைய ஷேர் கேப்பிட்டலாக ஒரு இலட்சம் ரூபாய் போட வேண்டும். அந்த ஒரு இலட்ச ரூபாய்க்கு அவன் நிலமோ, வீடோ அடமானம் வைக்கவேண்டும். அந்த ஒரு இலட்சம் ரூபாய் இல்லையென்றால் அரசாங்கம் அல்லது வங்கி 4 இலட்சம் ரூபாய் கடன் கொடுத்தாலும் பிசினஸ் செய்ய முடியாது. இப்போது டி.எம்.இ.-யோ பாலிடெக்னிக்கோ படித்த ஒருவர் ஒரு ஓர்க் ஷாப் போடவேண்டும் என்று வைத்துக்கொண்டால், இரண்டு இலட்சம் ரூபாயிலே அமைத்தால், அவருடைய ஷேர் கேப்பிட்டலாக 25,000 ரூபாய் அல்லது 50,000 ரூபாய் போட வேண்டும். ஆனால் அந்த ஷேர் கேப்பிட்டல் 25,000-க்கு அவர் நில அடமானம் எல்லாம் கொடுக்க வேண்டும். மீதி லோனுக்கு இந்தப் பணமும் போட முடியாது. இதற்கு நான் என்ன சொல்கிறேன் என்றால், இதற்குத்தான் "Youth Self-Employment Finance Corporation" அதாவது இளைஞர் சுய வேலைவாய்ப்பு நிதிக் கழகம் என்று ஏதோ ஒரு பெயர்; என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். 50 கோடியிலோ 100 கோடியிலோ ஒன்று ஆரம்பிக்கலாம். 35-லேயிருந்து 40 இலட்சம் இளைஞர்கள் ஆண்டுதோறும் படித்து வெளியில் வருகிறார்கள். அது உங்களுக்கே தெரியும். அரசாங்கம், இந்த அரசாங்கம் அல்ல எந்த அரசாங்கம் வந்தாலும், ஆண்டுக்கு 10,000, 20,000 இளைஞர்களுக்கு மேலே வேலைதர முடியாது. அதனாலே, இது என்ன ஆகிறது என்றால், எம்பிளாய்மென்ட் ஆபீஸிலே பதிந்து பதிந்து ஓவர்லோடாக ஆகி, ஆகி, அந்த எண்ணிக்கை கூடி 40 இலட்சம், 50 இலட்சமாகக் கூடிக்கொண்டே போகிறது. பலபேர் Employment ஆபீஸிலே பதிந்துவிட்டு ரிட்டையர் ஆகும் வயது ஆகி வேலையும் கிடைக்காமல் செத்துவிடுகிறார்கள். இதற்கு மாற்று வழி என்ன? ஒருவன் 10-வது வரையோ, எஸ்.எஸ்.எல்.சி.-யோ அல்லது அவன் என்ன படித்திருக்கிறானோ, அல்லது அவனுக்கு என்ன தெரியுமோ அதற்கேற்ற தொழில் வாய்ப்பைத்

தரவேண்டும். ஒரு பெட்டிக்கடை வைப்பது என்றாலும் அதுவும் ஒரு தொழில்தான். 25,000 ரூபாய் போட்டுக் கொடுத்து பெட்டிக் கடை வைத்தால் அதிலே 4 பேர் வேலை பார்க்கலாம். 8-வது அல்லது 10-வது வரை படித்தவன் ஒரு சைக்கிள் கடை வைத்தால் அந்த சைக்கிள் கடையிலே அவனுக்கும் வேலை கிடைக்கிறது. மேலும் 4 பேர் வேலை செய்வார்கள். ஒரு மெடிக்கல் ஸ்டோர், ஒரு ஒர்க் ஷாப் அதேமாதிரி ஐ.டி.ஐ., டி.எம்.இ. என்று என்ன படித்திருக்கிறார்களோ அவர்களுக்கு பரீட்சார்த்தமாக நான் இங்கே சொன்னேன், மாவட்ட வேலைவாய்ப்பகம் இருக்கிறது, அந்த மாவட்ட வேலைவாய்ப்பகத்திலே பதிவு லிஸ்ட் இருக்கிறது. District Industries Centre இருக்கிறது. அதிலே என்னென்ன தொழில்கள் அந்த மாவட்டத்தில் செய்யலாம் என்ற லிஸ்ட் இருக்கிறது. இந்த இரண்டையும் ஜாயின்ட் செய்து, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில் ஒரு கார்ப்பரேஷன் அமைத்து அதை பிராஞ்சஸ் மாதிரி ஆக்கி, பரீட்சார்த்தமாக 50 கோடியோ, 30 கோடியோ ஒதுக்கி அல்லது 20 கோடியோ ஒதுக்கி மாவட்ட வாரியாக இந்த மாதிரியாக அவர்களிடமிருந்து மனுக்களை அந்தந்த மாவட்ட Industries Centre, District Employment Office மூலமாகப் பெற்று (மணியடிக்கப்பெற்றது)

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்திலே இப்போது வருடத்திற்கு, படித்து வேலையில்லாமல் இருக்கிற இளைஞர்களுக்கு, 16,000 பேருக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை, மானியமாக 7,500 ரூபாய் வழங்கி நம்முடைய மாநில அரசு வழங்கி வருகின்றது. இந்த ஆண்டு அந்த பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று மாநில அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க 45 வயது நிறைந்தவர்களுக்கும் கடன் வழங்க வழிவகை இருக்கிறது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்னது மாதிரி 25,000 ரூபாய் 15,000 ரூபாய் என்று மாவட்ட தொழில் மையத்திலும், வங்கிகளிலும், இதேமாதிரியான வேலைவாய்ப்புத் திட்டத்திலே எல்லாம் கொடுக்கிறோம். ஆனால், நான் என்ன சொல்கிறேன் என்றால், இவையெல்லாவற்றையும் ஒருங்கிணைத்து ஒரு Corporation மூலமாக இதைச் செய்தார்கள் என்றால், அதற்கு ஒரு தொகை, 50 கோடியோ, 25 கோடியோ



பரீட்சார்த்தமாக முதலீடு செய்து அதன்மூலமாகச் செய்தார்கள் என்றால் இன்னும் அதிகமான பேர்களுக்கு சுய வேலைவாய்ப்பு—அரசாங்கத்திலே வேலை வாய்ப்பு அல்ல. சுய வேலைவாய்ப்பை—உண்டாக்கித் தர முடியும். இதுகுறித்து அரசுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால், சந்தேகம் என்று இல்லை, அரசாங்கம் இதுகுறித்து ஒரு விவரமான அறிக்கை பெற வேண்டுமென்றால் அந்த அறிக்கையைப் பெறுவதற்காக ஒரு குழுவைப் போட வேண்டுமென்று சொல்கிறேன். 3 அல்லது 2 I.A.S., அதிகாரிகளைக்கொண்ட 2 மாதங்களிலே ஒரு குழுவைப் போட்டு அதாவது இதை எப்படியெல்லாம் செய்யலாம் என்று ஆய்வு செய்கிற நோக்கத்திலே ஒரு குழுவிடம் நீங்கள் சொன்னீர்கள் என்றால் அவர்கள் கண்டிப்பாகக் கொடுப்பார்கள். இந்த Corporation-க்கு என்ன பெயர் வைப்பது, அதை எப்படி tie-up செய்வது என்பதை யோசிக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வன்முறை, மற்ற திசைமாறிப் போகிற (மணியடிக்கப்பெற்றது) ஜாதிச் சண்டை, கலவரம் இதெல்லாம் பரவுவதற்குக் காரணம் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம். எனவே இது ஒரு முக்கியமான பிரச்சினை. தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்திய நாடு முழுவதும் இருக்கிறது. மாநில அரசு மட்டுமல்ல மத்திய அரசும் கவனம் செலுத்த வேண்டிய மிக முக்கியமான பிரச்சினை. இதிலே முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டு, மற்றபடி பொதுவாக இந்த பட்ஜெட் சிறப்பாக இருக்கிறது, வரவேற்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

பிற்பகல் 12-50

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆம் ஆண்டினுடைய இந்த நிதிநிலை அறிக்கையின்மீது தமிழ் பா.ம.க. சார்பிலே என்னுடைய கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை வசந்தத்தின் வரவை இனிமையாகக் கூவியழைக்கின்ற குயிலின் இனிய ஓசை போல் 21 ஆம் நூற்றாண்டின் முன்னேற்றத்தை அறைகூவி அழைக்கின்ற வகையிலே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மிகச் சிறப்பானதொரு முறையில் தயாரித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழர்களைப் பொறுத்தளவிலே 21 ஆம் நூற்றாண்டின் நுழைவு வாயிலாகவும் இணையத்தை அறிமுகப்படுத்தியிருப்பதன் மூலமாக உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கின்ற பாலமாகவும், ஒன்றிணைக்கின்ற மையமாகவும் நிதிநிலை அறிக்கை இருப்பதைப் பாராட்டி அதனுடைய சிறப்பியல்புகளைச் சொல்வதற்கு முன்னாலே—பின்னாலே நேரம் இருக்காது என்ற காரணத்தாலே—என்னுடைய தொகுதியைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு முதலாவதாகக் கொண்டு வர விரும்புகிறேன்.

என்னுடைய ஆண்டிமடம் தொகுதியிலே வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தாலே படித்த இளைஞர்கள் தீவிரவாதத்தை நோக்கியும், பாமர மக்கள் கள்ளச்சாராயம் காய்ச்சுவது போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வீணாகிப் போய்க்கொண்டிருக்கிறார்கள். எனவே, என்னுடைய தொகுதியிலே வேலைவாய்ப்பைப் பெருக்குகின்ற வகையிலே சிறு தொழில்பேட்டையைத் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல, ஆண்டிமடம் தொகுதியிலே உள்ள இண்டியா சிமெண்ட், ராம்கோ சிமிண்ட் ஆலைகள் எனது தொகுதியைச் சார்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பை தருவதே கிடையாது. அதையும் கவனித்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றும், செவிலியர் பயிற்சிப் பள்ளி ஒன்றும், Politechnic-க்கும் தொடங்க வேண்டும் என்று நான் நீண்ட நாட்களாகக் கோரிக்கை வைத்திருக்கிறேன். அதையும் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வை. சிவபுண்ணியம் தலைமை)*

முந்திரியும், சுண்ணாம்புக் கல்லும் நிரம்பக் கிடைக்கிற காரணத்தாலே அரசு சார்பிலே ஒரு முந்திரி ஆலையும், TANCEM மூலமாக ஒரு சிமெண்ட் ஆலையும் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டிமடத்தில் தீயணைப்பு நிலையமும் செந்துறையில் மகளிர் உயர்நிலைப் பள்ளியும் தொடங்க வேண்டும். செந்துறை ஒன்றியம் நின்னியூரிலே சமத்துவபுரம் தொடங்க வேண்டும் என்று நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே பல சிறப்பியல்புகள் இருந்தாலும், நான் பெரிதும் மதித்துப் பாராட்டத் தகுந்தவொரு மிகச் சிறந்தத்



திட்டமாக நான் கருதுவது மாணவர்களுக்கான மருத்துவப் பரிசோதனை செய்கின்ற வாழ்வொளித் திட்டம். உண்மையிலேயே வளர்ந்த நாடுகளான ஐரோப்பிய நாடுகளிலே, ஆஸ்திரேலியா, அமெரிக்க நாடுகளிலேதான் திட்டமிட்டு 5 ஆண்டுக்காலத்திலே மாணவர்களுடைய உடலை ஆராய்ந்து நோய்களைக் கண்டறிந்து ஒழித்திருக்கிறார்கள். இப்போதுதான் முதன் முதலாக வளர்கின்ற நாடுகளிலே, இந்தியாவிலே, அதிலும் குறிப்பாக தமிழகத்திலே இத்தகைய அருமையான திட்டத்தினைக் கொண்டுவந்திருப்பதன் மூலமாக இந்தத் தமிழகத்தினுடைய மாணவர்களிடையே நிலவுகின்ற அந்த மதிநுட்பத்திறனை வளர்க்கின்ற வகையிலே, கல்வியிலே ஒரு மாபெரும் புரட்சியை தமிழக முதல்வர் அவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு மாணவர்களிடையே வயிற்றுப் பூச்சி, இரத்தச் சோகை, மாலைக்கண் நோய், சொறி, சிரங்கு போன்ற நோய்கள் எல்லாம் இருக்கின்றன. இந்தத் திட்டத்தைத் தமிழக முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருப்பதன் மூலமாக இந்த நோய்கள் அகற்றப்பட்டு அவர்களுடைய வாழ்விலே ஒளியேற்றியவராகத் திகழ்வதன் மூலமாக, எப்படி பள்ளி என்று சொன்னால் பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய பெயர் நினைவிற்கு வருகிறதோ, எப்படி சத்துணவு என்று சொன்னால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயர் நினைவிற்கு வருகிறதோ, அதேபோல் வரலாற்றிலே சமத்துவபுரம், அதுபோல் இந்த மாணவர்களுக்கான வாழ்வொளித் திட்டம் என்கின்றபோது தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய புகழ் என்றென்றும் வரலாற்றிலே நிலைபெறும், நீடிக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த நேரத்திலே அரசிடம் ஒரு வேண்டுகோளை வைக்கவும் விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குகின்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து 5 இலட்சம் ரூபாயை இதற்காக, ஒவ்வொரு தொகுதியிலேயும் ஒதுக்கினால், அந்த ஊட்டச்சத்து மாத்திரைகள் அந்த மாணவர்களுக்கு வழங்குகின்ற திட்டங்களையும் சேர்த்து அளிக்கின்றபோது, இது சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தொகுதிகளுக்குச் செல்கிறபோது, ஒரு பெருமையாக இருக்கும், இந்த அரசுக்கும் ஒரு மிகச் சிறந்த நற்பெயரை மக்களிடம் வாங்கித் தரும் என்ற காரணத்தாலே இதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியை, புதுமையான திட்டங்களை சட்டமன்ற உறுப்பினர் அறிமுகப்படுத்தினால் அதற்கும் அரசு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டு, இந்த நிதி 75 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும் என்று வேண்டுகோளை வைக்கிறேன்.

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1999 மார்ச் 26

தரிசு நில மேம்பாட்டிற்காக தரிசு நில மேம்பாட்டு ஆணையம் அமைக்கப்படுகிறது. இதிலே 99 ஆண்டு குத்தகை முறையிலே படித்த இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் விவசாயக் கூட்டுப் பண்ணைகள் அமைப்பதற்கு முன்னுரிமை தர வேண்டும். அதன் மூலமாக, நிலவுகின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தையும், வறுமையையும் ஒழிப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்குமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

*பிற்பகல் 12-55*

உள்நாட்டு மீனவர் திட்டத்தை வரவேற்கிற நேரத்திலே, பாரம்பரியம் மிக்க நம்முடைய கிராமியத் தொழில்கள், சிறு தொழில்கள் எல்லாம் நலிவுற்று வருகின்றன. இப்போது பத்தமடையிலே இருக்கின்ற பாய் தொழில், திருச்சியிலே இருக்கக்கூடிய செயற்கை வைரம் பட்டை தீட்டுகின்ற தொழில், சிவகாசி, குடியாத்தம் போன்ற பகுதிகளிலே இருக்கக்கூடிய தீப்பெட்டித் தொழில் இப்படிச் சிறு தொழில்களும், கிராமியத் தொழில்களும் நலிவடைந்து கொண்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் சிறு தொழில் நலிவடையாமல் தடுக்க வேண்டுமென்பதற்காகப் பேராசிரியர் சிதம்பரம் தலைமையிலே ஒருநபர் குழுவை அமைத்தார்கள். அதன் பரிந்துரையினை அரசு ஆய்ந்து உடனடியாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன் இப்போது மேற்கு வங்க அரசானது 1-4-1999 முதல் ஓராண்டுக்கு மேல் மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு மாதாமாதம் 500 ரூபாய் நிவாரணத் தொகை வழங்கிக் கொண்டிருக்கிறது. முதல் கட்டமாக 34 ஆயிரம் பேர் இதனால் பலனடைந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. அதேபோல மூடப்பட்டுக் கிடக்கின்ற ஆலைகளிலே நலிவடைந்திருக்கின்ற தொழிலாளர்களுக்குத் தமிழக அரசும் ஓர் உதவித் தொகையினை, அது ஐநூறோ, ஆயிரமோ வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு தொழில்கள் இப்போது நலிவடைந்து கொண்டு வருவதைத் தடுத்து நிறுத்த அம்பத்தூர், ஹோசூர் பகுதிகளிலே, அதேபோல கும்மிடிப்பூண்டி போன்ற பகுதிகளிலே உள்ள தொழில்கள் நலிவடைவதைத் தடுத்து நிறுத்த அரசு கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

கல்லூரிப் பேராசிரியர் என்ற முறையிலே ஆசிரியர்களுக்கு



1999 மார்ச் 26] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

வழங்கப்பட்ட ஊதிய உயர்வை வரவேற்கின்ற அதே நேரத்திலே, இப்போது கல்லூரிகளிலே மாணவர்களுடைய தேர்ச்சி விகிதமானது 30 சதவீதமாகக் குறைந்து விட்டது மிகவும் கவலைக்குரிய விஷயம். இதை உடனடியாகக் கண்காணித்து மேம்படுத்துவதற்கு அரசு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

மழலையர் பள்ளிகளிலே தமிழ்வழிப் பள்ளிகளுக்குப் பல சலுகைகள் தரப்பட்டுள்ளதை வரவேற்கின்ற அதேநேரத்திலே 5-ஆம் வகுப்பு வரை அனைத்துப்பாடப் பிரிவுகளும் தமிழ்வழியிலே கொண்டு வரப்படுகிற பொழுதுதான் இந்தத் தமிழ்வழிப்பாடத் திட்டமே முழுமையாக வெற்றி பெற வாய்ப்பிருக்கிறது. சீனா போன்ற நாடுகளிலே ஆங்கிலத்தை Servant Language என்று சொல்வார்களே, அதைப்போல ஒரு பணியாளர் மொழியாகத்தான் வைத்திருக்கிறார்கள். ஆனால் நாம் தான் இங்கே தேர்ச்சி மொழியாக வைத்திருக்கிறோம். இதனாலே பல இடர்பாடுகள் இருக்கின்றன. ஆங்கிலத்தை நாம் ஒரு பயிற்சி மொழியாக வைத்திருக்க வேண்டுமே தவிர அந்தத் தேர்ச்சிக்கு உரிய ஒரு மொழியாகக் கையாளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தமிழ்வழிப் பாடத் திட்டம் வெற்றி பெற வேண்டுமேயானால் வேலைவாய்ப்புகளிலே தமிழ் வழியிலே படித்தவர்களுக்கு அரசு முன்னுரிமை வழங்குகிறபொழுதுதான் இது முழுமையான வெற்றியைப் பெறும் என்பதையும் இந்த நேரத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மகளிர் சிறு வணிகக் கடன் திட்டம் இப்போது கந்து வட்டி, ஈட்டு வட்டிகளின் மூலமாக மிகவும் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் கிராம பேரூராட்சி பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்கள்தான். ஆகவே, அவர்களுக்கும் இந்தத் திட்டத்தினை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

50 சதவீதமாக உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுடைய மேம்பாட்டுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி 150 கோடி ரூபாய் போதுமானதல்ல. ஆதிதிராவிட மக்களைப்போல வாழ்நிலையிலே ஒரே நிலையிலே இருக்கக்கூடிய மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நலனையும் கருத்திலே கொண்டு இந்தத் துறைக்குக் குறைந்தது 500 கோடி ரூபாயாவது ஒதுக்கித் தர மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1999 மார்ச் 26

விடுதலைப் போராட்டத் தியாகிகள், மொழிப் போர்த் தியாகிகளுக்கு வேலைவாய்ப்பகங்களிலே முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அதனைச் சமூக நீதிப் போராட்டத் தியாகிகளுக்கும் வழங்கிடல் வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கவியரசு கண்ணதாசனுக்கு முன்பே கவிப் பேரரசராகத் திகழ்ந்தவர் கம்பதாசன் அவர்கள். வானத்தைப் பற்றிப் பாடுகிறபொழுது மிக அழகான கவிதைகளிலே, "காம்பின்றி நின்றிருக்கின்ற இனிய காயாம்; பூவானவானம்" என்றெல்லாம் பாடியிருக்கின்றார். பல தொழிலாளர்களைப்பற்றிப் பாடுகின்றபொழுது சூரியனையும் ஒரு தொழிலாளியாக வரித்துப் பாடியவர் அவர். அப்படிப்பட்ட கம்பதாசனுக்கு விழுப்புரம் மாவட்டத்திலே, அவர் பிறந்த உலகாபுரத்திலே ஒரு மணிமண்டபம் அமைக்க அரசு முன் வர வேண்டும். அவருடைய கவிதை நூல்களை இந்த அரசு நாட்டுடைமையாக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வைணவர்கள், சைவர்கள், பௌத்தர்கள், சமணர்கள், கிருத்துவர்கள், இஸ்லாமியர்கள் என்று அனைத்துச் சமயத்தவர்களும் தமிழுக்கு ஆற்றிய தொண்டை மிகச் சிறப்பாக வெளிப்படுத்திக் கொணர்ந்தவர் மயிலை சீனி வேங்கடசாமி என்று சொல்லக்கூடிய தமிழறிஞர். உலகத் தமிழ் அறிஞர்களெல்லாம் பாராட்டக்கூடிய அறிஞர். அவருடைய நூல்களை நாட்டுடைமையாக்க—அரசுடைமையாக்க—வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கின்றேன்.

போலி குடும்ப அட்டைகளையெல்லாம் ஒழித்து, பொது விநியோக முறையைச் சீரமைத்திருக்கின்ற இந்த அரசைப் பாராட்டுகின்ற நேரத்திலே, இந்தப் பொது விநியோக முறையை, பொது நல அமைப்புகள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு மாவட்டக் குழுவை அமைத்து தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்திலே நகர்ப்புறத்திலே பொதுவிநியோகக் கடைகளிலே இப்போது உள்ள கூட்டங்களைத் தவிர்ப்பதற்கு ஒரு வேண்டுகோள். காலை 8 மணியிலேயிருந்து இரவு 8 மணி வரையிலே திறந்திருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக சனிக்கிழமை ஞாயிற்றுக் கிழமை போன்ற விடுமுறை நாட்களிலேயும் அந்தக் கடைகள் திறந்திருக்க வேண்டும். வேண்டுமானால் அவர்களுக்கு விடுமுறை நாட்களை வேற்று



1999 மார்ச் 26] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

நாட்களிலே வழங்கலாம். இதனால் நகர்ப்புற மக்களுக்கு ஓர் உறுதுணை செய்தமாதிரி இருக்குமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை

பற்றாக்குறை நிலவுகின்ற இந்தப் பட்ஜெட்டைச் சரி செய்வதற்கு ஓர் ஆலோசனையை நான் இங்கே வைக்க ஆசைப்படுகின்றேன். Real Estate விவகாரத்தில் அனுமதியற்ற வீட்டுமனைகளை விற்று அதன் மூலமாகப் பொதுமக்கள் பல்வேறு சங்கடங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். இதில் Real Estate அதிபர்கள்தான் கொழுத்துக் கொண்டிருக்கிறார்கள். சென்னைப் பெரு நகரத்தில் பத்திரப் பதிவில் இப்போது அரசு நிர்ணயித்த தொகையில் கிட்டத்தட்ட, 10 சதவீதம் அபராதக் கட்டணமாக, அபிவிருத்திப் பணிகளுக்காக என்று வசூலித்து, இப்போது அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகிறது அனுமதியற்ற வீட்டுமனைகளுக்கு. இதே திட்டத்தை தமிழகத்தில் உள்ள அனைத்து மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளுக்கும், அதைச் சுற்றியுள்ள புறநகர்ப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி, அந்த அனுமதியற்ற மனைகளை ஒழுங்குபடுத்தினால், அபிவிருத்திக் கட்டணம் மூலமாக ஆண்டுக்கு சுமார் 500 கோடி ரூபாயும், முறைப் படுத்தப்பட்ட மனைகளில் வீடு கட்ட அனுமதிப்பதன் மூலமாக, அனுமதிக் கட்டணமாக 200 முதல் 300 கோடி ரூபாயும், சாலை அபிவிருத்திக் கட்டணம் மற்றும் சில கட்டணங்கள் மூலமாக 200 அல்லது 300 கோடி ரூபாயும் ஆக மொத்தம் சுமார் 1,000 கோடி ரூபாய் வருவாய் வர வாய்ப்பு இருக்கிறது. தம்பிக்கும் பெண் பார்த்த மாதிரி இருக்க வேண்டும். கம்புக்கும் களைபறித்த மாதிரியும் இருக்க வேண்டும். பட்ஜெட்டில் உள்ள பற்றாக்குறையைத் தீர்த்த மாதிரியும் இருக்கவேண்டும். தமிழக மக்களுடைய வீட்டுப் பிரச்சினைகளையும் தீர்த்தது போல இருக்கவேண்டும் என்ற காரணத்தால், இந்த ஆலோசனையை நான் முன்வைக்கின்றேன்.

அடுத்ததாக, பான் மசாலா பற்றி ஒரு வார்த்தை. நம்முடைய தமிழப் பண்பாட்டைச் சீரழிக்கின்ற இந்த பான் மசாலா கலாச்சாரத்தை முற்றிலுமாக ஒழிப்பதற்கு, பான் மசாலாவைத் தடை செய்ய வேண்டும் என்று இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ் உதவிபெற, பத்தாம் வகுப்பு வரை அந்த ஏழைப்

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [1999 மார்ச் 26

பெண்கள் படித்திருக்கவேண்டும் என்று கொண்டு வந்தவர் ஜெயலலிதா அவர்கள். அதை 8ஆம் வகுப்பாகக் குறைத்தவர் கலைஞர் அவர்கள். இப்போது மீண்டும் சில சங்கடங்கள் வருகின்றன. நடைமுறைக் குறைபாடுகளுக்காக மீண்டும் 10 ஆம் வகுப்பாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் 8ஆம் வகுப்பாக்க வேண்டும். அதிலுள்ள வருமான வரம்பைச் சரியாகக் கவனித்து நடவடிக்கை எடுத்தால், மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேரடிக் கண்காணிப்பில் இது நிறைவேற்றப்பட்டால், நிச்சயமாக இந்தத் திட்டமானது சிறப்பாக நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை சில பேர் அரைத்த மாவு என்று சொல்லி விமரிசனம் செய்திருக்கிறார்கள். அப்படிச் சொன்ன தலைவர் கூட, 'தொண்டன்' என்ற திரைப்படத்தில் நடித்திருக்கிறார். அந்தத் திரைப்படமானது, குழந்தைத் தொழிலாளர்களின் அவல நிலையை அகற்றிடல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிற திரைப்படம். நான் இந்த நேரத்தில் என்ன சொல்கிறேன் என்றால், அனைத்துப் பிள்ளைகளும் பள்ளியில் முழுமையாகச் சேரவேண்டும் என்பதற்காக, 'தொடக்கக் கல்வி விழிப்புணர்ச்சி முகாம்' என்ற திட்டத்தை இந்த அரசு இப்போது அறிவித்திருக்கிறது. இது உண்மையிலேயே குழந்தைத் தொழிலாளர்கள் உருவாகாமல் தடுக்கின்ற ஒரு முன்யோசனையான திட்டமாக, அருமையான திட்டமாக இருக்கிறது என்பதை அந்தத் தலைவர்கள் எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டார்கள். அவர்கள் திரைப்படத்தில் சொன்ன நிழல் கருததை இப்போது நிஜமாக்கிக் காட்டியிருப்பவர் தமிழ் இனத் தலைவர் டாக்டர் கலைஞர் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற அடிப்படையிலே எதை வேண்டுமானாலும் குறை சொல்லிவிடக்கூடாது. எங்கோ தோட்டத்தில் இருக்கிற தேவதையை மகிழ்விப்பதற்காக மக்களின் வாட்டத்தைப் போக்குகிற நிதிநிலை அறிக்கையைக் குறை சொல்லக் கூடாது என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இந்த பட்ஜெட்டைப் பற்றி சில பேர் இப்போது வெறும் கணக்காகக் கருதிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாகப் பெற்றவளுக்குத்தான் பிள்ளையினுடைய அருமை தெரியும் என்பார்கள். 12 நிதிநிலை அறிக்கைகளைப் பிள்ளைகளாகப் பெற்றிருப்பவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். ஐந்தாண்டுகள் முதல்வராக இருந்தும் கூட, ஒரு நிதிநிலை அறிக்கை என்ற பிள்ளையைக் கூடப் பெற்றிராதவர்கள் இப்போது இந்த அறிக்கையை வெறும் கணக்காகக் கருதிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.



1999 மார்ச் 26] [திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்]

நித்தம் நித்தம் ஒரு கணக்குப் போட்டு, எப்படியாவது ஊழல் வழக்குகளிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாதா என்று கணக்குப் போட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு வேண்டுமானால் இந்த நிதிநிலை அறிக்கையானது வெறும் கணக்காகத் தோன்றலாம். நிதிநிலை அறிக்கையிலே கணக்குகள் இருக்கலாம் ஆனால் முன்னாள் முதலமைச்சர் சொல்வதைப் போல எதையோ கணக்குப் போட்டுவிடுகிற அறிக்கையாகத்தான் நிதிநிலை அறிக்கை இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையானது உண்மையிலேயே பாராட்டி வரவேற்கவேண்டிய ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரேயொரு வேண்டுகோள். மின் வாரியத்தில் உதவியாளர்களாக, நிர்வாகப் பிரிவில் பணிபுரிவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 119 பேருக்கு மருத்துவப் பரிசோதனைகள் முடிந்தும், இன்னும் வேலைவாய்ப்பு தரப்படாமல் உள்ளது. பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவிலே அவர்களை முறையாக விசாரித்து, அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தமிழக முதல்வர் அவர்களிடம் இதைக் கலந்து பேசி, அந்த மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், பெண்கள், ஊனமுற்றவர்கள் என்று பெருவாரியாக இருக்கிற அந்த 119 பேருக்கும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வயது மூப்பு அடைந்த சுமார் 400 இடைநிலை ஆசிரியர்களுடைய வயது உச்சவரம்பை நீக்கி அவர்களையும் பணியமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை மக்களின் சஞ்சலத்தைப் போக்க வந்த சஞ்சீவி மாமருந்து. வக்கணை பேசுவோர்க்குப் போடப்பட்ட வாய்ப்பூட்டு என்று சொல்லி, வாழ்த்தி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

பிற்பகல் 1-05

**THIRU B. VENKATASAMY**: Hon. Deputy Speaker Sir, I congratulate the Hon. Chief Minister for presenting an excellent Budget for the year 1999-2000.. Development of any State depends on the upliftment of economy. It has been mentioned in the Budget that the poverty ratio in Tamil Nadu has been declined from 35.03% to 27.58%. This shows the growing trend of economy of Tamil Nadu Government and rural masses. The devolution of 29% of the gross tax revenues of the Central Government to the State has

not been given by the present Central Government. The Bill to this effect was passed by Shri. Deve Gowdaji when the United Front Government was there. So, I request the Hon. Chief Minister to see that this 29% of gross tax revenues as passed by the previous Government is given to Tamil Nadu. because we have a deficit budget.

Coming to the other points, the State Government has taken some positive steps to improve all aspects in the State like providing 8% of the tax revenue to the local bodies, more powers to the local bodies, Rs.160 crores subsidy for the foodgrains as the Central Government has increased the prices of food grains, giving Nativity and Community Certificates to the school students at their schools, implementation of அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், Namkku Namee Thittam allocation of 450 crores of rupees to Rural Water Supply Scheme, allotment of Rs. 330 crores to the ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் and providing drinking water supply to all the houses in the villages and providing additional allotment of water to the Town Panchayats, Municipalities and Corporations, etc. Regarding agriculture, 65% of our agriculturists are living in the villages and their standard of living is very low. I want that 50% of budget allotment should be spent for the agriculturists. Farmers at present are not in a position to get adequate prices for their products. Sugarcane prices has to be increased. Horticultural products like cabbage, tomato and potato are sold in the market at a very low price. The farmers are not in a position to get adequate prices for their produce and even they are not in a position to meet the export and other charges. I request the Hon. Chief Minister to see that something is done for them. At least 50% of the State Budget should be allotted for the agricultural development. Then only, we can develop the economy in a proper way.

Compulsory Education is really a good venture. Reservation of 15% seats in all professional colleges for the rural students is appreciated.

I am very happy to note that Annual Plan outlay for the next financial year has been increased to Rs.5,250 crores which is 17% more than the current year's Plan outlay. This Government has reduced taxes for lot of items in the Budget.

Now, I would like to mention some of the needs of my constituency. Fruit processing unit which was sanctioned last year has not yet been implemented. Floriculture unit at a cost of 220 crores of rupees is also yet to be implemented.



With regard to cauvery water to Hosur, I told the Hon. Minister for Local Administration when he came to Hosur that Hosur, Soolagiri, Thali, Kelamengalam and Veppanapalli blocks were left in the கூட்டுக் குடிநீர்த் திட்டம் of cauvery. There is lot of demand for water and our district has got flouride in many places. So, I request the Hon. Chief Minister to see that these five blocks are included in the கூட்டுக் குடிநீர்த் திட்டம். I request that this may be included in this year's Budget as lot of industries are coming up there.

Coming to Industrial complexes, there is lot of demand for industrial sites at Hosur. In this connection, I put a question in the Assembly and while replying Hon. Chief Minister was kind enough to assure that it would be taken up soon.

With regard to issue of pattas, lot of houses have been constructed at poromboke land in Hosur. I request the Hon. Chief Minister to arrange to give them house site pattas by giving No Objection Certificates. In Hosur and Denkanikotta, assignment of lands have not been made and lot of people are cultivating there. I request that ban on the assignment of lands in these two taluks may be removed so as to benefit the people cultivating there.

Telugu Teachers Training School at Tharapuram and Ganganavalli are far away from the city. So, I request you to start one Telugu Teachers Training School at Hosur. I request that posting of Telugu teachers in vacant places in elementary and high schools may be looked after.

*பிற்பகல் 1-10*

I request the Hon. Chief Minister and the Minister for Tamil Culture to see that Tamil is also included in Telugu schools as an additional language. Those who are studying Telugu in Tamil Nadu are being deprived of learning Tamil. I request the Hon. Minister for Tamil Culture that Telugu people are requesting to teach Tamil. Why are you not teaching? I request you to see that some firm action in this Budget session is taken to see that in addition to mother tongue, Telugu, Kannada and Urdu....

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பை 16-11-1998-லே கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பின்படி தெலுங்கு, கன்னடம், உருது, மலையாளம் ஆகியவற்றைத் தாய் மொழியாகக் கொண்டுள்ள சிறுபான்மையினர் நடத்துகின்ற பள்ளிகள் 1008. இந்த 1008 பள்ளிகளுக்கும்—யார் யாரெல்லாம் தமிழ் கற்க விரும்புகிறார்கள் என்ற

குறிப்புகள் தொகுக்கப்பட்டதும் உங்களுக்குத் தெரியும். ஏற்கெனவே நாம் ஓசூருக்குச் சென்றபோது ஆய்வு செய்து இருக்கிறோம். அதுகுறித்த குறிப்பு கல்வித் துறைக்கு வந்திருக்கிறது—வெகுவிரைவில் அதற்குரிய தமிழ் ஆசிரியர்கள் அமர்த்தப்பட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதன்படி உரிய அரசாணைகள் பிறப்பிக்கப்படும்.

**THIRU B. VENKATASAMY:** Thank you very much for the reply, Sir.

Regarding Samathuvapurams, it is an excellent scheme. But, I am sorry to say, at Hosur, they have not consulted the local M.L.A. or anybody. Officers have themselves announced the list. I do not know what procedure is followed to allot quarters in Samathuvapurams. Officers have taken their own decisions. They have not consulted anybody or the local M.L.A. I request you to examine and see that it is properly done.

Next, I request to provide a College and a Stadium at Hosur. It is seen that Kalavarapalli Anaikattu has also not been cleared. In the morning also I met the Hon. Chief Minister regarding Cooum-Adyar river and Buckingham Canal.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமத்துவபுரங்கள் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் இடங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இப்போது ஓசூரிலே கட்டப்பட்டு வருகின்ற சமத்துவபுரத்தை நான் நேரிலே, 10 தினங்களுக்கு முன்னாலே பார்வையிட்டேன். இதுவரையிலே தமிழ்நாட்டிலே கட்டப்பட்டுள்ள சமத்துவபுர இல்லங்களிலேயே மிகச் சிறந்த முறையிலே, எழிலார்ந்த முறையில் கட்டப்பட்டு வருகின்ற சமத்துவபுரம், ஓசூரிலே இருக்கக்கூடிய சமத்துவபுரம்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள்.

பொதுவாக, விண்ணப்பங்கள் கோரப்பட்டு, தகுதி அடிப்படையிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்தான் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் தேர்ந்து எடுக்கிறார்கள். அதைப்போலத்தான் இங்கேயும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை. அவர் பேசி முடிக்கட்டும், (குறுக்கீடு) He is not yielding உட்காருங்கள். திரு. பி. வெங்கடசாமி.



**THIRU B. VENKATASAMY:** I want to know whether local people have been consulted there. Officers are not consulting anybody.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** யார் யாருக்கு வீடுகள் ஒதுக்குவது என்பது குறித்து சில Norms வைத்திருக்கிறோம்; ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழுவிலே அவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

**THIRU B. VENKATASAMY:** Earlier I received a message from the D.R.O. to attend a meeting. Afterwards I have not been called. I want to know whether the M.L.A. is in the Committee or not ? Houses are very good. Houses are constructed in a very good manner. There is no dispute. My question is regarding allotment, why local M.L.A. is not consulted.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, Local M.L.A.-வை Consult பண்ண வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்களை ஆபத்திலேயிருந்து காப்பாற்றுவதற்காகத்தான் அந்த விதிமுறை வகுக்கப்படவில்லை. இல்லாவிட்டால் Local M.L.A-வினுடைய பாடு பெரும் திண்டாட்டமாக ஆகிவிடும். அதனால்தான் விண்ணப்பங்களைப் பெற்று அந்த விண்ணப்பங்களிலே தகுதியுள்ள விண்ணப்பங்கள் என்று பொறுக்கி எடுத்து அதிலே நூற்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் இருக்குமேயானால் குலுக்கல் முறையிலே அவை தேர்வு செய்யப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வெங்கடசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள்; நேரம் அதிகமாகி விட்டது.

**THIRU B. VENKATASAMY:** The Government have announced that desilting of Adyar river, Cooum river, Buckingham Canal and Otteri Nalla river at Chennai will be taken up. It is a welcome feature. But, I came to know that there are nearly 10 thousand pucca houses in those areas and as many as one lakh fifty thousand people are living there. I came to know that those people are going to be shifted. (The gong was sounded)

I will finish in one minute. It is an important point. We have no objection to the shifting. The people are coming in procession to meet the Chief Minister today in this regard. I have requested the Hon. Chief Minister in the morning to consider their demand and the Chief Minister also told me that he would meet them shortly. We have no dispute about desilting. I request the Hon. Chief Minister to see that people living in all the houses are not shifted. The required area may be taken and the remaining area may be left freely without disturbing the people living there.

[திரு. பி. வெங்கடசாமி] [1999 மார்ச் 26

As regards dyeing factories at Kumarapalayam and Pallipalayam, people are starving because of closure of industries. We have already brought the matter to the notice of the Hon. Chief Minister. I would request the Hon. Chief Minister to rectify the pollution problem. (The gong was sounded)

I will finish with one point Sir. I Karnataka and Andhra Pradesh, they have a Directorate for Minorities Welfare. I request the Hon. Chief Minister to create a similar Directorate in Tamil Nadu and give employment opportunities for the youth as they are very much worried. As told by a Member, I request the Government to create a Corporation for youth in Tamil Nadu and give employment opportunities for the youth.

I thank you for giving me the opportunity, Sir.

*பிற்பகல் 1-15*

## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாளையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றி, மற்ற தலைவர்களும் உரையாற்றியபின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை இருக்கின்ற காரணத்தால், நாளையதினம் கேள்வி நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானத்தை, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள். மாண்புமிகு அவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப்பேரவை விதி 32-ஐ 27-3-1999 (சனிக்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1999 மார்ச் 26] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

*27-3-1999 (சனிக்கிழமை) அன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.*

## 6. வரவு-செலவுத் திட்டம், 1999-2000, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1999-2000ஆம் ஆண்டுக்கான நல்லதொரு நிதிநிலை அறிக்கையினை நமது தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் மிகச் சிறந்த முறையிலே, ஏழையெளிய மக்கள் பயன்படுகிற அளவில் இங்கே வழங்கி இருக்கிறார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மொத்தத்திலே 39 சதவீதம் வறுமைக் கோட்டிற்குக் கீழாக இருக்கின்றவர்கள் சதவீதத்தின் நிலைமாற்றி 32 விழுக்காடாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பது பாராட்டத் தகுந்தது என்றாலும்கூட, 'தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று கூறிய பாரதி வாழ்ந்த இந்தத் தமிழகத்திலே வறுமைக்கோட்டிற்குக்கீழே என்கிற நிலையே இல்லாத அளவுக்கு, வருகின்ற காலத்தில் நம்முடைய நிதிநிலை அறிக்கை இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது நிதிநிலை அறிக்கையிலே ஏறத்தாழ ஐநூற்றுச்சொச்சம் கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னால், மத்திய அரசு நமக்கு வழங்கி வந்த பங்கு 7.062 விழுக்காட்டிலிருந்து 4.0987 என்று குறைந்ததன் வாயிலாகத்தான் இந்தப் பற்றாக்குறையே ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசு நமக்கு சென்ற ஆண்டு வழங்கிய அதே தொகையை இந்த ஆண்டும் வழங்கி இருக்குமானால் இந்தப் பற்றாக்குறை என்பது நீக்கப்பட்டிருக்கும். அத்தனைப் பற்றாக்குறைகளை ஏற்றுக்கொண்டு, கிராமப்புறங்களிலே குடிநீர்ப் பிரச்சினை இருக்கக்கூடாது என்கிற நோக்கத்தோடு 2000 கோடி ரூபாயை ஊராட்சிகளுக்கு வழங்கி அந்த ஊராட்சிகளின் மூலமாக அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-20

அதுபோல, ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகிற, பொது விநியோகத்தில் வழங்கப்படுகிற அரிசிக்கு மத்திய அரசு விலையை உயர்த்தியிருந்தாலும்கூட, இந்த மாநில அரசு அதிகச் சுமையை ஏற்றுக்கொண்டு, அதனுடைய விலையை உயர்த்தாதது அந்த ஏழை எளிய மக்களிடத்திலே இந்த அரசுக்கு இருக்கின்ற நல்ல எண்ணத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறது. வேளாண் பெருமக்கள் தமிழகத்திலே ஏறத்தாழ 65 விழுக்காடு வாழ்கிறார்கள் என்பது நமது நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டிலே உற்பத்தியை வெகுவாக, 13 இலட்சம் டன், உயர்த்தியிருக்கிறார்கள். 85 இலட்சம் டன்னிலிருந்து 98 இலட்சம் டன்னாக உயர்த்தியிருக்கிருக்கிறார்கள். அந்த விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற சலுகை மிகக் குறைவாகவே இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது நிதிநிலை அறிக்கையிலே கரும்புக்கு உத்தரவாத விலை கொடுக்கப்படுகிறது. அதுபோல மற்ற பொருள்களுக்கும் கொடுப்பதற்குரிய நிலை ஏற்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கரும்புக்கு இப்போது உத்தரவாத விலை கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட அரசுத் துறையிலே இயங்குகின்ற சர்க்கரை ஆலைகளிலே கரும்பு கொடுக்கின்ற விவசாயிகளுக்குக் கடந்த 3 மாதங்களாகவே எந்தவித பணமும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலேகூட இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. எனக்கு மிகுந்த பிரச்சினையாக இருப்பதே இந்தச் சர்க்கரை ஆலைகள்தான். கடந்த மூன்று மாத காலமாக அந்த ஆலைகளிலே விவசாயிகளுக்கு, அவர்கள் வெட்டுகின்ற அந்த வெட்டுக் கூலி கொடுக்க முடியாத நிலைமையிருக்கிறது. இதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தப் பிரச்சினையை சென்ற ஆண்டு எப்படி துணை நிதிநிலை அறிக்கையிலே 76 கோடி ரூபாய் கடனாகக் கொடுத்துத் தீர்த்து வைத்தீர்களோ அதுபோல இந்தப் பிரச்சினையை அவர்கள் தீர்த்து வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல சென்ற ஆண்டு விவசாயிகள் படுகின்ற கஷ்டத்தை மனதிலேகொண்டு விவசாயிகளுடைய அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதற்காக 100 கோடி ரூபாயை சென்ற நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கியிருந்தீர்கள். ஆனால், அந்த 100 கோடி ரூபாய் எந்த விவசாயிக்கும்



சென்றடையவில்லை. காரணம் 25 சதவீதத்திற்குக் கீழாக விளைந்திருந்தால்தான் அந்தச் சலுகையைக் கொடுக்க முடியும் என்று சொல்லி Anavari Certificate ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் கேட்கின்ற நேரத்தில், அது வழங்கப்படாமல் இருந்த காரணத்தினால் அந்தச் சலுகைகள் விவசாயிகளுக்குச் சென்றடையவில்லை. எனவே, இந்த ஆண்டாவது அவர்கள் பட்டிருக்கின்ற அந்தக் கடனுக்கு வட்டி, அபராத வட்டிகளைத் தள்ளுபடி செய்து இந்த அரசு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் பகுதியிலேயிருந்து வந்த சில விவசாயிகள்கூட என்னிடத்திலே சொல்கிற நேரத்திலே "காவிரி பிரச்சினை ஏற்பட்ட பின்னால், கடந்த 20 ஆண்டு காலமாக நாங்கள் நிறைவான விவசாயத்தைச் செய்ய முடியவில்லை. கடந்த ஓரிரு ஆண்டுகளிலேதான், விவசாயத்தை மேற்கொண்டிருக்கிறோம், எங்களுக்கு ஜப்தியைத் தளர்த்தினால் மட்டும் போதாது, ஏதாவது வட்டி சலுகைகள் தர வேண்டும்'' என்று வலியுறுத்தியிருக்கிறார்கள். அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசிலிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தளவிலே நமது மாணவர்களுக்கெல்லாம் இலவச Bus Pass வழங்கிக் கொண்டிருக்கிறோம். போக்குவரத்து என்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கின்ற காரணத்தினால் சென்ற ஆண்டு 7309 பேருந்துகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டு அதற்கு என்று சிறப்பாக நிதியை ஒதுக்கியதாகத் தெரியவில்லை. கடந்த ஆண்டுகளிலே ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் இரண்டு பேருந்துகள் ஒதுக்கியதன் மூலமாக, அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கடமையைச் சீராகச் செய்வதற்குரிய நிலை இருந்தது. இந்த ஆண்டும் அதுபோல ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும், 234 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறோம், 500 பேருந்துகளுக்குக் கீழாகத்தான் வழங்க வேண்டிய நிலையிருக்கிறது. எனவே, அந்த நிலையில் சென்ற ஆண்டு போல், இந்த ஆண்டும் கொடுத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்கள் பயன்பெறுவார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

அதேபோல, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்காக ஒரு மேல்நிலைக் குழுவை கலைஞர் அவர்கள் நியமித்தார்கள். அந்தக் குழுவிலே நாங்கள்

எல்லாம் அங்கம் பெற்றிருந்த நேரத்தில் அவர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள், வேலைகளிலே அவர்களுக்கு வழங்கப்படுகிற வாய்ப்புகளைப் பார்க்கும்போது மிக மிகப் பின்தங்கியவர்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள், கலைஞர் அவர்கள்கூட சென்ற நிதிநிலை அறிக்கை விவாதத்திற்குப் பதில் சொல்கின்ற நேரத்தில் சொன்னார்கள், யார் மிகுந்த பள்ளத்திலே இருக்கிறார்களோ அவர்களுக்கு நீளமான கயிறு தேவையென்று. அதுபோல, இன்றைக்கு இருப்பதிலேயே மிகுந்த பள்ளத்திலே இருப்பவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள்தான் என்பதனை நாங்கள் அந்தக் குழு மூலமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையிருக்கிறது. அதனுடைய அறிக்கை தங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது. 10 விழுக்காடுகளுக்குள்ளாக இருக்கின்ற வேலைவாய்ப்புகளிலே மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு என்று ஒதுக்கீடே செய்யவில்லை. 20 சதவீதம் என்று வருகின்றபோது, 10 வேலைகளுக்குள்ளாக இருப்பதிலே 2 பேருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், அந்த நிலை எல்லா இடங்களிலும் மறுக்கப்பட்டு இருக்கிறது. குறிப்பாக கல்வித் துறையிலே, பல்கலைக்கழகங்களிலே மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 3 விழுக்காடு வேலைகளைத்தான் பெற்று இருக்கிறார்கள்; மீதம் 17 சதவீதம் அவர்களுக்கு கிடைக்கவில்லை. ஆனால், அவர்கள் படித்து இருக்கிறார்கள்; அதை நாங்கள் நேராகப் பார்க்கிறோம். எத்தனையோ Ph.D., M.Phil., படித்தவர்கள் எல்லாம் இருந்தும்கூட, அந்த வேலைகள் அவர்களுக்கு எப்படி மறுக்கப்பட்டு இருக்கின்றன. என்பதை நாங்கள் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இருக்கின்றோம். இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்களுடைய மனதிலே கொண்டு இந்த அறிக்கையினுடைய நிலையை நன்றாகக் கவனித்து அதற்குரிய நடவடிக்கைகளை இந்த மன்ற கூட்டத் தொடரிலேயே வைத்து, மிகவும் பிற்பட்டோருக்கு ஏற்பட்டு இருக்கின்ற அந்த வேலை இழப்பினை ஈடு செய்வதற்கு அனைத்து முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் ஏறத்தாழ 40 விழுக்காடு இருக்கின்ற தமிழகத்தில், 20 சதவீதம் என்பது போதாது என்ற நிலையைச் சுட்டிக்காட்டி நாங்கள் கேட்டுக்கொண்டு இருக்கும்போது, அந்த 20 சதவீதத்திலேயே 3 சதவீதம், 4 சதவீதம் தான் நிறைவு செய்யப்பட்டு இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு உங்களுக்கு தெரிவித்துக்கொள்வதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



இன்றைக்கு திரு. மணி அவர்கள் குறிப்பிட்டதுபோல இடைநிலை ஆசிரியர்கள், பணியிடங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களிலிருந்து 200 ஆசிரியர்களை இந்த ஆண்டு நியமித்துக் கொள்ளலாம் என்று ஆணை பிறப்பித்து இருந்தாலும்கூட, அந்த 200 ஆசிரியர்கள்கூட அந்த இடங்களிலே இல்லை என்கின்ற ஒரு நிலை இருக்கின்றது. கள்ளர் சீரமைப்புத் துறையிலே 200 பேர்கூட இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் இல்லை; 170 பேர்தான் இருக்கிறார்கள் என்கின்ற நிலை இருக்கிறது. கடந்த காலங்களிலே இடைநிலைக் கல்வி ஆசிரியர் பயிற்சி பெறுவதற்காக கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலமாகப் பள்ளிகள் நடத்தப்பட்டன. தனியார் நடத்துகின்ற பள்ளிகளிலே சேருவதாக இருந்தால்—நான்கூட ஒருநேரம் குறிப்பிட்டுக் காட்டினேன், ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் ரூபாய் கேட்கின்ற நிலை இருக்கிறது; எனவே, இந்தப் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுடைய நலனைக் கருதி, நீங்கள் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே முதல்வர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

இன்றைக்குக்கூட நுழைவுத் தேர்வுக்கான வகுப்புகளை நடத்துவதற்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஏற்பாடு செய்து இருக்கிறீர்கள். அதேபோல, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும்—அவர்களோடு இணைத்துக்கூட அந்தப் பயிற்சியைக் கொடுக்கலாம்—வேறுபடுத்திப் பார்க்க வேண்டாம், எல்லோரும் அதாவது 3 பேரும் ஒரே தட்டிலே இருக்கிறோம் என்று எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு—அந்தப் பயிற்சிப் பள்ளிகளிலே நீங்கள் இடம் ஒதுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, இங்கு தொழிலாளர்களுடைய நலனைக் கருதி சென்னையிலே தங்களுடைய காலத்திலேதான் தொழிலாளர் கல்வி நிலையம் 1972-லே அமைக்கப்பட்டது. இன்று 29 ஆண்டுகள் கடந்தும் கூட, அந்தக் கல்விக் கூடம் மிகச் சிறிய இடத்திலே நடந்து கொண்டு இருக்கிறது. அதிலே M.L.M., B.L.M., ஆகிய பட்ட மேற்படிப்பு, பட்டப் படிப்பு, வகுப்புகளை எல்லாம் நீங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கு போதிய இடவசதி இல்லை. அந்த மாணவர்கள் தங்குவதற்கு விடுதி வசதி இல்லை; அவர்கள் விளையாடுவதற்கு விளையாட்டுக்கூடம்

இல்லை; விளையாடுவதற்கு இடம் இல்லை என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தக் கல்விக் கூடத்தை விரிவுபடுத்துவதற்கு, நல்ல இடத்தைத் தேர்ந்து எடுத்துக் கொடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தியாகிகளை மதிக்கின்ற அரசு இந்த அரசு என்பதற்கு எடுத்துக்காட்டாக கட்டபொம்மனுக்கெல்லாம் விழா நடத்திக் கொண்டு இருக்கிறீர்கள். *(மணி அடிக்கப்பெற்றது)*

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது; உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** முடித்துவிடுகிறேன்; ஒரே ஒரு நிமிடம் கொடுங்கள். கட்டபொம்மனுக்கு விழா நடத்திக்கொண்டிருக்கிற இந்த நல்ல வேளையிலே, கட்டபொம்மனுடைய படைத் தளபதியாக இருந்த வெள்ளையத் தேவனுக்கு ஒரு நினைவுக் கிராமம் அமைக்க வேண்டுமென்று நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த, வல்ல நாடு பகுதியைச் சேர்ந்த அத்தனை பேரும் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-30*

அந்த விழா எடுக்கின்ற இந்த ஆண்டிலே வெள்ளையத்தேவனுக்கு ஒரு நினைவுக் கிராமம் அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொண்டு, இந்த நல்ல வாய்ப்பினை அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைச் சொல்லி, எங்களுடைய சோழவந்தானுக்கு ஒரு புறவழிச் சாலையையும், அதோடு சென்ற நிதியாண்டிலே நமது மாண்புமிகு முதலமைச்சர் கொடுத்த வாக்குறுதிப்படி, தேங்காய் சார்ந்த தொழிற்சாலை ஒன்றினையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(27-3-1999)* காலை *9-30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1-30* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*99. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு*
*ுவனத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. (1962 ஆம் ஆண்டு சேமிப்புக்*
*_ங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின்*
*ப் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)*

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*36. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி*
*ுவனத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)*

*37. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஐந்தாவது*
*ட்டியல்). (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).*

*38. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஆறாவது*
*ட்டியல்). (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).*

*39. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஏழாவது*
*ட்டியல்.) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).*

*40. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (எட்டாவது*
*ட்டியல்). (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).*

D
N24,3,1,N99
N99.67
221182